மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது விடை சொல்லிக் கொண்டிருப்பவர் பொதுப்பணித் துறை அமைச்சர். அவர் சட்டமன்ற விடுதி ஓரத்தில் இருக்கிற வீடுகளுக்குத்தான் சொந்தக்காரர். சட்ட மன்ற விடுதிக்கு நான் சொந்தக்காரன். (சிரிப்பு).

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: சரி சபாநாயகர் அவர்களே, நீங்களே பதில் சொல்லிவிடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் என்னைக் கேள்வி கேட்க முடியாது. தனியாக அறையில் சந்திக்கவும். விவரமாகப் பேசுவோம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: உங்களுக்கு மட்டும் தெரிந்தால் போதாது. பப்ளிக் எல்லோருக்கும் தெரிய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதெல்லாம் கேள்வியிலை வராது.

திரு. எம். அப்துல் லத்தீப்: தலைவர் அவர்களே, 7 இலட்சம் ரூபாய்க்கு அதிகமான தொகை பாக்கியாக இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எத்தனை பேர்களிடத்திலிருந்து இந்த பாக்கித் தொகை வரவேண்டும்? யார், யார் அந்தத் தொகைகளை செலுத்த வேண்டும் என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு துரைமுருகன்: தலைவர் அவைர்களே பாக்கி வைத்திருக்கின்றவர்கள் முன்னால் அமைச்சர் காளிமுத்து 31—3—83 முடிய உள்ள வாடகை நிலுவை பாக்கி ரூ. 91,355. திரு. என். ஆர். இராதா ரூ. 80,323·80 திரு வி. பாலகுரு ரூ. 50,585, திரு. எம். பி. சுப்பிரமணியம் ரூ. 62,762, திரு. பி. முனிசாமி, மேலவை உறுப்பினராக இருந்தவர் ரூ. 1,14,077·65, திரு. ஏ. கே. வில்வம் ரூ. 46,787.50,

திரு. சி. இராமலிங்கம் ரூ. 25,332.35, திரு. ஏ. ஏ. ஜாபார்ஃ ரூ. 25,332.35, திரு. எம். அம்பிகாபதி ரூ. 73,638.85, திரு. கே. குப்புசாமி ரூ. 39,631.60, திரு. குமரி அனந்தன் ரூ. 26,497.15, திரு. அ. ரகுமான்கான் ரூ. 2,441, திரு. துரை கோவிந்தராஜன் ரூ. 41,662.15. திரு. ஆர். அருணாசலம் ரூ. 8,972. திரு. பி. பெருமாள் ரூ. 7,702.15, திரு. ஏ. நல்லசிவம் ரூ. 11,101.60, திரு. எஸ். அழகர்சாமி ரூ. 3,345.05, திரு. கே. கலைமணி ரூ. 6,177.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு குமரி அனந்தன் அவர்கள் இப்போது கேள்வி கேட்கப் போகிறீர்களா? வாடகை தள்ளுபடி கேட்கப் போகிறீர்களா? (சிரிப்பு).

திரு. குமரி அனந்தன்: மாண்புமிக்க சபாநாயகர் அவர்களே ரூ.7 இலட்சத்திற்கு மேற்பட்ட தொகையைஅனைவரும் செலுத்த வேண்டும் என்று மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னுடைய பெயராலும் ரூ. 26,000 பாக்கியிருப்பதாக இங்கே சொன்னார்கள். சட்டமன்றம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நேரத்திலே சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலே தங்கியிருக்கின்றவர்களுக்கு இலவசம் என்று நான் கருதுகிறேன். இந்த சட்ட மன்றம் கலைக்கப்பட்டதற்குப் பின்னால் அப்படி இலவசமாக இருந்தவர்களுக்கு ஐந்தே ரூபாய் போட்டு ஐந்து நாட்கள் வரை அவர்கள் தங்கலாம் என்று சொல்லுகின்ற ஒருசலுகை இருந்தது. ஏனென்றால் இங்கே உறுப்பினர் விடுதியிலே இருக்கின்றவர்கள் அநேகமாக இங்கே குடும்பத்தோடு இருக்கமாட்டார்கள். ஊரிலே இருப்பார்கள். எப்போதாவது வருவார்கள் என்ற காரணத்திற்காக... (குறுக்கீடு) மன்னிக்க வேண்டும். ஒரு நிமிஷம், என சம்பந்தப்பட்டதாக இருக்கின்ற காரணத்தால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது சட்டமன்ற உறுப்பினர் விடுதி தொடர்பானதா? பொதுப் பணித் துறையைச் சார்ந்த வீடு தொடர்பானதா?

திரு. குமரி அனந்தன்: வீடு தொடர்பானது. அதனாலே அவர்கள் எப்போதாவது வருகின்ற காரணத்தினாலே 5, 5 ரூபாய் என்ற சலுகையிலே அவர்களுக்குப் போடப்பட்டது. அதைக்கூட குறைக்கவேண்டும் என்று மனு கொடுத்துக்கொண்டிருந்தார்கள். என்னைப் பொறுத்தவரையில் நான் சில ஆண்டு காலமாகவே அந்த போஷன் பிளாக் 2 என்பதிலே குடியிருந்து வருகின்றேன். ரூ. 175 சட்டமன்றம் நடைபெறுகின்ற நேரத்திலே அதற்கு வாடகை வசூலிக்கப்படுகிறது என்றால் எங்கள்

1989 மே 11]

சம்பளத்திலே கழிக்கப்படுகிறது. பிறகு சட்டமன்றம் கலைக்கப்பட்ட உடனேயே அதற்கு மார்க்கெட் வேல்யூ என்று சொல்லி இரண்டாயிரத்து முன்னூற்று சொச்ச ரூபாய் அதற்கு போடப்பட்டது. எனவே ரூ. 175 கட்டிக்கொண்டிருந்த நாங்கள் உடனே தேசீய காங்கிரசைச் சேர்ந்த அத்தனை பேரும் ஒரு மனுவை கவர்னரிடம் கொடுத்து இது எங்களுக்கு பழைய வாடகையிலேயே அடுத்த தேர்தல் வரை இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். அதற்குப் பின்னாலே நான் தனிப்பட்ட முறையிலே கூட கவர்னர் அவர்களுக்கு ஒரு மனுவை கொடுத்தேன். இவ்வளவு வாடகை போட்டிருக்கிறார்கள். அடுத்த தேர்தல் வருகின்ற காரணத்தினாலே, அடுத்த தேர்தலிலே போட்டியிட்டு வெல்லுகின்ற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினாலே இதே இடத்தில் குடும்பத்தோடு இருந்துகொண்டிருக்கின்ற நாங்கள் அங்கேயே இருப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமென்று நாங்கள் கேட்டோம்.

(முற்பகல் 9–50)

அந்த மனுவுக்கு அவரிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை. எனவே, முறையீடு அங்கே இருக்கிறபோது, என்னுடைய பாக்கியைப் பற்றி சட்டமன்றத்திலே இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதைப் போலவே, அநேகமாக ரகுமான்கான், நாங்கள் எல்லாம் கட்டாமல்தான் இருந்தோம். அவர் எப்போது கட்டினார் என்று எனக்குத் தெரியவில்லை. இரண்டாயிரம் ரூபாய் பாக்கிதான் இருக்கிறது. ஏனென்றால் ஒருவருக்கொருவர் குடும்பத்திலே பழகிக்கொள்கிற காரணத்தினாலே சொல்கிறேன். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, மேல் முறையீடு இருக்கிறது என்றால் கவர்னரிடம் இருக்கின்ற கோப்பு உங்களிடம் தான் வரும். எல்லாக் கோப்பையும்போல, ஏற்கனவே இப்படிப் பாக்கி வைத்திருந்தவர்கள், இந்த சந்தர்ப்பத்திலே. இந்த சூழ்நிலையிலே பாக்கி வைத்திருந்தவர்களுக்கு, எம். ஜி. ஆர். அரசாங்கம் அதற்குத் தள்ளுபடி செய்தது என்பதையும் உங்களுக்கு நினைவுபடுத்திக்கொள்கிறேன். எனவே, எங்களைப்பான்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்தச் சலுகையினை, அந்த ஏற்கனவே நடந்த அளவிற்கு நீங்கள் நிச்சயமாகச் செய்வீர்கள் என்ற நம்பிக்கை உண்டு. ஆதலினாலே, இவைகளை அந்த 175 ரூபாயிலேயே எங்களை வைத்து வசூலிக்கவேண்டும் என்று உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே; இதுபற்றிய முழுவிவரம் எனக்குத்தெரியாது. நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் திரு குமரி அனந்தன் அவர்கள்

இது குறித்து கடந்த கால ஆட்சியிலே ஆளுநர் அவர்களுக்கு ஒரு முறையீடு செய்து கொண்டதாகக் குறிப்பிட்டார்கள். அத்தகைய கோப்பு எதுவும் இதுவரையில் என்னுடைய பார்வைக்கு வரவில்லை. இது ஓரளவு கருணை உள்ளத்தோடு கவனிக்கப்பட வேண்டும் என்பதுபோல நம்முடைய குமரி அனந்தன் அவர்கள் இங்கே எடுத்துக் கூறினார்கள். கடந்த கால ஆட்சியைப் பற்றியும் சொன்னார்கள். எனக்கு நினைவு இருக்கிறது, இப்போது இந்த கேள்விக்கு விடை அளித்த பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் இதேபோல ஒரு வீட்டிலே குடியிருந்தபோது, அவருக்கு மார்க்கெட் ரேட் வாடகை போடப்பட்டு, அவர் கட்டவேண்டிய 11,000 ரூபாய்க்காக பென்ஷன் தொகை பிடித்துக்கொள்ளப்பட்டது. அது மாத்திரமல்ல. ஒரு நாள் அவருக்குக் கண்டிப்பாக உத்திர விடப்பட்டு, வீட்டுக்குள்ளே நுழைந்து பண்ட பாத்திரங்களை எல்லாம் வெளியே எடுத்துப் போட்டு, அவருடைய வீடு காலி செய்யப்பட்டது. இருந்தாலும், குமரி அனந்தன் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு தலைவர் அவர்களே, இதிலே நான் சம்பந்தப்பட்டிருக்கிறேன் என்று சொன்னாலும், ஒரு தவறான கணக்கை பொதுப்பணித் துறையிலிருந்து கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கணக்கை வைத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இங்கே படித்துவிட்டார்கள். ஏனென்றால் அந்தக் கணக்கு தவறு என்பதை என்னால் நிரூபிக்க முடியும். ஆனால் பராமரிப்பே இல்லாத ஒரு இடத்திலே வாடகையை இப்படி நிர்ணயிப்பது என்பது பொதுப்பணித் துறையினுடைய வழக்கத்திற்கே விரோதமானது. ஆனால் இது அரசியல் பழி வாங்குகிற நோக்கத்தோடு இல்லாமல் இருக்கவேண்டும் என்பதற்காகவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் வினா கேட்கலாம். இது விளக்கவுரை அல்ல. உங்கள் தொடர்பானதாலே ஒரு வினாவாகக் கேட்கலாம், நீங்களே சில வாக்கியங்களைப் பயன்படுத்துவது ரொம்பத் தப்பு.

திரு. எஸ். ஆர். இராதா: நான் இதை வினாவாக எழுப்பாமல், சட்டமன்ற விதி—53—இல் கண்டிருக்கிறபடி, இந்த வினா நேரத்தில் எழுப்பப்படுகிற பிரச்சினைகளில் ஏதாவது ஒன்று வந்தால், அந்நாள் வினாவில் எழுப்பப் பெற்ற அவசர முக்கியத்துவம் வாய்ந்த பொருள் பற்றி விவாதிக்க வேண்டுமென வினா நேரத்தில் கோரியதின் மேல், பேரவைத் தலைவர் தம் உசிதப்படி அதற்கென அந்நாளைய அலுவல் முடிந்த பின்போ,

1989 மே 11]

அன்றி அவர் தீர்மானிக்கிற மற்றொரு நாளிலோ அரை மணி நேரத்தை ஒதுக்கலாம் என்று விதியிலே இருக்கிறது. எனவே, அதற்காக ஒரு அரை மணி நேர விவாதத்திற்கு ஒதுக்கி. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கவனத்தை நான் எடுத்துக்கொண்டு, நான் எப்போது அரை மணி நேரம் ஒதுக்கு கிறேன் என்பதை விரைவில் தெரிவிக்கிறேன். திரு. அழகர் சாமி.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் வாசிக்கும்போது என்னுடைய பெயரிலே மூவாயிரம் ரூபாய் பாக்கியிருப்பதாக வாசித்தார்கள். நாங்கள் சட்ட மன்றத்தில் 8 பேர் இருக்கிற காலத்தில் நான் அந்தக் குழுவி னுடைய தலைவராக இருக்கிறபோது, நாங்கள் எல்லாம் சேர்ந்து சமைத்துச் சாப்பிடுவதற்காக, ஒரு வீடு கேட்டு கொடுக்கப்பட்டிருந்தது. அதிலே நான் சென்ற தடவை தேர்ந் தெடுக்கப்படாதபோது, அந்த வீட்டை என்னுடைய கட்சியின் சார்பிலே உத்திராபதி அவர்களுக்கு மாற்றிக்கொடுக்க வேண்டும் என்று எழுதி இருந்தேன். அது அப்படியே மாற்றிக் கொடுக்கப்பட்டது. அந்தக் கால அவகாசம் ஆறு மாத காலத் திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னது மாதிரி, மார்க்கெட் ரேட் என்று சொல்லி—67 ரூபாய் ஒழுங்காகக் கட்டி வந்திருக்கிறோம்—மார்க்கெட் ரேட் என்று சொல்லி மாதம் 700 ரூபாயாகப் போட்டு அந்த பாக்கியை அனுப்பி யிருந்தார்கள். ஆனால் அப்போதே முதலமைச்சரிடத்திலும், அப்போதிருந்த முதலமைச்சருடைய செயலாளர் இடத்திலும் ஒரு மனு கொடுத்து, அதை எல்லாம் ஏற்கனவே ஒழுங்காக நாங்கள் 67 ரூபாய் கட்டியிருக்கிறோம், அப்படியே இன்னொரு உறுப்பினருக்கு மாற்றப்பட்டிருக்கிறது, ஆகவே, மார்க்கெட் ரேட் போடுவது நியாயமல்ல என்று சொன்னேன். தள்ளுபடி செய்கிறோம் என்று சொன்னார்கள். இப்போது பாக்கி யாக வந்திருக்கிறது. எல்லோருக்கும் தள்ளி விடுவதாக இருந்தால் சரி, இல்லையெனில் கட்டுவதற்குத் தயாராக இருக் கிறோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோர் சார்பிலும் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் இங்கே கோரிக்கை வைத்திருக் கின்றார். நான் சொல்ல வருவது தி. மு. க. உறுப்பினர்கள் மார்க்கெட் ரேட்டிலே வாடகை தரவேண்டும் என்று கட்டாயப் படுத்தப்பட்டு, அவர்கள் எப்படி காலி செய்யப்பட்டார்கள்

என்ற விவரத்தைத்தான் இங்கே சொன்னேன். மற்றபடி, மற்றவர்கள் சார்பிலே திரு. குமரி அனந்தன் அவர்களும், திரு. அழகர்சாமி அவர்களும் எடுத்துக்கூறிய கருத்துக்களை நாங்கள் ஆலோசிப்போம். (குறுக்கீடு)

திரு. கே. ரமணி: தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியினுடைய செயலாளராக இருக்கக்கூடிய தோழர் நல்லசிவம் அவர்கள், அவர் மேல் சபை உறுப்பினராக இருந்து, அவருடைய பதவிக் காலம் போனதற்குப் பிறகு, அவர் வைத்திருந்த வீட்டைத் திருப்பி, அடுத்த தேர்தலிலே வந்திருக்கக்கூடிய, ஒரு மாதம், இரண்டு மாத காலத்திற்குள்ளே, இங்கே தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த வேறு ஒரு உறுப்பினர் பெயரில் அந்தவீடு மாற்றப்பட்டது. அதை அந்த இலாக்காவினுடைய மையத்திலே முறையாக கணக்கு எடுத்துக் கொள்ளாமல் மார்க்கெட் ரேட் என்று எஸ்கலேட் பண்ணி மிகப்பெரிய தொகை 11 ஆயிரம் ரூபாய்க்கு அவருக்கு நோட்டீஸ்அனுப்பினார்கள். நானே போய் அந்த இன்ஜினியரைப் பார்த்துப் பேசினேன். இது அநீதி என்று சொன்னேன். அன்றைக்கு இருந்த பொதுப்பணித் துறை அமைச்சருக்கும் எடுத்துச் சொன்னேன். அவர்கள் அன்றைக்கு இருந்த முதலமைச்சருக்கு விண்ணப்பம் கொடுக்கச் சொன்னார்கள். நான் விண்ணப்பமும் கொடுத்தேன். இனி மேற்கொண்டு இதுபற்றி நோட்டீஸ் வராது என்று அவர் வாயால் சொன்னார், எழுதி தரவில்லை. அதுதான் அந்தப் பிரச்சினை. இது சம்பந்தமான ரெக்கார்டுகளை நான் மாண்புமிகு முதலமைச்சருக்கு எங்கள் கட்சியின் சார்பில் சமர்ப்பிக்கத் தயார். அவர் இது பற்றி பரிசீலித்து முடிவுக்கு வரவேண்டும் என்பதுதான் எங்களுடைய வேண்டுகோள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கமாக ஒருமுறை பதவி போனதற்குப் பின்னால் ஒரு மாதம் குடியிருப்பின் ஏற்கனவே அரசு விதித்த அந்த வாடகையில் இருக்கலாம். அதற்கு மேற்கொண்டு உறுப்பினர்கள் இருக்கவேண்டுமானால் மார்க்கெட் ரேட் தான் போடுவார்கள். இதிலே விசித்திரம் என்னவென்றால் 5 ஆண்டு காலம் கூட பல உறுப்பினர்கள் எம். எல். ஏ. வாக இல்லாமல் மார்க்கெட் ரேட் கொடுக்காமல் இருந்து இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப் போல நான் மார்க்கெட் ரேட் மாதா மாதம் கட்டிய பிறகும் வெளியே அனுப்பப்பட்டேன். நான் அதற்காக சொல்லவில்லை, ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணையின் அடிப்படையில் தெரிவித்தது வேறு. சட்டப்படி ஒரு உறுப்பினர் பதவி போனதற்குப் பிறகு ஒரு மாத காலம் தான் இருக்கலாம். அதற்கு மேல் இருந்தால் வீட்டுக்குத் தக்கபடி மார்க்கெட் ரேட் வசூலிக்கப்படும்.

1989 மே 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் — விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 111-இன் கீழ் முதலமைச்சரின் திருத்த அறிக்கைகள்.

(அ) 3—5—1989 அன்று அவையில் ஆற்றிய உரையில் திருத்தம்.

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 111-ன் கீழ் திருத்த அறிக்கை ஒன்றினைத் தங்களுடைய அனுமதியோடு வைக்கிறேன்.

3—5—1989 அன்று சட்டப்பேரவையில் நான் கூறும்போது வன்னியர் சங்கத்தின் அரசியல் பிரிவான பாட்டாளி கட்சி எனப்படும் பாட்டாளி மக்கள் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. ஆர். விஸ்வநாதன் என்பவர் பேசிய கருத்துக்களை வன்னியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. சி. என். ராமமூர்த்தி அவர்கள் பேசியதாக போலீஸ் சுருக்கெழுத்தர் அனுப்பிய தகவலை ஒட்டி நான் குறிப்பிட்டேன். அந்த மேடையில் திரு. சி. என். ராமமூர்த்தி அவர்கள் இருந்தபோதிலுங்கூட நான் குறிப்பிட்ட கருத்துக்களை அந்தமேடையில் திரு விஸ்வநாதன் என்பவர்தான் பேசியிருக்கிறார். எனவே அதை நடவடிக்கைக் குறிப்பில் திரு சி. என். ராமமூர்த்தி என்பதற்குப் பதிலாக ஆர். விஸ்வநாதன் என்று திருத்திக்கொள்ள வேண்டுகிறேன்.

தவறாகத் தகவல் தந்த போலீஸ் சுருக்கெழுத்தர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) 28—4—1989 அன்று அவையில் ஆற்றிய உரையில் திருத்தம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 111—ன் கீழ் மற்றொரு ருத்த அறிக்கை.

1989 மே 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் — விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 111-இன் கீழ் முதலமைச்சரின் திருத்த அறிக்கைகள்.

(அ) 3—5—1989 அன்று அவையில் ஆற்றிய உரையில் திருத்தம்.

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 111-ன் கீழ் திருத்த அறிக்கை ஒன்றினைத் தங்களுடைய அனுமதியோடு வைக்கிறேன்.

3–5–1989 அன்று சட்டப்பேரவையில் நான் கூறும்போது வன்னியர் சங்கத்தின் அரசியல் பிரிவான பாட்டாளி கட்சி எனப் படும் பாட்டாளி மக்கள் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. ஆர். விஸ்வநாதன் என்பவர் பேசிய கருத்துக்களை வன்னியர் சங்கத் தின் பொதுச் செயலாளர் திரு. சி. என். ராமமூர்த்தி அவர்கள் பேசியதாக போலீஸ் சுருக்கெழுத்தர் அனுப்பிய தகவலை ஒட்டி நான் குறிப்பிட்டேன். அந்த மேடையில் திரு. சி. என். ராமமூர்த்தி அவர்கள் இருந்தபோதிலுங்கூட நான் குறிப்பிட்ட கருத்துக்களை அந்தமேடையில் திரு விஸ்வநாதன் என்பவர்தான் பேசியிருக்கிறார். எனவே அதை நடவடிக்கைக் குறிப்பில் திரு சி. என். ராமமூர்த்தி என்பதற்குப் பதிலாக ஆர். விஸ்வ நாதன் என்று திருத்திக்கொள்ள வேண்டுகிறேன்.

தவறாகத் தகவல் தந்த போலீஸ் சுருக்கெழுத்தர் மீது நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித் துக் கொள்கிறேன்.

(ஆ) 28—4 1989 அன்று அவையில் ஆற்றிய உரையில் திருத்தம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 111—ன் கீழ் மற்றொரு ருத்த அறிக்கை.

1989 மே 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் — விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 111-இன் கீழ் முதலமைச்சரின் திருத்த அறிக்கைகள்.

(அ) 3—5—1989 அன்று அவையில் ஆற்றிய உரையில் திருத்தம்.

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 111-ன் கீழ் திருத்த அறிக்கை ஒன்றினைத் தங்களுடைய அனுமதியோடு வைக்கிறேன்.

3–5–1989 அன்று சட்டப்பேரவையில் நான் கூறும்போது வன்னியர் சங்கத்தின் அரசியல் பிரிவான பாட்டாளி கட்சி எனப் படும் பாட்டாளி மக்கள் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு.ஆர். விஸ்வநாதன் என்பவர் பேசிய கருத்துக்களை வன்னியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. சி. என். ராமமூர்த்தி அவர்கள் பேசியதாக போலீஸ் சுருக்கெழுத்தர் அனுப்பிய தகவலை ஒட்டி நான் குறிப்பிட்டேன். அந்த மேடையில் திரு. சி. என். ராமமூர்த்தி அவர்கள் இருந்தபோதிலுங்கூட நான் குறிப்பிட்ட கருத்துக்களை அந்தமேடையில் திரு விஸ்வநாதன் என்பவர்தான் பேசியிருக்கிறார். எனவே அதை நடவடிக்கைக் குறிப்பில் திரு சி. என். ராமமூர்த்தி என்பதற்குப் பதிலாக ஆர். விஸ்வநாதன் என்று திருத்திக்கொள்ள வேண்டுகிறேன்.

தவறாகத் தகவல் தந்த போலீஸ் சுருக்கெழுத்தர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) 28—4 1989 அன்று அவையில் ஆற்றிய உரையில் திருத்தம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 111—ன் கீழ் மற்றொரு திருத்த அறிக்கை.

28-4-1989 அன்று காவல் துறை மானியக் கோரிக்கை மீது நடந்த விவாதத்திற்குப் பதில் அளித்தபோது புதிய காவல் நிலையங்கள் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட 10 இடங்களில் ஒன்றான குருந்தங்கோடு என்ற இடத்திற்குப் பதிலாக வெள்ளிச்சந்தை என்று திருத்தப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10—00)

3. தகவல் கோரல்

(அ) தீவன இயந்திரங்கள் இறக்குமதி செய்வதில் எடுத்த நடவடிக்கைகளால் மாநில அரசுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு குறித்து.

திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு ஒரு பிரச்சினையை இன்றையதினம் கொண்டுவர விரும்புகிறேன். தீவன இயந்திரங்கள் இறக்குமதி செய்கின்ற அளவில் நம்முடைய அரசும் அதில் ஈடுபட்டிருக்கிறது என்று அறிய முடிகிறது. இந்த நிகழ்ச்சி 1987ஆம் வருடம் ஆரம்பிக்கப்பட்டு அப்போது இருந்த அமைச்சர் திரு. ராஜாராம் அவர்களுடைய சிபாரிசின் பெயரில் 192 இயந்திரங்கள் 16 யூனிட்டுகளுக்கு 12 வீதம் வாங்கப்படவேண்டும் என்று ஏற்பாடு செய்து இருக்கிறார்கள். அது அப்போது நிறுத்தப்பட்டு விட்டது. திரும்பவும் 1988ஆம் ஆண்டு கவர்னர் ஆட்சியின்போது திடீர் என்று அலெக்சாண்டர் அவர்களைச் சந்தித்து—(மணியடிக்கப்பெற்றது) I am not yielding).—1988 ஆம் ஆண்டு திடீர் என்று Jakhar அவர்களும், Brady என்பவர் ஒருவரும் அலெக்சாண்டர் அவர்களைச் சந்தித்து இது விஷயமாகத் திரும்பவும் அந்த இயந்திரங்களை வாங்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். சொல்லிய பிறகும் கூட அது அப்போது எதன் காரணத்தாலோ ஏற்றுக் கொள்ளப்படவில்லை, திரும்பவும் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டிருக்கின்றது. இதிலே சம்பந்தப்பட்டவர்கள்—கும்மிடிபூண்டியிலேயுள்ள 'சிப்காட்'-டிலே அந்த இயந்திரங்களெல்லாம் தயாரிக்கப்படவில்லை தயாரித்தது போன்று ஒரு பாவனை காட்டி அந்த இயந்திரங்களுக்கு கிட்டதட்ட $1\frac{1}{2}$ கோடி ரூபாய் அளவிலே ஆர்டர் கொடுக்கப்பட்டு 15 இலட்சம் ரூபாய் அளவிற்கு அதற்குமானியமாக அளிக்கப்பட வேண்டுமென்று சிபாரிசுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதிலே சில அதிகாரிகள் செல்லப்பன், முருகையன் போன்றவர்களுக்கெல்லாம் சிபாரிசு கடிதங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அலெக்சாண்டர் அவர்களுக்குக்கூட சிபாரிசு கடிதங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பத்திரிகையிலெல்லாம் இந்தச் செய்திகளெல்லாம் கடிதங்களெல்லாம் வெளியிடப்பட்டிருக்கின்றன. இது சம்பந்தமாக நம்முடைய அரசாங்கத்திற்கு எவ்வளவு டேமேஷ்,

28-4-1989 அன்று காவல் துறை மானியக் கோரிக்கை மீது நடந்த விவாதத்திற்குப் பதில் அளித்தபோது புதிய காவல் நிலையங்கள் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட 10 இடங்களில் ஒன்றான குருந்தங்கோடு என்ற இடத்திற்குப் பதிலாக வெள்ளிச்சந்தை என்று திருத்தப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10—00)

3. தகவல் கோரல்

(அ) தீவன இயந்திரங்கள் இறக்குமதி செய்வதில் எடுத்த நடவடிக்கைகளால் மாநில அரசுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு குறித்து.

திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு ஒரு பிரச்சினையை இன்றையதினம் கொண்டுவர விரும்புகிறேன். தீவன இயந்திரங்கள் இறக்குமதி செய்கின்ற அளவில் நம்முடைய அரசும் அதில் ஈடுபட்டிருக்கிறது என்று அறிய முடிகிறது. இந்த நிகழ்ச்சி 1987ஆம் வருடம் ஆரம்பிக்கப்பட்டு அப்போது இருந்த அமைச்சர் திரு. ராஜாராம் அவர்களுடைய சிபாரிசின் பெயரில் 192 இயந்திரங்கள் 16 யூனிட்டுகளுக்கு 12 வீதம் வாங்கப்படவேண்டும் என்று ஏற்பாடு செய்து இருக்கிறார்கள். அது அப்போது நிறுத்தப்பட்டு விட்டது. திரும்பவும் 1988ஆம் ஆண்டு கவர்னர் ஆட்சியின்போது திடீர் என்று அலெக்சாண்டர் அவர்களைச் சந்தித்து—(மணியடிக்கப்பெற்றது) **I am not yielding**).—1988 ஆம் ஆண்டு திடீர் என்று **Jakhar** அவர்களும், **Brady** என்பவர் ஒருவரும் அலெக்சாண்டர் அவர்களைச் சந்தித்து இது விஷயமாகத் திரும்பவும் அந்த இயந்திரங்களை வாங்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். சொல்லிய பிறகும் கூட அது அப்போது எதன் காரணத்தாலோ ஏற்றுக் கொள்ளப்படவில்லை, திரும்பவும் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டிருக்கின்றது. இதிலே சம்பந்தப்பட்டவர்கள்—கும்மிடிபூண்டியிலேயுள்ள 'சிப்காட்'-டிலே அந்த இயந்திரங்களெல்லாம் தயாரிக்கப்படவில்லை தயாரித்தது போன்று ஒரு பாவனை காட்டி அந்த இயந்திரங்களுக்கு கிட்டதட்ட 1½ கோடி ரூபாய் அளவிலே ஆர்டர் கொடுக்கப்பட்டு 15 இலட்சம் ரூபாய் அளவிற்கு அதற்குமானியமாக அளிக்கப்பட வேண்டுமென்று சிபாரிசுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதிலே சில அதிகாரிகள் செல்லப்பன், முருகையன் போன்றவர்களுக்கெல்லாம் சிபாரிசு கடிதங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அலெக்சாண்டர் அவர்களுக்குக்கூட சிபாரிசு கடிதங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பத்திரிகையிலெல்லாம் இந்தச் செய்திகளெல்லாம் கடிதங்களெல்லாம் வெளியிடப்பட்டிருக்கின்றன. இது சம்பந்தமாக நம்முடைய அரசாங்கத்திற்கு எவ்வளவு டேமேஷ்,

1989 மே 11] [திரு. கோ. பூவராகன்]

அதாவது எவ்வளவு நஷ்டம்? இது சம்பந்தமாக யார் யாருக்கெல்லாம் வருமானம் வந்திருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரியப்படுத்த வேண்டும், இதிலே பல பெரியவர்களெல்லாம் சம்பந்தப்பட்டு இருப்பதினாலே. இதை ஆராய்ந்து, இந்த மன்றத்திலே ஒரு அறிக்கையை அவர்கள் வெளியிட்டால்கூட நலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்கள் பேசுகிற பொழுது நான் குறுக்கிட்ட நேரத்தில் **I am not yielding** என்று சொன்னார்கள். நான் அமர்ந்து விட்டேன். சில நேரங்களிலே அப்படிக் குறுக்கிடவேண்டிய தேவை ஏற்படுவதற்குக் காரணம் அவர்கள் சொல்கிறபொழுது மாண்புமிகு பாராளுமன்ற சபாநாயகர் அவர்களுடைய பெயரெல்லாம் இதிலே இழுக்கப்படும் என்று தெரிந்தேதான் நான் குறுக்கிட்டேன். என்னுடைய குறுக்கீட்டை அனுமதிக்காததற்குப் பின்னால், அவர், அவர்களுடைய பெயரையெல்லாம் இங்கே பயன்படுத்தினார். சில நேரங்களிலே அது அப்படி தேவைப்படுகிறது என்பதை நீங்கள் உங்களுடைய மேலான அறிவால் உணர்வீர்கள் என்பது எனக்குத் தெரியும். உதாரணமாக, எங்களுடைய வாடகை பாக்கியைப் பற்றிச் சொல்கிற நேரத்திலேகூட, தட்டுமுட்டுச் சாமான்களையெல்லாம் எடுத்து வெளியே போடுவார்கள் என்ற ஒரு சொல்லைச் சொன்னதற்குக் கடைசியிலே நமது முதல்வர் அவர்கள் சொல்ல வேண்டி வந்தது. நான் அதைச் சொல்கிற பொழுது, நீங்கள், எங்களையும், அப்படி செய்யப் போகிறீர்களா என்றுகூடக் கேட்கத் தோன்றும். நான் அப்படி கேட்கவில்லை ஆனால் முதல்வர் அவர்கள் தெளிவான பதிலைச் சொல்லி விட்டார்கள். அதைப்போலே இப்பொழுதும் என்ன ஆகிறது என்றால், பாராளுமன்றத்திலே இருக்கின்ற சபாநாயகர் இந்தப் பிரச்சினையை, எதிர்க்கட்சித் தலைவர்கள் எழுப்பிய பொழுது, நீங்கள் என்னுடைய அறையில் வந்து அதனைப் பார்த்துக் கொள்ளுங்கள், நான் எல்லா ரெக்கார்டுகளையும் உங்களுக்குக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன்; நான் எந்தவிதமான குற்றமும் அதிலே இழைக்கவில்லை. யாரும் இழைக்கவில்லை என்று சொல்லுகின்ற அளவிற்கு, நீங்கள் வந்து பார்த்து அதற்குப் பிறகு நீங்கள் முடிவு செய்யலாம் என்று சொன்ன ஒரு உறுதிமொழி—உங்களைப்போலே பாராளுமன்றத்திலே இருக்கின்ற சபாநாயகர் அந்த உறுதிமொழியைச் சொன்னதற்குப் பின்னால், அந்த ரெக்கார்டுகளையெல்லாம் எதிர்க்கட்சித் தலைவர்கள், அவர்களுடைய கட்சித் தலைவர் உட்பட பார்த்ததற்குப்பிறகு, அதனுடைய முடிவிற்குப்பிறகுகூட —நான் இங்கே பேசக்கூடாது என்று சொல்லவில்லை—பேசி இருக்கலாமே—அதனை விட்டு மேலிடத்திலே இருக்கின்றவர்

மீது பழிசுமத்துகின்ற அளவிற்கு இந்தச் சட்டமன்றத்திலே நாம்பேசுவது முறையா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 1987ஆம் ஆண்டு மாண்புமிகு பாராளுமன்ற சபாநாயகர் அவர்கள் நம்முடைய அரசாங்கத்திற்குக் கடிதம் ஒன்றை எழுதி இருக்கின்றார்கள் அப்போதிருந்த மாண்புமிகுமுதல்வர் அவர்களுக்கு நேரடியாகப் பார்த்துச்சொல்லியிருக்கிறார்கள் என்றெல்லாம் விவரம் வந்திருக்கிறது, அதற்குப் பிறகு திடீரென்று 1988ஆம் வருடம் அவர்களே நேரடியாக வந்து மாண்புமிகு கவர்னர் அவர்களை இங்கே சந்தித்து இருக்கின்றார்கள். அவரோடு, இதிலே சம்பந்தப்பட்ட இன்னொருவரும் உடன் வந்திருக்கிறார் என்ற செய்தியும் இருக்கிறது. அதனாலேதான் குறுக்கிட்டேன். இது குறித்துப் பத்திரிகையிலே பரவலாகச் செய்திகள் வந்திருக்கின்றன, நடைமுறையிலேயும் இருக்கிறது. நம்முடைய அரசாங்கத்தினுடைய கடிதம்கூட அமைச்சர் அவர்கள் பார்க்கக்கூடும் என்ற காரணத்தினாலே நான் விளக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. எம். அப்துல் லத்திப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தொடர்பாக நான்கூட ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன். இது இன்றைக்கு நாடு முழுவதும் பேசப்படுகின்ற ஒரு பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தினால் இந்த அவையினுடைய கவனத்தை ஈர்ப்பதற்குரிய ஒரு பிரச்சினை என்பதில் ஐயமில்லை. இதிலே தொடர்புடையவர்கள் என்று சொல்லப்படக்கூடியவர்கள், நம்முடைய மாண்புமிகு பாராளுமன்ற சபாநாயகர் அவர்கள், அதே நேரத்தில்.... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் மாண்புமிகு பாராளுமன்றத் தலைவர் திரு. பல்ராம் ஜாக்கர் அவர்களுடைய பெயரைப் பயன்படுத்தாமல் நம்முடைய அரசுக்கு இதில் இருக்கிற பங்கு குறித்து மட்டும் நீங்கள் பேசினால் எடுத்துக் கொள்ளப்படும்.

* மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் குறிப்பிடப்படுகின்ற அந்தப் பெயர், as a Speaker of Parliament என்ற முறையிலே குறிப்பிடப்படவில்லை. சபாநாயகர் என்று சொன்னால், சபாநாயகருடைய அதிகாரங்களை சபாநாயகர் என்ற முறையில் பயன்படுத்துவதைக் குறித்து எந்தவிதமான

கருத்தும் தெரிவிக்க நமக்கு உரிமை கிடையாது. இங்குள்ள சபாநாயகருடைய உரிமையைப்போல, அவருடைய உரிமையும் இந்த அவையைப் பொறுத்தவரையில் முழுவதும் நம்மால் பாது காக்கப்பட வேண்டியது, ஆனால் தனிப்பட்ட முறையில் சபாநாயகர் பணிகளுக்கு அப்பாற்பட்ட காரியங்களில் அவர் ஈடுபடுவது குறித்து பத்திரிகைகளில் வந்துள்ள செய்திகளைக் குறித்து குறிப்பிடுகிறபோது, reference is only to his name and not to his office என்பதால் தவறாகாது.

திரு. குமரி அனந்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, Man holding that high office என்று தான் எப்போதுமே பேசுகிறார்கள். Thiru Jakhar who is holding such high office என்று தான் ஒவ்வொருவரும் பேசுகிறார்கள். எனவே ஒரு சாதாரண மனிதரைப் போல அவர் கருதப்படுவதற்கில்லை என்று தான் இந்தியா பூராவும் பேசப்படுகிற செய்தியாக மாறியதற்குக் காரணம். எனவேதான் நான் இங்கே பணிவோடு சொல்லுகிறேன், இங்கே ஆளுகிற கட்சியாக இருந்து, மத்தியிலே எதிர்க்கட்சியாக இருக்கிற பொதுமக்கள் உட்பட பலர் அந்த ஆவணங்களை எல்லாம் பார்த்தற்குப் பிறகு, 'நீங்கள் முடிவு செய்யுங்கள். தேவைப்பட்டால் என் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வாருங்கள்' என்று சொல்கிற அளவிற்கு ஒரு மத்திய பாராளுமன்ற சபாநாயகர் சொன்னதற்குப் பிறகு மீண்டும் மீண்டும் தாங்கள் ஒவ்வொரு உறுப்பினராக அவர்களைப் பற்றிப் பேசுவதற்கு அனுமதித்துக்கொண்டு இருக்கிற காரணத்தாலே. நான் சொல் கிறேன், பாராளுமன்ற சபாநாயகரைப் பற்றிய செய்தியாக இருக்கிற காரணத்தாலே தயவு செய்து தங்களுடைய மேலான அறிவின்படி அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இது பாராளுமன்ற சபாநாயகரைப்பற்றிய செய்தியே தவிர சபாநாயகர் பொறுப்பில் அவர் ஆற்றிய செயல் பற்றிய செய்தி அல்ல. அதைப் புரிந்து கொள்ளவேண்டும். மற்றொன்று, நம்முடைய மாநிலத்தோடு எந்தத் தொடர்பும் இல்லாமல் நம்முடைய நிர்வாகத்திற்குத் தொடர்பு இருக்கிற ஒரு செய்தி அல்ல என்றல்லாமல் நம்முடைய மாநிலத்தோடு அது எப்படியோ தொடர்புபடுத்தப்பட்ட, நம்முடைய நிர்வாகத்தோடு தொடர்புபடுத்தப்பட்ட, ஆளுநர் பெயரும்கூட இழுக்கப் பட்டுள்ளதாசயிருக்கிறது எனவே அதுபற்றிச் சொல்லுகிறபோது பெரிய பொறுப்பிலே இருக்கிறவர் என்ற காரணத்தால் அந்தச் செய்திக்கு ஒரு முக்கியத்துவம் வந்திருக்கிறது. அது சரியா, தவறா என்றுகூட எனக்குத் தெரியாது. ஆனால் முக்கியத்துவம் வந்திருக்கிறது என்கிற காரணத்தால் அந்தச் செய்தியை நாம்

புறக்கணிக்கவோ, கைவிடவோ அல்லது அதைப்பற்றியே ஆலோசிக்கக்கூடாது என்றுகருதவோ இடம் கிடையாது. எவ்வளவு பெரிய பணியிலே இருந்தாலும் பதவிக்கு அப்பாற்பட்ட காரியங்களில் ஈடுபட்டபோது, மாநில அரசு, மத்திய அரசு ஆகிய அரசுகளின் பிரச்சினையாகத்தான் அது ஆகிவிடுகிறது. எனவே அந்த அளவிற்கு, அந்த முறையில் அந்தப் பிரச்சினை எழுப்பப் படுவது சட்டமன்ற முறைக்கு மாறுபட்டது அல்ல.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிஷம். சில பொதுப்பணிகளிலே, அதுவும் மக்கள் சம்பந்தப் பட்ட பணிகளிலே, மக்கள் முன்னேற்றப் பணிகளிலே தலைவராக பலர் இருப்பது உண்டு. அதைப்போல, அந்த அமைப்பு, இந்த இயந்திரங்கள் சம்பந்தப்பட்ட அமைப்பினுடைய தலைவராக இருக்கக்கூடியவர்கள் 'திரு. ரெட்டி' என்கிற ஒருவர் தான். அவர் ஹானரரி பிரசிடெண்ட்—கௌரவத் தலைவர் என்ற வகையிலே தான் நமது திரு. ஜாக்கர் அவர்கள் அந்தக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். 'ரெட் கிராஸ்' என்று வருவது, இந்த 'ஸ்டாம்ப்' கொடுப்பது போன்ற காரியங்களை யெல்லாம் சில நேரங்களிலே உயர் பதவியிலே இருப்பவர்களோ, அவர்களுடைய துணைவியார்களோ பொறுப்பேற்றுச் செய்வதுண்டு. ஆனால், எக்சிக்யூட்டிவ் பவரிலே யார் இருக்கிறார்களோ அவர்கள்தான் அதிலே பொறுப்பு வகிப்பார்களே தவிர கௌரவ நிலையிலே இருக்கிறவர்கள் அந்த அளவிற்கு இழுத்துப் பேசப்படுவதில்லை என்ற காரணத்திற்காகச் சொல்கிறேன், அவர்கள் விவசாயிகள் என்று சொல்கிற காரணத்தாலே, விவசாயிகளின் நலனைக் கருத்திலே கொண்டு அவர்கள் கௌரவத் தலைவராக இருப்பதற்கு, பொறுப்பிலே இருப்பதற்கு 'பேட்ரன்' என்று சொல்வார்களே, அப்படி அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். எனவே தயவுசெய்து உயர் பதவிகளிலே இருக்கிறவர்கள், மிக உயர் பதவியிலே இருக்கிறவர்கள் சம்பந்தப்பட்ட காரணமாக இருக்கிற காரணத்தாலே, இந்த சட்டமன்றத்திலே அதைப்பற்றி விவாதிப்பது கூடாது என்று சொல்கிற கருத்தை நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கௌரவத் தலைவராக இருக்கக்கூடிய ஒருவர் நிர்வாகத் தலைவருடைய வேலைகளைச் செய்திருக்கக்கூடாது என்பது தான் இப்பொழுதுள்ள பிரச்சினை.

திரு. எம். அப்துல் லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, பாராளுமன்ற அதிகாரத்திற்கு உட்பட்ட அல்லது அவர்கள் விவாதிக்க வேண்டிய ஒரு பொருளைப்பற்றி இங்கே சட்ட மன்றத்திலே விவாதிக்கக்கூடாது என்பதைக் கொள்கை

அளவிலே நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், அதே நேரத்திலே பாராளுமன்றத்தில் இன்றைக்கு உறுப்பினர்கள் எல்லாம் தங்கள் கவலையையும் ஆத்திரத்தையும் வெளிப் படுத்திக் கொண்டு இருக்கிற நேரத்தில் யார் அதிலே தொடர்புடையவர்கள் என்பது பிரச்சினை அல்ல, யார் விவாதத்திற்குரியவர்கள் என்று கருதப்படுகிறார்களோ அவர் களுக்காக இங்கே விளக்கங்கள் தந்துகொண்டு இருப்பது, அவர்களுக்காக வாதிட்டுக்கொண்டிருப்பது ஏற்புடையதல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நான் என்னுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்திலே மிக ஜாக்கிரதை யாக....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: You are requested to make a mention only.

(முற்பகல் 10-10)

திரு. எம். அப்துல் லத்தீப்: இங்கே பேசியதால் நான் சொல்கி றேன் தலைவர் அவர்களே, (குறுக்கீடு). ஒத்திவைப்புத் தீர்மானம் இல்லையா இது? (குறுக்கீடு) இதிலே எனக்கு இருக்கவேண்டிய அக்கறையை நான்குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். நாடு முழுவதும் இன்றைக்குப் பத்திரிகைகளில் விவாதிக்கப்பட்டிருக்கிற ஒரு பிரச்சினையாக இது இருக்கிறது. நேரடியாக நம்முடைய தமிழ் மாநில நிர்வாகத்திற்கு உட்பட்ட வர்கள் சிலர், பரிமாறிக்கொள்ளப்பட்ட கடிதங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். இது ஒன்று, மாண்புமிகு பாராளுமன்ற சபாநாயகர் அவர்கள் எழுதிய கடிதத்தில் நம்முடைய அரசு அதிகாரியான திரு. முருகராஜ் என்பவர் இதில் எப்படித் தொடர்புடையவர் என்ற அந்தக் குறிப்பை நம்மால் காண முடிகிறது. அதே நேரத்தில், அதே கடிதத்தில் மாண்புமிகு திரு. ஜாக்கர் அவர்கள் சிப்காட் தொடர்பான அதிகாரிகளைப்பற்றியும் குறிப்பிட்டிருப்பதோடு, நம்முடைய மேதகு ஆளுநர் அவர்கள்கூட இந்த அதிகாரிகளைச் சந்தித்து அல்லது அழைத்துப் பேசி முறையான, சாதகமான நடவடிக்கை களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற வாக்குறுதியும் தரப் பட்டிருக்கிறது என்பதை நம்முடைய இந்த பாரத் க்ரீசத் சமாஜத்தினுடைய கௌரவத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டிருக் கிறார்கள். எனவே தமிழக அரசு அதிகாரிகள் இதிலே தொடர் புடையவர்களாக ஆக்கப்பட்டு இருக்கிறார்கள் என்ற அளவுக்கு, இதிலே நம்முடைய மாநிலத்தினுடைய நிதி அல்லது நன்மை எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டு இருக்கிறது என்பதை இந்த அவை அறிந்துகொள்ள உரிமை பெற்றதாக இருக்கின்ற காரணத்தால்தான் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இது

குறித்த விவரங்களைத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் முன்னாள் முதலமைச்சருக்குக்கூட ஒரு கடிதம் எழுதப்பட்டிருப்பதால் அது தொடர்பாக தொடர் நடவடிக்கை என்ன எடுத்துக்கொள்ளப்பட்டது, எந்த அளவுக்கு அது நம்முடைய மாநிலத்தில் பாதிப்பை ஏற்படுத்தியது, எந்தெந்த அதிகாரிகள் இதில் தொடர்புடையவர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள், இதனால் ஏற்பட்ட சாதக பாதகங்கள் என்ன என்பதையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, பாராளுமன்றத்திலே உள்ள ஒரு செய்தியை இங்கே விவாதிக்க நான் முற்பட்டபோது குமரி அனந்தன் குறுக்கீடு செய்ததுகூடத் தவறு என்று சொல்கிறீர்கள். நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்தான் சொன்னார், நான் சொல்லவில்லை.

திரு. குமரி அனந்தன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. குமரி அனந்தன் அவர்கள் குறிப்பிட்ட இந்த முழுப் பகுதியும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. கே. ரமணி: பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமானதும், அவசரத் தன்மை வாய்ந்ததுமான ஒரு விஷயத்தை நமது அரசின் முன்பு கொண்டுவரவேண்டிய கடமையிலே இருக்கிறேன். கோவையில் இருக்கும்படியான பல்லாயிரக் கணக்கான இன்ஜினியரிங் தொழிலாளர்களுக்குத் தொழில் கொடுக்கிற இரும்பு உருக்கு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அதற்குள் கோவைக்குச் சென்றுவிட்டீர்கள். அரசுத் தரப்பிலே முன்னைய பிரச்சினைக்கு என்ன சொல்கிறார்கள் என்பதைக் கேட்போம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மூன்று நாட்கள் நான் கர்நாடக மாநில நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்குச் சென்றிருந்ததாலும், நேற்று கர்நாடக மாநில

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1989 மே 11] [டாக்டர் மு. கருணாநிதி]

ஆளுநரைச் சந்தித்து காவிரிப்பிரச்சினை குறித்துப் பேசவேண்டிய அவசியம் ஏற்பட்டதன் காரணமாக அவர் வருகிற வரையில் அங்கே தங்க வேண்டி இருந்த காரணத்தாலும் பத்திரிகைகளில் தான் இந்தச் செய்திகளை எல்லாம் நான் பார்த்தேன். நம்முடைய நண்பர் திரு. குமரி அனந்தன் அவர்கள் இங்கே குறிப்பிட்ட ஆவணங்களைப்பற்றி எல்லாம் பத்திரிகையிலே குறிப்பிடப்பட்டு, மிகப்பெரும் பொறுப்பிலே இருக்கிற ஒருவருடைய கையெழுத்தோடு வெளியிடப்பட்டிருக்கிறது. இது நம்முடைய அரசுக்கும் தொடர்புடையது என்ற அளவில் நம்முடைய மேதகு ஆளுநருடைய பெயரால் அவருக்கு எழுதப்பட்ட கடிதம். முன்னாள் முதலமைச்சர் அருமை நண்பர் திரு. எம். ஜி. ஆர், அவர்களுக்கு எழுதப்பட்ட கடிதம் இவைகள் எல்லாம் பத்திரிகைகளில் பிரசுரம் ஆகி இருக்கின்றன. அது குறித்த நீண்ட நெடிய கட்டுரைகளும் வெளியாகி இருக்கின்றன. நான் இரவு தான் சென்னை திரும்பினேன். எனவே இரவோடு இரவாக அந்த ஃபைல்களை எல்லாம் தலைமைச் செயலகத்திலிருந்து பெற்று, பார்த்து, அதைப்பற்றி எதுவும் கூறுவதற்கு இயலாதவன் ஆக நான் இருக்கிறேன்; அதற்கு நேரம் இப்போது போதவில்லை என்பதைத் தெரிவித்து அந்தக் கோப்புகளை எல்லாம் நான் படித்துப் பார்த்த பிறகு இங்கே எழுப்பப்பட்டிருக்கிற இந்தப் பிரச்சினைக்குத் தெளிவான, சரியான விளக்கத்தை என்னால் அளிக்க முடியும்.

(ஆ) தேனிரும்புப் பற்றாக்குறையால் கோவையிலுள்ள இரும்பு பவுண்டரிகள் மூடப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது குறித்து.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை நட்டமும் 500-க்கு மேற்பட்ட இரும்பு உருக்கும்படியான பவுண்டரிகள் மூடப்படக்கூடிய ஒரு அபாயமும் ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சினை குறித்து இதற்கு முன்பும் நாம் இந்த மன்றத்தில் கிளப்பி உடனடியாக மத்திய அரசை இதன்மீது நடவடிக்கை எடுக்கும்படி வற்புறுத்தவும் கோரியுள்ளோம். 30,000 டன் தேனிரும்பு நமக்குத் தேவைப்படுகிற நேரத்தில் வெறும் 3,000 டன் மட்டும் கொடுத்து இந்த 500 பவுண்டரிகளும் வேலை செய்ய முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கும்படியான இந்த நெருக்கடியான நிலைமையில் நமது அரசு உடனடியாக மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அதிகப்படியான தேனிரும்பை இங்கே அனுப்பி வைக்கும்படி கோர வேண்டும். 'க்ளோஷர்' என்ற எல்லைக்கு அந்த பவுண்டரிகள் வருகின்ற நிலைமையில் 'க்ளோஷர்' ஆகாமல் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க நமது அரசு முன்வரவேண்டும் என்ற ஒரு தாழ்மையான வேண்டுகோளை நான் முன் வைக்க விரும்புகிறேன். இதிலே அரசினுடைய பதிலை நான் அறிய விரும்புகிறேன்.

1989 மே 11] [டாக்டர் மு. கருணாநிதி]

ஆளுநரைச் சந்தித்து காவிரிப்பிரச்சினை குறித்துப் பேசவேண்டிய அவசியம் ஏற்பட்டதன் காரணமாக அவர் வருகிற வரையில் அங்கே தங்க வேண்டி இருந்த காரணத்தாலும் பத்திரிகைகளில் தான் இந்தச் செய்திகளை எல்லாம் நான் பார்த்தேன். நம்முடைய நண்பர் திரு. குமரி அனந்தன் அவர்கள் இங்கே குறிப்பிட்ட ஆவணங்களைப்பற்றி எல்லாம் பத்திரிகையிலே குறிப்பிடப்பட்டு, மிகப்பெரும் பொறுப்பிலே இருக்கிற ஒருவருடைய கையெழுத்தோடு வெளியிடப்பட்டிருக்கிறது. இது நம்முடைய அரசுக்கும் தொடர்புடையது என்ற அளவில் நம்முடைய மேதகு ஆளுநருடைய பெயரால் அவருக்கு எழுதப்பட்ட கடிதம். முன்னாள் முதலமைச்சர் அருமை நண்பர் திரு. எம். ஜி. ஆர், அவர்களுக்கு எழுதப்பட்ட கடிதம் இவைகள் எல்லாம் பத்திரிகைகளில் பிரசுரம் ஆகி இருக்கின்றன. அது குறித்த நீண்ட நெடிய கட்டுரைகளும் வெளியாகி இருக்கின்றன. நான் இரவு தான் சென்னை திரும்பினேன். எனவே இரவோடு இரவாக அந்த ஃபைல்களை எல்லாம் தலைமைச் செயலகத்திலிருந்து பெற்று, பார்த்து, அதைப்பற்றி எதுவும் கூறுவதற்கு இயலாதவன் ஆக நான் இருக்கிறேன்; அதற்கு நேரம் இப்போது போதவில்லை என்பதைத் தெரிவித்து அந்தக் கோப்புகளை எல்லாம் நான் படித்துப் பார்த்த பிறகு இங்கே எழுப்பப்பட்டிருக்கிற இந்தப் பிரச்சினைக்குத் தெளிவான, சரியான விளக்கத்தை என்னால் அளிக்க முடியும்.

(ஆ) தேனிரும்புப் பற்றாக்குறையால் கோவையிலுள்ள இரும்பு பவுண்டரிகள் மூடப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது குறித்து.

திரு. கே. ரமணி: தலைவர் அவர்களே, ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை நட்டமும் 500-க்கு மேற்பட்ட இரும்பு உருக்கும்படியான பவுண்டரிகள் மூடப்படக்கூடிய ஒரு அபாயமும் ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சினை குறித்து இதற்கு முன்பும் நாம் இந்த மன்றத்தில் கிளப்பி உடனடியாக மத்திய அரசை இதன்மீது நடவடிக்கை எடுக்கும்படி வற்புறுத்தவும் கோரியுள்ளோம். 30,000 டன் தேனிரும்பு நமக்குத் தேவைப்படுகிற நேரத்தில் வெறும் 3,000 டன் மட்டும் கொடுத்து இந்த 500 பவுண்டரிகளும் வேலை செய்ய முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கும்படியான இந்த நெருக்கடியான நிலைமையில் நமது அரசு உடனடியாக மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அதிகப்படியான தேனிரும்பை இங்கே அனுப்பி வைக்கும்படி கோர வேண்டும். 'க்ளோஷர்' என்ற எல்லைக்கு அந்த பவுண்டரிகள் வருகின்ற நிலைமையில் 'க்ளோஷர்' ஆகாமல் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க நமது அரசு முன்வரவேண்டும் என்ற ஒரு தாழ்மையான வேண்டுகோளை நான் முன் வைக்க விரும்புகிறேன். இதிலே அரசினுடைய பதிலை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நண்பர் திரு. ரமணி அவர்கள் எழுப்பிய பிரச்சினை குறித்து சில விவரங்களை இந்த அவையில் வைக்க விரும்புகிறேன். ஏனென்றால், இது அரசுக்கும் பங்குள்ள முறையீடாக இருப்பதாலும், அரசு இது குறித்து எடுத்துள்ள நடவடிக்கைகளை மேலும் எடுக்க நான் கடமைப் பட்டுள்ளேன். 11—3—1989 அன்று, இந்தியப் பிரதமர் மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்களுக்கு நான் இது குறித்து ஒரு கடிதம் எழுதியிருக்கின்றேன். கோவையிலே மாத்திரம் இந்த 'பிக் அயர்ன்' என்று சொல்லப்படுகின்ற 'தேனிரும்பு' பற்றாக் குறையின் காரணமாக, 500 தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டு 50 ஆயிரம் பேர்கள் இன்றைக்கு அவதிப்படுகின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது என்று நான் அந்தக் கடிதத்திலே சுட்டிக் காட்டியிரு கிறேன். கோவை மாவட்டத்திற்கு மாத்திரம் மாதம் ஒன்றுக்கு 9 ஆயிரம் முதல் 10 ஆயிரம் மெட்ரிக் டன் 'பிக் அயர்ன்' தேவைப்படுகின்றது. இரும்பு விநியோ கிக்கும் துறை கிடங்கிலேயிருந்து மாதந்தோறும் இதுவரை 4 ஆயிரம் முதல் 5 ஆயிரம் மெட்ரிக் டன்கள் வரை 'பிக் அயர்ன்' கொடுத்து வருகின்றார்கள். தேவைப்படும் மிச்சத்தை, இந்தத் தொழிற்சாலை வைத்திருப்பவர்கள் வெளிமார்க்கெட்டிலே வாங்கிப் பயன்படுத்தி வந்தார்கள். அண்மைக்காலத்தில் இந்த இரும்பு வகையராக்கள் மிகுந்த பற்றாக்குறையாக ஆகிவிட்டன. தொழிற்சாலைகள் இந்தப் பற்றாக்குறையால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில் இரும்பு வகைகளை விநியோகிக்கும் துறை, திடீரென்று 3 மாதத்திற்கு ஒரு முறை 3 ஆயிரம் மெட்ரிக் டன்கள் மட்டுமே, அதாவது மாதம் ஒன்றுக்கு ஆயிரம் மெட்ரிக் டன்கள் மட்டுமே விநியோகிக்க இயலும் என்று தெரிவித்துவிட்டது. இதற்கு முக்கியமான காரணம், பெரிய இரும்புத் தொழிற்சாலைகள் இந்தத் தேனிரும்பை விநியோகிக்க முன்வராததுதான். சரியான முயற்சிகள் எடுக்கப்படாததால் இறக்குமதி செய்து கொடுக்கவும் முன்வரவில்லை. இந்தத் தகவல்களை எல்லாம் நான் பிரதமர் அவர்களுக்குத் தெரிவித் திருப்பதோடு, மேலும் என்னுடைய கடிதத்திலே இப்படிப்பட்ட தேனிரும்பு—'பிக் அயர்ன்' விநியோகம் செய்வது குறைக்கப் பட்டாலோ அல்லது நிறுத்தப்பட்டாலோ கோவை மாவட்டத்தில் இந்தத் தொழில் மிகவும் பாதிக்கப்படும் என்றும், அதன் காரணமாக பல்லாயிரக்கணக்கானவர் வேலை இழக்க நேரிடும் என்றும் தெரிவித்திருக்கிறேன். இவைகளைத் தடுப்பதற்காக உடனடியாக பெரிய இரும்புத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான அறிவுரைகளைக் கூறி உடனடியாக தேனிரும்பு கோவை மாவட்டத்திலே உள்ள 500-க்கு மேற்பட்ட தொழிற் சாலைகளுக்குக் கிடைக்க வழிவகை செய்து தரவேண்டும் என்று 11—3—1989 தேதிய கடிதத்தில் பிரதமர் அவர்களை நான் கேட்டுக்கொண்டேன். அது குறித்து நேற்று மாலையில் மத்திய

1989 மே 11] [டாக்டர் மு. கருணாநிதி]

அரசிடம் இருந்து ஒரு பதில் கடிதம் வந்துள்ளது. கர்நாடகாவிலே உள்ள விஸ்வேஸ்வரய்யா ஸ்டீல் என்ற மத்திய அரசின் ஸ்டீல் கம்பெனியிலுள்ள இரும்பிலிருந்து தேனிரும்பை ஒதுக்குவதாகவும், அவர்களிடம் நாமே தொடர்பு கொள்ள வேண்டியும், அந்தக் கம்பெனியிடம் ஸ்டாக் கொஞ்சம் இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். நம் அரசு இன்றைக்கே அந்தக் கம்பெனியோடு தொடர்பு கொண்டு இருக்கின்ற ஸ்டாக்குகளைப் பெற முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) கோ-ஆப்டெக்ஸ் சார்பில் கொடுக்கப்பட்ட விளம்பரக் காட்சிகளை முழுமையாகத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாதது குறித்து.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு சார்பில் நடத்தப்படுகின்ற பொது நிறுவனமான கோ—ஆப்டெக்ஸ் சார்பில் விற்பனைக்காக டி. வி. -யில் விளம்பரம் கொடுக்கப்பட்டு, அரசாங்கப் பணமும் கொடுக்கப்பட்டு, பொதுமக்களுடைய பணமும் செலுத்தி, அங்கே அவர்கள் அந்த விளம்பரதாரர்கள் நிகழ்ச்சியில் நம்முடைய முதலமைச்சர், இன்னும் பல்வேறு இனங்கள் குறித்த படங்களையெல்லாம் அவர்கள் வெட்டிவிட்டு, அதையும் நம்முடைய மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் ஒரு கூட்டத்தில் கண்டனம் தெரிவித்த பிறகு, இப்படி டி. வி. யின் போக்கை வெளிப்படுத்துகின்ற இந்த நேரத்தில் நம்முடைய தமிழக அரசின் சார்பில் எடுக்கப்பட்ட 'முழு ஷாட்' டி. வி-யில் போடுவதற்கு அரசாங்கம் வற்புறுத்துமா? வற்புறுத்த முடியவில்லை என்றால், நம்முடைய உச்ச நீதிமன்றம் காட்டிய ஒரு தீர்ப்பை—பம்பாயில் ஒரு சினிமாவைக் காட்டுவதற்கு உச்ச நீதிமன்றம் வழங்கியதே ஒரு தீர்ப்பு, அந்தத் தீர்ப்பின் அடிப்படையிலே—அரசாங்கமே டி. வி-க்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கைப் போட்டு, 'முழு ஷாட்டை'யும் மக்களுக்குக் காட்ட வேண்டும் என்று சொல்லுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

இது போன்ற நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு இந்த அவையே ஒரு கண்டனத்தைத் தெரிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன், காரணம், இந்த அவையிலேதான் நாம் ஒவ்வொரு மானியத்திற்கும் பணத்தை ஒதுக்குகிறோம். இங்கே ஒதுக்கப்பட்ட பணம், மக்களுக்கு விளம்பரமாகச் சில நேரங்களில் போகும்போது, public has a right to know. என்ன நடைபெறுகிறது என்பதை முழுமையாகத் தெரிந்து கொள்ள

1989 மே 11] [டாக்டர் மு. கருணாநிதி]

அரசிடம் இருந்து ஒரு பதில் கடிதம் வந்துள்ளது. கர்நாடகாவிலே உள்ள விஸ்வேஸ்வரய்யா ஸ்டீல் என்ற மத்திய அரசின் ஸ்டீல் கம்பெனியிலுள்ள இரும்பிலிருந்து தேனிரும்பை ஒதுக்குவதாகவும், அவர்களிடம் நாமே தொடர்பு கொள்ள வேண்டியும், அந்தக் கம்பெனியிடம் ஸ்டாக் கொஞ்சம் இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். நம் அரசு இன்றைக்கே அந்தக் கம்பெனியோடு தொடர்பு கொண்டு இருக்கின்ற ஸ்டாக்குகளைப் பெற முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) கோ-ஆப்டெக்ஸ் சார்பில் கொடுக்கப்பட்ட விளம்பரக் காட்சிகளை முழுமையாகத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாதது குறித்து.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு சார்பில் நடத்தப்படுகின்ற பொது நிறுவனமான கோ—ஆப்டெக்ஸ் சார்பில் விற்பனைக்காக டி. வி. -யில் விளம்பரம் கொடுக்கப்பட்டு, அரசாங்கப் பணமும் கொடுக்கப்பட்டு, பொதுமக்களுடைய பணமும் செலுத்தி, அங்கே அவர்கள் அந்த விளம்பரதாரர்கள் நிகழ்ச்சியில் நம்முடைய முதலமைச்சர், இன்னும் பல்வேறு இனங்கள் குறித்த படங்களையெல்லாம் அவர்கள் வெட்டிவிட்டு, அதையும் நம்முடைய மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் ஒரு கூட்டத்தில் கண்டனம் தெரிவித்த பிறகு, இப்படி டி. வி. யின் போக்கை வெளிப்படுத்துகின்ற இந்த நேரத்தில் நம்முடைய தமிழக அரசின் சார்பில் எடுக்கப்பட்ட 'முழு ஷாட்' டி. வி-யில் போடுவதற்கு அரசாங்கம் வற்புறுத்துமா? வற்புறுத்த முடியவில்லை என்றால், நம்முடைய உச்ச நீதிமன்றம் காட்டிய ஒரு தீர்ப்பை—பம்பாயில் ஒரு சினிமாவைக் காட்டுவதற்கு உச்ச நீதிமன்றம் வழங்கியதே ஒரு தீர்ப்பு, அந்தத் தீர்ப்பின் அடிப்படையிலே—அரசாங்கமே டி. வி-க்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கைப் போட்டு, 'முழு ஷாட்டை'யும் மக்களுக்குக் காட்ட வேண்டும் என்று சொல்லுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

இது போன்ற நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு இந்த அவையே ஒரு கண்டனத்தைத் தெரிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன், காரணம், இந்த அவையிலேதான் நாம் ஒவ்வொரு மானியத்திற்கும் பணத்தை ஒதுக்குகிறோம். இங்கே ஒதுக்கப்பட்ட பணம், மக்களுக்கு விளம்பரமாகச் சில நேரங்களில் போகும்போது, public has a right to know. என்ன நடைபெறுகிறது என்பதை முழுமையாகத் தெரிந்து கொள்ள

மக்களுக்கு உரிமை உண்டு. அதுவும் பொது நிறுவனங்கள் என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட பொது நிறுவனத்தில் பல்வேறு நேரங்களில் பல்வேறு கட்சி நிகழ்ச்சிகளைக் காட்டக் கூடிய இந்தக் காலகட்டத்தில் ஏன் தமிழக அரசின் சார்பில் எடுக்கப்பட்ட முழு ஷாட்டை, பணத்தைப் பெற்ற பிறகும் டி. வி-யில் முழுமையாகக் காட்டவில்லை என்பதை அரசாங்கத்தின் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. குமரி அனந்தன் : சபாநாயகர் அவர்களே, கண்டனத் தீர்மானம் என்று சொன்ன காரணத்தாலே நான் சொல்கிறேன். மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய நிகழ்ச்சிகளை ஒளிபரப்பியாக வேண்டுமென்பதிலே நான் அக்கறை உடையவன், என்னுடைய கட்சியும் அக்கறை உடையதுதான். ஆனால் அதற்கு என்னென்ன வழிமுறைகள் இருக்கின்றன, ஏதாவது தவறுகள் நிகழ்ந்திருக்கிறதா அல்லது நிகழவில்லையா, நிகழ்ந்திருந்ததாயின் எப்படி நிகழ்ந்தது என்பதற்கு விளக்கம் கேட்கலாம். எல்லாவற்றையும் காட்டுவது என்று சொன்னால்—நாமே சிலவற்றைக் காட்ட வேண்டாமென்று சொல்லியிருக்கிறோம். எல்லாவற்றையும் காட்டுவதுதான், public has a right to know என்று சொல்கிறபோது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன் அவர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். அரசு சார்பில் தரப்படுகின்ற விளம்பரத்தைக் காட்டுவது குறித்த செய்தி மட்டும் தான் இது.

திரு. குமரி அனந்தன் : அந்தச் செய்தியை ஏன் வெளியிடவில்லை என்பதற்கு ஒரு பத்திரிகைக் குறிப்பைப் பார்த்தேன். நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இப்போது

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஏதோ காட்டுவதற்குத் தடை இருப்பதாகச் சொல்லுகிறார்கள். இதை வைத்துக்கொண்டே அரசியல் நடத்துவது சரியல்ல. தாங்களே, டி. வி.-யில் இருந்தால் காட்டலாமென்று அனுமதித்து விடுவது நல்லதென்று கருதுகிறேன்.

திரு. குமரி அனந்தன் : சபாநாயகர் அவர்களுடைய தடையை விலக்கி, முதல் அமைச்சர் அவர்களும் தடையை விலக்கினால் நல்லதுதானே; எல்லோருக்கும் விளங்கிவிடும் அல்லவா; யாரையும் குறை சொல்வதற்காகச் சொல்லவில்லை. அவர்கள் சொல்வதுபோல் ஏன் திரை மறைவில் வைக்க வேண்டும்? எல்லாவற்றையும் எடுத்துக் காட்டுவதிலே முதலமைச்சர் அவர்கள் அக்கறைப்படுவார்கள். ஆனால்

1989 மே 11]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அப்படிப்பட்ட ஒரு படமிருந்தால் அதை வெளியிடுவதற்குத் தடையில்லை என்று தாங்கள் அறிவிக்க வேண்டுமென்று தங்களை தாள் பணிந்து நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம்முடைய திரு. குமரி அனந்தன் அவர்கள் தெரிவித்த கருத்து, நம்முடைய முதல்வர் அவர்கள் தெரிவித்த கருத்து இரண்டையும் சிந்தித்து நான் வெகு விரைவில் அதற்கான தீர்ப்பை அளிப்பேன் என்று தெரிவித்து, திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தெரிவித்த கருத்துத் தொடர்பாக மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் . . .

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு தலைவரவர்களே, அதாவது, public has a right to know . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே. இந்த அவையிலே, தங்களிடத்திலே அனுமதி பெற்று அல்லது அவசரத்தில் சில எதிர்க் கட்சித் தலைவர்கள் அல்லது உறுப்பினர்கள் சில பிரச்சினைகளை-'ஜீரோ' ஹவர் என்று நாமே ஒன்றை உருவாக்கிக்கொண்டிருக்கிறோமே, அதிலே எழுப்புவது என்று ஒருமுறை வகுக்கப்பட்டிருக்கிறது; ஒரு மரபு கடைப்பிடிக்கப்பட்டிருக்கிறது. சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் தங்களால் அனுமதிக்கப்பட்ட பிறகு பிரச்சினைகளை எழுப்பினால், அதிலே அவர்கள் பேசும்போது 'பாயின்ட் ஆஃப் ஆர்டர்' இருந்தால் மற்றவர்கள் அதில் குறுக்கிடலாமேயல்லாமல், ஓர் உறுப்பினர் பிரச்சினை எழுப்பியதற்கு அரசின் சார்பில்தான் பதில் அளிக்கப்பட வேண்டுமேயல்லாமல், இன்னொரு உறுப்பினர் அதற்குப் பதில் அளித்துக் கொண்டிருப்பது சரியா, முறையா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. குமரி அனந்தன் அவர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். அவர்கள் முன் வரிசையில் இருக்கின்ற காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் என்ற முறையில் சில நேரங்களில் அதிக வாய்ப்புகளைப் பெறுகிறார் என்பதைத் தவிர, அவரேகூட ஒவ்வொரு வார்த்தைக்கும் எழுந்து, எழுந்து பதில் சொல்ல வேண்டுமென்ற ஒரு மரபை அவர் தொடர்ந்து கடைப்பிடிக்க முற்பட்டாலோ அல்லது மற்றவர்கள் கடைப்பிடிக்க முற்பட்டாலோ, இப்போது அவையில் உள்ள எதிர்கட்சித் தலைவர்களுக்குத் தருகின்ற இந்த உரிமைகளுக்கு—(குறுக்கீடு) இப்போது என்ன ஆயிற்று—முற்றாக அனுமதி மறுக்கப்பட வேண்டிய சூழ்நிலை

ஏற்பட்டு, யாருமே zero-hour—இல் எதையும் எழுப்ப முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும் என்பதை அவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். திரு. பி. எச். பாண்டியன், இந்தப் பிரச்சினை தொடர்பாக.

திரு. குமரி அனந்தன் : I must be heard.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)

திரு. பி. எச். பாண்டியன் : தயவு செய்து உட்காருங்கள். நான் பேசி முடித்து விடுகிறேன். (குறுக்கீடு) டி,வி. என்றாலே உங்களுக்குத்தானா? எங்களுக்கெல்லாம் இல்லையா? ரூ. 10,000 கொடுத்தல்லவா நான் வீட்டிலே வாங்கி வைத்திருக்கிறேன். ரூ. 10,000 கொடுத்து டி.வி. வாங்கிய நானெல்லாம் பார்க்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். (குறுக்கீடு)

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினை எழுப்பப்பட்டு, அதற்குப் பிறகு சம்பந்தப்பட்ட அமைச்சரை விளக்கம் தருவதற்காக அழைத்த பிறகு, மீண்டும் குறுக்கீடுகளை அனுமதிப்பது என்பது இந்த அவையின் நிகழ்ச்சிகளை முறையாக நடத்துவதற்கு உதவுமா என்பதைப் பரிசீலிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொடர்புடைய திரு. பி.எச். பாண்டியன் மட்டும். (குறுக்கீடு)

திரு. பி. எச். பாண்டியன் : எங்களோடு தொடர்பு இல்லையா (குறுக்கீடு) உங்களை எம். ஜி. ஆர். தானே வளர்த்தார். (குறுக்கீடு) அங்கேயிருந்து வேறு வார்த்தைகளைச் சொல்கிறார்கள். உங்களை வளர்த்தவர் எம்.ஜி.ஆர். மறந்துவிடக் கூடாது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன் கேட்க வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் மறந்துவிடக்கூடாது. ஏற்கெனவே நீங்கள் ஒரு முறை பேசியபோது ஆளும் கட்சித் தரப்பினர் தவறான சொற்களைச் சொன்னார்கள் என்று தெரிவித்தீர்கள். அது முறைகேடு, அப்படிப் பயன்படுத்தக் கூடாது என்றுசொன்னேன். இப்போது திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் பேசுகிறபோது நீங்கள் ஏன் குறுக்கிட்டுப் பேசுகிறீர்கள்? பேசியதால்தான் அவர் உங்களுக்குத் திருப்பிப் பதில் சொல்கிறார்.

திரு. குமரி அனந்தன் : Sir, I must be heard. (குறுக்கீடு)

1989 மே 11]

திரு. பி. எச். பாண்டியன் : விளம்பரத்தைத் தொட்டு ஒரு வார்த்தை. அரசாங்கத்தின் சார்பில் கொடுத்த விளம்பரத்தை முழுமையாக-முழு ஷாட்டாக—டி.வி. நிலையம் காட்டாத காரணத்தால் இனிமேல் தமிழக அரசின் சார்பில் டி.வி.க்குக் கொடுக்கப்படக்கூடிய விளம்பரம் நிறுத்தப்படுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. குமரி அனந்தன் : தலைவரவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு குமரி அனந்தன் அவர்கள் உட்கார வேண்டும். இப்போது உணவுத் துறை அமைச்சர்.

*** மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் எழுப்பிய பிரச்சினை குறித்து ஒரு சில கருத்துக்களை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலே கைத்தறி நெசவாளர்களுடைய துயர் துடைப்பிற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர், டாக்டர் கலைஞர் அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். சுமார் 170 கோடி ரூபாய் பெறுமானமுள்ள கைத்தறித் துணி தேங்கிக் கிடக்கிறது. இதை எப்படியாவது விற்பனை செய்து, கைத்தறி நெசவாளர்களுடைய வாழ்வில் ஒரு மறு மலர்ச்சியை உண்டாக்க வேண்டுமென்பதற்காக இலவச வேட்டி-சேலை வழங்குகிற திட்டம், பள்ளி மாணவர்களுக்கு சீருடைவழங்குகிறதிட்டம், போக்குவரத்துத்தொழிலாளர்களுக்கு சீருடை வழங்குகிற திட்டம் போன்ற திட்டங்களின் மூலம் இந்தக் கைத்தறித் துணியை, விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்ததோடு மட்டுமல்லாமல் இன்றையதினம் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் ஒரு கண்காட்சியை ஏற்பாடுசெய்து, கடந்த ஆண்டை விட மிகக் குறுகிய காலத்திலே இரண்டு மடங்குக்கும் அதிகமாகவே விற்பனை செய்யக்கூடிய அளவுக்கு அந்தத் துறையினுடைய அமைச்சர் மாண்புமிகு திரு. தங்கவேலு அவர்கள் தினம் ஒரு அமைச்சராக அழைத்துக் கொண்டுபோய் அங்கே விழா நடத்தி விற்பனையை அதிகரித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இதற்கிடையில் இன்னும்கூட தேங்கிக் கிடக்கிற துணியை விற்பனை செய்ய வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் ஒரு விளம்பரத்தைத் தயார் செய்து, அதிலும் குறிப்பாக கடந்த ஆண்டு 7 நாட்களே ரிபேட் கொடுத்ததற்கு மாறாக இந்த ஆண்டு 15 தினங்களுக்கு ரிபேட் வழங்கப்படும் என்பது சம்பந்தமான ஒரு விளம்பரப் படத்தை

சுமார் $1\frac{1}{2}$ லட்சம் செலவில் தயாரித்து, அதை டி.வி.யில் விளம்பரமாக வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அந்த விளம்பரமே 30 செகண்டுகள் மட்டும்தான். அதில் 3 செகண்டு மட்டும் நம்முடைய முதலமைச்சருடைய படம் இடம் பெற்றிருக்கிறது. நான் கூட 6 ஆம் தேதி கண்காட்சிக்குச் சென்றிருந்தபோது அங்கே அந்தப் படத்தைப் போட்டுக் காட்டியதைப் பார்த்தேன். மிக அழகாக—கண்ணைக் கவரும் வகையில்—மிகச் சிறப்பாக எடுத்திருக்கிறார்கள். ஆனால், நம்முடைய அதிகாரிகள் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும்கூட, டெலிவிஷன் நிலையத்தார் அதைப் போட மறுத்து விட்டார்கள். பிறகு எப்படியாவது—இவ்வளவு செலவு செய்து எடுக்கப்பட்ட படத்தைக் காட்ட வேண்டுமே என்பதற்காக நம் அதிகாரிகள்—முதலமைச்சர் படத்தை நீக்கி விட்டாலும் பரவாயில்லை-மற்றவற்றையாவது காட்டுங்கள் என்று கேட்டுக் கொண்டதன்பேரில் விளம்பரத்தைக் காட்டியிருக்கிறார்கள். இது சம்பந்தமாக—மாண்புமிகு காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் தவறாக நினைக்கக் கூடாது—அந்த இலாக்காவினரே எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதாவது, "This has reference to your statement made at a public function held in connection with the Handloom Exhibition held on 6th May 1989 and quoted in Malai Murasu, dated 7—5—1989 regarding a T. V. advertisement on the 35th Handloom Exhibition that"- இதுதான் முக்கியம்.—"the code for T. V. advertisement stipulates that no advertisement shall be permitted which exploits the State dignitary. It is in this context after also checking with our Directorate that we have informed the Advertisers that the particular sequence in which the Chief Minister and the Education Minister have been shown, may be deleted."

(முற்பகல் 10-30)

ஆக அவர்களுக்கு ஏதோ ஒரு 'கோட்' இருப்பதாகவும் அந்த அடிப்படையிலே இதை நீக்க வேண்டுமென்று சொன்னதாகவும் அவர்களே எழுதி இருக்கிறார்கள்: வேடிக்கை என்னவென்றால், அதே டெலிவிஷனில் பல விளம்பரங்கள் பல பேருடைய படங்களோடு வருகின்றன. உதாரணத்திற்கு குத்துச் சண்டை பயில்வான் தாராசிங் படத்தோடு ஒரு விளம்பரம் வருகிறது. சினிமா நடிகை ஜெயப்பிரதா படத்தோடு விளம்பரம் வருகிறது. விளையாட்டு வீராங்கனை உஷா போன்றவர்களைப் பயன்படுத்தி விளம்பரம் வருகிறது. இவர்களுடைய படத்தோடு

1989 மே 11] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

விளம்பரம் காட்டலாம். ஆனால் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் படத்தோடு ஒரு விளம்பரம் காட்டக் கூடாது என்று 'கோட்' இருக்குமானால் எனக்கு விந்தையாக இருக்கிறது. அது மட்டுமல்ல, தொடர்ந்து இந்த அரசாங்கம் நடத்தும் பல்வேறு நிகழ்ச்சிகளையும் டெலிவிஷன் நிலையம் புறக்கணித்து வருகிறது என்பதற்கு இன்னொரு உதாரணம். திருவாரூர் தேர்த் திருவிழா இந்த மாதம் 7ஆம் தேதி நடைபெற்றது. அப்போது மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சரவர்கள் தேர் வடத்தைப் பிடித்து இழுத்து, 2 லட்சம் பக்தர்கள் பங்கேற்ற நிகழ்ச்சி மிகச்சிறப்பாக நடைபெற்று இருக்கிறது. டி. வி. நிலையம் அதைக்கூட படம் எடுக்கவில்லை. இது சம்பந்தமாக நேற்றையதினம் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் ஒரு செய்தி போட்டு, அவர்களுடைய பதிலையும் கூடப் போட்டு இருக்கிறார்கள். அதிலே சொல்லப்பட்டு இருக்கிற கருத்து: ஏதோ படம் எடுக்கக்கூடியவர்கள் அங்கே போய் எடுக்கவில்லை என்று காரணம் சொல்லப்பட்டு இருந்தது. பொதுவாக பக்தர்கள் பெரும்பாலும் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைக் காணமுடியாவிட்டாலும் டெலிவிஷன் மூலம் கண்டு அவர்கள் தங்களுடைய மனத்தைத் திருப்திபடுத்திக் கொள்வார்கள். உதாரணத்திற்கு திருவரங்கம் கோவில் கோபுரத்தினுடைய கும்பாபிஷேகம் டெலிவிஷனில் காட்டப்பட்டு இருக்கிறது. திருவையாறு தியாகராஜர் ஆராதனை டெலிவிஷனில் காட்டப்பட்டு இருக்கிறது. ஆனால் என்ன பாவம் செய்தார்களோ தெரியவில்லை. திருவாரூரிலே மட்டும் அந்தத் தேர் ஓடுகின்ற நிகழ்ச்சியைப் படம் எடுத்துக் காட்டவில்லை. இது சம்பந்தமாகக் கூட நான் நினைக்கிறேன், ஏற்கெனவே திருவாரூர் தேர், 1975 ஆம் ஆண்டுக்கு முன்னால் தி.மு.க. ஆட்சி இருந்தபோது பல ஆண்டுக்காலமாக ஓடாது இருந்த தேர் தி.மு.க. ஆட்சி காலத்திலே தான் ஓட்டப்பட்டது. அதிலும் பழுதடைந்து இருந்த அந்தத் தேர் ஏன் அப்படி இருக்கிறது என்பதற்கு 'பெல்' நிறுவனத்தைக் கூப்பிட்டு பொறியாளர்கள் எல்லாம் ஆராய்ச்சி செய்து பழுதுபார்த்து அந்தச் சாலைகள்கூட செப்பனிடப்பட்டு தேர் ஓட்டப்பட்டது. ஆனால் தி.மு.க. ஆட்சிக் காலத்திலே அது ஓட்டப்பட்டது என்ற ஒரே ஒரு காரணத்திற்காக இந்த ஆண்டும், 5 அல்லது 6 ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு இப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு பக்தர்கள் மகிழ்ச்சி அடைந்து இருக்கிற நேரத்தில் டெலிவிஷனிலே அதுவும் காட்டப்படவில்லை. அது சம்பந்தமாகக் கூட அவர்கள் புகைப்படம் எடுக்கக்கூடியவர்கள் மீது பழி போட்டு இருந்தார்கள். அந்தப் புகைப்படம் தயாரிக்கக்கூடிய கேமராமேன் குறிப்பிடுவது என்னவென்றால் 'திருவாரூர் தேர்த் திருவிழா படம் எடுக்கும்படி எங்களில் யாரிடமும் டெலிவிஷன் நிறுவனம் சொல்லவில்லை; அந்தப் புனிதமான பணியை ஒப்படைத்த

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1989 மே 11

இருந்தால் சிறப்பாகச் செய்து இருப்போம். தேர்த் திருவிழா நடக்கும் சமயத்தில் டெலிவிஷன் ஒளிப்பதிவாளர் ஒருவர் திருவாரூரில் வேறு ஒரு நிகழ்ச்சியைப் படம் ஆக்கிக்கொண்டு இருந்தார். அவர் டெலிவிஷன் நிலையத்தாரிடம் தொடர்பு கொண்டு திருவாரூர் தேர்த் திருவிழாவைப் படம் எடுக்கட்டுமா என்றும் கேட்டு இருக்கிறார். அதற்கு '' வேண்டாம் '' என்று கூறி, தடுத்துவிட்டனர். உண்மை இவ்வாறு இருக்க, அப்பாவி ஒளிப்பதிவாளர் மீது அபாண்டமாகப் பழி சுமத்தி விட்டு டி.வி. நிலையம் தப்பித்துக்கொள்ள முயற்சிப்பது ஏன்' என்று அவர்கள் அறிக்கை விட்டு இருக்கிறார்கள். இதிலே ஏதோ ஒரு அரசியல் நோக்கத்திற்காகத்தான் இதைச் செய்கிறார்களோ என்று எண்ண வேண்டிய ஒரு சூழ்நிலை இந்த அரசாங்கத்திற்கு ஏற்பட்டு இருக்கிறது. இது சம்பந்தமாகக்கூட நம்முடைய மத்திய செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. பகத் அவர்கள் பாராளுமன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது ஏதோ தமிழ்நாட்டு முதலமைச்சருடைய படம் அதிகமாகக் காட்டப்படுகிறது என்று எல்லாம் கூடச் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் இந்த கோவாப்டெக்ஸ் நிறுவன விளம்பரத்திற்கு மட்டும் ஒரே ஒரு வாரத்திற்கு ஒரு நாளைக்கு ½ நிமிடம், அப்படி 10 தடவைகள் காட்டி இருக்கிறார்கள். மொத்தம் காட்டப் பட்டிருக்கிற நேரம் 5 நிமிடம். இதற்காக நம்முடைய அரசாங்கம் கொடுத்து இருக்கிறபணம் 1 லட்சத்து 33 ஆயிரத்து 500 ரூபாய். இப்படி 1 லட்சத்து 33 ஆயிரத்து 500 ரூபாய் பணம் கொடுத்துக் கொடுக்கின்ற விளம்பரத்தில் இந்த நாட்டினுடைய முதலமைச்சர் படம் இடம்பெறாது என்று டெலிவிஷன் சொல்லுமானால், மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் சொன்னதைப் போல இந்த அரசு வழக்குத் தொடருவதற்கு விரும்பா விட்டாலும் தொடர்ந்து டெலிவிஷன் இழைக்கின்ற அநீதியை மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டு இருக் கிறோம். சரியான பதில் மத்திய அரசாங்கத்திடமிருந்து வரும் என்று நம்புகின்றோம். அப்படி வராவிட்டால் அரசாங்க விளம்பரங்களைத் தொடர்ந்து கொடுப்பதா,இல்லையா என்பதை அரசு பரிசீலிக்கும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களுடைய கருத்தை ஏற்று, கைத்தறிக் கண்காட்சி தொடர்பாக தரப்பட்ட விளம்பரங்கள் தொடர்பாக வும், திருவாரூர் தேர்த்திருவிழாத் தொடர்பாக தொலைக் காட்சியில் செய்தி ஒளிபரப்பப்படாதது தொடர்பாகவும் முறைப்படி தொலைக்காட்சிக்கு எழுதி விடைபெற்ற பிறகு மேல், நடவடிக்கை என்ன என்பதை நான் தெரிவிக்கிறேன் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

4. உரிமைப் பிரச்சினைகள்.

(அ) உறுப்பினர் திரு. எம். அப்துல் லத்திப் மீது—பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமை மீறல் பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் 20–2–88 அன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் மீது ஒரு உரிமை மீறல் பிரச்சினைக்கான அறிவிப்பைக் கொடுத்திருந்தார். அந்த அறிவிப்பில் திரு. குமரி அனந்தன் அவர்கள், ''இப்பேரவையில் இல்லாத நமது நாட்டின் பிரதமர் மீது ஆதாரம் அற்ற குற்றச்சாட்டைக் கூறியதன் மூலம் இந்த அவை தனக்கு வழங்கியுள்ள உரிமையைத் தவறாகப் பயன்படுத்தி அவை உரிமை மீறல் குற்றத்தை இழைத்திருக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டுவர அனுமதி கோருகிறேன்.'' என்று குறிப்பிட்டுள்ளார்.

இப்பிரச்சினை தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டதால், இது தொடர்பாக சென்னை தொலைக் காட்சி நிலைய இயக்குநரிடம் விளக்கம் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் குறிப்பிட்ட நிகழ்ச்சி எந்த நேரத்தில், எந்த நாளில் ஒளிபரப்பானது என்று தொலைக்காட்சி நிலையத்தார் விவரம் கேட்டிருந்தார்கள். எனவே திரு. லத்தீப் அவர்களிட மிருந்து இது குறித்து விவரம் கேட்டு மீண்டும் தொலைக்காட்சி நிலையத்தினருக்குக் கடிதம் எழுதப்பட்டது. திரு. லத்தீப் அவர்கள் குறிப்பிட்ட நிகழ்ச்சி 17–9–88 அன்று தொலைக் காட்சியின் தேசிய ஒளிபரப்பு நிகழ்ச்சியில் இரவு 7-30 முதல் 9-00 மணியளவில் பிரதமர் அவர்கள் சனாதன தர்ம சம்ரக்ஷண சமிதி என்ற அமைப்பில் பேசும்போது ஒளிபரப்பப்பட்டதாகத் தெரிவித்தார். இது குறித்துச் சென்னை தொலைக்காட்சி நிலையத்தாருக்கு டெல்லி தொலைக்காட்சி நிலையத்திடமிருந்து கீழ்க்கண்ட 'Telex' செய்தி வந்துள்ளதாகக் கடிதம் வந்துள்ளது.

"Reference Your Telex of Today in connection with the query from State Legislative Assembly Secretariat. Doordarshan did not telecast on September 17 any such item between 7-30 and 9 p.m. as referred to in the letter of the Legislative Assembly Secretariat.''

டெல்லி தொலைக்காட்சி நிலையத்தால், இந்த குறிப்பிடப் பட்டுள்ள நிகழ்ச்சி செப்டம்பர் 17, 1988 அன்று இரவு 7-30 — 9-00 மணியளவில் ஒளிபரப்பப்படவில்லை என்று தெரிவித்துள்ளார்கள். வேறு ஏதாவது நேரத்தில் ஒளிபரப்பப் பட்டதா என்றும் கூறவில்லை. இதில் திரு லத்தீப் அவர்கள், தான் பார்த்ததை ஞாபகத்தில் இருந்துதான் கூறியிருக்கிறார். அவர் இன்றும் அந்த நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டதாகவும், தான் பார்த்ததாகவும் தெரிவிக்கிறார். இதில் இருந்து பார்க்கும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவையில் கூறிய செய்தி, அது தவறு என்று அறிந்து, அவையைத் திசை திருப்பும் நோக்கத்துடன் தவறானவற்றை அவைக்கு வேண்டுமென்றே தெரிவித்துள்ளார் என்று கொள்வதற்கில்லை. அதிலும் ஒரு செய்கை அது நிகழவில்லை என்று தெரிந்தும் அவையின் திசையைத் திருப்புவதற்கு அவையில் கூறினால்தான் அது அவை உரிமை மீறிய பிரச்சினையில் அடங்கும்.

If any statement is made on the Floor of the House by a Member or a Minister which another Member believes to be untrue and incomplete or incorrect, it does not constitute a breach of privilege. A breach of privilege can arise only if the Member or the Minister makes a false statement or incorrect statement wilfully, deliberately or knowingly.

எனவே, இதில் அவை உரிமை மீறிய பிரச்சினை ஏதும இல்லை எனத் தீர்ப்பளிக்கிறேன்.

(ஆ) மதுரையைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு. டி. குருசாமி பேரவைத் தலைவருக்கு அனுப்பியுள்ள சட்ட அறிவிக்கை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. குருசாமி, வழக் கறிஞர், 41, வடக்கு வெளி வீதி, மதுரை—4-4-1989 ஆம் நாளிட்ட சட்ட அறிவிக்கை ஒன்றை எனக்கு அனுப்பியுள்ளார்.

அவ்வறிக்கையில், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களது பதவி விலகல் குறித்து எழுதிய கடிதம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் கொடுத்தவர் பெயர், அவரின் ஏனைய விவரங்கள் பற்றி சட்ட அறிவிக்கை பெற்ற 15 நாட்களுக்குள் மக்களுக்குத் தெரிவிக்கப்படவேண்டும் என்றும், தவறினால் அதற்குப் பரிகாரம் பெறும் பொருட்டு, பொதுமக்கள் நலன் கோரி, சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர நேரிடும் என்றும் கூறியுள்ளார்கள்.

இது பேரவைத் தலைவரை அவர் ஆற்றும் கடமையில் அச்சுறுத்துவதாகவும், இடையூறு செய்வதாகவும் அமைகிறது. எனவே, இதில் அவை உரிமை மீறிய பிரச்சினை அடங்கியுள்ளதால் இதனை அவை உரிமைக் குழுவிற்கு ஆய்ந்து அறிக்கை அளிக்க அனுப்புகிறேன்.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(இ) கோ-ஆப்டெக்ஸ் சார்பில் கொடுக்கப்பட்ட விளம்பரக் காட்சிகளை முழுமையாகத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாதது குறித்து—தொடர்ச்சி.

திரு. குமரி அனந்தன்: சபாநாயகர் அவர்களே, (குறுக்கீடு) ஜட்ஜ்மெண்டிலே பேசவில்லையே நான். நான் எதற்குப் பேசவருகிறேன் என்றே சொல்லவில்லையே. சபாநாயகர் அவர்களே, நான் இங்கே எழுந்து நிற்கிறேன் என்று சொன்னால், என் உள்ளத்தில் தோன்றுவதையெல்லாம் இங்கே கொட்டி விடுவதில்லை எப்பொழுதும். ஆயிரம் பூக்கள் மலர்ந்தால், பூஜைக்குரிய பூவை எடுத்துப் போடுவது போலே, சில கேள்விகளை மட்டுமே நான் கேட்கிறேன். அதைப்போலவே, இங்கே நமது எம். ஜி. ஆர். அவர்கள் வளர்த்தார்கள் என்று சொல்லுகின்ற ஒரு சொற்றொடர் வந்த காரணத்தினாலே, சொல்கின்றேன். ஒரு தேசிய பாரம் பரியத்திலே வந்த நான், அதனைச் சில செய்திகளிலே உங்களுக்குச் சொல்கிறேன். (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள் சார். அதெல்லாம் முடியாது. நான் சொல்லவேண்டும். I am not yielding. அவர் அனுமதித்து இருக்கிறார். ஒரு கட்சியோடு உறவு வைக்கின்றபொழுது, மற்றக்கட்சி—எம். ஜி. ஆரினுடைய கட்சி எங்களுக்கு அனுமார் போலே உதவி செய்திருந்தால் நாங்கள் ஒரு அணில் போலேயாவது உதவி செய்திருக்கக் கூடும்.

(முற்பகல் 10-40)

அதைப்போல மாண்புமிகு முதல்வர், இப்போது கலைஞர் அவர்கள், அவர்களோடு கூட்டோடு இருக்கின்றபோது அவர்கள் பெருமளவில் உதவி செய்திருந்தால் நாங்கள் சிறிய அளவில் செய்திருக்கலாம். நாங்கள் பெருமளவில் செய்திருந்தால் அவர்கள் சிறிய அளவில் செய்திருக்கலாம், ஆனால் ஒருவருடைய அரசியலைப் பற்றிச் சொல்கிறபோது அரசியலுக்குக்

கண்டுபிடிக்கப்பட்டு, கொண்டு வரப்பட்டு, காமராஜர் அவர்களால் வளர்க்கப்பட்ட எனக்கு மற்றவர்கள் உதவி செய்தார்கள் என்று சொல்வதை ஒப்புக்கொள் கிறேன். ஆனால் இன்னாரால் நான் வளர்க்கப்பட்டவன் என்று சொல்ல வேண்டுமென்றால் பெருந்தலைவர் காமராஜர் அவர்களாலேயே நான் அரசியலில் வளர்க்கப்பட்டவன் என்ற தகவலை மட்டும் சொல்லி அமர்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன்: தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே என்ன 'point of order' இருக்கிறது? உட்காருங்கள். அடுத்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்துக் கவன ஈர்ப்பு.

5. கவன ஈர்ப்பு.

(அ) மேட்டூரிலுள்ள 'கெம்பிளாஸ்ட்' தொழிற்சாலை மூடப் பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கே. அர்ஜுனன் சி. கிருஷ்ணன் க. பழனிசுவாமி ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. கே. அர்ஜுனன்: தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், மேட்டூரில் உள்ள கெம்பிளாஸ்ட் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

சேலம் மாவட்டம் மேட்டூர் அணையில் உள்ள "கெம்பி ளாஸ்ட்" என்ற நிறுவனத்தில் 502 தொழிலாளர்கள் பணியாற்று கின்றனர். இதில் கெம்பிளாஸ்ட் எம்ப்ளாயீஸ் யூனியன் என்ற

4. உரிமைப் பிரச்சினைகள்.

(அ) உறுப்பினர் திரு. எம். அப்துல் லத்திப் மீது—பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமை மீறல் பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் 20–2–88 அன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் மீது ஒரு உரிமை மீறல் பிரச்சினைக்கான அறிவிப்பைக் கொடுத்திருந்தார். அந்த அறிவிப்பில் திரு. குமரி அனந்தன் அவர்கள், ''இப்பேரவையில் இல்லாத நமது நாட்டின் பிரதமர் மீது ஆதாரம் அற்ற குற்றச்சாட்டைக் கூறியதன் மூலம் இந்த அவை தனக்கு வழங்கியுள்ள உரிமையைத் தவறாகப் பயன்படுத்தி அவை உரிமை மீறல் குற்றத்தை இழைத்திருக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டுவர அனுமதி கோருகிறேன்.'' என்று குறிப்பிட்டுள்ளார்.

இப்பிரச்சினை தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டதால், இது தொடர்பாக சென்னை தொலைக் காட்சி நிலைய இயக்குநரிடம் விளக்கம் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் குறிப்பிட்ட நிகழ்ச்சி எந்த நேரத்தில், எந்த நாளில் ஒளிபரப்பானது என்று தொலைக்காட்சி நிலையத்தார் விவரம் கேட்டிருந்தார்கள். எனவே திரு. லத்தீப் அவர்களிட மிருந்து இது குறித்து விவரம் கேட்டு மீண்டும் தொலைக்காட்சி நிலையத்தினருக்குக் கடிதம் எழுதப்பட்டது. திரு. லத்தீப் அவர்கள் குறிப்பிட்ட நிகழ்ச்சி 17–9–88 அன்று தொலைக் காட்சியின் தேசிய ஒளிபரப்பு நிகழ்ச்சியில் இரவு 7-30 முதல் 9-00 மணியளவில் பிரதமர் அவர்கள் சனாதன தர்ம சம்ரக்ஷண சமிதி என்ற அமைப்பில் பேசும்போது ஒளிபரப்பப்பட்டதாகத் தெரிவித்தார். இது குறித்துச் சென்னை தொலைக்காட்சி நிலையத்தாருக்கு டெல்லி தொலைக்காட்சி நிலையத்திடமிருந்து கீழ்க்கண்ட 'Telex' செய்தி வந்துள்ளதாகக் கடிதம் வந்துள்ளது.

"Reference Your Telex of Today in connection with the query from State Legislative Assembly Secretariat. Doordarshan did not telecast on September 17 any such item between 7-30 and 9 p.m. as referred to in the letter of the Legislative Assembly Secretariat.''

டெல்லி தொலைக்காட்சி நிலையத்தால், இந்த குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சி செப்டம்பர் 17, 1988 அன்று இரவு 7-30 — 9-00 மணியளவில் ஒளிபரப்பப்படவில்லை என்று தெரிவித்துள்ளார்கள். வேறு ஏதாவது நேரத்தில் ஒளிபரப்பப்பட்டதா என்றும் கூறவில்லை. இதில் திரு லத்தீப் அவர்கள், தான் பார்த்ததை ஞாபகத்தில் இருந்துதான் கூறியிருக்கிறார். அவர் இன்றும் அந்த நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டதாகவும், தான் பார்த்ததாகவும் தெரிவிக்கிறார். இதில் இருந்து பார்க்கும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவையில் கூறிய செய்தி, அது தவறு என்று அறிந்து, அவையைத் திசை திருப்பும் நோக்கத்துடன் தவறானவற்றை அவைக்கு வேண்டுமென்றே தெரிவித்துள்ளார் என்று கொள்வதற்கில்லை. அதிலும் ஒரு செய்கை அது நிகழவில்லை என்று தெரிந்தும் அவையின் திசையைத் திருப்புவதற்கு அவையில் கூறினால்தான் அது அவை உரிமை மீறிய பிரச்சினையில் அடங்கும்.

If any statement is made on the Floor of the House by a Member or a Minister which another Member believes to be untrue and incomplete or incorrect, it does not constitute a breach of privilege. A breach of privilege can arise only if the Member or the Minister makes a false statement or incorrect statement wilfully, deliberately or knowingly.

எனவே, இதில் அவை உரிமை மீறிய பிரச்சினை ஏதும் இல்லை எனத் தீர்ப்பளிக்கிறேன்.

(ஆ) மதுரையைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு. டி. குருசாமி பேரவைத் தலைவருக்கு அனுப்பியுள்ள சட்ட அறிவிக்கை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. குருசாமி, வழக்கறிஞர், 41, வடக்கு வெளி வீதி, மதுரை—4-4-1989 ஆம் நாளிட்ட சட்ட அறிவிக்கை ஒன்றை எனக்கு அனுப்பியுள்ளார்.

அவ்வறிக்கையில், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களது பதவி விலகல் குறித்து எழுதிய கடிதம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் கொடுத்தவர் பெயர், அவரின் ஏனைய விவரங்கள் பற்றி சட்ட அறிவிக்கை பெற்ற 15 நாட்களுக்குள் மக்களுக்குத் தெரிவிக்கப்படவேண்டும் என்றும், தவறினால் அதற்குப் பரிகாரம் பெறும் பொருட்டு, பொதுமக்கள் நலன் கோரி, சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர நேரிடும் என்றும் கூறியுள்ளார்கள்.

டெல்லி தொலைக்காட்சி நிலையத்தால், இந்த குறிப்பிடப் பட்டுள்ள நிகழ்ச்சி செப்டம்பர் 17, 1988 அன்று இரவு 7-30 — 9-00 மணியளவில் ஒளிபரப்பப்படவில்லை என்று தெரிவித்துள்ளார்கள். வேறு ஏதாவது நேரத்தில் ஒளிபரப்பப் பட்டதா என்றும் கூறவில்லை. இதில் திரு லத்தீப் அவர்கள், தான் பார்த்ததை ஞாபகத்தில் இருந்துதான் கூறியிருக்கிறார். அவர் இன்றும் அந்த நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டதாகவும், தான் பார்த்ததாகவும் தெரிவிக்கிறார். இதில் இருந்து பார்க்கும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவையில் கூறிய செய்தி, அது தவறு என்று அறிந்து, அவையைத் திசை திருப்பும் நோக்கத்துடன் தவறானவற்றை அவைக்கு வேண்டுமென்றே தெரிவித்துள்ளார் என்று கொள்வதற்கில்லை. அதிலும் ஒரு செய்கை அது நிகழவில்லை என்று தெரிந்தும் அவையின் திசையைத் திருப்புவதற்கு அவையில் கூறினால்தான் அது அவை உரிமை மீறிய பிரச்சினையில் அடங்கும்.

If any statement is made on the Floor of the House by a Member or a Minister which another Member believes to be untrue and incomplete or incorrect, it does not constitute a breach of privilege. A breach of privilege can arise only if the Member or the Minister makes a false statement or incorrect statement wilfully, deliberately or knowingly.

எனவே, இதில் அவை உரிமை மீறிய பிரச்சினை ஏதும் இல்லை எனத் தீர்ப்பளிக்கிறேன்.

(ஆ) மதுரையைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு. டி. குருசாமி பேரவைத் தலைவருக்கு அனுப்பியுள்ள சட்ட அறிவிக்கை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. குருசாமி, வழக்கறிஞர், 41, வடக்கு வெளி வீதி, மதுரை—4-4-1989 ஆம் நாளிட்ட சட்ட அறிவிக்கை ஒன்றை எனக்கு அனுப்பியுள்ளார்.

அவ்வறிக்கையில், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களது பதவி விலகல் குறித்து எழுதிய கடிதம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் கொடுத்தவர் பெயர், அவரின் ஏனைய விவரங்கள் பற்றி சட்ட அறிவிக்கை பெற்ற 15 நாட்களுக்குள் மக்களுக்குத் தெரிவிக்கப்படவேண்டும் என்றும், தவறினால் அதற்குப் பரிகாரம் பெறும் பொருட்டு, பொதுமக்கள் நலன் கோரி, சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர நேரிடும் என்றும் கூறியுள்ளார்கள்.

இது பேரவைத் தலைவரை அவர் ஆற்றும் கடமையில் அச்சுறுத்துவதாகவும், இடையூறு செய்வதாகவும் அமைகிறது. எனவே, இதில் அவை உரிமை மீறிய பிரச்சினை அடங்கியுள்ளதால் இதனை அவை உரிமைக் குழுவிற்கு ஆய்ந்து அறிக்கை அளிக்க அனுப்புகிறேன்.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(இ) கோ-ஆப்டெக்ஸ் சார்பில் கொடுக்கப்பட்ட விளம்பரக் காட்சிகளை முழுமையாகத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாதது குறித்து—தொடர்ச்சி.

திரு. குமரி அனந்தன்: சபாநாயகர் அவர்களே, (குறுக்கீடு) ஜட்ஜ்மெண்டிலே பேசவில்லையே நான். நான் எதற்குப் பேசவருகிறேன் என்றே சொல்லவில்லையே. சபாநாயகர் அவர்களே, நான் இங்கே எழுந்து நிற்கிறேன் என்று சொன்னால், என் உள்ளத்தில் தோன்றுவதையெல்லாம் இங்கே கொட்டி விடுவதில்லை எப்பொழுதும். ஆயிரம் பூக்கள் மலர்ந்தால், பூஜைக்குரிய பூவை எடுத்துப் போடுவது போலே, சில கேள்விகளை மட்டுமே நான் கேட்கிறேன். அதைப்போலவே, இங்கே நமது எம். ஜி. ஆர். அவர்கள் வளர்த்தார்கள் என்று சொல்லுகின்ற ஒரு சொற்றொடர் வந்த காரணத்தினாலே, சொல்கின்றேன். ஒரு தேசிய பாரம் பரியத்திலே வந்த நான், அதனைச் சில செய்திகளிலே உங்களுக்குச் சொல்கிறேன். (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள் சார். அதெல்லாம் முடியாது. நான் சொல்லவேண்டும். I am not yielding. அவர் அனுமதித்து இருக்கிறார். ஒரு கட்சியோடு உறவு வைக்கின்றபொழுது, மற்றக்கட்சி—எம். ஜி. ஆரினுடைய கட்சி எங்களுக்கு அனுமார் போலே உதவி செய்திருந்தால் நாங்கள் ஒரு அணில் போலேயாவது உதவி செய்திருக்கக் கூடும்.

(முற்பகல் 10-40)

அதைப்போல மாண்புமிகு முதல்வர், இப்போது கலைஞர் அவர்கள், அவர்களோடு கூட்டோடு இருக்கின்றபோது அவர்கள் பெருமளவில் உதவி செய்திருந்தால் நாங்கள் சிறிய அளவில் செய்திருக்கலாம். நாங்கள் பெருமளவில் செய்திருந்தால் அவர்கள் சிறிய அளவில் செய்திருக்கலாம், ஆனால் ஒருவருடைய அரசியலைப் பற்றிச் சொல்கிறபோது அரசியலுக்குக்

கண்டுபிடிக்கப்பட்டு, கொண்டு வரப்பட்டு, காமராஜர் அவர்களால் வளர்க்கப்பட்ட எனக்கு மற்றவர்கள் உதவி செய்தார்கள் என்று சொல்வதை ஒப்புக்கொள் கிறேன். ஆனால் இன்னாரால் நான் வளர்க்கப்பட்டவன் என்று சொல்ல வேண்டுமென்றால் பெருந்தலைவர் காமராஜர் அவர்களாலேயே நான் அரசியலில் வளர்க்கப்பட்டவன் என்ற தகவலை மட்டும் சொல்லி அமர்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன்: தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே என்ன 'point of order' இருக்கிறது? உட்காருங்கள். அடுத்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்துக் கவன ஈர்ப்பு.

5. கவன ஈர்ப்பு.

(அ) மேட்டூரிலுள்ள 'கெம்பிளாஸ்ட்' தொழிற்சாலை மூடப் பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கே. அர்ஜுனன் சி. கிருஷ்ணன் க. பழனிசுவாமி ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. கே. அர்ஜுனன்: தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், மேட்டூரில் உள்ள கெம்பிளாஸ்ட் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

சேலம் மாவட்டம் மேட்டூர் அணையில் உள்ள "கெம்பி ளாஸ்ட்" என்ற நிறுவனத்தில் 502 தொழிலாளர்கள் பணியாற்று கின்றனர். இதில் கெம்பிளாஸ்ட் எம்ப்ளாயீஸ் யூனியன் என்ற

அரசியல் சார்பற்ற ஒரு தொழிற் சங்கம் மட்டுமே இயங்கி வருகிறது. தொழிலாளர்கள் சரிவரப் பணி செய்யவில்லை என்ற நிர்வாகத்தின் பிப்ரவரி 89 ஆம் மாத கடிதங்களைத் தொடர்ந்து நிர்வாகம் மற்றும் தொழிற்சங்கம் ஆகியோருக்கிடையே 28—2—89 அன்று சேலம் தொழிலாளர் அலுவலர் முன்பு சமரசப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. நிர்வாகத்துடன் மேற்கொண்ட நேரடி பேச்சுவார்த்தைகளில் சுமுகமான முடிவு ஏற்படாததால் தொழிலாளர்கள் தொழிற்சாலையின் விதிப்படி வேலை (work to rule) செய்து வருவதாகவும் இதன் மூலம் மிகை நேரப்பணி செய்யப்படுவதில்லை என்றும் ஆனால் தொழிலாளர்கள் எப்போதும்போல பணிக்குச் சென்று வருகிறார்கள் என்றும் (1) தற்போதிருக்கும் 9 கிரேடுகளை 5 கிரேடுகளாக மாற்றுதல் (2) பயிற்சி மற்றும் வாரிசுதாரர்களுக்கு முன்னுரிமை அளித்தல் (3) ஊதியம் மற்றும் இதர படிகளில் உயர்வு அளித்தல் ஆகிய கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு 1—10—88 முதல் அமல்படுத்தவேண்டும் என்பதுடன் நிர்வாகத்தின் பிப்ரவரி மாத நோட்டீஸ்கள் வாபஸ் பெறப்படாவிட்டால் 11—3—89 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வேலை நிறுத்தத்தில் ஈடுபட அறிவிப்புக் கொடுத்திருப்பதாகத் தொழிற்சங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தொழிலாளர்களின் 'விதிப்படி வேலை' என்ற மேற்குறிப்பிட்ட வேலையின் காரணமாக உற்பத்தி பூஜ்யம் ஆகி விட்டது என்றும் தொழிலாளர்கள் சகஜ நிலைக்கு வராவிட்டால் 'பாதுகாப்பு' என்பதில் நிர்வாகம் கவனம் செலுத்த வேண்டியிருக்கும் என்றும், நிர்வாகத்தின் நோட்டீஸ் திரும்பப்பெற இயலாது என்றும், கிரேடுகள், வாரிசுகளுக்குப் பயிற்சி அளித்தல், பஞ்சப்படி உயர்வு, போனஸ் பிரச்சினை, ஒப்பந்த காலம் 3 வருடமா அல்லது 5 வருடமா என்பதுகுறித்தும் பேசி முடிக்கலாம் என்றும் நிர்வாகத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதற்கிடையில் நிறுவனம் 2—3—89 காலை 6 மணி முதல் கதவடைப்பு செய்யப்பட்டது.

நிர்வாகத்தின் கதவடைப்பினைத் தொடர்ந்து சேலம் தொழிலாளர் அலுவலர் முன்பு இருதரப்பினருக்குமிடையே பல்வேறு தேதிகளில் நடைபெற்ற சமரசப் பேச்சுவார்த்தைகளில் "தங்களது கோரிக்கைகள் குறித்து ஒரு முடிவு ஏற்படும் வரையில் 'விதிப்படி வேலை' என்ற அடிப்படையில் வேலை செய்வதாகவும் இல்லையெனில் ஒரு கணிசமான தொகையை 'ஆரம்ப நிலை'யாக அறிவித்தால் சகஜ நிலையில் பணி செய்வதாகவும் தொழிற்சங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. ஒரு கணிசமான தொகையை 'ஆரம்ப நிலை'யாக அறிவிக்க வேண்டும் என்ற நிபந்தனையைத் தொழிற்சங்கம் வைப்பதால் ஒப்பந்த காலம் மாறுபடும்; பஞ்சப்படி மற்றும் போனஸ் ஃபார்முலா ஆகியவை குறித்தும் பேசப்படவேண்டும் என நிர்வாகத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இருதரப்பினரும் தத்தம் நிலையிலேயே இருந்து வருவதால் பிரச்சினைக்கு சுமுக முடிவு ஏற்படும் வகையில் மீண்டும் பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. கே. அர்ஜுனன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதுவரையில் கெம்பிளாஸ்ட் நிறுவனத்தில் லாப நட்டக் கணக்கின் அடிப்படையில் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு பற்றிய பேச்சுவார்த்தை நடைபெற்று அந்த அடிப்படையில் ஒப்பந்தம் போடப்படுவதும், அதற்குப் பிறகு அந்தத் தொழிற்சாலை சுமுகமாக இயங்குவதும் வாடிக்கையாக இருந்து வருகிறது. மூன்றாண்டுகள் முடிந்து இப்போது ஒப்பந்தத்தினுடைய காலத்தில் பேச்சுவார்த்தை என்ற முயற்சியில் ஈடுபடுகிற நேரத்தில் அந்தத் தொழிற் சாலையை 'லாக் அவுட்' செய்து விட்டு, தொழிலாளர்களை நடுத்தெருவில் நிறுத்திவிட்டுப் போயிருக்கிறார்கள். இன்றைக்கு அரசாங்கத்திற்குக் கிடைக்க வேண்டிய வரி கிட்டத்தட்ட ரூ. 278 லட்சம் கூட இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அத்தனை தொழிலாளர்களும் நடுத்தெருவில் நிற்கிறார்கள். அதை மனதில் கொண்டு இதில் சுமுகமான சூழ்நிலையை உருவாக்கி, உடனடியாகப் பேச்சுவார்த்தை மூலமாக அந்த ஆலையை அரசு திறக்குமா என்று அறிய விரும்புகிறேன்;

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இது தொடர்பாக நிர்வாகத்திற்கும், தொழிலாளர்களுக்கும் எழுந்துள்ள நிலை குறித்து இறுதிக் கட்டமாக சேலம் துணை ஆணையாளரிடம் 27—4—1989 ஆம் தேதியன்று பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருக்கிறது. ஒரு இணக்கமான முடிவு வராத காரணத்தால் மீண்டும் இந்தப் பேச்சுவார்த்தை தொடரவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. அர்ஜுனன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதிலே இணக்கமான முடிவிற்கு வரவேண்டும். அங்கே சட்டம் ஒழுங்குப் பிரச்சினை எதுவும் இல்லை. தொழிற்சாலை மிக அதிகமாக லாபத்தில் ஓடக்கூடிய தொழிற்சாலை. அரசாங் கத்திற்குக் கோடிக்கணக்கான ரூபாய் வரி வரக்கூடிய தொழிற் சாலை. எனவே, ஏற்கெனவே பல தொழிற்சாலைகள் மூடப் பட்டிருக்கின்றன. இந்தத் தொழிற்சாலை லாக்-அவுட் செய்யப் பட்டிருப்பதால் பல தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார் கள். எனவே, தொழிற்சாலையைத் திறந்து வைத்துக்கொண்டு, தொழிலை நடத்திக்கொண்டு, தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற வகையில் பேச்சுவார்த்தையைத்தொடர்வதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று அறிய

விரும்புகிறேன். அடுத்து, மின்வெட்டைக் காரணமாக வைத்து தான் இந்த 'லாக்-அவுட்' செய்யப்பட்டிருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்திருக்கிற தகவலின்படி மின்வெட்டல்ல இந்தக் கதவடைப்பிற்குக் காரணம். இங்கே தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்திற்கும் நடந்த பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படாத காரணத்தால்தான் கதவடைப்பு செய்யப்பட்டிருக்கிறது. நிர்வாகத்தினரின் கோரிக்கையெல்லாம், நாங்கள் ஆலையைத் திறப்பதற்குத் தயாராக இருக்கிறோம். ஆனால் 'ஒர்க் டு ரூல்'—அதாவது சட்டப்படிதான் நாங்கள் வேலை செய்வோம் என்ற நிலையிருக்கிறது. அது மாறி சகஜநிலைக்குத் தொழிலாளர்கள் வந்து விடுவார்களானால் நாங்கள் ஆலையைத் திறப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்று அவர்கள் சொல்கிறார்கள். தொழிலாளர்கள் 'ஸ்டார்ட்டிங் பாயிண்ட்' என்ற அடிப்படையில் ஒரு கணிசமான தொகையை முதலில் வழங்கினால்தான் பேச்சுவார்த்தை தொடங்குவதற்கும், சகஜநிலை உருவாவதற்கும் வாய்ப்பாக இருக்குமென்று சொல்கிறார்கள். எனவே தொழிலாளர் தரப்பிலும் நிர்வாகத் தரப்பிலும் தங்கள் நிலையிலே அவர்கள் நின்று கொண்டு இருக்கிற காரணத்தால், இணக்கமான முடிவை உடன் மேற்கொள்ள முடியவில்லை. இருந்தாலும் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுக்கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், விரைவில் ஒரு நல்ல முடிவு நிச்சயமாக எடுக்கப்படும்.

(ஆ) வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூரில் குடிநீர் கிடைக்காதது குறித்து.

திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் நகரில் கடந்த 10 நாட்களாகக் குடிநீர் வழங்காதது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1989 மே 11] *[திரு கே. அர்ஜுனன்]*

விரும்புகிறேன். அடுத்து, மின்வெட்டைக் காரணமாக வைத்து தான் இந்த 'லாக்-அவுட்' செய்யப்பட்டிருக்கிறதா என்பதை யும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்திருக்கிற தகவலின்படி மின்வெட்டல்ல இந்தக் கதவடைப்பிற்குக் காரணம். இங்கே தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்திற்கும் நடந்த பேச்சுவார்த் தையில் உடன்பாடு ஏற்படாத காரணத்தால்தான் கதவடைப்பு செய்யப்பட்டிருக்கிறது. நிர்வாகத்தினரின் கோரிக்கையெல்லாம், நாங்கள் ஆலையைத் திறப்பதற்குத் தயாராக இருக்கிறோம். ஆனால் 'ஒர்க் டு ரூல்'—அதாவது சட்டப்படிதான் நாங்கள் வேலை செய்வோம் என்ற நிலையிருக்கிறது. அது மாறி சகஜநிலைக்குத் தொழிலாளர்கள் வந்துவிடுவார்களானால் நாங்கள் ஆலையைத் திறப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்று அவர்கள் சொல்கிறார்கள். தொழிலாளர்கள் 'ஸ்டார்ட்டிங் பாயிண்ட்' என்ற அடிப்படையில் ஒரு கணிசமான தொகையை முதலில் வழங்கினால்தான் பேச்சுவார்த்தை தொடங்கு வதற்கும், சகஜநிலை உருவாவதற்கும் வாய்ப்பாக இருக்கு மென்று சொல்கிறார்கள். எனவே தொழிலாளர் தரப்பிலும் நிர்வாகத் தரப்பிலும் தங்கள் நிலையிலே அவர்கள் நின்று கொண்டு இருக்கிற காரணத்தால், இணக்கமான முடிவை உடன் மேற்கொள்ள முடியவில்லை. இருந்தாலும் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுக்கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், விரைவில் ஒரு நல்ல முடிவு நிச்சயமாக எடுக்கப்படும்.

(ஆ) வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூரில் குடிநீர் கிடைக்காதது குறித்து.

திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, ''வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் நகரில் கடந்த 10 நாட்களாகக் குடிநீர் வழங்காதது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

[டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி] [1989 மே 11

அறிக்கை.

திருப்பத்தூர் நகராட்சிக்கான குடிநீர்த் திட்டத்திற்கு பாலாற்றின் கரையிலுள்ள அம்பலூர் என்ற கிராமத்தில் தலைமை நீரேற்று நிலையம் உள்ளது. அங்கு ஊற்றுக் கிணறு களும் உறிஞ்சுமுறை ஊற்றுக் குழாய்கள் (Filter Points) அமைத்து வெற்றிடம் உண்டாக்கும் (Vacuum Pump) இயந்திரம் மூலம் நீர் உறிஞ்சப்பட்டு 135 குதிரை சக்தி கொண்டதும், நிமிடத்துக்கு சுமார் 4,930 லிட்டர் வீதம், நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் தினசரி 16 மணி நேரம் இயங்கக் கூடிய வகையில், வாணியம் பாடி உபமின் நிலையத்தில் (Sub-Station) இருந்து தடையின்றி மின்சாரம் கிடைக்கக் கூடிய முறையில் அமைக்கப்பட்டு, 1979 முதல் செயலாக்கப்படுகிறது.

2. வழியோரக் கிராமங்களான அம்பலூர், கேதாண்டப்பட்டி பக்கிரி-தக்கா, திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள ஆசிரியர் காலனிகளுக்கும் இத்திட்டத்திலிருந்து குடிநீர் வழங்கப்படுகிறது. தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து 24 மணி நேரமும் நீரேற்றப்பட்டு திருப்பத்தூர் நகராட்சிக்கு 52,00,000 லிட்டர் குடிநீர் வழங் கப்பட்டு வந்தது.

3. அம்பலூர் தலைமை நீரேற்று நிலையத்தில் தற்சமயம் 4 மீட்டர் ஆழம் தண்ணீர் உள்ளது. ஆயினும் வாணியம்பாடி மின் உப நிலையத்திலிருந்து பெறப்படும் மின் அழுத்தக் குறைவு, மின்தடை காரணமாக குடிநீர் ஏற்றுவதில் தாமதம் ஏற்பட்டு குடிநீர் வழங்குவது பாதிக்கப்பட்டது. மின்வெட்டு நேரம் நகராட்சிக்கு முன்னரே தெரிவிக்கப்படாததால், 11–4–89 அன்று பகுதிவாரியாக குறைந்த அளவே குடிநீர் தரப்பட்டது. இது பற்றி முன்அறிவிப்பு பொதுமக்களுக்குத்தர இயலவில்லை. ஏப்ரல்மாதம் 11ஆம் தேதியிலிருந்து 15ஆம் தேதிவரை மின் பற்றாக்குறை காரணமாக குறைந்த அளவில் நீர் ஏற்றப்பட்டதால் திருப்பத் தூரில் வழங்கப்பட்ட குடிநீரின் அளவு குறைவாக இருந்தது. தற்போது நாளொன்றுக்கு 45 லட்சம் லிட்டர் நீர் இறைக்கப் பெற்று திருப்பத்தூர் நகராட்சிக்கு 25 லட்சம் லிட்டர் நீரும், மற்றைய இடங்களுக்கு 20 லட்சம் லிட்டர் நீரும் தினமும் வழங்கப்படுகிறது.

4. மேலும், குடிநீர் தினந்தோறும் வழங்கப்படுவதுடன் மேடான பகுதிகளுக்கு டிராக்டர் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. வறட்சி நிவாரணப் பணிகளின்கீழ் 10 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் பணி துவக்கப்பட்டுள்ளன.

திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே, அங்கே பாலாற்றிலே ஏறக்குறைய 4 மீட்டர் ஆழம் தண்ணீர் உள்ளதாகவும், மின்சாரம் இல்லாத

காரணத்தால் தண்ணீர் கொடுக்கப்படவில்லை என்பதை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஆதலால், உடனடியாக குடிநீர் இல்லாத பகுதிகளுக்கு, வாணியம்பாடியிலிருந்து வருகிற மின்சாரத்தை வழங்கி இதற்கு முன்னுரிமை கொடுத்து, திருப்பத்தூர் நகரத்திற்குக் குடிதண்ணீர் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலைமை ஏப்ரல் 11 ஆம் தேதி முதல் 15 ஆம் தேதி வரை இருந்து வந்தது. இப்போது அங்கே நாள் ஒன்றுக்கு 45 லட்சம் லிட்டர் நீர் இறைக்கப் பட்டு, திருப்பத்தூர் நகரத்திற்கு 25 லட்சம் லிட்டர் நீரும் மற்ற இடங்களுக்கு 20 லட்சம் லிட்டர் நீரும் கொடுக்கப்பட்டு வருகிறது. இதுபோன்ற இடங்களில், அந்த நகராட்சிகள் விரும்பும் என்று சொன்னால், உள்ளாட்சித் துறையினுடைய அனுமதியோடு மின்சாரப் பற்றாக்குறை ஏற்படுகின்ற நாட்களில் ஜெனரேட்டர் வைத்துக்கொள்வதற்கான அனுமதியும் வழங்கப்படுகிறது. ஆகவே மின்சார நிலை இப்போது ஓரளவிற்கு சீர்படுத்தப்பட்டு வருகிற காரணத்தால், இதுபோன்ற பிரச்சினைகள் இனிமேல் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. சுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே குடிதண்ணீர் வழங்கப்படுவதாகச் சொன்னாலும், குறிப்பாக பக்கிரி தக்கா போன்ற இடங்களில் முஸ்லீம்கள் வாழ்கின்ற பகுதிகளில் தண்ணீர் கொடுக்காமல் நிறுத்திவைக்கப்பட்டு உள்ளது. எனவே திருப்பத்தூர் நகரத்தில் இதுபோன்ற பல இடங்களில் தண்ணீர் வருவதில்லை. உடனடியாக ஜென ரேட்டர் வாங்கி வைத்துக்கொள்ள அனுமதி வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, இதுபற்றி அந்த நகராட்சி அனுப்பி யிருக்கும் என்று சொன்னால், அந்தத்துறை அதற்கான அனு மதியை வழங்கி இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

6. அறிக்கை அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் திரு சா. பீட்டர் ஆல்போன்ஸ் சார்பில் திரு எம். அப்துல் லத்தீப் அவர்கள், பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளைப் பேரவைக்கு அளிப்பார்.

காரணத்தால் தண்ணீர் கொடுக்கப்படவில்லை என்பதை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஆதலால், உடனடியாக குடிநீர் இல்லாத பகுதிகளுக்கு, வாணியம்பாடியிலிருந்து வருகிற மின்சாரத்தை வழங்கி இதற்கு முன்னுரிமை கொடுத்து, திருப்பத்தூர் நகரத்திற்குக் குடிதண்ணீர் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலைமை ஏப்ரல் 11 ஆம் தேதி முதல் 15 ஆம் தேதி வரை இருந்து வந்தது. இப்போது அங்கே நாள் ஒன்றுக்கு 45 லட்சம் லிட்டர் நீர் இறைக்கப் பட்டு, திருப்பத்தூர் நகரத்திற்கு 25 லட்சம் லிட்டர் நீரும் மற்ற இடங்களுக்கு 20 லட்சம் லிட்டர் நீரும் கொடுக்கப்பட்டு வருகிறது. இதுபோன்ற இடங்களில், அந்த நகராட்சிகள் விரும்பும் என்று சொன்னால், உள்ளாட்சித் துறையினுடைய அனுமதியோடு மின்சாரப் பற்றாக்குறை ஏற்படுகின்ற நாட்களில் ஜெனரேட்டர் வைத்துக்கொள்வதற்கான அனுமதியும் வழங்கப்படுகிறது. ஆகவே மின்சார நிலை இப்போது ஓரளவிற்கு சீர்படுத்தப்பட்டு வருகிற காரணத்தால், இதுபோன்ற பிரச்சினைகள் இனிமேல் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. சுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே குடிதண்ணீர் வழங்கப்படுவதாகச் சொன்னாலும், குறிப்பாக பக்கிரி தக்கா போன்ற இடங்களில் முஸ்லீம்கள் வாழ்கின்ற பகுதிகளில் தண்ணீர் கொடுக்காமல் நிறுத்திவைக்கப்பட்டு உள்ளது. எனவே திருப்பத்தூர் நகரத்தில் இதுபோன்ற பல இடங்களில் தண்ணீர் வருவதில்லை. உடனடியாக ஜெனரேட்டர் வாங்கி வைத்துக்கொள்ள அனுமதி வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, இதுபற்றி அந்த நகராட்சி அனுப்பி யிருக்கும் என்று சொன்னால், அந்தத்துறை அதற்கான அனு மதியை வழங்கி இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

6. அறிக்கை அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் திரு சா. பீட்டர் ஆல்போன்ஸ் சார்பில் திரு எம். அப்துல் லத்தீப் அவர்கள், பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளைப் பேரவைக்கு அளிப்பார்.

7. ஒழுங்குப் பிரச்சினை

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பல உறுப்பினர்கள் அவையில் இல்லாதது குறித்து.

திரு. வே. தங்கபாண்டியன் : பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு காங்கிரஸ் கட்சியினுடைய பகுதியிலே மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவரைத் தவிர, ஏறக்குறைய அநேகமாக அனைத்து காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் இந்த அவையில் இல்லை. மிக முக்கியமாக, பொதுக்கணக்குக் குழுவின் தலைவராக இருக்கிற திரு பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் கூட இல்லாத காரணத்தால், பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளைக் கூட அளிக்க முடியாத நிலைமை இருக்கிறது. எனவே திடீரென்று ஒட்டுமொத்தமாக லீவ் போட்டிருக்கிறார்களா அல்லது சபையைப் புறக்கணித்து இருக்கிறார்களா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே. . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே நானே தீர்ப்பு சொல்லிவிடலாமே. (குறுக்கீடு) ஓ. . உங்கள் ஏற்பாட்டில்தான் போய் இருக்கிறார்கள் என்கிறீர்களா? (சிரிப்பு).

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியினுடைய கூட்டம் நடைபெற்றுக்கொண்டு இருக்கிற காரணத்தாலே, அவர்கள் சென்று இருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியினுடைய சார்பிலே சட்ட மன்றத்தினுடைய பணிகளைச் செய்வதற்கு என்னைப் பணித்து இருக்கிறார்கள். நான் அந்தப் பணியைச் செய்துகொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : Solitary Reaper ! (சிரிப்பு) இதில் ஒழுங்குப் பிரச்சினை ஏதும் இல்லை.

6. அறிக்கை அளித்தல்—தொடர்ச்சி

திரு. எம். அப்துல் லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் தலைவரது சார்பாக 1989–90 ஆம் ஆண்டு பொதுக் கணக்குக் குழுவின் முதல் நான்கு அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்,

8. அரசினர் தீர்மானம்

விதி 33-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 33-ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும்".

(முற்பகல் 10-50)

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று 33ஆவது விதியைத் தளர்த்தி அரசு அலுவல்களுக்கான நிகழ்ச்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று முன்னவர் அவர்கள் முன்மொழிந்திருக்கிறார்கள், ஆனால் அதே விதியின்படி இவ்வாறு எந்த வியாழக்கிழமையேனும் அரசு அலுவல்களுக்கென எடுத்துக்கொள்ளப் பெறுமானால் அதற்குப் பதிலாக அதே வாரத்தில் அல்லது அடுத்த வாரத்தில் வேறொரு நாளை தனி உறுப்பினர் அலுவல்களுக்காக பேரவைத் தலைவர் ஒதுக்கலாம் என்று இருக்கிறது. இந்தச் சட்டமன்றக் கூட்டம் ஏற்கெனவே ஆளுநர் உரையை ஒட்டி 11 தினங்களும் இப்போது கிட்டத்தட்ட 30 தினங்களுக்கு மேலும் நடைபெற்றும் கூட தனி உறுப்பினர் அலுவல்களுக்காக எந்த நாளும் ஒதுக்கப் படவில்லை. நாளைய தினமாவது தனி உறுப்பினர் அலுவல் களுக்காக எடுத்துக்கொள்ளப்படுமா, தனி உறுப்பினர்கள் பலர் தனித் தீர்மானங்கள், பல முக்கியமான தீர்மானங்கள் கொடுத் திருக்கும்போது அதைச் செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

அதோடு கூட இந்த நிகழ்ச்சி நிரல்படி அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவெடுத்து அதையே அறிவிப்பாகச் சொல்வது என்ற நடைமுறை சரியானதுதானா என்பதை நான் அறிய விரும்புகிறேன். காரணம் அலுவல் ஆய்வுக்குழு கால அட்ட வணையை நிர்ணயம் செய்யலாம். விதிகளைத் தளர்த்தி வினா நேரத்தை எடுத்துக் கொள்வதோ அல்லது இதுபோன்ற தனி உறுப்பினர் அலுவல்களுக்கான நேரத்தை எடுத்துக் கொள்வதோ முதலிலே நிகழ்ச்சி நிரல் அறிவிப்பாக வந்த பிறகு, இங்கே தீர்மானம் வருவது என்பதோ இந்த அவையை டேக்கிங் பார் கிராண்ட்டட் என்பது போன்று இருக்கிறது. அது முறையானது அல்ல. இந்த முறைகள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிற நேரத்திலே தனி உறுப்பினர் அலுவல்களுக்காக

இந்தக் கூட்டத் தொடரிலேயே ஒரு நாளையேனும் ஒதுக்க வேண்டும். பல முக்கியமான தீர்மானங்களை நாங்களும் மற்ற கட்சியைச் சார்ந்தவர்களும் கொடுத்திருக்கிற காரணத்தாலே அதற்கென்று நாளையேனும் ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய உரிமையையும் பெருமையையும் காப்பாற்றுவதற்காகத்தான் அலுவல் ஆய்வுக் குழுவே இருக்கிறது. அலுவல் ஆய்வுக்குழு என்பது அவையினுடைய உரிமைகளை மீறிச் செயல்படுவதற்காக அமைக்கப்பட்டது அல்ல. அவையினுடைய உரிமைகளைக் காப்பாற்றுவதற்கான அனைத்துக் கட்சித் தலைவர்களும் இடம் பெற்ற அலுவல் ஆய்வுக்குழு அவையிலே எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய பல்வேறு பணிகளை, பல்வேறு தீர்மானங்களை எந்த முறையிலே முன் உரிமை கொடுத்து அவற்றை நிறைவேற்றுவது என்பதை ஆலோசிக்கிற வாய்ப்புப் பெற்றிருக்கிற காரணத்தால் கால கட்டத்தில் தனியாருடைய அலுவல் என்று நியமிக்கப்பட்ட இந்த நாள் மாற்றி அமைக்கப்படுகிறதே தவிர, தனியார் அலுவல் என்பது புறக்கணிக்கப்பட்டதாகக் கருதப்படக் கூடாது. மற்றும் நிதிநிலை அறிக்கையை ஒட்டி பல்வேறு விதமான மானியங்களிலே விவாதம் நடைபெறுகிறபோது பெரும்பாலான மாண்புமிகு உறுப்பினர்களுடைய பல்வேறு விதமான எண்ணங்கள் பூர்த்தி பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிற காரணத்தால், விவாதிக்கப்படக்கூடிய வாய்ப்பு இருக்கிற காரணத்தால், தனி நபர் அலுவல் என்ற முறையில் வருகிற நாளை பெரும்பாலும் பல்வேறு சட்டமன்றத் தொடர்களில் பல்வேறு ஆண்டுகளில் இந்தக் காலக்கட்டத்தில் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன. எனவே இதற்கு மேல் தனியார் அலுவல்களுக்காக நாள் வேண்டுமென்று சொன்னால், அரசாங்க மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டதற்குப் பிறகு மேலும் நீட்டிக்கக்கூடிய வாய்ப்பு இருந்து பெரும்பான்மை அங்கத்தினர்களுக்கும் இசைவாக இருக்குமானால் அதுவும் அலுவல் ஆய்வுக் குழுவிலேதான் கலந்து ஆலோசிக்கப்படவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய திரு. வரதராசன் அவர்களுடைய ஒழுங்குப் பிரச்சினை, பேரவை முன்னவர் அவர்களுடைய விளக்கம் இரண்டையும் மனத்திலே கொண்டு அலுவல் ஆய்வுக்குழு உறுப்பினர்களோடு தொடர்பு கொண்டு முறையாக அதற்கு என்னுடைய தீர்ப்பை அளிப்பேன்.

அடுத்து, பேரவை முன்னுள்ள கேள்வி:

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 33—ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக் கொள்ள வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

9. சட்ட முன்வடிவுகள்

(அ) நிலம் கையகப்படுத்துதல் (தமிழ்நாடு திருத்தம்) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் (தமிழ்நாடு திருத்தம்) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: இச்சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) நிலச் சீர்திருத்தங்கள் [நிலத்திற்கு உச்ச வரம்பை நிர்ணயித்தல் (திருத்த)] சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நான், கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள்: [நிலத்திற்கு உச்ச வரம்பை நிர்ணயித்தல் (திருத்த)] சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

அடுத்து, பேரவை முன்னுள்ள கேள்வி:

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 33—ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக் கொள்ள வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

9. சட்ட முன்வடிவுகள்

(அ) நிலம் கையகப்படுத்துதல் (தமிழ்நாடு திருத்தம்) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் (தமிழ்நாடு திருத்தம்) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: இச்சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) நிலச் சீர்திருத்தங்கள் [நிலத்திற்கு உச்ச வரம்பை நிர்ணயித்தல் (திருத்த)] சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நான், கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள்: [நிலத்திற்கு உச்ச வரம்பை நிர்ணயித்தல் (திருத்த)] சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

அடுத்து, பேரவை முன்னுள்ள கேள்வி:

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 33—ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக் கொள்ள வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

9. சட்ட முன்வடிவுகள்

(அ) நிலம் கையகப்படுத்துதல் (தமிழ்நாடு திருத்தம்) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் (தமிழ்நாடு திருத்தம்) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) நிலச் சீர்திருத்தங்கள் [நிலத்திற்கு உச்ச வரம்பை நிர்ணயித்தல் (திருத்த)] சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நான், கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள்: [நிலத்திற்கு உச்ச வரம்பை நிர்ணயித்தல் (திருத்த)] சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

10. அறிவிப்புகள்

(அ) இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

9. சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(இ) இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1989 ஆம் ஆண்டு தமிழ் நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன் வடிவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) Is there any point of order? சட்ட முன்வடிவிலேயா?

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த சட்ட முன்வடிவு இருக்கிறதே அது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. அதைப் போலவே விற்பனை வரியைப் பற்றிய சட்ட முன்வடிவுகள் இங்கே வருகின்றன. இவ்வளவு முக்கியமானவைகள் எல்லாம் நேற்று இரவு 9½ மணிக்கு எங்களுக்குக் கிடைக்கின்றன. நாங்கள் அதைப் புரட்டிக்கூட பார்க்க முடியவில்லை. மிகச் சீர்திருத்தமான சில கருத்துக்களை கொண்டுவருவதாக இருந்தாலும் கூட அதிலே சாதக பாதகம் இருக்கிறதா என்று எங்களுக்குத் தெரியவில்லை என்று சொன்னால் கூட தெரிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்வதற்குக்கூட காலம் இல்லாமல் இருக்கிறது. நேற்று 9½ மணிக்கு இவைகள் எங்களுடைய அறைகளிலே அல்லது எங்களுடைய வீடுகளிலே போடப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு பார்த்தால் நிறைய செய்திகள் அடங்கிய இவைகளை எல்லாம் படிப்பதற்குக் கூட, படித்து சிந்திப்பதற்குக் கூட எங்களுக்கு வாய்ப்பு இல்லை. உதாரணமாகச் சொல்லப் போனால் இப்போது நமது மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருப்பது மிகப் புரட்சிகரமான திட்டம்தான். எப்போது விதைக்கப்பட்டதாக இருந்தாலும் அது விருட்சகமாக வருவதிலே நாங்கள் மகிழ்ச்சி

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

10. அறிவிப்புகள்

(அ) இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

9. சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(இ) இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன் வடிவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) Is there any point of order? சட்ட முன்வடிவிலேயா?

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த சட்ட முன்வடிவு இருக்கிறதே அது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. அதைப் போலவே விற்பனை வரியைப் பற்றிய சட்ட முன்வடிவுகள் இங்கே வருகின்றன. இவ்வளவு முக்கியமானவைகள் எல்லாம் நேற்று இரவு 9½ மணிக்கு எங்களுக்குக் கிடைக்கின்றன. நாங்கள் அதைப் புரட்டிக்கூட பார்க்க முடியவில்லை. மிகச் சீர்திருத்தமான சில கருத்துக்களை கொண்டுவருவதாக இருந்தாலும் கூட அதிலே சாதக பாதகம் இருக்கிறதா என்று எங்களுக்குத் தெரியவில்லை என்று சொன்னால் கூட தெரிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்வதற்குக்கூட காலம் இல்லாமல் இருக்கிறது. நேற்று 9½ மணிக்கு இவைகள் எங்களுடைய அறைகளிலே அல்லது எங்களுடைய வீடுகளிலே போடப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு பார்த்தால் நிறைய செய்திகள் அடங்கிய இவைகளை எல்லாம் படிப்பதற்குக் கூட, படித்து சிந்திப்பதற்குக் கூட எங்களுக்கு வாய்ப்பு இல்லை. உதாரணமாகச் சொல்லப் போனால் இப்போது நமது மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருப்பது மிகப் புரட்சிகரமான திட்டம்தான். எப்போது விதைக்கப்பட்டதாக இருந்தாலும் அது விருட்சகமாக வருவதிலே நாங்கள் மகிழ்ச்சி

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

10. அறிவிப்புகள்

(அ) இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

9. சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(இ) இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன் வடிவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) Is there any point of order? சட்ட முன்வடிவிலேயா?

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த சட்ட முன்வடிவு இருக்கிறதே அது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. அதைப் போலவே விற்பனை வரியைப் பற்றிய சட்ட முன்வடிவுகள் இங்கே வருகின்றன. இவ்வளவு முக்கியமானவைகள் எல்லாம் நேற்று இரவு 9½ மணிக்கு எங்களுக்குக் கிடைக்கின்றன. நாங்கள் அதைப் புரட்டிக்கூட பார்க்க முடியவில்லை. மிகச் சீர்திருத்தமான சில கருத்துக்களை கொண்டுவருவதாக இருந்தாலும் கூட அதிலே சாதக பாதகம் இருக்கிறதா என்று எங்களுக்குத் தெரியவில்லை என்று சொன்னால் கூட தெரிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்வதற்குக்கூட காலம் இல்லாமல் இருக்கிறது. நேற்று 9½ மணிக்கு இவைகள் எங்களுடைய அறைகளிலே அல்லது எங்களுடைய வீடுகளிலே போடப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு பார்த்தால் நிறைய செய்திகள் அடங்கிய இவைகளை எல்லாம் படிப்பதற்குக் கூட, படித்து சிந்திப்பதற்குக் கூட எங்களுக்கு வாய்ப்பு இல்லை. உதாரணமாகச் சொல்லப் போனால் இப்போது நமது மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருப்பது மிகப் புரட்சிகரமான திட்டம்தான். எப்போது விதைக்கப்பட்டதாக இருந்தாலும் அது விருட்சகமாக வருவதிலே நாங்கள் மகிழ்ச்சி

அடைகிறோம். ஆனால் அதில் இருக்கின்ற சாதக பாதகங்களை நாம் பார்க்கவேண்டாமா? வரி விதிப்பிலே வருகிறது என்று சொன்னால் கூட சென்ற தடவை இதே போல 1986லே மே மாதம் 14-ந் தேதி அவசர அவசரமாக சில பில்கள் கொண்டுவரப்பட்டு அவைகள் எல்லாம் நிறைவேறின. ஆனால்......

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் இங்கே பேசும்போது புரட்டிப் பார்க்கக்கூட நேரம் கிடைக்கவில்லை என்றார்கள். பிரித்துப் பார்த்துப் படிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஈ) மாநகராட்சி சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (இரண்டாம் திருத்த*) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்.

* 27—4—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

அடைகிறோம். ஆனால் அதில் இருக்கின்ற சாதக பாதகங்களை நாம் பார்க்கவேண்டாமா? வரி விதிப்பிலே வருகிறது என்று சொன்னால் கூட சென்ற தடவை இதே போல 1986லே மே மாதம் 14–ந் தேதி அவசர அவசரமாக சில பில்கள் கொண்டுவரப்பட்டு அவைகள் எல்லாம் நிறைவேறின. ஆனால்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் இங்கே பேசும்போது புரட்டிப் பார்க்கக்கூட நேரம் கிடைக்கவில்லை என்றார்கள். பிரித்துப் பார்த்துப் படிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்;

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஈ) மாநகராட்சி சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (இரண்டாம் திருத்த*) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்.

* 27—4—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதன் மீது இன்றைய விவாதத்தைத் தொடங்கிவைப்பவர் திரு. யூ. கே. வெள்ளிங்கிரி. ஒவ்வொருவரும் 7 மணித் துளிகள் மட்டும் எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி: தலைவர் அவர்கள் நான் பேசினால் டைம் சொல்லுகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொருவரும் என்றால் ஒவ்வொருவரும் திரு. வெள்ளிங்கிரி மட்டும் அல்ல.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி: பேரவைத் தலைவர் அவர்களே, 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவின் மீது சில கருத்துக்களை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்தின் மூலம் வருகின்ற செப்டம்பர் 30 ஆம் தேதிக்குள்ளாக 3 மாநகராட்சி தேர்தல்களையும் நடத்துவதற்கான திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதை நாங்கள் வரவேற்கிறோம். அதே நேரத்தில் செப்டம்பர் மாதம் வரைக்கும் காத்திராமல், 18 வயது முடிபவர்களுக்கெல்லாம் வாக்குகள் அநேகமாக ஓட்டுக்கள் சேகரிக்கின்ற பணியிலே தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது வேகமாக, விரைவாக முடிக்கப்பட்டு, அந்த 18 வயது பூர்த்தி அடைந்தவர்களுக்கும் வாக்குகளைக் கொடுத்து, 30-9-89 ஆம் தேதி வரைக்கும் காத்திருக்காமல் எவ்வளவு வேகமாக, விரைவாக மாகராட்சித் தேர்தலை நடத்தமுடியுமோ அதை நடத்த வேண்டும் என்பதை எங்கள் கட்சியின் சார்பாக நான் இந்த மன்றத்தில் எடுத்துரைக்கிறேன்.

(முற்பகல் 11.00)

ஏன் இதைச் சொல்கிறேன் என்று சொன்னால், சென்னை நகரம் மிகப் பெரிய நகரம், அதேபோல் மதுரையும், கோவையும் இன்றைக்கு தமிழகத்தில் மிகப் பெரிய நகரங்களாகும். நீண்ட காலமாக, அந்த நகராட்சியினுடைய தேர்தல்களை நடத்தாமல், அந்த நகரப் பகுதிகளிலே இருக்கக்கூடிய பல்வேறு பணிகள் இன்றைக்கு முடங்கிக் கிடக்கின்றன என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். குறிப்பாக, என்னுடைய தொகுதியில், கோவையில் ஆறு டிவிஷன்கள் அடங்கியிருக்கின்றன. கோவை நகரம் மிகப் பெரிய நகரம், தொழில் நகரம் என்பது எல்லாம் உங்களுக்குத் தெரியும். அங்கே நீண்டகாலமாக தேர்தலை நடத்தாமல் இருப்பதால் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு,

சாலை வசதிகள், தெரு விளக்குகள் எரியாதிருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை, அதேபோல் குப்பைகள் எல்லாம் ஏராளமாக மலைபோல் குவிந்திருக்கக்கூடிய காட்சியை எல்லாம் கோவை நகரத்தில் பார்க்கலாம். அதுபோல், பாதாள சாக்கடைகள் பல இடங்களிலே செய்யப்படாமல் இருக்கின்றன. இப்படி ஏராளமான குறைகள் கோவை நகரத்திலே இருக்கின்றன. சென்னையிலேயும் இருக்கின்றன. அதேபோல் மதுரையிலேயும் இருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆகவேதான், இந்த மாநகராட்சித் தேர்தல் நடந்து அதற்குப் பிரதிநிதிகள் எல்லாம், நிச்சயமாக அந்தப் பிரதிநிதிகள் அங்கே பொறுப்பேற்பார்கள் என்று சொன்னால், அந்த வேலைகளைத் துரிதமாகச் செய்வார்கள். ஆனால், இன்றையதினம் நாங்களெல்லாம் தொகுதிக்குள்ளே போக முடியவில்லை. எம். எல். ஏ.க்கள் என்று சொன்னால், ஏன் ஜலபாதை சுத்தம் செய்யவில்லை, ஏன் கக்கூஸ் எடுக்கவில்லை, ஏன் வீதி கூட்டவில்லை, ஏன் பைப் போடவில்லை, ஏன் தண்ணீர் வரவில்லை, ஓட்டுக்கள் வாங்கினீர்களே, சென்னைக்குச் சென்றீர்களே, சட்ட சபைக்குப் போய் இருக்கிறீர்களே, அமைச்சர்களைப் பார்த்துப் பேசினீர்களா என்று கேட்கின்ற ஒரு மிகப் பெரிய நிர்ப்பந்தத்திற்கு நாங்கள் ஆளாக்கப்பட்டிருக்கிறோம். ஆகவே, கடந்த 40 நாட்களாக இங்கே இருக்கிற காரணத்தால் பெரிய பிரச்சினை இல்லை. இனி போனவுடன் எங்களைப் பிடித்துக்கொள்வார்கள். எனவே, தயவுசெய்து எங்களுடைய வேலைப் பளுவைக் குறைப்பதற்கும், அதிலே நிரந்தரமாக ஈடுபடுவதற்கும், இந்தத் தேர்தலை செப்டம்பர் வரைக்கும் தள்ளாமல் உடனடியாக நடத்தி உதவி செய்யவேண்டும் என்பதை இந்த நேரத்திலே சொல்லி நான் முடித்துக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நம்முடைய அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். பொதுவாக, இந்த மாநகராட்சித் தேர்தல் விரைவிலே நடத்தப்படவேண்டும். அதிலே திருத்தியமைக்கப்பட்ட ஒவ்வொரு மாநகராட்சியிலும் தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்கள், நியமிக்கப்படுகின்றவர்கள், ஆதி திராவிடர்கள், பெண்கள் . . . (குறுக்கீடு) அது அடுத்த மசோதாவா? சரி, அடுத்து வருகின்றபோது அதைப்பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்லலாம் என்று எண்ணுகின்றேன். தற்போது இந்தத் தேர்தல் விரைவிலே நடத்தப்படவேண்டும் என்பதிலே இருவிதமான கருத்துக்கள் இருக்கமுடியாது. குறிப்பாக இன்றைய

தினம் இந்தத் தேர்தல் செப்டம்பர் வரையிலே தள்ளுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. அதற்குக் காரணம், 21 வயதிலிருந்து 18 வயது வாக்காளர்கள் ஜாபிதா தயாரிப்பதற்கு காலம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, அமைச்சர் அவர்கள் கூறுகின்றபோது, இந்த மாத இறுதிக் குள்ளே அந்த வாக்காளர் பட்டியல் தயார் ஆகிவிடும் என்று சொல்லியிருக்கின்றார்கள். செப்டம்பர் வரையில் நீட்டிக்காமல், செப்டம்பரிலே பாராளுமன்றத் தேர்தல் வரும் என்று சொல் கின்ற ஒரு நிலை இருப்பதனாலே முன்கூட்டியே இந்தத் தேர்தலை நடத்துவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும் என்று நான் கேட்கிறேன். விரைவிலே தேர்தல் வைப்பதனாலே, அந்த மாநகராட்சியிலே இருக்கின்ற குறை பாடுகள் நீங்குவதற்கு, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் வந்து அந்தப் பொறுப்பிலே இருந்து நல்லவிதமாக அந்தப் பொறுப்பை நிருவகிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் இருக்கும். செப்டம்பர் என்று போனால், செப்டம்பரில் கூட அந்த மாநகராட்சித் தேர்தல் நடைபெற முடியாது என்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விட்டால், தள்ளிக்கொண்டே போவதற்கு, காலம் கடத்துவதற்கு ஒரு சந்தர்ப்பம் இருக்கும். விரைவில் ஜூன், ஜூலையில் இந்த தேர்தல்களை நடத்து வதற்கு ஏற்பாடு செய்வதற்கு ஆயத்தங்களைச் செய்யவேண்டும் என்று கேட்டு வரவேற்று முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, மாநகராட்சிகளுடைய தேர்தல்களை நடத்துவது மிக அவசியம் என்பதை இங்கே இருக்கின்ற அனைவரும் உணர் வோம். 18 வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை என்று கொடுத்த தற்குப் பின்னால் இந்த தேர்தல்களை நடத்தவேண்டும் என்று முதலில் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே வேண்டுகோள் விடுத் தோம். அது நிறைவேறுகின்ற வாய்ப்பு இருப்பது கண்டு மகிழ்ச்சி அடைகிறோம். வாக்காளர் பட்டியலில் சேர்க்கின்ற போது இந்த 18 வயது வந்தவர்கள் பல்வேறு இடங்களிலே இருக்கக்கூடும். அவர்களை நாம் கவனமாக கணிப்பிலே சேர்த்துக்கொள்ள வேண்டும். இரண்டாவது, இந்த மாநகராட்சி களின் தேர்தல்களை நடத்துகிறபோது வாக்குச் சாவடிக்குச் செல்கின்றவர்கள் உண்மையான வாக்காளர்கள்தானா என்பதற்கு அடையாளச் சீட்டு ஒன்றைக் கொடுக்கவேண்டும் என்றும், போட்டோ ஒட்டியது ஒன்று கொடுக்கவேண்டும் என்றும் நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். செலவாகும் என்று அரசுத்தரப்பிலே சொல்லப்பட்டாலும் கூட இந்த முயற்சியிலே தமிழ்நாடு ஈடுபட்டு அனைவருக்கும் ஒரு அடையாள போட்டோ கொடுப்பதன் மூலம் இந்த வாக்குச் சாவடிக்கு மட்டும் அல்ல, 'மல்ட்டி பர்ப்பஸ்' அதைப்போல

அதையே ரேஷன் கடைக்குப் பயன்படுத்துவது; அதையே ஜாதி சான்றிதழுக்குப் பயன்படுத்துவது; இப்படிப்பட்ட காரியங்களுக்கு பயன்படுத்துகின்ற வகையில் ஒரு பல்நோக்கு கொண்ட அடையாள அட்டையை அவர்களுடைய புகைப் படத்தோடு கொடுப்பதற்கு இப்போதே முயற்சிப்போமானால் நிச்சயமாக வெற்றி பெறமுடியும். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில் மிக வேகமாக செயல்படுகிறார் என்று அவர்கள் சொல்வதையும் நான் கருத்தில் கொண்டே சொல்கிறேன். அவர்களால் இந்தக் காரியத்தை செய்யமுடியும் என்ற நம்பிக்கையின் காரணத்தால் சொல்கிறேன். நம்மால் சுத்தமான சுவாசக் காற்று கொடுக்க முடியவில்லை. நான் மீண்டும் அதை அழுத்தமாக சொல்ல விரும்புகிறேன். சுத்தமான சுவாசக்காற்று கூட நகரங்களிலே இருக்கிற மக்களுக்கு கொடுக்க முடியாத அளவுக்கு குப்பைக்கூளங்களும் மலிந்து கிடக்கின்றன. அன்றாடம் குடித்தால் அன்றி தீராது என்று சொல்லுகின்ற தாகத்திற்கு தண்ணீர் கொடுப்பது கூட நம்மால் பூரணமாக முடியவில்லை என்ற நிலை இருக்கிற காரணத்தால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அந்த இடங்களில் பொறுப்பை ஏற்று இருப்பார்களானால் அவர்களிடமிருந்து நாம் உறுதி மொழிகளைப் பெற்று அவர்களை அணுகி மக்களுக்கு வேண்டிய காரியங்களைச் சாதித்துக் கொள்ளலாம். எனவே இந்த மாநகராட்சிகள், நகராட்சிகள் தேர்தல்களை மிக விரைவில் நடத்தவேண்டும். நடத்துகின்றபோது எந்தத் தவறும் வாக்காளர் மத்தியில் ஏற்பட்டுவிடாதபடி, தவறுகள் இல்லாத அளவுக்கு நடத்தவேண்டும் என்று காங்கிரஸ் கட்சியின் சார்பில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இரா. மோகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிக்கான தேர்தல்களை 18 வயது நிரம்பியவர்களுக்கு வாக்குரிமை அளித்து அதற்குப் பின்னாலே தேர்தல்களை நடத்துவது என்று இந்த அரசு முடிவு செய்திருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் நேரத்திலே தந்த வாக்குறுதியின்படி இந்த ஆட்சி பதவி ஏற்ற உடனே உடனடியாக மாநகராட்சிகள் தேர்தல்களை நடத்துவோம் என்று அறிவித்து இருந்தார்கள். ஆனால் இதே அவையிலே பல்வேறு கட்சிகளுடைய மாண்புமிகு உறுப்பினர்கள், இன்னும் எங்களுக்கு நேரம் தரப்படவேண்டும், 18 வயது நிரம்பியவர்களுக்கு எல்லாம் வாக்கு அளிக்க உரிமை தரப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்ட காரணத்தால்தான் மே மாதமே நடைபெறவேண்டிய இந்த மாநகராட்சிகள் தேர்தல்கள் இப்போது செப்டம்பர் மாதம் நடத்தலாம் என்ற நிலைமைக்கு உள்ளாகி இருக்கிறது. செப்டம்பர் திங்கள் நாம் தேர்தல்களை நடத்துவதற்கு முன்னால் நம்முடைய அரசு கவனத்திலே கொள்ளவேண்டிய மிக முக்கியமான பிரச்சினையை

நான் அமைச்சர் அவர்களிடமிருந்து கேட்டுக்கொள்ள விரும்புவது, மாநகராட்சிகளைப் பொறுத்த வரையில், கோவை மாநகராட்சியைப் பொறுத்து, டிவிஷன்களைப் பிரிப்பதிலே முழுமையான ஒரு நிறைவு, சரியான முறையிலே இன்னும் அங்கே ஏற்படவில்லை. பல்வேறு குழப்பங்கள், இன்னமும் கோவை மாநகராட்சியிலே வட்டாரங்களை, டிவிஷன்களை பிரிப்பதிலே ஏற்பட்டிருக்கிறது. என்ன காரணம் என்று சொன்னால் ஏற்கெனவே இருந்த கோவை மாநகராட்சி நகரத்தோடு சிங்காநல்லூர் நகரமும் இன்றைக்கு இப்போ இணைந்து இருக்கின்ற காரணத்தால் 60 டிவிஷன்களாக இப்போது பிரித்து இருக்கிறார்கள். அதிலும் பல்வேறு குறைபாடுகள் எல்லாக் கட்சியினராலும் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே மாநகராட்சிகள் தேர்தல்கள் நடத்துவதற்கு முன்னால் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த குறைபாட்டை கோவை மாநகராட்சியிலே முற்றிலுமாக நீக்கி ஒரு முழுமையாக, சரியாக, குழப்பமில்லாமல், இந்தந்த வீதிகள், இந்தந்தப் பகுதிகள் இந்த டிவிஷனுக்குப் போய்ச்சேரும் என்ற ஒரு முடிவு ஏற்பட்டதற்குப் பின்னால் அங்கே தேர்தலை நடத்துவதுதான் மிகச் சாலச்சிறந்ததாக இருக்கும். அதற்கு முன்னாலே, செப்டம்பருக்கு முன்னாலே, அந்தக் காரியங்களை விரைந்து செய்யவேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை பணிவன்போடு கேட்டு கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

அதைப்போல, பல ஆண்டுக்காலமாக இந்த மாநகராட்சிகளுக்கு தேர்தல் நடைபெறாமல் இருக்கின்ற காரணத்தினாலே சுகாதார வசதிகள், சாலை வசதிகள், தெரு விளக்கு வசதிகள், சாக்கடை வசதிகள், இப்படிப்பட்டவைகள் மிக மோசமான நிலைமையிலே பராமரிக்கப்படுகின்றன, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இல்லாத காரணத்தினால். ஆகவே, இந்த மாநகராட்சித் தேர்தல்கள் நடைபெறுகின்றவரை இந்த மூன்று மாநகராட்சிகளிலேயும் அரசாங்கமே முழு கவனத்தைச் செலுத்தி இப்படிப்பட்ட குறைபாடுகளை நீக்குவதற்கு தக்க நிதி ஆதாரங்களையும், அதிகாரிகளுக்கு அந்த நடவடிக்கைகளை எடுப்பதற்கு அதிகாரத்தையும் அளிக்கக்கூடிய ஒரு நிலைமையினை ஏற்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம், ஒரு சின்ன பிரச்சினை என்று சொன்னாலும்கூட அங்கே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களோ அல்லது பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த அமைப்புகளோ அல்லது பொது நிறுவனங்களோ அதிகாரிகளைப் போய் சந்திக்கின்றபொழுது, சரியான உத்திரவு எங்களுக்கு வராத காரணத்தினால் இந்தக் காரியங்களெல்லாம் செய்யமுடியாமல் தாமதம் ஏற்படுகிறது

என்று கூறுகின்றார்கள். ஆகவே இந்த மூன்று மாநகராட்சிகளுக்கும், மற்ற நகராட்சிகள், பஞ்சாயத்துக்களுக்கெல்லாம் இப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருக்கின்ற காரணத்தினால், இந்த மூன்று மாநகராட்சிகளுக்கு அப்படிப்பட்ட பிரதிநிதிகள் இல்லாமல் இருக்கின்ற காரணத்தினால், அரசு இதிலே கவனம் செலுத்தி இப்படிப்பட்ட குறைபாடுகளைக் களைவதற்கு தனியாக ஒரு நிலையை, கவனத்தை, அதிலே செலுத்தவேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

செப்டம்பர் மாத இறுதிக்குள்ளாக இந்தத் தேர்தலை நடத்துவதற்கு நம்முடைய அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு அதற்கு முன்னால் இப்படி இருக்கக்கூடிய இந்தச் சின்ன குழப்பங்களையெல்லாம் நீக்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று தெரிவித்து முடித்துக் கொள்கிறேன், நன்றி.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநகராட்சித் தேர்தலை ஒத்திவைப்பதற்கான காரணங்களை பல்வேறு வகையிலே எடுத்துச்சொன்னாலும் கூட, மாநகராட்சித் தேர்தலை நடத்தவேண்டியதன் அவசியத்தை உறுப்பினர்கள் அத்தனைபேரும் வலியுறுத்திச் சொல்வதிலே நான் மகிழ்ச்சி அடைகிறேன். இன்றைக்கு, சென்னை, மதுரை, கோவை போன்ற மாநகராட்சிகள் பிரதிநிதிகள் இல்லாமல் எந்த அளவிற்கு அந்த மக்கள் அல்லல் படுகிறார்கள் என்பதை இந்த மன்றத்திலே இருக்கிற உறுப்பினர்கள் நன்றாக உணர்வார்கள். ஆளுங்கட்சியைப் பொறுத்த வரையிலே ஒத்திவைப்பதற்கான காரணங்களைச் சொல்வதிலே முனைப்பாக இருப்பார்கள். அதேபோல எதிர்க்கட்சியிலே இருக்கிற நாங்கள் தேர்தலை நடத்தவேண்டிய காரணத்தை எடுத்துச் சொல்வதற்கு, அதனுடைய அவசியத்தை எடுத்துச் சொல்வதற்கான நிலையிலே இருப்போம். இன்றைக்கு நாம் ஒத்திவைப்பதற்கான காரணங்களை எடுத்துச்சொல்லுகின்ற நேரத்திலே, 18 வயது ஒன்று குறுக்கே வந்துவிட்டது என்று சொல்லப்படுகிற காரணமும் செப்டம்பர் மாதம் வரையிலே என்று ஒரு அடையாளம் காட்டப்பட்டு, செப்டம்பர் மாதம் வந்தால் மாநகராட்சித் தேர்தல் வந்துவிடும் என்று நம்புகிற ஒரு நிலை இருக்குமா என்று சொன்னால், இப்போது இருக்கிற நிலையைப் பார்த்தால் எந்தத் தேர்தல் முன்னாலே வரும் என்று தெரியாத சூழ்நிலையிலே போய்க்கொண்டிருக்கிறது. எனவே மாநகராட்சிக்கு தேர்தல் நடைபெறுமா என்ற சந்தேகம் அந்த மாநகராட்சியிலே உள்ள உறுப்பினர்களுக்கு எல்லாம் வந்து போய்விட்டது. எனக்கு முதலிலே இருந்த நம்பிக்கை என்னவென்றால், பொதுத் தேர்தல் நடந்த

நேரத்திலே, இந்தத் தேர்தல் சட்டமன்றத் தேர்தல் முடிந்ததும் மாநகராட்சித் தேர்தல் வந்துவிடும் என்பது. இதே நம்பிக்கை பெருவாரியான மக்களிடத்திலே இருந்தது. பல ஊர்களிலே மாநகராட்சி உறுப்பினர்களாகவே பலபேர் ஆகிவிட்டார்கள். ஆனால் இந்த மதுரை—கிழக்கு, மருங்காபுரி தேர்தல்கள் என்ன செய்தது என்றால், இந்தத் தேர்தலை தள்ளிப்போடுகிற அளவுக்கு ஒரு நிலைமை உருவாகி, இன்றைக்கு தேர்தலைப் பற்றிய சிந்தனையே ஆளுங்கட்சிக்கு வருமா என்ற பயமே வந்துவிட்டது. எனவே ரம்ஜான் காரணத்தினாலே ஒத்திவைக்கப்பட்டு, அதற்குப் பின்னாலே 18 வயதிற்காக ஒத்திவைக்கப்பட்டது என்றெல்லாம் தெரிவிக்கப்பட்டது நியாயமா என்பதை.... (மணியடிக்கப்பெற்றது)

திரு. இரா. மோகன் : பாயிண்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசுகின்றபொழுது மதுரை, மருங்காபுரி தேர்தலின் காரணமாக மாநகராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது என்ற ஒரு தவறான தகவலை இந்த அவைக்கு அவர் தருகின்றார். தெளிவாக, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள், மே மாதம் மாநகராட்சித் தேர்தலை நடத்துவோம் என்று அறிவித்ததற்குப் பின்னால், இந்த அவையிலேதான் அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் 18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு எல்லாம் வாக்குரிமை தரவேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டு, ரம்சான் மாதத்திலே தேர்தலை நடத்தக் கூடாது என்று வலியுறுத்திக் கேட்டு அதற்குப் பின்னால்தான் இப்போது ஜூன் மாதம் தேர்தல் நடத்தலாம் என்று அரசு உத்தேசித்திருக்கிறது. அதற்கு ஒரு காரணம் கற்பித்து மாண்புமிகு உறுப்பினர் பேசுவது முறையா?

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மோகன் அவர்கள் என்னுடைய நண்பர் என்பதாலே பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ற வகையில் ஒரு கருத்தை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார். ஆனால் என்னுடைய கருத்து, இன்றைக்கு தேர்தல் நடைபெறும் என்ற ஒரு அடையாளம் காட்டப்பட்ட நேரத்திலே எவ்வளவு ஆர்வமாக மாநகராட்சியிலே இருந்தார்கள் என்பதும், இன்றைக்கு தேர்தல் ஒத்தி வைக்கப்படுகிறது என்று சொல்கிற நேரத்திலே செப்டம்பர் மாதம் வரையில் போகும் என்ற நிலை வருகிறபோது செப்டம்பர் மாதத்திற்குப் பின்னாலே இரண்டு மாதத்திலே நாடாளுமன்றத் தேர்தல் வரப்போகிறது, என்ற நிலையில் எப்படி இருப்பார்கள் என்றும் பார்க்க வேண்டும். இன்னும் சில மாதங்களில்

நாடாளுமன்றத் தேர்தல் வந்துவிடும் என்ற நிலை இருக்கிறது. நாங்கள் சொல்கிறபோது, 18 வயது நிறைந்தவர்களுக்கு வாக்குரிமை தாருங்கள் என்று கேட்ட நேரத்தில் அதெல்லாம் முடியாது என்றும் நாங்கள் நடத்துவது நடத்துவதுதான் என்றும் சொல்லிவிட்டு இப்போது 18 வயது வாக்காளர்களுக்காக நீங்கள் வாதாடுவதைப் பார்க்கிற நிலையிலே எனக்குப் பரிதாபம் ஏற்படுகிறது. மீண்டும் இதைப் பற்றிச் சொன்னால் மறுபடியும் ஒத்தி வைத்து விடுவீர்களோ என்று பயமாகவும் இருக்கிறது. எனவே இப்போது சொல்லியிருக்கிற நேரத்திலேயாவது நீங்கள் தேர்தலை நடத்தினால் மாநகராட்சிப் பகுதியிலே வசித்துக்கொண்டிருக்கிற எங்களுக்கு எல்லாம் நல்ல நிவாரணம் ஏற்படும் என்பதை நான் வற்புறுத்தித் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்த வரையில் எங்களுக்கிருக்கிற கஷ்டம், மாநகராட்சி மன்றம் இல்லாத காரணத்தாலே அதிகாரிகள் ஏகபோக முதலாளிகளாக மாறிவிடுகிறார்கள். எம்.எல்.ஏ.க்கள் பேசுகிறார்கள் என்றாலும் பேசுவது இல்லை. எம். எல். ஏக்களுக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் கிடையாது என்று நினைக்கிறார்கள். கட்டுப்படுத்துவதற்கு மாநகராட்சி உறுப்பினர்கள் இல்லாத காரணத்தாலே தனி அதிகாரிகள், பொறியாளர்கள் மற்ற அதிகாரிகளைப் பொறுத்த வரையில் அவர்கள் வைத்தது தான் சட்டம் என்ற நிலை வந்து விட்டது.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'மே' மாதத்திலே நடத்துவதாக இருந்த தேர்தலை 'செப்டம்பர்' மாதத்திலே நடத்துவதைப் பற்றி இவ்வளவு அங்கலாய்க்கிற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த 10 ஆண்டுகளாக, அவர்கள் ஆட்சி நடந்த காலத்திலே தேர்தலை நடத்துவதாகக் கூறி ஒத்தி வைத்தார்களே அதைப் பற்றியெல்லாம் அவர்கள் என்ன சொல்கிறார்கள்?

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவர் இப்படிக் கேட்பார் என்று எனக்குத் தெரியும். அவர்கள் எங்களோடு சேருகிறபோது எங்களுக்காக வாதாடுவார். தி. மு. க. வோடு சேருகிறபோது அவர்களுக்காக வாதாடுவார். இப்படி யாரோடு சேருகிறார்களோ அவர்களுக்காக வாதாடுவதற்காக இருக்கிற எதிர்க்கட்சி தேவையில்லை.... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : யாராவது ஒருவர் பேசுங்கள்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அ. இ. அ. தி. மு. க.

உறுப்பினர் இங்கே குறிப்பிடும்போது எங்களைப் பொறுத்த வரையில், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எங்களோடு சேரும் போது எங்களுக்காக வாதாடுவார்கள். அவர்களோடு சேரும் போது அவர்களுக்காக வாதாடுவார்கள் என்று சொன்னார். நான் அதை மறுக்கிறேன், சரியல்ல என்று சுட்டிக்காட்டுகிறேன். யாரோடு நாங்கள் சேர்ந்திருந்தாலும் நியாயத்திற்காக வாதாடு பவர்கள் என்பதை நான் உறுதியாகச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் ஆளும் எதிர்க்கட்சியாக இருந்து செயல் படுவது பற்றி எங்களுக்கு ஒன்றும் கவலை இல்லை. அவர்கள் எப்போதும் ஆளும் கட்சிக்கு ஒரு எதிர்கட்சி என்ற அளவிற்கு, ஆளும் கட்சி நிலையிலேயிருந்து எதிர்கட்சியாக ஆளும் எதிர்க் கட்சியாக ஆகிவிட்டார்கள். ஏனென்றால் அதிகாரிகளிடத்திலே ஆளும் கட்சிக்கு எந்த அளவிற்கு மரியாதை இருக்கிறதோ, அந்த அளவிற்கு ஆளும் எதிர்க்கட்சிக்கு ஒரு மரியாதை வந்து விட்டது. எங்கள் நிலை என்னவென்றால், நாங்கள் முழுக்க, முழுக்க எதிர்க்கட்சி. எனவே எங்களை யாரும் மதிப்பதில்லை எந்த அதிகாரியும் எதைச் சொன்னாலும்....

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் தொடர்ந்து எங்களுடைய அமைப்பைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையிலேயே ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று ஒரு நிலை இல்லை. எங்களிடம் நியாயம் இருந்தால் அதிகாரிகள் மரியாதை தருவார்கள். ஆகவே, நியாயமான கோரிக்கைகளைக் கொடுக்கக்கூடியது எங்களுடைய கட்சி என்பதை இந்த நேரத்திலே அவருக்கு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு இன்றைக்குத் தான் நியாயம் தெரிகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சட்ட முன் வடிவுக்குத் தொடர்புடைய விவரங்களை மட்டும் பேசுங்கள்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத்தான் நியாயம் தெரிகிறது. இதுவரைக்கும் நியாயம் தெரியாமல் நடந்து கொண்டார்கள் என்று குற்றம் சாடுவது சரியல்ல என்பதை அவருக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு

மட்டுமல்ல, நாங்கள் ஆளும் கட்சிக்குத் தோழமையாக இருப்பதால் அந்தச் சலுகையை உபயோகித்து அதிகாரிகளிடம் சலுகை பெறுகிறோம் என்று கூறுவதும் ஆட்சேபத்திற்குரிய ஒன்று. ஏனென்றால், என்றைக்கும் எங்களுடைய சொந்தக் காரியத்திற்காக எந்த அதிகாரிகளிடத்திலும் நாங்கள் சென்றதில்லை—அவர்கள் ஆட்சி நடந்த காலத்திலேகூட—என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-20)

திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவர் அவர்களே, நான் விவாதத்திற்குப் பதில் சொல்ல வேண்டும். இந்த விவாதத்தில் அவர் சொல்கிற கருத்து மட்டும் பதிவாகி பிறகு 10 ஆண்டுகள் கழித்து நான் என்னசொன்னேன் என்று பார்த்தால் பதில் இருக்காது. அதனால் நான் பதில் சொல்லவேண்டிய அவசியம் வருகிறது. அவர்கள் நாங்கள் நியாயங்களைச் சொல்கிறோம், அதனால்தான் எங்களுக்கு எல்லாம் நடக்கிறது என்று சொல்கிறார்கள். நாங்கள் எதையும் சொல்வதில்லை என்று இன்றைக்கு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. இராதா அவர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். நியாயத்தைச் சொல்லலாம் என்றுதான் சொல்கிறார்கள். தனிப்பட்டவர்களின் நன்மைக்காக நாங்கள் போவதில்லை என்றுதான் சொல்கிறார்கள். ஒட்டுமொத்தக்கருத்து அதுதான்.

திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் பொது நியாயங்களைத்தான் பேசினார்கள் என்றாலும் இன்றைக்கு எதிர்கட்சி என்ற நிலையில் இருக்கிற எங்களைப் புறக்கணிக்கிறார்கள் என்று குரல் கொடுக்கிற நேரத்தில் என்னுடைய கடமையைச் செய்ய வேண்டிய நிலைமையில்தான் நான் இருக்கிறேன். அவர்கள் இன்றைக்கு ஆளும் கட்சிக்குத் தோழமையான நியாயங்களை எடுத்துச் சொல்கிறார்கள். என்பதில் எங்களுக்கு கவலை இல்லை. ஆனால் மாநகராட்சித் தேர்தல்

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே கருத்தைத் திருப்பித் திருப்பி மாண்புமிகு திரு. இராதா அவர்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள். மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த வரையில் திராவிட முன்னேற்றக் கழகத்தோடோ அல்லது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடோ உடன்பாடு செய்து கொண்டுவிட்ட ஒரே காரணத்தால் அவர்கள் செய்வதை எல்லாம் நியாயம் என்று சொல்லிக்கொண்டிருப்பதில்லை.

அந்த நியாயம் அல்ல நாங்கள் இங்கே குறிப்பிட்டது. 1977 ஆம் ஆண்டு அணைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உடன்பாடு கொண்டு இங்கே வந்த நேரத்தில் 6 மாத காலத்திலேயே அவர்களுடைய கொள்கையில் மக்களுக்கு விரோதமாகச் செயல்படும்போது அவர்களை எதிர்த்து நாங்கள் கிளர்ச்சி செய்தோம், போராடினோம் என்பதை நான் இங்கே சொல்ல பிரியப்படுகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது நான் ஆளும் கட்சிக்கு அதைத் தான் சொல்கிறேன். விரைவில் கிளர்ச்சி நடத்துவதற்கு அவர்கள் தயாராகிக்கொண்டு இருக்கிறார்கள் எனவே நீங்கள் ஜாக்கிரதையாக இருங்கள். இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் இந்த மாநகராட்சி தேர்தலைப் பொறுத்த வரையில் எவ்வளவோ விரைவாகக் காரணங்களை எல்லாம் நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கலாம். இங்கே ஒரு உறுப்பினர் கூடக் கேட்டார், நீங்கள் என்ன செய்தீர்கள் ஆளும் கட்சியாக இருக்கும்போது என்று. நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆளும் கட்சியாக நாங்கள் வந்த நேரத்தில்தான் மதுரை மாநகராட்சித் தேர்தலை நடத்திக் காட்டினோம். ஆனால், சென்னை மாநகராட்சித் தேர்தலை நடத்தாதற்குக் காரணம் மஸ்டர் ரோல் ஊழல் வழக்கு இருந்த காரணத்தால் பல மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் சிறைக்குப்போய் சாகிற நிலைமையில் இருந்த காரணத்தால் அந்தத் தேர்தலை நடத்த முடியாமல் ஒத்தி வைக்க வேண்டிய நிலைமை வந்தது. அதற்குப் பின்னர் கோயம்பத்தூர் மாநகராட்சி கொண்டுவரப்பட்டது. எங்களைப் பொறுத்த வரையில் மாநகராட்சித் தேர்தலை நடத்தவேண்டும் என்பதற்கு ஒரு அடையாளம்தான், எனவே மாநகராட்சித் தேர்தலை அன்றைக்கு நாங்கள் நடத்திக்காட்டினோம்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மஸ்டர் ரோல் ஊழலுக்கும், சென்னை மாநகராட்சித் தேர்தலுக்கும் சம்பந்தம் கிடையாது. அப்படியே வைத்துக்கொண்டாலும்கூட தமிழ்நாடு முழுவதும் 12,500 பஞ்சாயத்துக்கள், 374 பஞ்சாயத்து யூனியன்கள், நூற்றுக்கும் மேற்பட்ட நகரசபைகள் போன்றவற்றுக்கெல்லாம் தேர்தலை நடத்தாமல் காலம் கடத்தியதற்கு என்ன காரணம்? அதைத் தான் மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் கேட்டார். அதற்கு என்ன காரணத்தை திரு. இராதா அவர்கள் சொல்கிறார்கள்.

1989 மே 11]

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காரணங்களைக் கேட்கிறார்கள். நான் காரணங்களைச் சொல்லியாகவேண்டும். தேர்தலை நடத்தியதே நாங்கள்தான். நாங்கள் தேர்தலை நடத்தியதால்தான் அவர்களுக்கு வாழ்வே கிடைத்தது. நாங்கள் அந்தத் தேர்தலை ஒத்தி வைத்திருந்தால்

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. வாழ்வை திரு. இராதா அவர்களிடத்திலே யிருந்து வாங்கவேண்டிய நிலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் கிடையாது. தமிழ்நாட்டு மக்கள்தான் எங்களுக்கு வாழ்வு கொடுத்தார்கள்.

திரு. உ. ரா. வரதராசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்தலை நடத்தினோம் என்று சொல்கிறார்கள். மாநகராட்சித் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியலைக்கூட அவர்கள் தயாரிக்கவில்லை. அப்படிப்பட்ட நிலையில் தேர்தலை நடத்த இருந்ததாக அவர்கள் சொல்வதை எப்படி நம்ப முடியும் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அவர்கள் ஆளும் கட்சிக்குத் துணை யாகப் பேசுவது என்பது ஆச்சரியமான விஷயம் அல்ல. அவர்கள் கடமையைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் நாங்கள் தேர்தலை நடத்திய

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. இராதா அவர்கள் சீனியர் மெம்பர். எல்லா முறைகளும் அவர்களுக்குத் தெரியும். ''சப்ஜெக்டில்'' நன்கு பேசக்கூடியவர். ஆனாலும் பிரச்சினையை உண்டுபண்ணவேண்டும் என்பதற்காக ஒரே கருத்தை திருப்பித், திருப்பிச் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். இந்த மசோதா பற்றி மட்டும் கருத்துக்களைச் சொல்லுங்கள். அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல இருக்கிறார்கள். இன்னும் 16 பில்களை எடுத்துக்கொள்ள வேண்டி இருக்கிறது.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்தக் காரணத்தையும் கூறாமல் உடனடியாக மாநகராட்சித் தேர்தலை நடத்தியாகவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி நடத்தாமல் இருக்கிற காரணத்தால் வருகிற கஷ்டம் என்ன என்பதைச் சொல்கிறேன். மதுரை போன்ற நகரங்களில் நாங்கள் சட்ட மன்ற உறுப்பினர்களாக இருந்து எங்களுடைய கடமைகளைச் செய்வதற்கு எவ்வளவு பெரிய இடர்ப்பாடு ஏற்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்ட

[திரு. எஸ். ஆர். இராதா] [1989 மே 11

விரும்புகிறேன். இன்றைக்கு மதுரையிலே குடிநீர்ப் பற்றாக்குறை உள்ளது என்று பல்வேறு நேரங்களிலே எடுத்துக் கூறியிருக்கிறேன் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கின்ற அந்த நகரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பொறுப்பிலே இருப்பவர். நேரடியாக கவனம் செலுத்துகின்ற அளவுக்கு அவர் எடுத்துக் கொண்டு, அந்த அதிகாரிகளை அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தால்தான் குடிநீர்ப் பிரச்சினையை இன்றைக்கு அங்கு தீர்க்க முடியும் என்பதை அவர்கள் கவனத்திலே கொள்ள வேண்டும். ஏனென்றால் அமைச்சர் அவர்களுடைய கவனத்தில் இருக்கிறது என்று தெரிந்தால்தான் ஓடுகின்ற லாரிகள்கூட ஒழுங்காக ஓடும். இன்றைக்கு லாரி வைத்து சப்ளை செய்வதாக சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் என்ன கணக்கு எழுதிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். ஆனால் அதை அங்கே இருக்கின்ற மக்கள் இன்றைக்கு குறைபாடுகள் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். தண்ணீர் வரவில்லை என்ற நிலையை எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். 3 நாளைக்கு ஒரு முறை தண்ணீர் என்பது இன்றைக்கு மாறி 5 நாளைக்கு ஒரு முறை என்ற அளவுக்குக்கூட தண்ணீர் வரவில்லை என்ற நிலை இருக்கிறது. அதை கவனிக்கவேண்டும். அதே போல அந்த மாநகராட்சியிலே பல்வேறு பணிகள் நடைபெறாமல் இருக்கின்றன.

உதாரணத்திற்கு நான் சொல்கிறேன். மதுரையைப் பொறுத்த வரையில் அது ஒரு பெரிய நெருக்கடியான நகரமாக இருக்கின்ற காரணத்தினால், போக்குவரத்துத் துறையிலேகூட எந்த விதமான முன்னேற்றமும் இல்லை. அதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன். ஒப்பனார் படித்துறையில் ஒரு பாலம் கட்டவேண்டுமென்று நீண்டநாளாக பிரச்சினை இருக்கின்றது. அதை இன்றைக்கும் கட்டவில்லை. என்னவென்று கேட்பதற்கு அங்கே மாநகராட்சி உறுப்பினர்கள் இல்லை. அதிகாரிகள் என்ன செய்கின்றார்களோ அதுதான் சட்டம் என்ற நிலை இருக்கிறது.

அதைப்போலவே, நான் சொல்வேன், இன்றைக்கு என்னுடைய தொகுதியிலே அனுப்பானடி, கீரைதுறை, காமராஜ புரம், பாலரங்காபுரம் போன்ற பகுதிகளிலே பார்த்தால், புதை சாக்கடை திட்டமே இல்லாத அளவுக்கு, ஒரு தெருவிலே புதை சாக்கடை திட்டம் இருக்கிறது, பக்கத்து தெருவிலே இல்லை. இந்த நிலையில், புதை சாக்கடை இல்லை என்று எடுத்துச் சொல்வதற்கு அங்கு மாநகராட்சி உறுப்பினர்கள் இல்லை. நான் அதிகாரிகளிடத்திலே சொன்னால், எம். எல். ஏ. என்று சொன்னால், ஏதோ அலட்சியப்படுத்துகிற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. எனவே எவ்வளவு விரைவாக, வேறு காரணங்களைச் சொல்லாமல், 18 வயது வாக்காளர்கள் என்று சொல்கின்ற

நேரத்தில், நான் இந்த அரசைப்பணிவோடு கேட்டுக்கொள்வேன். இந்த அரசு ஒரு பெரிய சாதனையைச் சாதிக்க வேண்டுமானால், இந்தத்தேர்தலில், ஒரு வரலாற்றிலே நீங்கள் இடம் பெறவேண்டுமானால் 18 வயது வாக்காளர்களுக்கு வாக்குரிமை தருகின்ற அதே நேரத்தில் போட்டோ ஒட்டிய அடையாள அட்டை கொடுத்து நடத்தவேண்டும். நான் நிச்சயமாகச் சொல்வேன், உண்மையான வாக்காளர்கள் வோட்டு போட்டு ஜெயித்து வந்த அரசாங்கம் என்ற நிலை, மாநகராட்சி என்ற நிலை வரும். அப்படி இல்லை என்று சொன்னால் திருட்டு வோட்டு போட்டே காலம் கடத்தலாம் என்ற நிலை இருந்து திருட்டு வோட்டிலே ஜெயித்தவர்கள் என்ற நிலை வந்துவிடும். எனவே திருட்டு வோட்டை தடுப்பதற்கு போட்டோ ஒட்டிய அடையாள அட்டையை....

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர்'. போட்டோ ஒட்டி ஆட்களை அடையாளம் நேரடியாகப் போட்டோவிலே பார்த்து, அப்படி போட்டால்தான் அது உண்மையான தேர்தல் உண்மையான நடவடிக்கை, இல்லாவிட்டால் திருட்டு வோட்டு தான் போட்டு தேர்தல்கள் எல்லாம் நடக்கின்றன என்று மதிப்பிற்குரிய திரு. இராதா அவர்கள் சொல்கின்றார்கள். அப்படியானால் இப்போது நடந்த சட்டமன்ற தேர்தல்களும், வரப்போகின்ற பாராளுமன்றத் தேர்தல் அது எல்லாம், திருட்டு வோட்டுப் போடுகிற தேர்தல்களாகவே நடக்குமா அல்லது அத்தனைக்கும் இந்தியா முழுவதும் போட்டோ ஒட்டிக் கொடுக்கவேண்டும் என்று நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்றார்களா?

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் கேட்டதனாலே சொல்கிறேன். அவர்கள் நேரடியாக நீ எவ்வளவு திருட்டு வோட்டு வாங்கினாய் என்பதுபோல நேரடியாக கேட்டார்கள். என்னுடைய தேர்தல் இடைத் தேர்தல். திருட்டு வோட்டை தடுத்ததனாலேயே தான் ஜெயித்தேன். திருட்டு வோட்டைத் தடுக்கவில்லை என்று சொன்னால் என்னுடைய தேர்தல் முடிவுகூட பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலை வரும். எனவே இந்தியா பூராவும் வரவேண்டுமென்பது தான் என்னுடைய கோரிக்கையே தவிர, இந்தியா முழுவதும் தரமுடியுமா என்பது என்னைக் கேட்கவேண்டிய நிலை கிடையாது. இந்த அரசாங்கம் செய்யவேண்டும் என்று வற்புறுத்துகிறேன்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்றார்கள். இப்போது நடந்த தேர்தலே திருட்டுவோட்டுத் தேர்தல் என்று அவர் ஒத்துக்கொண்டு அவர்கள் சொல்கின்றார்களா அல்லது நடந்த தேர்தல் சரியானது என்று ஒத்துக் கொள்கின்றார்களா?

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அவர்களுக்குச் சொல்லிவிட்டேன். அவர்கள்தான் புரிந்துகொள்ளவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருட்டு வோட்டைத் தடுக்க வேண்டும் என்பதற்காக ஒரு ஆலோசனை சொல்லி இருக்கின்றார்கள். டைம் ஆயிற்று. இன்னும் 16 பில்கள் இருக்கின்றன.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் சொல்லிவிடுங்கள்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தடுத்ததனாலேதான் நான் வெற்றி பெற்றேன் என்று சொன்னார். அப்படியானால் அவர் போட்டோ ஒட்டாமலேயே திருட்டு வோட்டைத் தடுப்பதற்கான சாத்தியப்பாடுகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துக்கொள்கின்றாரா?

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரே வார்த்தையிலே சொல்லிவிடுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லோரும் திருட்டு வோட்டைத் தடுத்து விடமுடியாது. நான் துணைத் தேர்தலில் நின்றதனாலே. எனக்கு இருந்த மெசினரியை வைத்து தடுத்து விட்டேன் அதையே திரு. வீரையன் அவர்கள் தடுக்க முடியுமா என்றால் அது ரொம்ப கஷ்டம்தான்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1989 மே 11]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரை இருக்கிறது. குறுக்கீடு உங்கள் இயக்கத்திலே திரு. கோ. பூவராகன் அவர்கள் பேசி விட்டார்கள். இன்னும் 16 பில்கள் இருக்கின்றன. பாருங்கள்—இப்போது 11–30 மணியாகி விட்டது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, ஒரு செகண்ட், எல்லோரும் மாநகராட்சித் தேர்தலைப்பற்றி, நடத்தி முடிக்கப் போகிறோம், அப்படி இப்படி என்று பேசிக்கொண்டிருக்கின்றார்கள். சென்னை மாநகராட்சியில் இதற்கு முன்னாலே ரொட்டேஷன் பேசிஸ் என்று இருந்தது. கம்யூனிட்டி பேசிஸ் என்று இருந்தது. இப்போது வருகிற தேர்தலில் அந்த கம்யூனிட்டி பேசிஸ் ரொட்டேஷன் பேசிஸ் படி எப்படி, எந்த வகுப்பு, எந்த சாதி மேயர் ஏற்படுத்துவது என்பதற்கு திட்டம் இருக்குமா இல்லையா? அதற்கு விளக்கம் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11–30)

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: பேரவைத் தலைவரவர்களே, இன்று ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டுள்ள இந்த மசோதா, சென்னை, மதுரை மற்றும் கோயம்பத்தூர் மாநகராட்சி உறுப்பினர்கள் தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டுமென்ற எண்ணத்திலேதான் கழக ஆட்சி பொறுப்பு ஏற்றுக்கொண்டதும், இதே அவையில் மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் நேரத்திலே நாட்டு மக்களுக்குத் தந்த வாக்குறுதிகளின் அடிப்படையில் தேர்தல்கள் நடத்தப்படும் என்று அறிவித்து, 18 வயது உடையவர்களின் வாக்காளர் பட்டியலைத் தயார் செய்வதனால், காலதாமதம் ஏற்படும் என்று கூறி, விரைவாகத் தேர்தல் நடத்த வேண்டுமென்று அந்த அடிப்படையில் 1—1—88 அன்று 21 வயது அடைந்தவர்கள் பெயர்கள் கொண்ட சட்டமன்ற வாக்காளர் பட்டியல்களை மாநகராட்சிக் கோட்டங்களுக்கு ஏற்ப மாற்றி அமைத்து அச்சிட்டு மாநகராட்சி வாக்காளர் பட்டியலாக வெளியிடப்பட்டது. 1—1—89 அன்று 21 வயது அடைந்தவர்கள் பெயர்களும் மனுக்கள் மூலமாகச் சேர்க்கப்பட்டன. இவ்வாறு 21 வயது அடைந்தவர்களின் பெயர்களைக் கொண்ட மாநகராட்சி வாக்காளர் பட்டியல்கள் தயாரிக்க தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு மாநகராட்சிகள் சட்டங்கள் தனி வகை முறைகள் மற்றும் திருத்தச் சட்டம் நடந்த சட்டமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

[திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்] [1989 மே 11

மாநகராட்சித் தேர்தல் மே மாதம் 12 ஆம் தேதி நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது. இதற்கிடையில் மே மாதம் 7 ஆம் தேதி ர்ம்ஜான் பண்டிகை இடையில் வருகிற தென்றும, 18 வயது அடைந்தவர்களைக் கொண்ட சட்ட மன்ற வாக்காளர் பட்டியல் தயாரிக்சப்பட்டுவிட்டதாலும், மாநகராட்சி வாக்காளர் பட்டியலிலும் 18 வயது அடைந்தவர்கள் பெயர்களையும் சேர்த்து மாநகராட்சித் தேர்தல்களை நடத்தலாமென சட்டமன்ற உறுப்பினர்கள் இதே மன்றத்தில் கேட்டுக் கொண்டதற்கிணங்க மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அவ்வாறே 18 வயது அடைந்தவர்களின் பெயர்களையும் மாநகராட்சி வாக்காளர் பட்டியலில் சேர்த்து, தேர்தல்களை வருகின்ற ஜூலை மாதம் நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அறிவித்தார்கள். முதல்வர் அவர்களின் அறிவிப்புக்கேற்ப சட்டமன்ற வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள 18 வயது அடைந்தவர்கள் கொண்ட பெயர்களையும், மாநகராட்சி வாக்காளர் பட்டியலில் சேர்த்து ஜூன் 29 ஆம் தேதி மாநகராட்சி வாக்காளர் பட்டியல் இறுதி வெளியீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் தற்போதைய சென்னை மாநகராட்சியின் தனி அதிகாரியின் பதவிக் காலம் 30—5—89-லும். கோயம்பத்தூர் மாநகராட்சி தனி அதிகாரியின் பதவிக் காலம் 11—6—89-லும், மதுரை மாநகராட்சி தனி அதிகாரியின் பதவிக் காலம் 29—7—89-லும் முடிவு அடைய இருக்கின்றன. மாநகராட்சித் தேர்தல்களை ஜூலை மாதம் நடத்த உத்தேசிக்கப்பட்டிருப்பதால், இந்தத் தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை செப்டம்பர் 30 ஆம் நாள் வரை நீட்டிக்க அரசு முடிவு செய்துள்ளது இது தான் இந்த அவையிலே வைத்திருக்கிற மசோதா. அது நிறைவேற்றப்பட வேண்டுமென்று அனுமதி கோரியிருக்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. வெள்ளிங்கிரி அவர்கள் செப்டம்பர் 30 ஆம் தேதி வரை காத்திராமல், விரைவில் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்.

இந்த மசோதாவிலேயே அதைத்தான் குறிப்பிட்டிருக்கிறோம். செப்டம்பர் மாதத்திற்குள்ளே தேர்தல் நடந்து, மக்கள் பிரதிநிதிகள் பொறுப்பேற்றுக் கொண்டால் உடனே, தனி அதிகாரியினுடைய பதவிக்காலம் முடிந்துவிடும் என்று வகை செய்யப்பட்டிருக்கிறது. செப்டம்பர் மாதம் வரை தனியதிகாரியினுடைய பதவிக் காலத்தை நீட்டித்துக் கொடுத்திருப்பதால், செப்டம்பர் மாதம் 30 ஆம் தேதி வரை இந்தத் தேர்தல் நடத்தப்படாமல் இருக்கும் என்று யாரும் கருதத் தேவையில்லை.

1989 மே 11] [திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்]

மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. பூவராகன் அவர்கள் 21 வயதிலிருந்து இப்போது 18 வயது முடிந்தவர்களுக்கும் சேர்த்து வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட இருப்பதால் அதுவும் ஜூன் 29 ஆம் தேதியோடு இறுதியாக்கப்பட இருப்பதைக் குறிப்பிட்டு விரைவிலேயே இந்தப் பட்டியலைத் தயாரித்து தேர்தலை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அந்த அடிப்படையிலேதான் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் வாக்காளர் பட்டியலில் புதிய வாக்காளர்களைச் சேர்ப்பதில் சில தவறுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். வாக்காளர்களுக்கு போட்டோ ஒட்டிய அடையாளக் கார்டுகள் தரப்பட வேண்டும் என்றெல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். பொதுத் தேர்தலிலேயே இப்படிப்பட்ட முறையை கையாளலாமா என்று முயற்சி செய்து அதுவே இன்னும் முடிவுபெற வில்லை. இதுபோன்ற மாநகராட்சித் தேர்தல்களில் போட்டோ அடையாள அட்டையை வாக்காளர்களுக்குக் கொடுத்து தேர்தல் நடத்துவது என்று கடந்த ஆட்சிக் காலத்திலேயே நடவடிக்கை எடுத்தார்கள். இன்னும் சொல்லப் போனால், தேர்தலை ஒத்தி வைப்பதற்குக் கூட, இதை ஒரு காரணமாக எடுத்துக் காட்டினார்கள். அவர்களே அன்றைக்கு இது ஒரு பெரும் செலவாகும் திட்டம் என்றும், இது சாத்தியமில்லை என்றும் முடிவுக்கு வந்து இறுதியில் அவர்களே கைவிட்டு விட்டார்கள். ஆகவே வாக்காளர்களுக்கு போட்டோ ஒட்டிய அடையாள கார்டு கொடுப்பது என்பது இப்போது அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

திரு. இரா மோகன் அவர்கள் பேசும்போது, கோவையில் பல்வேறு புதிய பகுதிகளைச் சேர்த்து அது மாநகராட்சியாக ஆக்கப்பட்ட பிறகு, வார்டுகளைப் பிரிப்பதில் பல கோளாறுகள் மற்றும் தவறுகள் ஏற்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அது அரசாங்கத்தின் கவனத்திற்கும் வந்தது. அப்படிப்பட்ட கோரிக்கைகளின் பேரில் சில வார்டுகள் திருத்தி அமைக்கப்பட வேண்டுமென்று அரசாங்கமே உத்திரவிட்டிருக்கிறது. இப்போதும்கூட மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்கள் அப்படிப்பட்ட முயற்சியிலே ஈடுபட்டு எந்தெந்த வார்டுகளோடு எந்தெந்தப் பகுதிகளை இணைக்கலாம் என்றும், அவ்வாறு இணைத்தால் எந்தெந்த வார்டுகளின் அமைப்புக்குச் சரியாக இருக்கும் என்றும் கருதுவார்களேயானால் அதை அங்கே இருக்கிற தனி அதிகாரி அல்லது ஆணையாளருக்குத் தெரியப்படுத்தினால் அதுபற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுக்க இப்போதும் கால அவகாசம் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் விரும்புகிறேன்.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் இங்கே ஒன்றைக் குறிப்பிட்டார்கள். எப்போதுமே அவருடைய பாணியிலே அவர் அப்படித்தான் பேசுவார். நான் மேலவையிலும் பார்த்திருக்கிறேன். இங்கேயும் அதையே எடுத்துப் பேசினார். 1977 ஆம் ஆண்டு முதன் முதலில் எம். ஜி. ஆர். தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தார். இங்கே அவர் ஒன்றைச் சொன்னார். அதாவது ஏதோ 1986 ஆம் ஆண்டு தேர்தல் நடத்திய காரணத்தால்தான் தி. மு. க. வில் இருப்பவர்களுக்கு ஒரு வாழ்வு வந்தது என்று திரு. இராதா அவர்கள் குறிப்பிட்டார். நாட்டு மக்கள் ஏமாந்த காரணத்தாலே யார் வாழ்வு பெற்றார்கள் என்பதை இந்த நாடே அறியும். (மேசையைத் தட்டும் ஒலி)

1977 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பிறகு பல அமைச்சர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்டு தேர்தல் வரும் என்று அறிவித்தார்கள். பிறகு அமைச்சர்கள் மாறினார்களே தவிர தேர்தலை நடத்தவேயில்லை. கிராம மக்களிடத்திலே, நகர மக்களிடத்திலே உள்ளாட்சி அமைப்புத் தேர்தல்களிலே அன்றைக்கு இருந்த ஆளும் கட்சியான அ. தி. மு. க. சென்று வாக்குகளைக் கேட்டு வெற்றி பெறுகிற வாய்ப்பில்லை என்று கருதியேதான் 1986 ஆம் ஆண்டுவரை அவர்கள் தேர்தலை நடத்தவில்லை. பிறகு தி. மு. க. மற்றும் எங்களோடு தோழமை கொண்டிருந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மற்றுமுள்ள கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து மேலும் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை நடத்தாமல் காலம் கடத்துவது ஜனநாயகத்தைப் படுகொலை செய்வதாகும் உடனடியாக தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று அன்றைக்குக் கிளர்ச்சி எல்லாம் நடத்திய பிறகுதான் வேறு வழி இல்லாமல் தமிழக அரசு 1986 ஆம் ஆண்டு தேர்தல் நடத்தியது. ஆனால் அந்தத் தேர்தல் முடிவு யாருக்குச் சரியான பாடத்தைப் புகட்டியது என்பது பற்றி இந்த நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள்.

(முற்பகல் 11-40)

1981 ஆம் ஆண்டே கோவை மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டது. ஏன் அங்கு 1986-லேயாவது தேர்தல் நடத்தி இருக்கக்கூடாது? சென்னை மாநகராட்சியில்தான் மஸ்தூர் வழக்கு இருந்தது என்று ஒரு காரணத்தைச் சொன்னார். 1981 ஆம் ஆண்டே மாநகராட்சியாக அறிவிக்கப்பட்ட கோவைக்காவது அவர்கள் தேர்தலை நடத்தி இருக்கலாம். ஆனால் அன்றைக்கு இருந்த ஆட்சியிலே அது நடத்தப்பட

வில்லை. ஏதோ மதுரை கிழக்குத் தொகுதி, மருங்காபுரித் தொகுதியைக் கண்டு நாங்கள் ஆளும் கட்சியில் இருப்பவர்கள் மிரளுகிறோம் என்று சொன்னார். நாங்கள் எந்தக் காலத்திலும் எதைக் கண்டும் மிரளக்கூடியவர்கள் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் எதற்கும் தயாரானவர்கள்.

இன்னொன்றை நான் ஞாபகப்படுத்துவது என்னுடைய கடமை. அவர்கள் ஆளும் கட்சியாக இருந்தபோதுதான் இடைத் தேர்தல் தமிழகத்தில் நடைபெற்றது. சென்னை அண்ணா நகரிலும் அதைப் போல தஞ்சை மாவட்டத்திலேயும் மயிலாடுதுறையிலேயும் தேர்தல் நடைபெற்றது. அவர்கள் ஆளும் கட்சியாக இருந்தபோதே 2 இடங்களில் தி. மு. க. மகத்தான வெற்றியைப் பெற்றது என்பதை அவர் மறந்து இருக்க மாட்டார். ஏதோ இடைத் தேர்தலில் இரண்டு இடங்களில் வெற்றி பெற்ற காரணத்தாலே நாட்டு மக்கள் பூராவும் அவர்கள் பக்கம் இருக்கிறார்கள் என்று இன்றைக்கு கனவிலே சஞ்சரித்துக் கொண்டிருக்கிறார்களே தவிர, அந்தக் கனவு தூள்தூள் ஆக்கப்படும் என்பதை மட்டும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக ஒரு இடைத் தேர்தல்தான் நாட்டினுடைய கணிப்பு என்று எடுத்துக்கொண்டு இந்த மசோதாவில் அவர்கள் கருத்துக் சொல்லத் தேவையில்லை. சொன்னால் நாங்களும் சொல்ல முடியும். அவர்களுடைய கட்சியினர் அன்றைக்கு தேர்தல் நேரத்தில் இரண்டாகப் பிரிந்து இருந்தார்கள்; இப்போது ஒன்றாக ஆகி இருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள்; இருக்கட்டும்; வாழ்த்துகிறோம்; அதைப்பற்றி எங்களுக்குக் கவலை இல்லை. ஆனால் அப்படி ஒன்று இரண்டாகப் பிரிந்த நேரத்தில் அவர்களுடைய தலைவர்கள் எல்லாம் நகரத்தைக் கண்டு அஞ்சி கிராமப் பகுதிக்குத்தான் போனார்களே தவிர நகரத்திலே வேட்பாளராகக்கூட நிற்கவில்லை. ஆகவே எங்களுடைய தலைவர், தமிழக முதல் அமைச்சர் கலைஞர் இதே சென்னை நகரத்திலே நின்று அவரை எதிர்த்துப் போட்டியிட்ட அத்தனை பேரும் காப்புத் தொகையைக்கூட இழந்தார்கள் என்ற வரலாறு எங்களுக்கு உண்டு. நம்முடைய அவையின் முன்னவர் பேராசிரியர் அவர்கள் மகத்தான வெற்றியை இதே சென்னை மாநகரத்திலே அண்ணாநகர் தொகுதியிலே பெற்றார்கள். அதைப்போல வீராசாமி, அதைப் போல எங்களுடைய தோழமைக் கட்சியைச் சேர்ந்த அப்துல் லத்தீப் அவர்கள்—இப்படிப்பட்டவர்கள் எல்லாம் நகரத்திலே நின்றுதான் வெற்றி பெற்றார்கள். சென்னை நகரத்தைப் பொறுத்தவரைக்கும், சென்னையில் 14 தொகுதிகளில், ஒரு தொகுதியில் தோழமைக் கட்சியும், 13 தொகுதிகளில் தி.மு.க. வும் நின்று வெற்றி பெற்று இருக்கின்றோம். ஆகவே நகரத்தில்

இருக்கிறமக்களைக்கண்டு பயப்படவேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. மற்றவர்களுக்கு உண்டு என்பதை மட்டும் தெரிவித்து, ஆகவே, தனி அதிகாரிகளுடைய பதவிக் கால நீட்டிப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:(குறுக்கீடு) இதில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.

திரு. வி. கே. சின்னசாமி: அவர் சொன்னது முற்றம் சொன்ன மாதிரி இருக்கிறது. தலைவர்கள் கிராமத்திற்குப் போய் விட்டதாகச் சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: யாரையும் குற்றம் சொல்லவில்லை. இன்னும் 14 பில்கள் இருக்கின்றன.

திரு. வி. கே சின்னசாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் பேசும்போது எங்களுடைய கட்சித்தலைவர்கள் எல்லாம் நகரத்தைவிட்டு கிராமத்திற்குச் சென்றதாகச் சொல்லி இருக்கின்றார்கள் கிராமத்திலேயும் மனிதர்கள்தான் ஓட்டு போடுகிறார்கள் என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல் இப்போது நடைபெற்ற தேர்தலில், மதுரையில் மரியாதைக்குரிய எஸ். ஆர். இராதா அவர்கள் வெற்றி பெற்று இருக்கிறார்கள். அந்த மதுரை கிராமமா? நகரமா? என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

1989 மே 11]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1989) நிறைவேற்றப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(உ) மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்த)
சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதத்தைத் தொடங்கி வைத்துப் பேசுபவர் திரு. கோவிந்தராஜன். ஏழு மணித் துளிகளில் அவர்கள் முடித்துக்கொள்ளவேண்டும்.

திரு. சி. கோவிந்தராஜன்: அதிகம் பேசவேண்டியிருக்கிறது. கொஞ்சம் அதிக நேரம் கொடுக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 7 மணித் துளிகள் 16 சட்ட முன்வடிவுகளை எடுத்துக்கொள்கிறோம். ஆகவே, அதையும் கொஞ்சம் மனதில் வைத்துக்கொண்டு பேசவேண்டும்.

திரு சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்வர்களே. இந்த மாவட்ட நகராட்சிகள் சட்டத் திருத்த மசோதாவை மனப்பூர்வமாக வரவேற்று, ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். இந்தச் சட்டம், இந்தத் தேர்தலைக்கொண்டு வருவதற்கே எப்படிப்பட்ட

* 29—4—89 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1989) நிறைவேற்றப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஊ) மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்".

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதத்தைத் தொடங்கி வைத்துப் பேசுபவர் திரு. கோவிந்தராஜன். ஏழு மணித் துளிகளில் அவர்கள் முடித்துக்கொள்ளவேண்டும்.

திரு. சி. கோவிந்தராஜன்: அதிகம் பேசவேண்டியிருக்கிறது. கொஞ்சம் அதிக நேரம் கொடுக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 7 மணித் துளிகள் 16 சட்ட முன்வடிவுகளை எடுத்துக்கொள்கிறோம். ஆகவே, அதையும் கொஞ்சம் மனதில் வைத்துக்கொண்டு பேசவேண்டும்.

திரு சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்வர்களே. இந்த மாவட்ட நகராட்சிகள் சட்டத் திருத்த மசோதாவை மனப்பூர்வமாக வரவேற்று, ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். இந்தச் சட்டம், இந்தத் தேர்தலைக்கொண்டு வருவதற்கே எப்படிப்பட்ட

* 29—4—89 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

கிளர்ச்சிகளை நடத்தவேண்டியிருந்தது என்பதைச் சற்றுமுன் அமைச்சரவர்கள் இங்கே கூறினார்கள். தேர்தலினுடைய விளைவு வேறு மாதிரியாக ஆன காரணத்தால், ஏற்கெனவே உள்ளாட்சி மன்றங்களுக்கு உள்ள அதிகாரம் போதாது என்ற கோரிக்கை வந்திருந்த காலத்தில், இருக்கக்கூடிய அதிகாரத்தையும், சட்டபூர்வமாக இருந்த அதிகாரத்தையும் பறிப்பதற்கான முயற்சிகளில் கடந்த அரசு ஈடுபட்டது என்பதை அனைவரும் அறிவார்கள். இதைத் திரும்பப்பெற வேண்டுமென்பதற்காகவும், இந்த அதிகாரப் பறிப்பை எதிர்த்தும், திராவிட முன்னேற்றக் கழகமும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் இதர ஜனநாயகக் கட்சிகளும், 1987 ஆவது ஆண்டு அக்டோபர் மாதம் 11-ஆம் தேதி திருச்சியிலே ஒரு மிகப் பிரம்மாண்டமான மாநாட்டை நடத்தி, அதிலேஒரு அமைப்பையே உருவாக்கி, இந்த அதிகாரப் பறிப்பை எதிர்த்து இயக்கங்களை நடத்தியதையும் நாடு அறியும். அன்றைக்கு ஆளுங்கட்சியில் இருந்தவர்களும் நிச்சயமாக அறிவார்கள் என்று நிச்சயமாக நான் கருதுகிறேன்.

அந்த அடிப்படையில் இந்தத் தேர்தலில் எந்தக் கட்சிமுன் முயற்சி எடுத்து, எந்த அதிகாரப் பறிப்பை எதிர்த்துக் கிளர்ச்சி நடத்தியதோ அந்தக் கட்சி ஆட்சி பீடத்திற்கு வந்த பிறகு—திராவிட முன்னேற்றக் கழகம் அந்தக் காலத்தில் நடத்திய கிளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு, வந்தவுடனேயே இந்த நகராட்சிகளில், உள்ளாட்சி மன்றங்களில் எந்தெந்த அதிகாரப் பறிப்பு நடந்திருக்கிறதோ அதைப் பூராவும் மீட்டுத் தருவோம் என்று தேர்தல் காலத்திலே வாக்குறுதி கொடுத்தது மட்டுமல்ல; அதை நிறைவேற்றக் கூடிய முறையிலே இந்த மசோதாவையும் கொண்டு வந்திருக்கிறது என்பதையும் மட்டற்ற மகிழ்ச்சியோடு நான் கூற விரும்புகிறேன்.

அதில் முக்கியமான அதிகாரப் பறிப்பு என்பது செக்ஷன் 23-இல் 23 (எ) என்ற ஒரு பகுதியையும் சேர்ந்த, வரி முறையீட்டு அப்பீல் குழுவுக்கு இருந்த அந்த அதிகாரத்தைப் பறித்தது. எந்த நகராட்சியாவது நிதி நிலைமையில் பற்றாக்குறையான நிலைமையில் இருக்கிறது என்று அவர்களுக்கு யாராவது தகவல் கொடுத்தால், ஆளுங்கட்சி உடனடியாக அந்த நகராட்சியைக் கலைப்பதற்கு உள்ள அதிகாரம். அதே மாதிரி ஏற்கெனவே ஒரு தேர்தல் நடத்தப்பட்டு, மன்றத் தலைவர்கள் வந்திருந்தாலும்கூட அவர்களைத் திருப்பி அழைப்பதற்கு ஒரு ரெபரண்டம் வைத்து, திருப்பி அழைக்க வேண்டுமென்ற முறையிலே உள்ள அது.

இப்படிப்பட்ட சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டதையெல்லாம் இன்றைக்கு அகற்றிநடவடிக்கை எடுப்பதை, புது மசோதா கொண்டு வருவதை நாங்கள் வரவேற்கிறோம். இதற்குத் துணையாக எந்தெந்த விதிகள், செக்ஷன்கள் இருக்கின்றன என்று அதிலே இருப்பதை அப்படியே கொடுத்து, எது எது மாற்றப்படுகின்றன என்பதற்கு சில விவரங்கள் இங்கே கொடுக்கப்பட்டிருப்பதில் மொழி பெயர்ப்பில் ஒருசில தவறுகள் இருக்கின்றன என்று நான் கருதுகிறேன். தவறா இல்லையா என்று தெரியவில்லை. 40-சி என்பது சேர்மனை, நகராட்சித் தலைவரை திருப்பி அழைப்பது. அது ஆங்கிலத்தில் 40-சி என்பது இப்போது திருத்தப்படுவது எப்படி இருக்கிறது என்றால், Special provision for recall of Chairman of Council by referendum to be held என்று மட்டும் போடப்பட்டிருக்கிறது. அதிலே சப்-செக்ஷன்ஸ் 1–7 மட்டும்தான் 'ஒமிட்டட்' என்று இருக்கிறது. ஆனால், தமிழில் 40-சி என்பது ஒட்டுமொத்தமாக விட்டுவிடப்படுதல்வேண்டும் என்று இருக்கிறது. இதுதான் சரியென்று நான் கருதுகிறேன். மொழி பெயர்ப்பில் இப்படி சில தவறுகள், எழுத்துப்பிழைகள் இருந்தால் அது திருத்தப்பட வேண்டியது அவசியம். பின்னால் அதை வைத்தே பல்வேறு விவாதங்கள் நடத்தவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும்.

(முற்பகல் 11–50)

இப்படி அதிகாரம் மட்டும் கொடுத்துவிட்டால் போதாது. அதற்கு வேண்டிய அளவில், உள்ளாட்சி மன்றங்கள் நல்ல முறையில் மக்களுக்கு அபிவிருத்தி காரியங்களைச் செய்வதற்கு வேண்டிய அளவில் நிதியாதாரத்தைக் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கையையும் இந்த அரசு எடுக்கவேண்டுமென்று இந்த சமயத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்னொரு ஆபத்தான நிலை நாட்டில் உருவாவதை நான் இந்தச் சமயத்தில் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. மாநில சுயாட்சிக்காக போராடிக் கொண்டிருக்கிற இந்நிலையில், அதையே அடிப்படைக் கொள்கையாக வைத்து உள்ளாட்சி மன்றங்களுக்கு மேலும் அதிகாரம் என்று வந்திருக்கக்கூடிய இந்த நேரத்தில், உள்ளாட்சி மன்றங்களே இந்த மாநிலத்தில் செயல்பட முடியாத நிலைமை இன்றைக்கு நாட்டில் உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதை இந்தச் சமயத்தில் நான் குறிப்பிடாமல் இருக்க முடியாது. அதற்கே ஆபத்து வந்திருக்கிறது என்பதையும் இந்தச் சமயத்தில் இங்கே நான் கூறி, அதற்கானஒரு இயக்கத்தை நடத்த வேண்டிய சூழ்நிலை நாட்டில், தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிறதா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனவே, வெறும் அதிகாரங்

களை மட்டும் கொடுத்து விட்டால் இன்றைக்கு இருக்கிற உள்ளாட்சி மன்றங்கள் சரிவர மக்களுக்கு வேண்டிய அபிவிருத்திக் காரியங்களை நடத்திவிடும் என்று நினைப்பதற்கு இல்லை. நகராட்சிகளுக்கு நிதியாதாரம் மிகவும் குறைவாக இருக்கிறது என்பதை ஏற்கெனவே நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். உதாரணமாக நானே தலைவராக இருக்கிற நெல்லிக்குப்பம் நகராட்சியில் அங்கே வருமானம் 18 லட்சம் ரூபாய். அங்கேயிருக்கிற ஊழியர்களுக்கு சம்பளம் மட்டும் 24 லட்சம் ரூபாய். எனவே, அபிவிருத்தித் திட்டங்களுக்கு எங்கே போவது என்பது தான் இப்போதைய நிலைமை. குடிதண்ணீர் விஷயமாக இருந்தாலும்சரி, ரோடாக இருந்தாலும் சரி அந்தநிலை தான். பாதாள சாக்கடை போடுவதைப் பற்றிச் சொல்லும்போது இரண்டு லட்சத்திற்கு மேல் மக்கள் தொகை இருந்தால்தான் அதை அமைக்க முடியுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சாதாரண 'ட்ரெயினேஜ்' கட்டுவதற்குக் கூட பணம் இல்லாத ஒரு சூழ்நிலை அங்கே இருக்கிறது. எனவே, நிதியாதாரம் அதிகம் கொடுப்பதற்கு முயற்சிகளைச் செய்யவேண்டும். இல்லையென்றால் வேறு சில ஆலோசனைகள் என்று சொல்லக்கூடிய முறையில் அங்கேயிருக்கிற ஊழியர்களின் சம்பளத்தில் குறைந்தபட்சம் 80 சதவீதமாவது அரசு ஏற்றுக்கொள்கிற அளவிற்கு அரசு இருக்க வேண்டுமென்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதைப்போல குடிதண்ணீர் சம்பந்தமான நிலைமையை எடுத்துக் கொண்டால், உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிகாரம் இருந்தாலும், இத்தனை இடங்களில் இத்தனை குழாய்கள் போட வேண்டுமென்று தீர்மானம் எல்லாம் நிறைவேற்றப்பட்டாலும் அங்கே குறுக்கே வருவது—ஏற்கெனவே கூட இங்கே விவாதிக்கப்பட்ட விஷயம்—குடிநீர் வடிகால் வாரியம்—எனவே அதற்கு இருந்த அந்த அதிகாரத்தை எடுத்து அந்த அதிகாரத்தையும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு வேண்டிய அதிகாரத்தையும் நகராட்சிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கூறிக் கொள்ள பிரியப்படுகிறேன். 24 மணி நேரமும் குடிதண்ணீர் கிடைக்கக்கூடிய அளவிற்கு தனி 'ஃபீடர் லைன்' அதற்காக உருவாக்கவேண்டுமென்று இந்தச் சமயத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம். பல தடவைகள் எடுத்துச் சொன்னாலும் கூட அரசாங்கம், முந்தைய அரசாங்கமும், இப்போதும் கூட அதை ஏற்றுக்கொள்ளாத நிலை இருக்கிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். நகராட்சிகளின் பணிகள் பெருகி இருக்கின்றன. ஜனத்தொகையும் பெருகி இருக்கிறது. ஆனால், துப்புரவுத் தொழிலாளர்களின் எண்ணிக்கையைப் பெருக்குவதற்கு அரசு முன் வரவில்லை. அதற்கு

1989 மே 11] [திரு. சி. கோவிந்தராஜன்]

(மணியடிக்கப்பெற்றது) எத்தனை தீர்மானங்கள் போட்டாலும் நடைபெறுவதில்லை. திரு. எச்.பி.என். ஷெட்டி அவர்கள் தலைமையில் ஒரு குழு போடப்பட்டு அதற்கான நிலைமைகளையெல்லாம் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இத்தனை கழிப்பறைகள் என்றால் எத்தனை 'ஸ்காவன்ச்சர்ஸ்' போடுவது என்றும், இவ்வளவு தூரம் பெருக்க வேண்டுமென்றால் அதற்கு எத்தனை 'ஸ்வீப்பர்ஸ்' போடுவது என்றும் சொல்லப்பட்டது. இன்றைக்கு வளர்ந்திருக்கிற ஜனத்தொகைக்கு, பெருகியிருக்கிற ஜனத்தொகைக்கு ஈடாக அவர்களுக்கு சுகாதார வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்றால், இந்த விஷயங்களில் குறைந்த பட்சம் அந்த 'நார்ம்ஸ்'-களையாவது நிறைவேற்றக்கூடிய அளவிற்கு, அமலாக்கக்கூடிய அளவிற்கு திரு. எச்.பி.என் ஷெட்டி அவர்கள் தலைமையில் போடப்பட்ட குழு சொன்ன அந்த ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயம், பணி நியமனக் குழு என்று ஒன்று இருக்கிறது. அதையும் மீறி மேல் அதிகாரிகளே அங்கே நியமித்து—நான் ஒரு விஷயத்தைக்கூட மாண்புமிகு அமைச்சரிடத்திலே கொடுத்து இருக்கிறேன்— உள்ளாட்சி மன்றங்களுக்கு இருக்கிற அதிகாரத்தை அதிகாரிகளே சில இடங்களில் பறிக்கக்கூடிய அளவிற்கு—அவர்கள் நியமித்து—அதை அப்பாய்ன்ட்மெண்ட் கமிட்டியிலே வை என்று சொல்வது சரியில்லை. இதுபோன்ற நிலைமைகள் இந்த முனிசிபாலிட்டிகளில் இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதையும் நீக்க வேண்டும். (மணி அடிக்கப்பட்டது).

இப்படிப்பட்ட சட்டத் திருத்தங்கள் கொண்டுவரும்போது இன்னொரு முக்கியமான விஷயம் பற்றிச் சொல்ல விரும்புகிறேன், முனிசிபல் மானுவல் இருக்கிறது. எப்போதோ நிறைவேற்றப்பட்டது. அந்த மானுவல் வால்யூம் ஒன்றில், ஆர்ட்டிகிள் 69-ல் ஹார்ஸ் பவருக்கு வரி போடுவது என்பதைப் பற்றி அந்த லைசென்சைப் பற்றி எப்படி இருக்கிறது என்று சொன்னால், எத்தனை ஹார்ஸ் பவர் வைத்திருந்தாலும் கூட, 450 ரூபாய்க்கு மேல் கிடையாது என்று ஒரு மேக்சிமம் சீலிங் இருக்கிறது. 500 ஹார்ஸ் பவருக்கு 350 ரூபாய். குறிப்பிட்ட பகுதியை மட்டும் நான் படிக்கிறேன். அந்தக் காலத்தில் போடப்பட்டது. அதற்கு மேல் ஒவ்வொரு ஹார்ஸ் பவருக்கும் 4 அணா, 4 Annas என்றுதான் போடப்பட்டு இருக்கிறது. பைசா கூட இல்லை அந்தக் காலத்தில் போடப்பட்டு இருக்கிறது. Subject to a maximum of Rs. 450, என்றுதான் இருக்கிறது. அதனால் நகராட்சிகளுக்கு, மிகப் பெரிய தொழிற்சாலைகள் எல்லாம் இருக்கிற நகராட்சிகளுக்கு அதிகப்

படியான வருமானம் கிடைப்பதற்கு வேண்டிய வழியை இது முடமாக்கி இருக்கிறது. எனவே இந்தச் சமயத்தில் இந்தத் திருத்தங்களைக் கொண்டுவரும்போது அதையொட்டி பல்வேறு திருத்தங்களை மானுவலிலேயும் கொண்டு வரவேண்டும் என்று இந்தச் சமயத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்சப்பெற்றது).

அதுமட்டுமல்லாமல் மாசுக் கட்டுப்பாட்டுக் கழகம் என்று ஒன்று இருக்கிறது. தொழிற்சாலைகளுக்கு லைசென்ஸ் கொடுக்க வேண்டும் என்று சொன்னால், இந்த மாசுக் கட்டுப்பாட்டுக் கழகத்திலேயிருந்து ஹெல்த் சர்ட்டிபிகேட் வாங்கி வந்தால்தான் கொடுக்க முடியும் என்று இருக்கிறது. ஆனால் அங்கேயுள்ள மோசமான நிலைமையைப் பற்றி, கழிவு நீர்ப் பிரச்சினைகளைப் பற்றி இங்கே பிரச்சினை வந்தது, எரிசாராய ஆலைகளிலிருந்து வருகிற கழிவுநீர்ப் பிரச்சினை, சர்க்கரை ஆலைகளிலிருந்து வருகிற கழிவுநீர்ப் பிரச்சினை, தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வருகிற கழிவுநீர்ப் பிரச்சினை என்று பிரச்சினைகள் வருகிறபோது, அப்படிப்பட்ட இடங்களில் நகராட்சி பூராவும் லைசென்ஸ் கொடுப்பதைத் தடுப்பதற்கு இதை ஒரு காரணமாக நாம் வைக்க முடியும். அதன் மூலமாகவாவது இந்த நிறுவனத்தார்கள் எப்படியாவது அதை சுத்தப்படுத்தக்கூடிய நிலைமை ஏற்படலாம், Effluent Treatment Plant என்று நாங்கள் ஏற்படுத்துகிறோம் என்று சொல்லி, இந்த மாசுக் கட்டுப்பாட்டுக் கழகத்திலேயிருந்து எப்படியோ லைசெஸ்சை கொண்டு வந்துவிடுகிறார்கள். (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் உங்களுக்குக் கொடுத்தது 7 நிமிடங்கள். நீங்கள் எடுத்துக் கொண்டது 10 நிமிடங்கள். எனவே மற்றதைப் பற்றி எழுத்து மூலமாக அமைச்சருக்கு எழுதிக் கொடுத்து விடுங்கள். (குறுக்கீடு).

திரு. சி. கோவிந்தராஜன்: சில அதிகாரங்களை வழங்கியிருக்கிற நேரத்தில், இப்படிப்பட்ட அதிகாரங்களையும் கொடுக்கக்கூடிய அளவிற்கு இந்தச் சட்டங்களை எல்லாம் திருத்தவேண்டும், சில விதிமுறைகளை எல்லாம் திருத்த வேண்டும் என்று கூறி நான் முடிக்கிறேன்.

திரு. கோ. பூவராகன்: சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மாவட்ட நகராட்சி சம்பந்தப்பட்ட திருத்த சட்ட முன்வடிவின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

1989 மே 11] [திரு. கோ. பூவராகன்]

குறிப்பாக இதிலே ஏற்கனவே நகராட்சிகளைக் கலைப்பதற்கு ஒரு காரணத்தை வைத்திருக்கிறார்கள். நிதிநிலை இல்லை, சரியாக நடைபெறவில்லை என்று சொன்னாலே அந்த நகராட்சியை எவ்விதக் காரணமும் காட்டாமல், கலைப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் இருந்தது. அவ்வாறு இல்லாமல், அந்த நகர மன்றங்களைத் திடீரென்று கலைத்துவிடக்கூடாது என்பதற்காக, பாதுகாப்பு விதிகளை இன்றையதினம் இதிலே சேர்த்திருக்கிறார்கள்.

முன்பு இந்த மன்றத்திலே, நகராட்சிக்கு இருந்த அதிகாரங்களை எல்லாம்—பலவற்றை—ஏற்கனவே இருந்த அரசு சட்டத் திருத்தங்கள் மூலம் எடுத்தபிறகு, அதிகாரிகளை எல்லாம் அதிலே புகுத்தி, அவர்களுடைய அறிக்கையைப் பெற்று, அந்த நகராட்சிகளைக் கலைப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் இருந்தது. இதைத் தவிர்ப்பதற்காக இன்றையதினம் திருத்தங்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இதை வரவேற்க வேண்டும். குறிப்பாக இந்த நகராட்சிக்கு அப்பீல் கமிட்டி இருந்தது. இந்த அப்பீல் கமிட்டியை மறுமுறையும் புதுப்பிக்கின்ற வகையிலே இன்றைய தினம் திருத்தத்தின் மூலம் கொண்டு வந்திருக்கிறார்கள். நகராட்சி மன்றத்திலே இருக்கிற தலைவர்கள், துணைத் தலைவர்கள், அதிலே இருக்கிற உறுப்பினர்களுக்குப் போதுமான அதிகாரம் வழங்கப்பட வேண்டும். அவர்கள் அதிலே கருத்தாக இருக்க வேண்டும், அதிகார வர்க்கத்திலே இருப்பவர்களுக்கு நகராட்சிகளிலே இருக்கிற நிலைமை நன்கு புரிந்து, அதைச் செயல்படுத்துவதற்கு முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டால், அதைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காக இந்தத் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு இருக்கின்றன. இந்தத் திருத்தங்களை முழுமையாக நான் வரவேற்று நல்லமுறையில், உடனடியாக இந்தத் திருத்தங்களை அமுல்செய்வதற்கு அரசு முன் வரவேண்டும் என்று கேட்டு முடிக்கிறேன், வணக்கம்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(நண்பகல் 12–00)

திரு. ஆர். அண்ணாநம்பி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்திருத்தத்தின் மூலமாக, இதிலே ஒரு பகுதியிலேயிருந்து, அறிஞர் அண்ணாவினுடைய லட்சியத்திலே இருந்து இந்த அரசு பின்னோக்கிச் செல்கிறது என்பது புரிகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் 67–ல் ஆட்சிபீடம் ஏறுவதற்கு முன்னாலே ஒரு கருத்தைச் சொன்னார்கள். தவறு செய்கின்ற தலைவர்கள் அல்லது மன்ற உறுப்பினர்கள் மீது

நடவடிக்கை எடுக்கின்ற வகையில், அவர்கள் தவறு செய்வார்களேயானால் அவர்களைத் திரும்பப் பெறுகின்ற சட்டத்தை அரசு உருவாக்க வேண்டும் என்பதை பேரறிஞர் அண்ணா அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். அதேபோல தன்னுடைய ஆட்சியில் முன்னாள் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் ஒரு சட்டத்தை அறிஞர் அண்ணாவினுடைய சொல்லை ஏற்று உருவாக்கினார்கள்.

ஒரு நகராட்சி மன்ற உறுப்பினர்களானாலும், நகர மன்றத் தலைவர் ஆனாலும் அவர்கள் தவறு செய்வார்களேயானால் அவர்களைத் திரும்பப் பெறுகின்ற அந்த உரிமையை அந்தச் சட்டத்தை புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் கொண்டு வந்தார்கள் என்பதை இந்த மாமன்றத்திலே நினைவு படுத்த விரும்புகிறேன். அந்த வகையிலே அறிஞர் அண்ணாவினுடைய லட்சியத்திலேயிருந்து இந்த அரசு இன்றைக்கு பிறழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். அதேபோல புரட்சித் தலைவர் எம்.ஜி ஆர். அவர்கள் இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார்கள். தவறு செய்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களானாலும் நாடாளுமன்ற உறுப்பினர்களானாலும் அவர்களையும் திரும்பப்பெறுகின்ற சட்டத்தை மத்திய அரசு உருவாக்க வேண்டுமென்றும் அதனைத் தொடர்ந்து அவர்கள் வலியுறுத்தினார்கள் என்பதையும் நான் இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக பல்வேறு தவறுகள் நடைபெறுகின்றன. பல்வேறு பகுதிகளிலே நகராட்சி மன்றத் தலைவர்களானாலும், உறுப்பினர்களானாலும், அதேபோல் ஊராட்சியிலே உறுப்பினர்களானாலும் தவறுகள் செய்து வருகின்றவர்களை நாம் பார்க்கிறோம். இந்தத் தவறுகளையெல்லாம் கட்டுப்படுத்த வேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற மதிக்கக்கூடிய ஒரு மன்றத்தினுடைய தலைவர் அல்லது ஒரு நகராட்சி மன்றத்தினுடைய தலைவர் அல்லது நகர மன்ற உறுப்பினர்கள் அவர்கள் தவறு செய்யக்கூடாது என்ற அடிப்படையில், அவர்களுக்கு ஒரு அச்சத்தை ஊட்ட வேண்டும் என்ற வகையிலே தான் இந்தச் சட்டத்தை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்தார்கள். அவர்கள் தவறான வழியிலே போகக்கூடாது. ஊழலுக்கு தன்னை உட்படுத்திக் கொள்ளக் கூடாது என்ற வகையிலே தான் இந்தச் சட்டத்தை புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆர். அவர்கள் கொண்டு வந்தார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக இந்தச் சட்டத்தை நீங்கள் திரும்ப பெறுகின்ற வகையில், ஒரு மன்றத்தினுடைய

தலைவரானாலும், ஒரு மன்றத்தினுடைய உறுப்பினரானாலும் அவர்கள் தவறு செய்தால் என்ன, அவர்கள் எக்கேடு கெட்டுப் போனால் என்ன என்ற அடிப்படையில் நீங்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறீர்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால் என்னுடைய அவினாசி தொகுதியிலே ஒரு ஊராட்சி மன்றத் தலைவர் மக்களுக்காக கொடுக்கப்பட்ட ஒரு தொலைக்காட்சிப் பெட்டியை மக்களுக்காக ஊருக்குள் வைக்காமல் அந்தப் பெட்டியை அவர்கள் எடுத்துச் சென்று வீட்டிலே வைத்துக் கொண்டிருக்கிறார். நான் மக்கள் குறை கேட்கச் சென்றபோது இந்தக் குறை எனக்குத் தெரிந்தது. கோவை மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே இதுபற்றி புகார் கூட முந்தாநாள் கொடுத்து விட்டுத்தான் வந்திருக்கிறேன் என்பதை மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்கு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக இப்படிப்பட்ட தவறுகள் நீண்டுகொண்டே போகுமானால் அரசியலிலே தூய்மை இல்லாமல், அரசியலிலே மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பிரதிநிதிகளுக்கு ஒரு நல்ல வாய்ப்பு இல்லாமல், ஒரு நல்ல மரியாதை இல்லாமல் போய்விடும் என்ற காரணத்திற்காகத்தான் இந்தச் சட்டத்தை எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டுவந்தார்கள். ஆகையினால் அந்தச் சட்டத்தை ஏன் திரும்பப் பெறுகிறீர்கள் என்பது எனக்கு விளங்கவில்லை. தவறுகள் ஏற்பட வேண்டுமென்று நீங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறீர்களா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்னொன்று. இதேபோல் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் பூவராகன் அவர்களும் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். முந்தைய ஆட்சியில் சட்டங்கள் தடுமாறியது என்ற கருத்துக்களை இங்கே சொன்னார்கள். ஆனால் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்தபோது ஊராட்சி மன்றத் தலைவர்களானாலும், உறுப்பினர்களானாலும், நகர மன்றத் தலைவர்களானாலும், உறுப்பினர்களானாலும், அவர்களுக்கு 3 ஆண்டுகளுக்கு பதவி என்ற சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். இது ஏன் கொண்டு வந்தார்கள் என்று சொன்னால் இன்றைக்கு பதவி பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். பதவி எல்லோருக்கும் கிடைக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலேதான் புரட்சித் தலைவர் எம். ஜி, ஆர். அவர்கள் 3 ஆண்டுக் காலம் என்ற அந்த சட்டத்தைத் திருத்தினார்களே ஒழிய வேறு ஒன்றும் அல்ல. ஆனால் இன்றைக்கு அந்தச் சட்டத்தை நீங்கள் 5 ஆண்டுக்காலம் என்று உருவாக்கி இருக்கிறீர்கள். இதன் மூலம் நீங்கள் மிகப் பெரிய தவறைச் செய்து கொண்டிருக்கிறீர்கள். ஆக இந்தப் பதவி குறிப்பிட்ட எல்லைக்குள்ளே

இருக்க வேண்டுமென்று நீங்கள் கருதுகிறீர்கள். இன்றைக்கு குறிப்பாக தமிழகத்திலே ஊராட்சி மன்றமானாலும்—குறிப்பாக நகராட்சி மன்றங்களிலே அதிகமாக திராவிட முன்னேற்றக் கழகம்தான் சென்ற தேர்தலிலே வெற்றி கண்டிருக்கிறது. எனவே அந்தப் பதவிகள் அப்படியே இருக்க வேண்டும். 5 ஆண்டுக்காலம் இருக்க வேண்டும் என்ற ஆசையிலேதான் ஏக்கத்திலேதான் திராவிட முன்னேற்றக் கழக அரசு—நீங்கள் இன்றைக்கு 5 ஆண்டுக்காலமாக அதை உருவாக்கியிருக்கிறீர்கள். இது உங்களுடைய, உங்களைச் சார்ந்த அதிகப்படியான நகராட்சி மன்றத் தலைவர்களை, உறுப்பினர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற அடிப்படையிலேதான் நீங்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று என்னால் புரிந்து கொள்ள முடிகிறது.

திரு. கோ. விரையன் : துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பதவியிலே இருக்க வேண்டும் என்ற ஆசையிலேதான் 5 ஆண்டுக் காலம் ஆக்கியதாகவும், அதிகமான பேர்களுக்குப் பதவி கொடுப்பதற்காகத்தான் 3 ஆண்டுகள் ஆக்கியதாகவும் குறிப்பிட்டார்கள். அதிகமான பேர்களுக்கு பதவி கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அல்ல. அவர்களுடைய ஆட்சி கால எல்லைக்குள்ளே இந்த எல்லையைக் கொண்டு வர வேண்டும் என்பதற்காக எடுத்த எடுப்பிலே 3 ஆண்டுக் காலமாக மாற்றவில்லை. 5 ஆண்டை 4 ஆண்டாகக் குறைத்து ஒரு ஆண்டு சட்டத்தை நிறைவேற்றி, அடுத்த ஆண்டு வரும்போது 4 ஆண்டை 3 ஆண்டாகக் குறைத்து சட்டத்தை நிறைவேற்றிய வரலாறு எதற்காக என்பதை உறுப்பினர் விளக்குவாரா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எதற்காக இந்த வம்பெல்லாம் ?

திரு. ஆர். அண்ணாநம்பி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய கேள்வி அவருக்குத்தான் புரியும். ஆனால் என்னுடைய பதில் என்னவென்றால் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் அனைவருக்கும் பதவி பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலே தான் இந்த மூன்று ஆண்டு என்று குறைத்தார்களே ஒழிய வேறு ஒன்றும் இல்லை என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்

திரு. கே. ஆர். சுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரையன் அவர்கள் 1985ஆம் ஆண்டு ஊராட்சி மன்றத் தேர்தலைக் கொண்டு வருகின்ற நேரத்திலே அன்றைய அரசு 4 ஆண்டுக்காலமாக நிச்சயித்தார்கள். 1986லே தேர்தல் வரும்போது 3 ஆண்டாக

நிச்சயித்தார்கள். இதைத்தான் திரு. வீரையன் அவர்கள் சொன்னார்கள். அது அவருக்குத்தான் புரியும் என்று சொல்கிறார். இதற்கு முதலிலே, 4 ஆண்டு என்றும், பிறகு 3 ஆண்டுக்காலம் என்றும் கொண்டு வந்தார்களே இது எந்த நோக்கத்தோடு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்குவார்களா?

திரு. ஆர். அண்ணாநம்பி : துணைத் தலைவர் அவர்களே நான் 3 ஆண்டைப் பற்றித்தான் சொன்னேனே ஒழிய 4 ஆண்டைப் பற்றி நான் பேசவில்லை. ஆக 3 ஆண்டாக்கி அனைவருக்கும் வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலே புரட்சித் தலைவர் அவர்கள் அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் நீங்கள் பயப்படாமல் நகராட்சி மன்றத் தேர்தல் ஆனாலும் வேறு எந்தத் தேர்தல் ஆனாலும் உடனே நடத்துங்கள். ஏனென்றால் ஊருக்குள்ளே நாங்கள் போய் மக்கள் குறையைக் கேட்கச் செல்கின்றபோது.. (மணியடிக்கப்பெற்றது.)

திரு. இரா. மோகன், : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அ.இ.அ.தி.மு.க, உறுப்பினர் இங்கே பேசுகின்றபோது 5 ஆண்டை 3 ஆண்டு என்று கொண்டு வந்ததை நிறைய பேருக்கு அரசியலிலே முக்கியத்துவம் தர வேண்டும் என்பதற்கு என்று சொன்னார். இப்போது அவர்கள் தோழமை கொண்டிருக்கின்ற இந்திரா காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் நேற்றைக்குத்தான் அறிவித்திருக்கிறார்கள். பஞ்சாயத்துராஜ்-களுக்செல்லாம், பஞ்சாயத்துக்களுக்செல்லாம் பதவிக்காலம் 5 ஆண்டுக் காலம் என்ற ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வருவதாக அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அவர்களுடைய தோழமைக் கட்சி. இதற்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன சொல்லுகிறார்? அதே 5 ஆண்டுக்காலம் என்று இருக்க ஒத்துக்கொள்கிறாரா அல்லது 3 ஆண்டுக்காலம் என்று அதையும் சொல்லப் போகிறாரா.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் வராமல் பேசுங்களேன்,

திரு. ஆர். அண்ணாநம்பி : பேரவை துணைத் தலைவர் அவர்களே. வந்தால்தான் சுவையாக இருக்கும். தி.மு.க. உறுப்பினர் பேசுகின்றபோது திரு. ராஜீவ் காந்தி அவர்கள் 5 ஆண்டுகளாக கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொன்னார். திரு. ராஜீவ் காந்தி கொண்டு வந்திருக்கின்ற திட்டத்தை தோழமை உறவோடு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் ஏற்றுக் கொள்ளும் என்பதை இந்த சபைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே இறுதியாக தேர்தலைத் நடத்துவதற்கு பயப்படக் கூடாது. ஏனென்றால் மக்கள் குறையை நாங்கள் கேட்கச் செல்கின்றபோது ஒவ்வொரு வீதியிலேயும் வீதி விளக்கு எரியவில்லை என்று சொல்கிறார்கள். இது எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தெரியும். என் தொகுதியில் அதிகப்படியான குறையே இதுதான். இந்த விளக்கு எரிய வில்லை, தண்ணீர் ஊரில் வரவில்லை, என்பது தான், ஆகவே உடனடியாக தேர்தலை சந்தியுங்கள் என்று கேட்டு விடை பெறுகிறேன்.

(பிற்பகல் 12-10)

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, மக்களினுடைய பிரதிநிதிகள் இருந்து தங்களுடைய பொறுப்புக்களை நிறைவேற்றுகின்ற சபையில் அந்த மக்க ளினுடைய குறைகளை நிவர்த்தி செய்வதற்குரிய அதிகாரம் வேண்டும் என்பதற்காகத்தான் பல்வேறு முயற்சிகளிலே பாரதப் பிரதமரிலேயிருந்து ஜனநாயகத்திலே நம்பிக்கை உள்ள அனைவரும் ஈடுபட்டிருக்கின்றார்கள். இந்த மாமன்றத்திலே நாமும், அந்தந்தப் பகுதியிலே வாழுகிற மக்களினுடைய குறைகளைத் தீர்க்கின்ற வகையில், அந்தந்தப் பகுதியிலே தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்கள் தங்களுடைய பணிகளை ஆற்ற வேண்டும் என்று சொல்கிற காரணத்தினாலேதான், சட்டமன்றத்திலே இந்த விவாதத்தை நாம் வைக்கின்றோம்.

நம்முடைய கருத்து எல்லாம், ஏழைக் குடிமகன் ஒருவன் தன்னுடைய குறைகளைத் தீர்ப்பதற்கு தன்னுடைய பிரதிநிதிகளை மட்டும் நம்பினால் போதும் என்ற நிலை இருக்க வேண்டும் என்பதுதான். அன்றாடம் அவன் சந்திப்பதோ, அவனால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற ஒருவர்தான். அதுவும் நகராட்சி போன்றவைகளைப் பொறுத்தவரையிலே அவர்கள் வாழுகின்ற இடத்தில் இருக்கின்ற சுகாதாரம், அவர்கள் வாழுகின்ற இடத்தில் இருக்கின்ற தெரு விளக்கு, அவர்கள் வாழுகின்ற இடத்தில் இருக்கின்ற குடிதண்ணீர் போன்றவைகளைக் கவனிப்பதற்குரிய பொறுப்பு அவர்களுக்கு இருக்கின்ற காரணத்தினாலேதான் அது அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. அதனைக் குறிப்பிட்ட ஒரு காலத்திலே நிச்சயமாக தேர்தலை நடத்திவிட வேண்டும். அதைத் தள்ளிப் போடுவது கூடாது என்பதுதான் தற்போது எழுந்திருக்கின்ற புதிய சிந்தனையாக இருக்கின்றது. அந்தச் சிந்தனையினுடைய அடிப்படையிலே மாவட்டங்களிலே இருக்கின்ற நகராட்சிகளாக இருந்தாலும் சரி, மற்ற பகுதிகளிலே இருக்கின்ற உள்ளாட்சிகளாக இருந்தாலும் சரி, அந்தக் குறிப்பிட்ட காலத்திற்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதும்,

தேர்ந்தெடுக்கப்படுகின்றவர் மக்களுடைய பிரதிநிதியாக உண்மையிலேயே செயல்பட வேண்டும் என்றும், மக்களைச் சந்திப்பதற்குக் கூட கூசிக் கொண்டிருப்பவர்களோ, மக்களைச் சந்திப்பதனாலே குறைகள் தெரியக்கூடாது என்று இருக்கின்றவர்களோ அங்கே ஒரு முறைக்கு மேலே மறு முறை தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள். அந்த அளவிற்குத் தேர்தலிலே மக்களினுடைய விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்படவேண்டும் என்பதுதான் நோக்கமாக இருக்கிறது. ஆதலாலே, இந்தச் சட்ட மன்றத்திலே நாம் வைக்கின்ற விவாதங்கள் அனைத்தும், நாம் நிறைவேற்றுபவைகள் அனைத்தும் பொதுமக்களுக்குச் சேவை செய்வதற்கு நாம் இருக்கிறோம் என்று எடுத்துக் காட்டுவதாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான், இந்த உள்ளாட்சி மன்றங்களிலே செம்மையாக எல்லாம் நடைபெற வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம். ஆகையாலே இங்கு நேரத்தை நான் அதிகமாக எடுத்துக்கொள்ளக்கூடாது. ஒரே ஒரு வேண்டுகோளை மட்டும் தான் வைப்பேன். இந்தத் தேர்தல்கள் எல்லாம் ஒழுங்கான முறையிலே, செம்மையான முறையிலே குறிப்பிட்ட காலத்திலே நடைபெற வேண்டும் என்பதை நாம் அனைவரும் ஒத்துக்கொண்டு அதற்கேற்ப நமது ஒத்துழைப்பையும் தருவோம் என்கின்ற கருத்தைச் சொல்லி அமைகிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த திருத்தச் சட்டத்தை ஆதரித்து நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன் வந்திருக்கிறேன். இதில் குறிப்பிட்டுள்ள திருத்தத்தில் மூன்றாவது விதியில், "....and shall nominate a panel of not more than three members any one of whom shall perform the functions of the Chairman in the absence of both the Chairman and the Vice-Chairman,'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மூன்று உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை நியமிப்பதற்கான அதிகாரம் இதன் மூலம் வழங்கப்படுகிறது. ஆனால் அந்த மூன்று பேரிலே அடுத்து வருகிற அதே விதியின் துணை விதி 7 ஆவதிலே குறிப்பிடப்பட்டிருப்பது: "....when the Office of Chairman is vacant and there is either a vacancy in the Office of Vice-Chairman or the Vice-Chairman has been continuously absent from jurisdiction for more than fifteen days or is incapacitated, the Member nominated under sub-section 3 shall, until the Vice-Chairman returns......''

என்று குறிப்பிடுகிற இடத்திலே, 'மெம்பர்' என்று ஒருமையிலே குறிப்பிடப்படுகிறது. ஒரு குழுவிலே இருந்து ஒரு மெம்பர்தான் தலைவராகவோ, துணைத் தலைவராகவோ செயல்படுவார் என்று குறிப்பிடப்படும்போது முதலிலே குழுவை நியமிக்கிற அதிகாரம் இந்தப் பொது விதி–3-இலே கொடுக்கப்பட்டிருக் கிறது. இந்த 7 ஆவது துணை விதியிலே ஒரு 'மெம்பர்', அந்தக் குழுவிலே இருந்து ஒரு மெம்பர் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவார் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே, அந்தக் குழுவிலே மூன்று பேரிலே அல்லது மூன்று பேருக்குக் குறைவாக, இரண்டு பேராக இருந்தாலும் யார் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவார்கள், யார் அவர்களை குறிப் பிட்ட அந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்காக நியமனம் செய்வார்கள் என்பது விளக்கமாக இல்லை. ஒரு குழு என்று தான் முதலில் குறிப்பிட்டு இருக்கிறீர்களே தவிர, அடுத்து வருவதிலே ஒரு உறுப்பினர் என்று குறிப்பிடுகிறீர்கள். அந்த 3 பேரில் அல்லது 3-க்கு குறைவானவர்களிலே யார் அந்த உறுப்பினர், அந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவார். அவரை குறிப்பிட்டு யார் சொல்லுவார் என்பதை சொல்லி இருந்தால் குழப்பம் இல்லாமல் இருந்து இருக்கும். இதன் வாயிலாக குழுவை நியமித்து விடுகிறோம். ஆனால் அந்த உறுப்பினர் யார்? அந்த குழுவிலே இருக்கிற அந்த உறுப்பினர் யார் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவது என்பதற்கான தெளிவான விளக்கம் இல்லை. அதை கொஞ்சம் நீக்கி இருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று நான் கருதுகிறேன். அதை இப்படிக் கூடப்போட்டிருக்கலாம். The member who is nominated specifically by the nominating authority. யார் அவர்களை பேனல் நாமினேட் செய்கிறார்களோ அவர்களை இந்த பேனலில் உள்ள இந்த உறுப்பினர்தான் அந்த அதிகாரத்தை பயன்படுத்துவார் என்று அந்த சொற் றொடரையும் சேர்த்து இருந்தால் ஆம்பிக்யுட்டி, அதிலே சந்தேகம் இல்லாமல் இருந்திருக்கும். இல்லாவிட்டால் உறுப் பினர்களுக் இடையே யார் பயன்படுத்துவது என்பதற்கான ஒரு சந்தேகமும் அதனால் குழப்பமும் ஏற்படும். அதை நீக்குவதற்கு அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன். இந்த மசோதாவை நான் ஆதரித்து இந்த கருத்தை சொல்வதோடு மாண்புமிகு உறுப்பினர் திரு. அண்ணாநம்பி அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் கூட நான் செலுத்திக் கொள் கிறேன். ஏன் என்றால், பஞ்சாயத்துகள் தொடர்பாக 5 ஆண்டுகள் என்று ஒரு சட்டம் வரும் என்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் சொல்லியிருப்பதை . இந்த

அவை ஏற்றுக்கொள்கிறதா? அது அரசியலமைப்புச் சட்டத்திற்கு ஏற்புடையதா, இல்லையா என்பது வேறு பிரச்சினை. ஆனால் அதை திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொண்டால் தாங்களும் ஏற்றுக்கொள்வோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒருவேளை திராவிட முன்னேற்றக் கழகம் மறுத்து விட்டால், ஏற்க மறுத்து விட்டால் நாங்களும் மறுத்து விடுவோம் என்று அவர்கள் மறைமுகமாக சொல்லியிருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு நான் நன்றியை சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். என்னதான் இருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழகம் தான் தாய் சபை என்பதை ஏற்றுக்கொண்டு அது காட்டுகின்ற வழியிலே தான் நாங்கள் செல்வோம் என்று திரு. அண்ணாநம்பி அவர்கள் அழகாக குறிப்பிட்டதற்கு அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மசோதாவை ஆதரித்து அமர்கிறேன்.

திரு. ஆர். அண்ணாநம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுபினர் திரு அப்துல் லத்தீப் அவர்கள் குறிப்பிடுகிறபோது திரு. ராஜீவ் காந்தி அவர்கள் கொண்டு வருகிற திட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொண்டால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக் கொள்வோம் என்றும், நாங்கள் மறுத்துவிட்டால் அவர்களும் மறுத்து விடுவார்கள் என்றும், நல்லவேளை திராவிட முன்னேற்றக் கழகத்தோடு ஒட்டி வருகிறோம் என்றும் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் மறுத்தாலும், மறுக்காவிட்டாலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் திரு. ராஜீவ் காந்தியினுடைய காங்கிரஸ் கட்சி எங்களுடைய தோழமைக் கட்சி. அந்தக் கட்சி கொண்டுவருகிற அந்தத் தீர்மானங்களை நாங்கள் ஏற்போம் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கக்கூடிய 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திலும் சரி, 1958 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட பஞ்சாயத்துக்கள் சட்டத்திலும் சரி, 5 ஆண்டுகள் என்று அதிலே வரையறுக்கப்பட்டு இருக்கிறது. புதிதாக யாரும் கொண்டுவரவேண்டிய அவசியம் இல்லை என்ற விளக்கத்தை நான் கொடுக்க விரும்புகிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டத்தில் இருந்தாலும் அந்த சட்டம் பின்பற்றப்படவில்லை என்பதற்குப் பல சான்றுகள் இருக்கின்றன. அது பின்பற்றப்படவேண்டும் என்பதற்காகத்தான் அரசியலமைப்பிலேயே அது இயற்றப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர் திரு அண்ணாநம்பி அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்தாலும், ஆதரித்தாலும் எங்களைப் பொறுத்தவரையில் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் கொண்டு வரக்கூடிய அந்த உள்ளாட்சி அமைப்புகளுடைய சட்டத் திருத்தத்தை நாங்கள் ஏற்றுக்கொள்வோம் என்று தமிழ்நாட்டு மக்களுக்கு அவர்களுடைய நிலையை விளக்கியதற்கு நான் நன்றி கூறுகிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'தங்களுடைய கட்சியிலே வரையறுக்கப் படவேண்டிய கொள்கைகளைப் பற்றி கவலை இல்லை; திரு. ராஜீவ் காந்தி எதைக் கொண்டு வந்தாலும் அதை நாங்கள் ஆதரிப்போம், திராவிட முன்னேற்றக் கழகம் இப்போது 5 ஆண்டுகள் என்று கொண்டு வந்திருப்பதை எதிர்ப்போம்; ஆனால் அதையே திரு. ராஜீவ் காந்தி அவர்கள் கொண்டு வந்தால் ஆதரிப்போம்; எங்களுக்கு என்று ஒரு தனிக் கொள்கை இல்லை' என்று வெளிப்படையாகச் சொன்னதற்கு நன்றி. (கைத்தட்டல்).

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தோழமைக் கட்சியான காங்கிரஸ் கட்சியும், திரு. ராஜீவ் காந்தியும் எந்தச் சட்டம் கொண்டு வந்தாலும் ஆதரிப்போம் என்று சொல்கிறார்கள்.

(பிற்பகல் 12-20)

மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற உள்ளாட்சி அமைப்புகளை மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஆளுநர் கலைப்பதற்கு அதிகாரம் கொடுப்பதையும் அவர்கள் கட்சி சார்பிலே ஆதரிக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ஒழுங்குப் பிரச்சினையில் வராது.

திரு. ஆர். அண்ணாநம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே கொண்டு வருகின்ற எல்லாத் திட்டங்களையும் நாங்கள் எந்தக் காரணமும் சொல்லாமல் ஏற்றுக்கொள்வோம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் சொன்னார்கள். மக்களுக்காக, நல்ல திட்டங்களாக உருவாக்கப் படுவதால்தான் நாங்கள் ராஜீவ் காந்தி அவர்கள் கொண்டு வருகின்ற திட்டங்களை ஆதரிக்கிறோம் என்பதை இந்த

அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்திலே எங்களுக்கு என்று ஒரு கொள்கை உண்டு. கொள்கை வேறுபாடு வருகின்றபோது.....(மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் சொன்னதிலே ஏதாவது ஒழுங்குப் பிரச்சினை இருக்கிறதா? உங்கள் நிலைமை என்னவென்று அவர் கேட்கவில்லை (குறுக்கீடு) அது ஒழுங்குப் பிரச்சினையிலே எப்படி வரும்? 'Point of order' என்று நீங்கள் கேட்டீர்கள். உங்களுக்கு அனுமதி வழங்குகிறேன்; சீக்கிரம் முடியுங்கள்.

திரு. ஆர். அண்ணாநம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் நான் அப்படித்தான் கேட்டேன். தாங்கள் வருவதற்கு முன்னாலே, அவர் அப்படிக் கேட்டார், அதற்காகச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி.

திரு. ஆர். அண்ணாநம்பி: காங்கிரசும் அவர்களுடைய கொள்கையை விட்டுக் கொடுக்காது. நாங்களும் எங்களுடைய கொள்கையை விட்டுக் கொடுக்க மாட்டோம். அதே நேரத்திலே தோழமை உணர்வோடு, மக்களுக்காகக் கொண்டு வருகின்ற திட்டம் என்கின்ற காரணத்தினாலேதான் நாங்கள் ஆதரிக்கிறோம்.

திரு. எம். அப்துல் லத்தீப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்காகக் கொண்டு வருகின்ற எல்லாத் திட்டங்களையும் நாங்கள் ஆதரிப்போம் என்று சொல்லியிருக்கிறார். மக்களுடைய நன்மையைக் கருதி இப்போது 5 ஆண்டுகளாக பஞ்சாயத்துக்கள், உள்ளாட்சி அமைப்புகளுடைய ஆயுள் இருக்க வேண்டுமென்று மாண்புமிகு ராஜீவ் காந்தி கருதுகிறார். திராவிட முன்னேற்றக் கழகமும் அதைத்தான் சொல்கிறது. எனவே அதை ஆதரிக்கிறேன் என்று மறைமுகமாகவாவது சொன்னதற்காக நன்றி.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் ஆய்வுக்கு இப்போது எடுத்துக்கொள்ளப்பட்டு, இந்தப் பிரச்சினை மீது மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தராஜன் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் அதனுடைய தோழமைக் கட்சியின் சார்பாக தேர்தல் நேரத்திலே தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றக்கூடிய வகையில் மதிக்கத்தக்க

[திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்.] [1989 மே 11

அதிகாரங்கள் மீண்டும் கழக ஆட்சியில் வழங்கப்படுகிறது என்ற பாராட்டுதலைத் தெரிவித்ததற்காக அரசின் சார்பில் நான் நன்றியினைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் நகரமன்றத் தலைவராக இருக்கக்கூடிய காரணத்தினால் பல்வேறு பிரச்சினைகளை விரிவாக அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அதில் 40–சி-யிலுள்ள உட்பிரிவுகள் மொத்தம் 1-லிருந்து 7-வரைதான். ஆங்கில மொழி முன் முடிவில் குறிப்பிடப்பட்ட தனி சட்ட முன்வடிவு 40 சி, உட்பிரிவு 1-லிருந்து 7 என்பதையே குறிக்கும் என்பதை நான் இங்கே தெரியப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த ஆட்சி உள்ளாட்சி அமைப்புகளுக்கு கடந்த ஆட்சிக் காலத்திலே பறிக்கப்பட்ட அதிகாரங்களெல்லாம் வழங்கப்படுகின்ற பொழுது ஒரு மாநில அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டுக்குள்ளே இருக்கக்கூடிய உள்ளாட்சி அமைப்புகளுடைய அதிகாரங்கள் மத்திய சர்க்காரால் பறிக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதையும் மாநிலத்திற்கு உரிமை வேண்டுமென்று போராடக் கூடிய இந்த காலத்தில் இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது என்ற வருத்தத்தையும் இங்கே குறிப்பிட்டுப் பேசினார்கள்.

இந்த அரசைப் பொறுத்தவரை தெளிவாகத் திட்டவட்டமாக இருக்கிறது. இந்தியப் பிரதமர் அவர்கள் மத்தியில் புதிதாக அரசியல் சட்டத்தைத் திருத்துவது சம்பந்தமாக உள்ளாட்சி அமைப்புகளினிடையே அதிகாரங்களை அதிகரிப்பது சம்பந்தமாக கூட்டப்பட்ட அந்த மாநாட்டில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இந்த ஆட்சியின் சார்பாக மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களைக் கலந்து கொள்ளச் செய்தார்கள். அந்த மாநாட்டில் நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் எடுத்து வைத்த கருத்துக்கள் செய்தித் தாள்களிலே வந்திருப்பதை இந்த மன்றத்திலே இருக்கக்கூடிய உறுப்பினர்கள் எல்லோரும் நன்கு அறிவார்கள்.

மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும என்று இந்திய அளவில் பெரும்பான்மையான கருத்துக்கள் நிலவக்கூடிய இந்தக் காலக்கட்டத்தில் ஒரு மாநில அரசின் கட்டுப்பாட்டுக்குள்ளே இருந்து நாட்டு மக்களுக்கு தங்களுடைய கடமைகளை ஆற்றக்கூடியவை ஊராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியக் குழு, நகராட்சி மன்றங்கள், மாநகராட்சிகள் ஆகியவையாகும். இவைகளை அரசியல் சட்டத்தின் துணை கொண்டு நேரடியாக மத்திய சர்க்கார் . அவர்களே தேர்தலை நடத்துவது, தேர்தல் கமிஷனுக்கு அந்த அதிகாரங்களை வழங்குது; இன்னும் சொல்லப் போனால் மத்திய சர்க்கார்

ஒதுக்குகிற நிதியோடு மாநில அரசும் சேர்ந்து நிதியினை ஒதுக்கி கிராமப் புறங்களில் இருக்கின்ற மக்களுக்கு பல்வேறு வசதிகளைச் செய்து கொடுக்கின்ற நடவடிக்கையை நாம் எடுக்கிறபோது, இப்போது நேரடியாகவே அந்த நிதியை உள்ளாட்சி அமைப்புக்களுக்கு வழங்குவோம் என்று சொல்வது மாநில அரசினுடைய உரிமையைப் பறிக்கிற செயலாகும். இப்படிப்பட்ட வகைகளில் அரசியல் சட்டம் திருத்தப்பட்டாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையாக அவற்றை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்பதை மட்டும் இங்கே நான் தெரியப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அடுத்து துப்புரவுப் பணியாளர்களைப் பற்றி ஒன்று சொன்னார்கள். இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற குறுகிய காலத்திற்குள்ளாகவே நகராட்சி மன்றங்களுக்கும், உள்ளாட்சி மன்றங்களுக்கும் எவ்வளவோ அதிகாரங்களை வழங்குகிற வகையில் ஒவ்வொரு நாளும் புதிய புதிய ஜி. ஓ.க்களைப் போட்டு நாங்கள் அனுப்பிக்கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். ஆகவே துப்புரவுப் பணியாளர்களை எல்லாம் கூட நியமித்துக்கொள்வதற்கு அவர்கள் இன்று சுட்டிக்காட்டியதைப்போல் அந்த 'நார்ம்ஸ்' அடிப்படையில் நகராட்சிக்கே அதிகாரம் வழங்கக்கூடிய வகையில் விரைவில் உத்தரவு வழங்கப்பட இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்கள் ஒன்றைக் கூறினார்கள். ஏற்கனவே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சித் தலைவர்கள் மீது அவர்களுடைய நடவடிக்கை சரியில்லை என்று சொன்னால், நிர்வாகத்தில் கோளாறு என்று சொன்னால், மக்களுக்கு சரியாகக் கடமையை ஆற்றவில்லை என்று சொன்னால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றுவதற்கு இந்தச் சட்டத்திலே வாய்ப்பு இருக்கிறது. 41 சி என்ற அந்தப் பிரிவின்கீழ் 'ஃபினான்ஷியல் கமிட்மென்ட்' என்ற அடிப்படையிலேயே அந்தக் காரணத்தைக் கொண்டே கலைக்கலாம் என்று இருக்கிறது. எனவே ஏற்கனவே இருக்கிற விதியின் அடிப்படையில் நகராட்சித் தலைவர் நன்கு செயல்படாவிட்டால் நடவடிக்கை எடுக்க முடியும் என்றிருக்கிறபோது இப்போது புதிதாகக்கொண்டுவரத் தேவையில்லை என்று சொல்லி நாம் கைவிடுகிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. அண்ணா நம்பி அவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைத் திரும்ப அழைக்க இதுபோல் சட்டங்கள் இயற்றப்படவேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைத்தான் எங்களுடைய தலைவர் புரட்சித் தலைவர் செய்தார் என்று இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

[திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்] [1989 மே 11

(பிற்பகல் 12-30)

அண்ணாவை மறக்காமல் இங்கே நினைவுபடுத்தியதற்கு நன்றி. ஆனால் அண்ணா அவர்கள் இதைப்போன்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொல்லவில்லை. அண்ணா 1958-வது ஆண்டு உள்ளாட்சி சட்டங்கள் இயற்றப்பட்டபோது, உள்ளாட்சி அமைப்பை ஜனநாயகத் தொட்டில், உள்ளாட்சி மன்றங்களுக்கு நிரம்ப அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்பதை எடுத்துச் சொல்லி இதே மன்றத்தில் பேசியிருக்கிறார்கள்.

அண்ணா சொன்னது, நம்மை போல பேரவையிலே தமிழ்நாட்டை ஆளுவதற்கு சட்டமன்றத்திலே பெரும்பான்மை யினராக வந்து ஆட்சியிலே இருக்கக்கூடியவர்கள் அல்லது சட்ட மன்ற உறுப்பினர்கள் அதே போல நாடாளுமன்றத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடியவர்கள் மக்களுக்கு தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் தவறுவார்களானால், அவர்களை திரும்ப அழைக்கின்ற அதிகாரம் வேண்டும் என்ற அந்த அடிப்படையிலேதான் சொன்னார்களே தவிர, உள்ளாட்சி அமைப்புகளுக்கு என்று அண்ணா அவர்கள் சொல்லவில்லை. அவர் அதை எடுத்துக் கொண்டு ஊராட்சி மன்றத்திற்கு, ஊராட்சி ஒன்றியக் குழுவிற்கு, நகராட்சி மன்றத்திற்கு, மாநகராட்சிக்கு என்று அதைத்தான் நாங்கள் செய்தோம் என்று சொல்வது, தலையை விட்டுவிட்டு, வாலை, தும்பைப் பிடிப்பதுபோல இருக்கின்றது என்பதை நான் நினைவுபடுத்து கிறேன்.

ஒன்றைச் சொன்னார்கள். ஏதோ தொலைக்காட்சி பெட்டி, நாங்கள் மக்கள் குறை கேட்க போனபோது, ஏதோ தலைவர் அவர்களுடைய வீட்டிலே இருந்தது, ஆகவே இதை எல்லாம் கட்டுப்படுத்துகிற அதிகாரம் வேண்டாமா என்று சொன்னார் கள். மாநில அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள்ளே இருக்கும் போதே இந்த நிலை என்று சொன்னால், அவர் சொன்னதைப் போல, மத்திய சர்க்காருடைய கட்டுப்பாட்டுக்குள்ளே இது வந்துவிட்டால் தொலைக்காட்சி பெட்டியும் இருக்காது, ஊராட்சி மன்றமும் இருக்காது, என்னென்னவோ நடைமுறை யிலே நடக்கும். ஆகவே நம் கைவிட்டே போய்விடும் என்பதை அவர்கள் நினைத்துப் பார்க்கவேண்டும் என்று இந்த நேரத்திலே தெளிவுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் குறிப்பிட்ட காலத்திலே தேர்தல் நடத்தவேண்டும் என்ற நல்ல கருத்துக்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள். இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில் அதிலே எந்தவிதமான கருத்து மாறுபாடும் இல்லை. இதுபோன்று ஊராட்சி மன்றங்கள்.

1989 மே 11] [திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்]

ஊராட்சி ஒன்றியத்திற்கு, கராட்சிக்கு, மாநகராட்சிக்கு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்பதுதான் இந்த ஆட்சியினுடைய கொள்கை. ஆனால் சில நேரங்களில், சில சூழ்நிலைகளையொட்டி, 6 மாத காலமோ 3 மாத காலமோ நாம் தள்ளி வைக்கிறோம். இப்போதுகூட மத்திய சர்க்கார் அரசியல் சட்ட அடிப்படையிலே எப்படி சட்டம் கொண்டு வரப்போகிறது, அரசியல் சட்டத்திலே இயற்றப்போகிறார்களா என்று நமக்குத் தெரியாது. பத்திரிகையிலே வருகின்ற செய்தியைப் பார்த்தால், 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை கட்டாயம் தேர்தல் நடத்தப்படவேண்டும், ஒரு வேளை சில உள்ளாட்சி அமைப்புகள் செயல்படாவிட்டால் அதை கவர்னரே கலைத்துவிடலாம். நடவடிக்கை எடுத்துக் கலைத்துவிடலாம். கலைத்துவிட்டு, 6 மாதத்திற்குள் தேர்தல் நடத்த வேண்டும். அப்படி 6 மாதத்திற்குள் தேர்தல் நடத்தும் சூழ்நிலை வராவிட்டால், மேலும் 3 மாதகாலம் நீடிக்கலாம் என்று பில், பாராளுமன்றத்திலே வருவதாக பத்திரிகைக் குறிப்பு வருகிறது. அப்படியானால் 9 மாத காலம் அதை மேலும்கூட நீடிக்கலாம். ஆகவே 5 ஆண்டுகளுக்குள்ளே தேர்தல், ஒரு மாநில அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறபோது இது போன்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கு நடத்த முடியாத சில சூழ்நிலை ஏற்படுகின்றபோது, இந்தியா முழுவதிலும் இருக்கக் கூடிய ஊராட்சி மன்றங்களுக்கு வார்டுகளாகப் பிரிக்கப் பட்டிருக்கின்ற நிலையில் அந்த உறுப்பினர்கள் தேர்வு, பிறகு ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர் தேர்வு, மாநகராட்சிக்குள்ளே வார்டு அமைப்பு, தேர்வுகள் இவைகளையெல்லாம் மத்திய அரசு கமிஷன்தான் நடத்துவது என்று சொன்னால் எவ்வளவு பெரிய சங்கடத்திற்கு பின்னர் மத்திய தேர்தல் கமிஷன் ஆளாகும் என்று இப்போது அரசியல் சட்டத்தைத் திருத்தி மாநில அரசாங்க அதிகாரத்தை பறித்துக்கொள்ள நினைக்கின்றவர்கள் யோசித்துப்பார்க்கவேண்டும் என்பதுதான் இந்த ஆட்சியினுடைய வேண்டுகோளே தவிர வேறல்ல. ஏதோ நலது செய்வதை வேண்டாமென்று, அரசியல் நோக்கத்தோடு நாங்கள் மூர்க்கத்தனமாக எதையும் எதிர்க்கிறோமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் எடுத்துக் கொள்ள மாட்டார்கள் என்பதை நான் இங்கே தெரியப்படுத்த விரும்புகிறேன்.

அடுத்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். தலைவர், துணைத் தலைவர் இல்லாத காலத்தில், 3 உறுப்பினர்கள் தேர்வு செய்தால், அந்த 3 உறுப்பினர்களிலே யார், அந்த இரண்டு பேரும் இல்லாத காலத்திலே பொறுப்புகளை வகிப்பார்கள் என்று இதிலே தெளிவாக இல்லை என்று சொன்னார்கள். அந்த ஐயப்பாடு வருவதற்கு நியாயம் உண்டு.

ஆனால், நாம் விதிமுறைகளை வகுத்து அனுப்புகிறபோது, டைரக்ஷன் தருகிறபோது, அவர்களை 1, 2, 3 என்றுதான் வரிசைப்படி தேர்ந்தெடுப்பார்கள். தலைவர் இல்லாத நேரத்தில் துணைத் தலைவர், தேர்தல் நடக்கும் வரையில் அவர் பொறுப்புகளை வகிப்பார். அவரும் இல்லாத நேரத்தில் அல்லது செயல்பட முடியாத நிலை ஏற்படும்போது, இந்த 3 பேரில், அந்த நகர மன்றத்தாலே தேர்ந்தெடுக்கப்படக்கூடிய வர்களில் முதல் வரிசையில் இருக்கிறவருக்கு அந்த வாய்ப்பு தரப்படும். அவர், தலைவர் தேர்தல், துணைத் தலைவர் தேர்தல் அல்லது மற்ற தேர்தல்கள் நடக்கும் வரையில் அந்தப் பொறுப்புகளை வகிப்பார் என்றுதான் விதிமுறைகளை வகுத்து, பின்னாலே அனுப்பப்படுமென்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், பிரிவு 8-ன்படி நகர்மன்றத் தலைவர், நகர் மன்ற உறுப்பினர்கள் யாரும் பொதுத் தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப் படாவிட்டால், புதிய தேர்தல் நடக்கும்வரையில் என்று இருந்ததை, 87 ஆம் ஆண்டு சட்டப் பிரிவு 9(2)(ஏ)-ன்படி பொதுத் தேர்தலின்போது நகர மன்றத் தலைவர் யாரும் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால், நகர மன்றம் சில உறுப்பினர் களைக் கொண்ட பட்டியலை நகராட்சி இயக்குநர் மூலம் அரசுக்கு அனுப்பும். அவர்களில் ஒருவர் நகர் மன்றத் தலைவராக 3 மாதங்களுக்கு அல்லது புதிய தலைவர் தேர்ந் தெடுக்கப்படும்வரை அரசால் நியமனம் செய்யப்படுவார் என்பதைத்தான் நாம் இப்போது நீக்குகிறோம். தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், பிரிவு 12(3)-ன்படி நகரமன்ற உறுப்பினர்கள், அவர்களில் இருந்தே, ஒருவரைத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள். புதிய திருத்தம்—புதிய துணைத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் அதே கால கட்டத்தில் நகர மன்றம் 3 நகர மன்ற உறுப்பினர்கள் கொண்ட பட்டியலைத் தயார் செய்யும். துணைத் தலைவரைத் தேர்ந் தெடுக்கும்போதே தயார் செய்யும். அவர்களில் ஒருவர் நகர மன்றத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் இல்லாதபோது தலைவரின் பணிகளைக் கவனித்து வருவார். இந்தப் புதிய மாற்றத்தைச் செய்யும் பொருட்டு, முன்பிருந்த பிரிவு 9(2)(ஏ) தற்போது நீக்கப்படுகிறது.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், பிரிவு 12(6)-ன்படி நகர மன்றத் தலைவர் பதவி காலியாக இருக்குமானால், புதிய தலைவர் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும்வரை அவரின் பணிகளைத் துணைத் தலைவர் கவனித்து வருவார் என்று இருந்ததை மாற்றி, நகர மன்றத் தலைவர் பதவி காலியாக இருக்கும்வரையில் அவர்களின் பணிகளைச் செய்வதற்கு புதிய

தலைவர் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும்வரை அரசு ஒருவரை நியமனம் செய்யும் என்று இடையிலே மாற்றப்பட்டது. முன்பு இருந்ததை மாற்றினார்கள். அவ்வாறு நியமனம் செய்யும்வரை துணைத் தலைவர் அந்தப் பணிகளைச் செய்துவருவார் என்று இருந்தது. அதைத்தான் தற்போது மாற்றி, தலைவருடைய பதவி காலியாக இருக்கும்போது, துணைத் தலைவர் புதிய தலைவர் தேர்ந்தெடுக்கும்வரை அவருடைய பணிகளைச் செய்வார் என்று புதிய திருத்தத்தை நாம் இப்போது கொண்டு வருகிறோம்.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், பிரிவு 12(7)-ன்படி நகர மன்றத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் பதவி இரண்டும் காலியாக இருக்குமானால், கோட்டாட்சித் தலைவர் அவர்கள் நகர மன்றத் தலைவர் பணிகளை ஆற்றி வருவார் என்று இருக்கிறது. புதிய நகர மன்றத் தலைவரைத் தேர்ந் தெடுக்க தக்க நடவடிக்கைகளை அவர்தான் எடுக்க வேண்டும். அதையும் மாற்றி, 78-ல் கோட்டாட்சித் தலைவருக்குப் பதி ாக மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் நகர மன்றத் தலைவர் பணியை ஏற்று நடத்தி வருவார் என்றும் மாற்றப்பட்டது. நகர மன்றத் தலைவர் 3 மாதங்கள் நகரில் இல்லாமல் இருந்தாலோ அல்லது செயல்பட முடியாத நிலையில் இருந்தாலோ, மாநில அரசு தலைவர் பணிகளை ஆற்ற ஒருவரை நியமனம் செய்யும் என்று போடப்பட்டது.

(பிற்பகல் 12-40)

இதைத்தான் இப்போது மாற்றி, நகராட்சி மன்றத் தலைவர் பதவி காலியாக இருந்து, துணைத் தலைவர் பதவியும் காலியாக இருந்தால் அல்லது துணைத் தலைவர் தொடர்ந்து 15 நாட்களுக்கு மேல் இல்லாமல் இருந்தால் அல்லது செயலற்று இருந்தாலும், மாநில அரசால் நியமனம் செய்யப்பட்ட ஒருவர் அந்தப் பணிகளை ஆற்றுவார் என்று போட்டிருந்தது. அதற்கு அதிகாரிகளைப் போடலாம் என்று கொண்டு வந்தார்கள். மாநில அரசு அவ்வாறு ஒருவரை நியமனம் செய்யும்வரை அல்லது துணைத் தலைவர், நகர மன்றத்திற்குத் திரும்ப வரும் வரை அல்லது உடல் நலம் தேறி வரும்வரையில் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் அலுவல் சார்பற்ற நகர் மன்ற உறுப்பினர் மற்றும் நகர் மன்றத் தலைவராகப் பணி யாற்றுவார் என்று இருந்தது. இதை இப்போது நாம் மாற்று கிறோம். இந்தப் பிரிவு நீக்கப்பட உள்ளது. ஏனென்றால் நகர மன்றத் தலைவர் பதவி காலியாக இருக்குமானால் துணைத் தலைவர் அவர்கள் பணிகளை ஆற்றுவார். மேலும் 3 உறுப் பினர்களை நகர மன்றம் நியமனம் செய்து தலைவர் மற்றும் துணைத் தலைவர் இல்லாத காலத்தில், 3 நபர்களில் ஒருவர் பொறுப்பு வகிப்பார்.

1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், பிரிவு 23-ன்படி வரி மேல் முறையீட்டுக் குழு, நகராட்சிகளுக்குக் கிடைக்கப்பெறும் வரி மேல் முறையீட்டு மனுக்கள் யாவும் நகர மன்றத்தால் பரிசீலிக்கப்பட்டு முடிவெடுக்கப்படும். இது முன்பு இருந்தது. நகர மன்றத்திற்கு உதவியாக நகர மன்ற மனுக்களைப் பரிசீலிக்க ஒரு குழு ஒன்றையும் அமைத்துக்கொள்ளலாம் என்பது முன்பிருந்த சட்டம். இந்தக் குழுவின் முடிவு நகர மன்றத்தின் முடிவுக்கு உட்பட்டதாகும். இது டேக்சஸ் அப்பீல் கமிட்டி.

1987 ஆம் ஆண்டு பிரிவு 23-ஏ ஆக கீழ்க்கண்டவாறு மாற்றப் பட்டது. வரி மேல் முறையீட்டு மனுக்கள் யாவும் கீழ்க்கண்ட குழுவினரால் பரிசீலித்து முடிவு செய்யப்படும். 23-ஏ புதிதாகக் கொண்டுவந்து மாவட்ட வருவாய் அலுவலர்--சிறப்பு தேர்வு நிலை நகராட்சிக்கு—அவர் தலைவராக இருப்பார். உறுப்பினர்களாக பொதுப்பணித்துறை உதவிப் பொறியாளர், நகர மன்றத் தலைவர் மற்றும் நகர மன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இருவர் என்று இருந்தது.

இதனை இப்போது நாம் மாற்றி, நகர மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள் நால்வரும் மற்றும் நகர மன்றத் தலைவரைத் தலைவராகக் கொண்ட பொது மேல் முறையீட்டுக் குழு மனுக்களைப் பரிசீலிக்கும் என்று நகர மன்றத்திற்கே நாம் முழுமையான அதிகாரத்தை இப்போது வழங்குகிறோம்.

1978 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத் திருத்தம் 40பி-யின்படி ஏற்கனவே நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு நமக்கு உரிமை இருக்கிறது.

1987 ஆம் ஆண்டு 40-சி என்று புதிய பிரிவு கீழ்க்கண்டவாறு இயற்றப்பட்டது. இதன்படி வாக்காளர்களில் 25 விழுக்காடுக்குக் குறைவில்லாதவர்கள் கையொப்பமிட்டுக் கொடுத்தால் சில நடைமுறைகளுக்கு உட்பட்டு, நகர மன்றத் தலைவரையோ நகர மன்ற உறுப்பினரையோ பதவியிலிருந்து திரும்ப அழைக்க வழிவகை செய்யப்பட்டது. புதிய திருத்தத்தில் இந்த முறை அடியோடு கைவிடப்படுகிறது.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப்பிரிவு 41-ன்படி நகர மன்றத்தைக் கீழ்க்கண்ட காரணத்திற்காக சில நடைமுறைகளுக்கு உட்பட்டு கலைப்பதற்கான வழி முறைகள் இருந்தன. நகர மன்றம் தான் ஆற்ற வேண்டிய கடமைகளைச் செய்யாவிட்டாலும் அல்லது ஆற்றத் தகுதியற்றதாகிவிட்டாலும் அல்லது ஆற்ற வேண்டிய கடமைகளில் தொடர்ந்து தவறு

இழைத்து வருமானால் அல்லது நகர மன்றத்தினுடைய அதிகாரங்களை மீறுவது அல்லது தவறாகப் பயன்படுத்துவது ஆகிய காரணங்களுக்காகக் கலைப்பது என்பது 41-ன்படி நமக்கு இருக்கிற அதிகாரமாகும்.

ஆனால் 1987-ல் இந்தக் காரணங்களுடன் நகராட்சியின் நிதி நிலைமை அச்சுறுத்தும் நிலையில் இருக்கிறது என்று மாநில அரசு நினைக்குமானால் நகர மன்றத்தைக் கலைக்கலாம் என்றும் சேர்க்கப்பட்டது. இதைத்தான் அண்ணா நம்பி அவர்கள் பேசும்போது ஏதோ தவறு செய்பவர்களை ஊக்குவிப்பதுபோல் அல்லவா இது இருக்கிறது, ஆகவே இதை நீக்குவது கூடாது என்று சொன்னார்கள். இது நடைமுறைக்கு ஒத்துவராத ஒன்று ஏனென்றால் மொத்த வாக்காளர்களில் ஒரு 25 சதவீத வாக்காளர்களிடம் கையெழுத்து வாங்கி மேலதிகாரிகளிடம் கொடுத்து, அவர்கள் அந்தக் கையெழுத்துக்களை எல்லாம் சரிதானா என்று பரிசீலனை செய்து, அவர் அவையெல்லாம் சரிதான் என்ற முடிவுக்கு வந்து பிறகு ஒரு பொது வாக்கெடுப்பு நடத்தி அந்த வாக்கெடுப்பில் மெஜாரிட்டி மெம்பர்கள் அவர்மீது நம்பிக்கை இல்லை என்று சொன்னால்தான் அவர்களை நீக்க முடியும். இது எந்தக் காலத்திலே நடக்கும். நம் பாட்டன் காலத்தில்கூட நடக்காது. கையெழுத்துப் போட்டவனே என் கையெழுத்து இல்லை என்று சொல்லிவிட்டால் நாம் அதை எங்கே வெரிபிகேஷனுக்கு அனுப்புவது? எப்படி புரூப் பண்ணுவது?—பேரன் காலத்தில்கூட முடியாது என்கிறார்கள். ஆகவே இது போகாத ஊருக்கு வழி காட்டுவதுபோல் இருக்கிறது.

ஊழல் செய்வதற்கு இது மேலும் இடம் தருவது ஒரு வழி, இன்னும் சொல்லப்போனால் இது பயமுறுத்துவதற்கு—மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர மன்றத் தலைவரை, அந்த நகர மன்றத்தை ஆளுகின்ற ஒரு கட்சியைப் பயமுறுத்துவதற்கு எந்தக் காரணத்தைக் கொண்டும்—ஒரே காரணம், எங்களுக்கு வேறு எந்தக் காரணமும் தேவையில்லை. நிதிநிலைமை சரியில்லை அல்லது மோசம் நடந்துவிட்டது என்று கருதினாலே போதும்—நீக்கிவிடலாம் என்று ஜனநாயகத்திற்கு ஒரு சவாலாக இதைக் கொண்டுவந்தார்கள். இதைத்தான் முன்பு இருந்த நடவடிக்கையே போதுமானது; எடுப்பதற்கு அதிகாரங்கள் இருக்கும் பொழுது இந்தக் காரணம் தேவை யில்லை என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்து ஜனநாயகத் தொட்டிலுக்கு உயிர் கொடுத்து இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரியப் படுத்திக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே இந்த அடிப்படையிலே பல்வேறு சட்டங்களை இன்று திருத்தும் இந்தச் சட்ட முன் வடிவின் மூலம் பறிக்கப்பட்ட அதிகாரங்கள் மீண்டும் இந்த ஆட்சியிலேயே வழங்கப்பட்டு இந்த ஜனநாயகத் தொட்டிலைத்

தாலாட்டி விடுகின்ற முயற்சியில் நம்முடைய முதலமைச்சர் ஈடுபட்டு இருக்கின்றார். ஆகவே உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களையும் கவனத்தில் எடுத்து, இந்த ஆட்சி கூர்ந்து கவனிக்கும் என்பதை எடுத்துக் கூறி , என்னுடைய விளக்கத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை; நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

10. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) 25—3—1989 ஆம் நாளைய சட்டமன்ற நிகழ்ச்சிகளின் படங்களை வெளியிடுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுவாகவே, வரவு-செலவுத் திட்ட அறிக்கை அவையில் படைக்கப்படுகிற போதும், ஆளுநர் உரையின் போதும் தமிழக அரசு செய்தித் துறையினரையும் தொலைக்காட்சி நிலையத்தினரையும் இந்த

தாலாட்டி விடுகின்ற முயற்சியில் நம்முடைய முதலமைச்சர் ஈடுபட்டு இருக்கின்றார். ஆகவே உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களையும் கவனத்தில் எடுத்து, இந்த ஆட்சி கூர்ந்து கவனிக்கும் என்பதை எடுத்துக் கூறி, என்னுடைய விளக்கத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை; நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

10. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) 25—3—1989 ஆம் நாளைய சட்டமன்ற நிகழ்ச்சிகளின் படங்களை வெளியிடுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுவாகவே, வரவு-செலவுத் திட்ட அறிக்கை அவையில் படைக்கப்படுகிற போதும், ஆளுநர் உரையின் போதும் தமிழக அரசு செய்தித் துறை யினரையும் தொலைக்காட்சி நிலையத்தினரையும் இந்த

நிகழ்ச்சிகளைப் படம் எடுக்க அனுமதிப்பது உண்டு. அவர்களும் ஆளுநர் வருகை, உரையாற்றுதல், முதல்வர் வருகை, வரவு-செலவுத் திட்ட அறிக்கையைப் படித்தல் ஆகியவற்றை மட்டும் படமாக எடுத்து வெளியிடுவது மரபாக இருந்து வருகிறது. இவற்றைத் தவிர அவையில் நடக்கும் பிற நிகழ்ச்சிகளின் படங்கள் எடுக்க அனுமதிக்கப்படுவதில்லை. 1988, சனவரி 28 அன்று சட்டப் பேரவையின் நிகழ்ச்சிகள் தொடர்பாக வெளியில் எடுக்கப்பட்ட படங்கள்தான் காண்பிக்கப்பட்டனவே தவிர அவைக்குள் நடைபெற்ற எந்த நிகழ்ச்சியும் படங்களாக வெளியிடப்படவில்லை.

இந்த மரபை ஒட்டியும், முன் உதாரணங்களை மனதிற் கொண்டும்தான் 25—3—1989 ஆம் நாளைய சட்டமன்ற நிகழ்ச்சிகளை ஒட்டிய காட்சிகளையும், படங்களையும் வெளியிடக் கூடாதெனத் தடை விதித்திருந்தேன்.

எனினும் தொடர்ந்து எதிர்க்கட்சியினர் இதனை வலியுறுத்தி வருவதை மனத்திற் கொண்டும் மாண்புமிகு தமிழகமுதல்வர் அவர்கள் அந்த நிகழ்ச்சி தொடர்பான படங்களை வெளியிட அனுமதி தந்து ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டதை ஏற்றும் சென்னைத் தொலைக்காட்சி நிறுவனத்தாரும் தமிழக அரசு செய்தித் துறையினரும் 25—3—1989-ஆம் நாளன்று சட்டமன்றத்துக்குள் எடுத்த படங்களை வெளியிட்டுக்கொள்ள அனுமதி வழங்குகிறேன். அவற்றை வெளியிடுவதும், வெளியிடாதிருப்பதும் அவர்களது பொறுப்பும் விருப்பும் ஆகும்.

9. சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஊ) ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 17/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''.

* 2—5—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

(பிற்பகல் 12-50)

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தத் திருத்தத்தை நாங்கள் வரவேற்கிறோம். ஏற்கனவே, கடந்த காலத்தில் உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடத்தப்படவில்லையென்று பல்வேறு கிளர்ச்சிகள் நடத்தப்பட்டு, தேர்தல்கள் நடத்தப்பட்டு, திராவிட முன்னேற்றக் கழகமும் அதன் தோழமைக் கட்சிகளும் பெருவாரியாக உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பின்னாலே, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இந்தத் தேர்தல் வெற்றியைப் பொறுத்துக்கொள்ள முடியாமல், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உள்ளாட்சி மன்றங்களை, அவற்றினுடைய ஜனநாயக உரிமைகளை கேலிக் கூத்தாக்குகிற முறையில், கொண்டு வந்த சட்டம் இப்பொழுது திருத்தப்படுகிறது. உதாரணத்திற்கு என்னுடைய காட்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் நடந்து முடிந்த உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் 14 பேர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். ஆக மொத்தம் 15; அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 12 பேர்கள். ஆகவே, 15 பேர்களாக உள்ள அந்த ஊராட்சி ஒன்றியத்தில் 12 பேர்களாக இருக்கக்கூடிய அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை, மாவட்ட ஆட்சித் தலைவருடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி, 4 பேர்களை நியமனம் செய்து, 12, 16 ஆக்கப்பட்டு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 15 பேர்கள் சிறுபான்மையாக்கப்பட்டு, ஒன்றிய உப தலைவர் கோ ஆப்ட் செய்யப்பட்ட 10 பேர்களும் ஆக மொத்தம் 12 பேர்கள் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று ஆக்கப்பட்டிருக்கிறார்கள். இது என்ன ஜனநாயக முறை; ஜனநாயகத்தைப் பற்றி பேசுகிறவர்களே, ஜனநாயகத்தை கேலிக் கூத்தாக்கினார்கள், அது இன்றைக்குத் திருத்தப்படுகிறது. அதை நாங்கள் வரவேற்கிறோம். நான் பணிவாகக் கேட்டுக்கொள்வது, பஞ்சாயத்து இல்லாத நேரத்திலே, கணக்குகளை எல்லாம் அதிகாரிகள் நிர்வகித்தார்கள். அந்தக் கணக்குகளை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் இன்று வரையிலும் ஒப்படைக்கவில்லை. அக்கணக்குகள் ஊராட்சி மன்றத் தலைவர்களிடத்திலோ, ஊராட்சி ஒன்றியத்திடமோ ஒப்படைக்கப்படவில்லை. அவை கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். குடிநீர், மின்சார விளக்கு ஆகியவற்றை அரசே வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிராம ஊராட்சிகளிடம் அதை நிர்வகிக்க நிதி வசதியில்லை. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் என்னுடைய தொகுதியாகிய குடியாத்தம் பேரூராட்சியிலே 44 ஊராட்சிகள்

1989 மே 11] [திரு. கே. ஆர். சுந்தரம்]

இருக்கின்றன. அதிலே 35 ஊராட்சிகளிலே நிதிநிலை சரியாக இல்லை. மின்சார பல்புகள் வாங்கப்படுவதில்லை. அங்கே மோட்டார் பம்புகள் பழுதடைந்தால் ரிப்பேர் செய்ய முடிய வில்லை. ஆகவே, நான் பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன். கிராமப் புறங்களிலே, குடிநீர் வசதியும், விளக்கு வசதியும் செய்யும் பொறுப்பை அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இன்றைக்குக் கிராமப்புற பஞ்சாயத்துக்களுக்கு அளிக்கப் படுகிற மானியத் தொகையை அதிகரிக்க வேண்டும். ஏற்கெனவே 40 பைசா, 42 பைசா என்றிருப்பதை, இன்றைக்குள்ள விலை வாசியைக் கருத்தில் எடுத்துக் கொண்டு அதை உயர்த்த வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல், கேளிக்கை வரி, வாகன வரி போன்று பல்வேறு வகையான வரிகளையும், மானியங் களையும் அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல், கனிம வள உரிமங்களையும் நீங்கள் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, இன்றைக்கு இத்தகைய உரிமங்களைப் பெறுகிறவர்களுக்கு ஒன்றை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலேகூட நான் ஏற்கனவே கேட்டுக் கொண்டேன். இந்த அரசு தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னாலே, ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர்கள், நகராட்சித் தலைவர் களை அழைத்துப் பேசி, அங்குள்ள பிரச்சினைகளைப்பற்றி தெரிந்து, நிவர்த்திக்க அக்கறை எடுத்துக்கொண்டது. அது போல, பேரூராட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேச வேண்டும். பேரூராட்சி மன்றங்களுக்கு, ஒன்றியங்களிலே எந்த விதமான திட்டத்தின் மூலமும் நிதி உதவிகள் செய்யப்படுவ தில்லை. நான் 1958 ஆம் ஆண்டு முதல், தாராபுரம் என்று அழைக்கப்படுகிற காட்பாடி பேரூராட்சியில் இன்றைய வரையில் தலைவராக இருக்கிறேன்.—மத்தியிலே கலைக்கப்பட்ட நாட்கள் தவிர. கடந்த 25, 30 ஆண்டுகாலமாக, ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக, எங்களுக்கு எந்தவிதமான உதவியும் இல்லை. என். ஆர். இ. பி., ஐ. ஆர். டி. பி. போன்ற பல்வேறு திட்டங்களின் மூலம், எந்த உதவியும் கிடைக்கவில்லை. அதே போல் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலே கலந்து கொண்டு எங்கள் குறைகளைச் சொல்ல வாய்ப்பில்லை. நாங்கள் அநாதையாக இருக்கிறோம். ஆகவே, ஊராட்சி மன்றத் தலைவர்களையும் அழைத்துப்பேசி, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும். அரசு அவ்வப்போது தனது ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அளிப்பதால், அந்த உயர்வை, பேரூராட்சி மன்றங்கள் தன்கீழ் உள்ள ஊழியர்களுக்கு வழங்க இயலவில்லை. இதனால் பேரூராட்சி மன்றங்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. அவற்றிற்கு மானியங்கள் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சிகளிலே ஏதாவது, பொது இடங்களிலே ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டால் அதை அகற்றுவதற்கு நகராட்சிகளுக்கு உரிமையிருக்கிறது. பேரூராட்சிகளுக்கு அப்படிப்பட்ட உரிமை இல்லை. ஆகவே பேரூராட்சிகளுக்கும் அத்தகைய வாய்ப்புகளை, உரிமைகளை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட உரிமைகளை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிற நேரத்திலே எனக்கு முன்னாலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், நம்முடைய மாநில அரசு உரிமைகளைப் பாதுகாக்க, மேன்மேலும் சலுகைகளைக் கொடுக்கின்ற நேரத்தில், மத்திய அரசு உள்ளாட்சி அமைப்புகளுக்கு இருக்கிற அடிப்படை உரிமைகளைக்கூட பறிப்பதற்கான சட்டங்களை முன்மொழிந்து இருக்கிறது என்று. உள்ளாட்சி மன்றங்களுக்கு இருக்கின்ற அதிகாரங்களைப் பறிக்கின்ற முறையிலே மத்திய அரசு கொண்டு வந்திருக்கின்ற சட்டங்களை எதிர்த்து, நாடு முழுவதிலும் இருக்கின்ற காங்கிரஸ் சர்க்கார்களும், காங்கிரசல்லாத சர்க்கார்களும் சேர்ந்து பொதுவான எதிர்ப்பைக் காட்டுவதற்கு முன் வந்திருக்கிறார்கள். அத்தகைய எதிர்ப்பைக் காட்டுவதற்கு நமது தமிழக அரசும் முன்வர வேண்டும். எதிர்ப்பைக் காட்ட வேண்டும் என்று கேட்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. எம். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் உள்ளாட்சி அமைப்புகளிலே ஏற்பட்டிருக்கிற குறைபாடுகளை நிவர்த்தி செய்கின்ற வகையில் திருத்தங்கள் கொண்டுவருவதை வரவேற்று, இந்த அவையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக நன்றி கூறிக்கொள்ள விரும்புகிறேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எல்லாம் அவர்களுக்கு அதிகாரம் இல்லாமல்—அந்த அதிகாரங்களை இழந்துவிட்டு பணிகளை செய்ய முடியாத நிலையிலிருந்து—அவர்கள் பணிகளைச் செய்வதற்கு வழிவகைகளைச் செய்கின்ற ஒரு அரசாங்கமாக இன்றைய தினம் நம்முடைய அரசாங்கம் செய்திருப்பதை உண்மையிலேயே வரவேற்கிறோம். இதற்கு முந்தி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் பேசியது போல மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அவையிலே, உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கக்கூட அவர்களுக்கு அதிகாரம் இல்லாமல், மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் பதவிகள் எல்லாம் எப்படியெல்லாம் மாற்றப்பட்டன என்பதை நாடு அறியும்.

இதற்கு முன்னாலே ஜனநாயகத்தைப் பற்றி பேசியவர்கள் எல்லாம் எப்படி ஜனநாயகம் பறிக்கப்பட்டிருந்தது என்பதை மக்கள் அறிவார்கள். அதே போல இப்போது ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களுக்குத் தம்முடைய அவையைக்

1989 மே 11] *[திரு. எம். இராமச்சந்திரன்]*

கூட்டுவதற்கு, அதற்குத் தலைமைப் பொறுப்பை ஏற்கக்கூடிய தகுதியை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தலைவருக்கு வழங்கியிருக்கிறது என்பதை—இந்தச் சட்ட திருத்தத்தின் மூலம்—நான் அதை வரவேற்கிறேன்.

அதுமட்டுமல்ல, எங்கள் பகுதியில்கூட இந்த மாதிரி ஒரு நிகழ்வு நிகழ்ந்தபோது, முன்னாலே இருந்த அமைச்சர் அவர்கள் தலைவராகப் பொறுப்பேற்ற ஒரு ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவரைத் தரக்குறைவாகப் பேசி, வழக்குகள் எல்லாம் பதிவு செய்யப்பட்டு, நடைமுறைப் படுத்தப்பட்டதை நாங்கள் எல்லாம் அறிவோம். அந்த வழக்கு கூட நீதிமன்றத்திலே நடந்து அதிலே விடுதலையாகியிருக்கிறார்கள். இந்த மாதிரி சூழ் நிலைகள் எல்லாம் இல்லாமல், தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் அந்த நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்குகிற ஒரு பொறுப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், உறுப்பினர் களையும் தேர்ந்தெடுக்கப்படுகிற ஒரு அமைப்பையும், மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற ஒரு தலைவருக்கு—ஒரு குழுவுக்கு—வழங்கியிருப்பதை நாங்கள் வரவேற்கிறோம். அது மட்டுமல்ல ஊராட்சி ஒன்றியத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், கோட்டாட்சியர் அவர்களுக்கும் துணைத் தலைவர் தேர்தலை நடத்தும் உரிமையும் வழங்கப்பட்டிருந்தது. அந்த மாதிரியான ஒரு முறை இப்போது மாற்றியமைக்கப்பட்டிருப்பது வரவேற்கப் படுகிறது. ஒரு நிகழ்ச்சியாகச் சொன்னால் இந்த சட்ட திருத்தத்தைப் பொதுவாக நாங்கள் எல்லாம் வரவேற்கிறோம் அதுமட்டுமல்ல, பொதுவாக ஊராட்சி ஒன்றியத்திலே சில சிரமங்கள் இருக்கலாம். இப்போதுகூட அந்தத் திருத்தங் களையெல்லாம் மாற்றி—கவர்னர் அவர்களுக்கு ஒரு அதி காரத்தை வழங்குவது போல—ஒரு மாநிலத்திலே இன்னொரு அரசாங்கம் நடைபெறுவதுபோல ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வருவதாக இருக்கிறார்கள் என நினைக்கிறபோதுதான் உண்மையிலேயே எங்களுக்கு வருத்தமாக இருக்கிறது. ஒரு சட்ட சபை நிகழ்கிறபோது—தமிழகத்திலே ஒரு மாநில அரசு நடைபெறுகிறபோது—உள்ளாட்சி அதிகாரம் என்று சொல்லி, தனி ஒரு அதிகாரத்தை ஏற்படுத்தி, அந்த அதிகாரத்தைக் கலைப்பதற்கோ அல்லது அந்த அதிகாரத்தைக் பிரயோகிப் பதற்கோ ஒரு கவர்னருக்கு அதிகாரம் இருக்கிறது என்று சொன்னால் அதிலே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு அந்த அதிகாரம் இல்லையென்று சொன்னால், அப்படிப்பட்ட ஒரு நிலை பின்னால் வர இருக்கிறது என்று நினைக்கிறபோது, உண்மையிலேயே வருத்தமாக இருக்கிறது. இதற்கு முன்னால் இருந்த அரசாங்கம் தலைவர்களுக்கு எல்லாம் இருந்த தகுதி யையும் பதவியையும் குறைத்து வைத்திருந்தார்கள். இப் போது திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த

பின்னால் அவர்களுக்கு எல்லாம் தகுதியையும், திறமையையும், அதிகாரத்தையும் வழங்கியிருக்கிறோம் என்று சொன்னால், அது வரவேற்கக்கூடிய ஒன்றுதான்.

(பிற்பகல் 1-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் இரண்டு மணித் துளிகள் நீட்டிக்கப்படுகிறது.

திரு. எம். இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அதற்குப் பின்னாலே இப்பொழுது சில குறைகள் இருப்பதை நிவர்த்தி செய்ய வேண்டுமென்பதற்காக நமது அமைச்சரவர்களுக்குச் சொல்லக் காத்திருக்கிறேன். இப்பொழுது ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலேயும் ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை நாம் நிர்வகித்து வருகிறோம். நான்கூட சில ஊராட்சி ஒன்றிய கூட்டங்கள் நடைபெறுகிறபொழுது அஜெண்டாக்கள் அனுப்புவதைப் பார்க்கிறேன். அவைகளிலே, ஒன்றன்பின் ஒன்றாக வருகின்ற அஜெண்டாக்களிலே பார்க்கிறேன். சம்பளம் கொடுப்பதையும், டெலிபோன் பில் கொடுப்பதையும், மற்றவைகளையும் பற்றித்தான் வந்திருக்கிறதே தவிர, ஏதாவது சரியான திட்டங்கள் இருக்கின்றனவா என்று பார்த்தால் இல்லை. அவர்களிடம் போய் இன்னின்னது செய்யவேண்டும். ஊரிலுள்ள சாலைகளைப் பராமரிக்க வேண்டும். பள்ளிக்கூடக் கட்டிடங்கள் இடிந்து விழப் போகின்றன. அவைகளைக் கண்காணிக்க வேண்டும். அவைகளைச் சீர்படுத்த வேண்டுமென்று சொல்லுகின்றபொழுது எங்களிடம் பணம் இல்லை என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட சூல்நிலைகளிலே, பணம் இல்லாத ஒன்றியங்கள்தான் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்த நிலைமையிலேதான் இந்த மருந்தகங்களெல்லாம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்த மருந்தகங்களிலே வேலை செய்கின்ற டாக்டர்களுக்குக் கொடுக்கின்ற சம்பளத்தைத் தவிர, அந்த மருந்துகளை வாங்கி வைக்கின்ற அளவிற்கு அந்த மருந்தகங்களில் முடியவில்லை. ஆகவே, இப்படிப்பட்ட மருந்தகங்களை நாம் நடத்துவதைவிட, அதை அரசுக்குக் கொடுத்து, நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்களின் அமைச்சகத்திற்கே கொடுத்து, அவர்கள் நடத்துவதற்கு வழிமுறைகளைச் செய்தால், அந்த அமைச்சகத்திலே கொடுத்துவிட்டால், அந்த மருந்தகங்களிலே அந்த மருந்துகள் இருந்தாவது மக்களுக்குப் பயன்படுகின்ற ஒரு முறையாவது இருக்கும். மருந்தகங்களிலே மருந்துகள் இல்லை. டாக்டர்களுக்குக் கொடுக்கின்ற சம்பளம் இரண்டாயிரம் ரூபாயாக இருந்தாலும் மற்ற ஊழியர்களுக்குக் கொடுக்கின்ற சம்பளங்கள் எல்லாம் 4,000 ஆக இருக்கின்றபொழுது, சம்பளத்தைத்தான் மாதா மாதம் கொடுக்க முடியுமே தவிர மருந்துகளை வாங்கி

வைக்கமுடியவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலைகளை மாற்றி மருந்துகள் எல்லாவற்றையுமே அந்த நல்வாழ்வுத் துறை அமைச்சகத்திற்கே, அந்த இலாகாவிற்கே கொடுத்துவிட்டால், நம்முடைய நிலைமை, அதற்குச் செலவிடுகின்ற பணத்தைக்கொண்டு, பொதுவாக ரோடு போடுவதற்கோ அல்லது சாலைகளை அமைப்பதற்கோ அல்லது பள்ளிக் கட்டிடங்களைச் சீரமைப்பதற்கோ உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்பதை நான் இப்பொழுது அறிவுரையாகக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், ஒவ்வொன்றாகச் செய்கின்றபொழுது, அந்த பஞ்சாயத்து யூனியனிலே, சில பஞ்சாயத்து போர்டுகளிலே, ஊராட்சி மன்றங்களிலே நடைபெறுகிறபொழுது, சில சாலைகள் சீரமைக்கப்படாமல் இருக்கின்றன. அதை ஊராட்சி மன்றத்தினுடைய தலைவரவர்கள் செப்பனிட்டு, அவைகளைச் சீர் செய்வதற்கு அவர்களுக்கு ஒரு அதிகாரம் இருந்தால் அவர்கள் செய்து விட்டு, அந்த ஊராட்சி ஒன்றியத்திலே அதற்கான செலவுகளைச் சரி செய்து கொள்வதற்கான ஒரு அதிகாரம் கிடைக்கும். (மணியடிக்கப்பெற்றது).

இப்படிப்பட்ட திருத்தங்களையெல்லாம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கும், ஒன்றியப் பெருந் தலைவருக்கும் வழங்கியிருப்பதை வரவேற்று நன்றி கூறி அமர்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய முற்பகல் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் இன்று மாலை 4-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-02 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(பிற்பகல் 4-00)

பிற்பகல் 4-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

10. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) 25—3—1989 ஆம் நாளைய சட்டமன்ற நிகழ்ச்சிகளின் படங்களை வெளியிடுவது குறித்து—தொடர்ச்சி.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நான் முதலிலே எழுந்தது—on a point of clarification. இன்று நீங்கள் 25—3—1989 ஆம் தேதி சட்டமன்ற நிகழ்ச்சிப் படங்களை

வெளியிடுவது குறித்து அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். அதிலே இறுதி பகுதியிலே சென்னை தொலைக்காட்சி நிலையத்தாரும், தமிழக அரசுச் செய்தித் துறையினரும் 25–3–1989 ஆம் நாளன்று சட்டமன்றத்திற்குள் எடுத்த படங்களை வெளியிட்டுக் கொள்ள அனுமதி வழங்குகிறேன். அவற்றை வெளியிடுவதும், வெளியிடாமல் இருப்பதும் அவர்களுடைய பொறுப்பும் விருப்புமாகும் என்று சொல்லியிருந்தீர்கள். இது தவிர மற்றவர்கள் யாரேனும் படம் எடுத்திருந்தால் அவைகளை வெளியிடுவதற்கு தடை இல்லை அல்லவா? அந்த விளக்கத்தைக் கேட்கவே நான் எழுந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த அவையில் வேறு யாரும் அப்படிப் படம் எடுப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை, எனவே, இந்தக் கேள்விக்கு இடமில்லை. வேறு யாரும் தனிப்பட்ட முறையில் வந்து படம் எடுத்திருந்தால் அது வேறு வகையான குற்றத்திற்குள்ளாகும் என்பது உங்களுக்குத் தெரியும். எனவே, இந்த அவையில் நாங்கள் அனுமதித்து இருப்பது சென்னை தொலைக்காட்சியினரை, தமிழக அரசு செய்தித் துறையினரைத்தான். எனவே, அவர்களுக்கு மட்டும் தான் விதிமுறைகளைச் சொல்ல முடியுமே தவிர, இதற்கு மாறாக வேறு யாரேனும் இயங்கியிருந்தால் அது இதில் உட்படுத்தப்படாது. இப்போது விவாதத்தின் மீது திரு. குமரி அனந்தன் பேசுகிறார்.

9. சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஊ) ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989—தொடர்ச்சி.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அந்த விளக்கத்தை உங்களிடம் கேட்டு, என் மூலமாக தமிழகமும் தெரிந்து கொண்டது. இப்போது பஞ்சாயத்தைப் பற்றி நம்முடைய அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் இங்கே குறிப்பிட்டபோது பல்வேறு செய்திகளை எடுத்து வைத்தார்கள். ஊராட்சி ஒன்றியங்கள் என்பது அதற்கு கீழே இருக்கிற ஊராட்சிகள் என்பது நம்முடைய நாட்டினுடைய ஜனநாயகத்தின் வேர்களாகக் கருதப்படுகின்றன. இன்று மட்டுமல்ல, தொன்று தொட்டு நம்முடைய நாட்டிலே குடவோலை முறையின் மூலமோ அல்லது மற்றவகையிலோ தேர்ந்தெடுக்கப்பட்டு, கிராமங்கள் ஆட்சி செய்யப்

நிகழ்ச்சிகளைப் படம் எடுக்க அனுமதிப்பது உண்டு. அவர்களும் ஆளுநர் வருகை, உரையாற்றுதல், முதல்வர் வருகை, வரவு–செலவுத் திட்ட அறிக்கையைப் படித்தல் ஆகியவற்றை மட்டும் படமாக எடுத்து வெளியிடுவது மரபாக இருந்து வருகிறது. இவற்றைத் தவிர அவையில் நடக்கும் பிற நிகழ்ச்சிகளின் படங்கள் எடுக்க அனுமதிக்கப்படுவதில்லை. 1988, சனவரி 28 அன்று சட்டப் பேரவையின் நிகழ்ச்சிகள் தொடர்பாக வெளியில் எடுக்கப்பட்ட படங்கள்தான் காண்பிக்கப்பட்டனவே தவிர அவைக்குள் நடைபெற்ற எந்த நிகழ்ச்சியும் படங்களாக வெளியிடப்படவில்லை.

இந்த மரபை ஒட்டியும், முன் உதாரணங்களை மனதிற் கொண்டும்தான் 25—3—1989 ஆம் நாளைய சட்டமன்ற நிகழ்ச்சிகளை ஒட்டிய காட்சிகளையும், படங்களையும் வெளியிடக் கூடாதெனத் தடை விதித்திருந்தேன்.

எனினும் தொடர்ந்து எதிர்க்கட்சியினர் இதனை வலியுறுத்தி வருவதை மனத்திற் கொண்டும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அந்த நிகழ்ச்சி தொடர்பான படங்களை வெளியிட அனுமதி தந்து ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டதை ஏற்றும் சென்னைத் தொலைக்காட்சி நிறுவனத்தாரும் தமிழக அரசு செய்தித் துறையினரும் 25—3—1989-ஆம் நாளன்று சட்டமன்றத்துக்குள் எடுத்த படங்களை வெளியிட்டுக்கொள்ள அனுமதி வழங்குகிறேன். அவற்றை வெளியிடுவதும், வெளியிடாதிருப்பதும் அவர்களது பொறுப்பும் விருப்பும் ஆகும்.

9. சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஊ) ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''.

* 2—5—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

(பிற்பகல் 12-50)

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தத் திருத்தத்தை நாங்கள் வரவேற்கிறோம். ஏற்கனவே, கடந்த காலத்தில் உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடத்தப்பட வில்லையென்று பல்வேறு கிளர்ச்சிகள் நடத்தப்பட்டு, தேர்தல்கள் நடத்தப்பட்டு, திராவிட முன்னேற்றக் கழகமும் அதன் தோழமைக் கட்சிகளும் பெருவாரியாக உள்ளாட்சி மன்றங் களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பின்னாலே, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இந்தத் தேர்தல் வெற்றியைப் பொறுத்துக்கொள்ள முடியாமல், தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள உள்ளாட்சி மன்றங்களை, அவற்றினுடைய ஜனநாயக உரிமைகளை கேலிக் கூத்தாக்குகிற முறையில், கொண்டு வந்த சட்டம் இப்பொழுது திருத்தப்படுகிறது. உதாரணத்திற்கு என்னுடைய காட்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் நடந்து முடிந்த உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் 14 பேர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் தேர்ந்தெடுக்கப் பட்டேன். ஆக மொத்தம் 15; அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 12 பேர்கள். ஆகவே, 15 பேர்களாக உள்ள அந்த ஊராட்சி ஒன்றியத்தில் 12 பேர்களாக இருக்கக்கூடிய அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை, மாவட்ட ஆட்சித் தலைவருடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி, 4 பேர்களை நியமனம் செய்து, 12, 16 ஆக்கப்பட்டு, மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட 15 பேர்கள் சிறுபான்மையாக்கப்பட்டு, ஒன்றிய உப தலைவர் கோ ஆப்ட் செய்யப்பட்ட 10 பேர்களும் ஆக மொத்தம் 12 பேர்கள் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று ஆக்கப் பட்டிருக்கிறார்கள். இது என்ன ஜனநாயக முறை; ஜனநாய கத்தைப் பற்றி பேசுகிறவர்களே, ஜனநாயகத்தை கேலிக் கூத்தாக்கினார்கள், அது இன்றைக்குத் திருத்தப்படுகிறது. அதை நாங்கள் வரவேற்கிறோம். நான் பணிவாகக் கேட்டுக் கொள்வது, பஞ்சாயத்து இல்லாத நேரத்திலே, கணக்குகளை எல்லாம் அதிகாரிகள் நிர்வகித்தார்கள். அந்தக் கணக்குகளை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் இன்று வரை யிலும் ஒப்படைக்கவில்லை. அக்கணக்குகள் ஊராட்சி மன்றத் தலைவர்களிடத்திலோ, ஊராட்சி ஒன்றியத்திடமோ ஒப்படைக்கப்படவில்லை. அவை கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். குடிநீர், மின்சார விளக்கு ஆகியவற்றை அரசே வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். கிராம ஊராட்சிகளிடம் அதை நிர்வகிக்க நிதி வசதி யில்லை. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் என்னுடைய தொகுதியாகிய குடியாத்தம் பேரூராட்சியிலே 44 ஊராட்சிகள்

1989 மே 11] [திரு. கே. ஆர். சுந்தரம்]

இருக்கின்றன. அதிலே 35 ஊராட்சிகளிலே நிதிநிலை சரியாக இல்லை. மின்சார பல்புகள் வாங்கப்படுவதில்லை. அங்கே மோட்டார் பம்புகள் பழுதடைந்தால் ரிப்பேர் செய்ய முடியவில்லை. ஆகவே, நான் பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன். கிராமப் புறங்களிலே, குடிநீர் வசதியும், விளக்கு வசதியும் செய்யும் பொறுப்பை அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இன்றைக்குக் கிராமப்புற பஞ்சாயத்துக்களுக்கு அளிக்கப்படுகிற மானியத் தொகையை அதிகரிக்க வேண்டும். ஏற்கெனவே 40 பைசா, 42 பைசா என்றிருப்பதை, இன்றைக்குள்ள விலைவாசியைக் கருத்தில் எடுத்துக் கொண்டு அதை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல், கேளிக்கை வரி, வாகன வரி போன்று பல்வேறு வகையான வரிகளையும், மானியங்களையும் அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல், கனிம வள உரிமங்களையும் நீங்கள் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, இன்றைக்கு இத்தகைய உரிமங்களைப் பெறுகிறவர்களுக்கு ஒன்றை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலேகூட நான் ஏற்கனவே கேட்டுக் கொண்டேன். இந்த அரசு தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னாலே, ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர்கள், நகராட்சித் தலைவர்களை அழைத்துப் பேசி, அங்குள்ள பிரச்சினைகளைப்பற்றி தெரிந்து, நிவர்த்திக்க அக்கறை எடுத்துக்கொண்டது. அது போல, பேரூராட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேச வேண்டும். பேரூராட்சி மன்றங்களுக்கு, ஒன்றியங்களிலே எந்த விதமான திட்டத்தின் மூலமும் நிதி உதவிகள் செய்யப்படுவதில்லை. நான் 1958 ஆம் ஆண்டு முதல், தாராபுரம் என்று அழைக்கப்படுகிற காட்பாடி பேரூராட்சியில் இன்றைய வரையில் தலைவராக இருக்கிறேன்.—மத்தியிலே கலைக்கப்பட்ட நாட்கள் தவிர. கடந்த 25, 30 ஆண்டுகாலமாக, ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக, எங்களுக்கு எந்தவிதமான உதவியும் இல்லை. என். ஆர். இ. பி., ஐ. ஆர். டி. பி. போன்ற பல்வேறு திட்டங்களின் மூலம், எந்த உதவியும் கிடைக்கவில்லை. அதே போல் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலே கலந்து கொண்டு எங்கள் குறைகளைச் சொல்ல வாய்ப்பில்லை. நாங்கள் அநாதையாக இருக்கிறோம். ஆகவே, ஊராட்சி மன்றத் தலைவர்களையும் அழைத்துப்பேசி, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும். அரசு அவ்வப்போது தனது ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அளிப்பதால், அந்த உயர்வை, பேரூராட்சி மன்றங்கள் தன்கீழ் உள்ள ஊழியர்களுக்கு வழங்க இயலவில்லை. இதனால் பேரூராட்சி மன்றங்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. அவற்றிற்கு மானியங்கள் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சிகளிலே ஏதாவது, பொது இடங்களிலே ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டால் அதை அகற்றுவதற்கு நகராட்சிகளுக்கு உரிமையிருக்கிறது. பேரூராட்சிகளுக்கு அப்படிப்பட்ட உரிமை இல்லை. ஆகவே பேரூராட்சிகளுக்கும் அத்தகைய வாய்ப்புகளை, உரிமைகளை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட உரிமைகளை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிற நேரத்திலே எனக்கு முன்னாலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், நம்முடைய மாநில அரசு உரிமைகளைப் பாதுகாக்க, மேன் மேலும் சலுகைகளைக் கொடுக்கின்ற நேரத்தில், மத்திய அரசு உள்ளாட்சி அமைப்புகளுக்கு இருக்கிற அடிப்படை உரிமைகளைக்கூட பறிப்பதற்கான சட்டங்களை முன்மொழிந்து இருக்கிறது என்று. உள்ளாட்சி மன்றங்களுக்கு இருக்கின்ற அதிகாரங்களைப் பறிக்கின்ற முறையிலே மத்திய அரசு கொண்டு வந்திருக்கின்ற சட்டங்களை எதிர்த்து, நாடு முழுவதிலும் இருக்கின்ற காங்கிரஸ் சர்க்கார்களும், காங்கிரசல்லாத சர்க்கார்களும் சேர்ந்து பொதுவான எதிர்ப்பைக் காட்டுவதற்கு முன் வந்திருக்கிறார்கள். அத்தகைய எதிர்ப்பைக் காட்டுவதற்கு நமது தமிழக அரசும் முன்வர வேண்டும். எதிர்ப்பைக் காட்ட வேண்டும் என்று கேட்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. எம். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் உள்ளாட்சி அமைப்புகளிலே ஏற்பட்டிருக்கிற குறைபாடுகளை நிவர்த்தி செய்கின்ற வகையில் திருத்தங்கள் கொண்டுவருவதை வரவேற்று, இந்த அவையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக நன்றி கூறிக்கொள்ள விரும்புகிறேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எல்லாம் அவர்களுக்கு அதிகாரம் இல்லாமல்—அந்த அதிகாரங்களை இழந்துவிட்டு பணிகளை செய்ய முடியாத நிலையிலிருந்து —அவர்கள் பணிகளைச் செய்வதற்கு வழிவகைகளைச் செய்கின்ற ஒரு அரசாங்கமாக இன்றைய தினம் நம்முடைய அரசாங்கம் செய்திருப்பதை உண்மையிலேயே வரவேற்கிறோம். இதற்கு முந்தி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் பேசியது போல மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அவையிலே, உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கக்கூட அவர்களுக்கு அதிகாரம் இல்லாமல், மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் பதவிகள் எல்லாம் எப்படியெல்லாம் மாற்றப்பட்டன என்பதை நாடு அறியும்.

இதற்கு முன்னாலே ஜனநாயகத்தைப் பற்றி பேசியவர்கள் எல்லாம் எப்படி ஜனநாயகம் பறிக்கப்பட்டிருந்தது என்பதை மக்கள் அறிவார்கள். அதே போல இப்போது ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களுக்குத் தம்முடைய அவையைக்

1989 மே 11] [திரு. எம். இராமச்சந்திரன்]

கூட்டுவதற்கு, அதற்குத் தலைமைப் பொறுப்பை ஏற்கக்கூடிய தகுதியை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தலைவருக்கு வழங்கியிருக்கிறது என்பதை—இந்தச் சட்ட திருத்தத்தின் மூலம்—நான் அதை வரவேற்கிறேன்.

அதுமட்டுமல்ல, எங்கள் பகுதியில்கூட இந்த மாதிரி ஒரு நிகழ்வு நிகழ்ந்தபோது, முன்னாலே இருந்த அமைச்சர் அவர்கள் தலைவராகப் பொறுப்பேற்ற ஒரு ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவரைத் தரக்குறைவாகப் பேசி, வழக்குகள் எல்லாம் பதிவு செய்யப்பட்டு, நடைமுறைப் படுத்தப்பட்டதை நாங்கள் எல்லாம் அறிவோம். அந்த வழக்கு கூட நீதிமன்றத்திலே நடந்து அதிலே விடுதலையாகியிருக்கிறார்கள். இந்த மாதிரி சூழ் நிலைகள் எல்லாம் இல்லாமல், தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் அந்த நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்குகிற ஒரு பொறுப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், உறுப்பினர் களையும் தேர்ந்தெடுக்கப்படுகிற ஒரு அமைப்பையும், மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற ஒரு தலைவருக்கு—ஒரு குழுவுக்கு—வழங்கியிருப்பதை நாங்கள் வரவேற்கிறோம். அது மட்டுமல்ல ஊராட்சி ஒன்றியத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், கோட்டாட்சியர் அவர்களுக்கும் துணைத் தலைவர் தேர்தலை நடத்தும் உரிமையும் வழங்கப்பட்டிருந்தது. அந்த மாதிரியான ஒரு முறை இப்போது மாற்றியமைக்கப்பட்டிருப்பது வரவேற்கப் படுகிறது. ஒரு நிகழ்ச்சியாகச் சொன்னால் இந்த சட்ட திருத்தத்தைப் பொதுவாக நாங்கள் எல்லாம் வரவேற்கிறோம் அதுமட்டுமல்ல, பொதுவாக ஊராட்சி ஒன்றியத்திலே சில சிரமங்கள் இருக்கலாம். இப்போதுகூட அந்தத் திருத்தங் களையெல்லாம் மாற்றி—கவர்னர் அவர்களுக்கு ஒரு அதி காரத்தை வழங்குவது போல—ஒரு மாநிலத்திலே இன்னொரு அரசாங்கம் நடைபெறுவதுபோல ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வருவதாக இருக்கிறார்கள் என நினைக்கிறபோதுதான் உண்மையிலேயே எங்களுக்கு வருத்தமாக இருக்கிறது. ஒரு சட்ட சபை நிகழ்கிறபோது—தமிழகத்திலே ஒரு மாநில அரசு நடைபெறுகிறபோது—உள்ளாட்சி அதிகாரம் என்று சொல்லி, தனி ஒரு அதிகாரத்தை ஏற்படுத்தி, அந்த அதிகாரத்தைக் கலைப்பதற்கோ அல்லது அந்த அதிகாரத்தைக் பிரயோகிப் பதற்கோ ஒரு கவர்னருக்கு அதிகாரம் இருக்கிறது என்று சொன்னால் அதிலே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு அந்த அதிகாரம் இல்லையென்று சொன்னால், அப்படிப்பட்ட ஒரு நிலை பின்னால் வர இருக்கிறது என்று நினைக்கிறபோது, உண்மையிலேயே வருத்தமாக இருக்கிறது. இதற்கு முன்னால் இருந்த அரசாங்கம் தலைவர்களுக்கு எல்லாம் இருந்த தகுதி யையும் பதவியையும் குறைத்து வைத்திருந்தார்கள். இப் போது திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த

பின்னால் அவர்களுக்கு எல்லாம் தகுதியையும், திறமையையும், அதிகாரத்தையும் வழங்கியிருக்கிறோம் என்று சொன்னால், அது வரவேற்கக்கூடிய ஒன்றுதான்.

(பிற்பகல் 1-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் இரண்டு மணித் துளிகள் நீட்டிக்கப்படுகிறது.

திரு. எம். இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அதற்குப் பின்னாலே இப்பொழுது சில குறைகள் இருப்பதை நிவர்த்தி செய்ய வேண்டுமென்பதற்காக நமது அமைச்சரவர்களுக்குச் சொல்லக் காத்திருக்கிறேன். இப்பொழுது ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலேயும் ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை நாம் நிர்வகித்து வருகிறோம். நான்கூட சில ஊராட்சி ஒன்றிய கூட்டங்கள் நடைபெறுகிறபொழுது அஜெண்டாக்கள் அனுப்புவதைப் பார்க்கிறேன். அவைகளிலே, ஒன்றன்பின் ஒன்றாக வருகின்ற அஜெண்டாக்களிலே பார்க்கிறேன். சம்பளம் கொடுப்பதையும், டெலிபோன் பில் கொடுப்பதையும், மற்றவைகளையும் பற்றித்தான் வந்திருக்கிறதே தவிர, ஏதாவது சரியான திட்டங்கள் இருக்கின்றனவா என்று பார்த்தால் இல்லை. அவர்களிடம் போய் இன்னின்னது செய்யவேண்டும். ஊரிலுள்ள சாலைகளைப் பராமரிக்க வேண்டும். பள்ளிக்கூடக் கட்டிடங்கள் இடிந்து விழப் போகின்றன. அவைகளைக் கண்காணிக்க வேண்டும். அவைகளைச் சீர்படுத்த வேண்டுமென்று சொல்லுகின்றபொழுது எங்களிடம் பணம் இல்லை என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட சூல்நிலைகளிலே, பணம் இல்லாத ஒன்றியங்கள்தான் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்த நிலைமையிலேதான் இந்த மருந்தகங்களெல்லாம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்த மருந்தகங்களிலே வேலை செய்கின்ற டாக்டர்களுக்குக் கொடுக்கின்ற சம்பளத்தைத் தவிர, அந்த மருந்துகளை வாங்கி வைக்கின்ற அளவிற்கு அந்த மருந்தகங்களில் முடியவில்லை. ஆகவே, இப்படிப்பட்ட மருந்தகங்களை நாம் நடத்துவதைவிட, அதை அரசுக்குக் கொடுத்து, நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்களின் அமைச்சகத்திற்கே கொடுத்து, அவர்கள் நடத்துவதற்கு வழிமுறைகளைச் செய்தால், அந்த அமைச்சகத்திலே கொடுத்துவிட்டால், அந்த மருந்தகங்களிலே அந்த மருந்துகள் இருந்தாவது மக்களுக்குப் பயன்படுகின்ற ஒரு முறையாவது இருக்கும். மருந்தகங்களிலே மருந்துகள் இல்லை. டாக்டர்களுக்குக் கொடுக்கின்ற சம்பளம் இரண்டாயிரம் ரூபாயாக இருந்தாலும் மற்ற ஊழியர்களுக்குக் கொடுக்கின்ற சம்பளங்கள் எல்லாம் 4,000 ஆக இருக்கின்றபொழுது, சம்பளத்தைத்தான் மாதாமாதம் கொடுக்க முடியுமே தவிர மருந்துகளை வாங்கி

வைக்கமுடியவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலைகளை மாற்றி மருந்துகள் எல்லாவற்றையுமே அந்த நல்வாழ்வுத் துறை அமைச்சகத்திற்கே, அந்த இலாகாவிற்கே கொடுத்துவிட்டால், நம்முடைய நிலைமை, அதற்குச் செலவிடுகின்ற பணத்தைக்கொண்டு, பொதுவாக ரோடு போடுவதற்கோ அல்லது சாலைகளை அமைப்பதற்கோ அல்லது பள்ளிக் கட்டிடங்களைச் சீரமைப்பதற்கோ உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்பதை நான் இப்பொழுது அறிவுரையாகக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், ஒவ்வொன்றாகச் செய்கின்றபொழுது, அந்த பஞ்சாயத்து யூனியனிலே, சில பஞ்சாயத்து போர்டுகளிலே, ஊராட்சி மன்றங்களிலே நடைபெறுகிறபொழுது, சில சாலைகள் சீரமைக்கப்படாமல் இருக்கின்றன. அதை ஊராட்சி மன்றத்தினுடைய தலைவரவர்கள் செப்பனிட்டு, அவைகளைச் சீர் செய்வதற்கு அவர்களுக்கு ஒரு அதிகாரம் இருந்தால் அவர்கள் செய்து விட்டு, அந்த ஊராட்சி ஒன்றியத்திலே அதற்கான செலவுகளைச் சரி செய்து கொள்வதற்கான ஒரு அதிகாரம் கிடைக்கும். (மணியடிக்கப்பெற்றது).

இப்படிப்பட்ட திருத்தங்களையெல்லாம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கும், ஒன்றியப் பெருந் தலைவருக்கும் வழங்கியிருப்பதை வரவேற்று நன்றி கூறி அமர்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய முற்பகல் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் இன்று மாலை 4-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-02 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(பிற்பகல் 4-00)

பிற்பகல் 4-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

10. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) 25—3—1989 ஆம் நாளைய சட்டமன்ற நிகழ்ச்சிகளின் படங்களை வெளியிடுவது குறித்து—தொடர்ச்சி.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நான் முதலிலே எழுந்தது—on a point of clarification. இன்று நீங்கள் 25—3—1989 ஆம் தேதி சட்டமன்ற நிகழ்ச்சிப் படங்களை

வெளியிடுவது குறித்து அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். அதிலே இறுதி பகுதியிலே சென்னை தொலைக்காட்சி நிலையத்தாரும், தமிழக அரசுச் செய்தித் துறையினரும் 25-3-1989 ஆம் நாளன்று சட்டமன்றத்திற்குள் எடுத்த படங்களை வெளியிட்டுக் கொள்ள அனுமதி வழங்குகிறேன். அவற்றை வெளியிடுவதும், வெளியிடாமல் இருப்பதும் அவர்களுடைய பொறுப்பும் விருப்புமாகும் என்று சொல்லியிருந்தீர்கள். இது தவிர மற்றவர்கள் யாரேனும் படம் எடுத்திருந்தால் அவைகளை வெளியிடுவதற்கு தடை இல்லை அல்லவா? அந்த விளக்கத்தைக் கேட்கவே நான் எழுந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவையில் வேறு யாரும் அப்படிப் படம் எடுப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை, எனவே, இந்தக் கேள்விக்கு இடமில்லை. வேறு யாரும் தனிப்பட்ட முறையில் வந்து படம் எடுத்திருந்தால் அது வேறு வகையான குற்றத்திற்குள்ளாகும் என்பது உங்களுக்குத் தெரியும். எனவே, இந்த அவையில் நாங்கள் அனுமதித்து இருப்பது சென்னை தொலைக்காட்சியினரை, தமிழக அரசு செய்தித் துறையினரைத்தான். எனவே, அவர்களுக்கு மட்டும் தான் விதிமுறைகளைச் சொல்ல முடியுமே தவிர, இதற்கு மாறாக வேறு யாரேனும் இயங்கியிருந்தால் அது இதில் உட்படுத்தப்படாது. இப்போது விவாதத்தின் மீது திரு. குமரி அனந்தன் பேசுகிறார்.

9. சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஊ) ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989—தொடர்ச்சி.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அந்த விளக்கத்தை உங்களிடம் கேட்டு, என் மூலமாக தமிழகமும் தெரிந்து கொண்டது. இப்போது பஞ்சாயத்தைப் பற்றி நம்முடைய அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் இங்கே குறிப்பிட்டபோது பல்வேறு செய்திகளை எடுத்து வைத்தார்கள். ஊராட்சி ஒன்றியங்கள் என்பது அதற்கு கீழே இருக்கிற ஊராட்சிகள் என்பது நம்முடைய நாட்டினுடைய ஜனநாயகத்தின் வேர்களாகக் கருதப்படுகின்றன. இன்று மட்டுமல்ல, தொன்று தொட்டு நம்முடைய நாட்டிலே குடவோலை முறையின் மூலமோ அல்லது மற்றவகையிலோ தேர்ந்தெடுக்கப்பட்டு, கிராமங்கள் ஆட்சி செய்யப்

பட்டன என்பது இங்கே அனைவருக்கும் தெரியும். முடியாட்சி சர்வ வல்லமையோடு இருந்தபோது கூட கிராம குடியாட்சி என்பது நடந்து கொண்டிருந்தது என்பதும், அந்த குடியாட்சிக்கு பல்வேறு வாரியங்கள் அமைக்கப்பட்டு, அந்த வாரியங்கள் செயல்பட்டு வந்தன என்பதும் நமக்குத் தெரியும். ஆக அடிமட்டத்தில் வேராக இருக்கிற அந்த கிராமங்கள் ஏறத்தாழ தன்னதிகாரம் பெற்றவைகளாக இருந்தன என்று ஒரு காலத்தில் சரித்திரத்தில் படித்தது மீண்டும் சரித்திரத்தில் இடம் பெறுகிறவகையில் மாண்புமிகு பாரதத்தினுடைய பிரதமர் அவர்கள் பல்வேறு அதிகாரங்கள் இந்த பஞ்சாயத்துக்கு வழங்கப்பட வேண்டுமென்று சொல்கிறார். அதிகாரப் பரவல் என்று சொல்கிறபோது அந்த அதிகாரம் அந்த கிராமத்தில் இருக்கிற மக்களுக்கும், அவர்கள் விருப்பப்படி தேர்ந்தெடுக்கப்படுகிற அந்த உறுப்பினர்களுக்கும், தலைவருக்கும் வேண்டுமென்பது இதிலே அடிப்படை தத்துவம். இந்த தத்துவத்தைப் பற்றி பேசுகிறபோது ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் என்பது இப்போது நடந்து கொண்டிருக்கிறது என்று தமிழ்நாடு அரசாங்கமே சொல்லியிருக்கிற போது, ஏன் அதைச் சொல்ல வேண்டும் என்று கேட்கிறவர்களுக்குத் தான் நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன், இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலே அதனை இயற்றிவிட்டால், அதை கண்டிப்பாக எல்லா மாநிலங்களும் பின்பற்ற வேண்டியவைகளாக ஆகிவிடுகிறது என்பதுதான் அதிலே முக்கியம்.

இன்னும் ஒன்று, இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கு மேற்கு வங்காளம், ஹரியானா போன்ற இன்னும் பல மாநிலங்கள் ஒத்துக்கொண்டு உள்ளன என்கிற தகவலையும் நாம் தெரிந்து கொண்டு இருக்கிறோம். இன்னும் ஒருவகையிலே சொல்வதாக இருந்தால், இந்தப் பஞ்சாயத்து அமைப்புக்கள் அரசியல் அமைப்பிலே இடம் பெறுவதோடு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடைபெறவேண்டும் என்று சொல்கிற ஒரு கட்டாயம் அதிலே வருவதோடு, பெண்களுக்கும் அரிசனங்களுக்கும், மலைஜாதி மக்களுக்கும் உறுதியாக அங்கே பிரதிநிதித்துவம் கிடைக்கின்ற வகையில் ஏற்பாடுகள் நடக்கவேண்டும் என்று திட்டமாக செயல்படுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. இதனை யாரும் புறக்கணித்துவிட்டு செயல்பட்டுவிட முடியாத அளவிற்கு ஒரு வாய்ப்பு இந்தப் பெண்களுக்கும், அரிசனங்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் இங்கே ஏற்படுகிறது. அடித்தள மக்களுக்கே அதிகாரம், மக்களுக்கே அதிகாரம் என்று சொல்லுகின்ற ஒரு மகத்தான தத்துவத்தின் அடிப்படையிலே ஒரு புரட்சிகரமான சிந்தனையின் அடிப்படையிலே இந்தத் திட்டம் அரசியல் அமைப்பிலே இடம் பெறப்போகிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் இங்கே சொல்லு கின்றபோது ஒன்றைச் சொன்னார்கள், என்னவென்றால், கவர்னருடைய அதிகாரத்திலேயே ஒரு பஞ்சாயத்தை கலைக்க முடியும் என்று இருக்கிறதே என்று அவர்கள் சொன்னார்கள். பாராளுமன்றத்திலே சமர்ப்பிக்கப்பட போகிற பில் அல்லது மசோதா இன்னும் தயார் நிலையிலே இல்லை. அது இன்னும் வெளியாகவும் இல்லை. இப்போது இங்கே நாம் பத்திரிகை யிலே படிப்பது குறிப்பாக இந்தியன் எக்ஸ்பிரஸ் போன்ற பத்திரிகையிலே போட்டு இருப்பது, பல்வேறு டிராப்ட்ஸ், பல வகைகளிலே எழுதப்பட்ட அந்த டிராப்ட்டிலே, முன் வடிவிலே, ரொம்பகாலத்திற்கு முன்பு எழுதப்பட்ட ஒரு முன்வடிவு அது, அரசாங்கம் வைக்கப் போகின்ற முன்வடிவு அது அன்று. அரசாங்கம் வைக்கப் போகின்ற முன்வடிவை வைத்துக்கொண்டுதான் நாம் விவாதிக்கவேண்டும் என்பதற் காகத்தான் மாண்புமிகு பிரதமர் அவர்கள் சொல்கிற நேரத் திலே கூட சொல்கிறார்கள், இந்த மசோதா இப்போது அறிமுகப்படுத்தப்பட்டாலும் கூட, விவாதத்திற்கு, கருத்துக் களுக்கு மாநிலங்களுடைய கருத்துரைகளுக்கு, மக்களுடைய கருத்துரைகளுக்கு வாய்ப்பு ஏற்படுத்திய பிறகுதான் இது தீர்மானமாக, சட்டமாக நிறைவேற்றப்படும் என்ற உறுதி மொழியை மீண்டும் மீண்டும் தெரிவித்திருக்கிறார்கள். எனவே திறந்த புத்தகமாக, 'ஒப்பன் மைன்டோடு' இந்தக் காரியத்தை அணுக வேண்டும் என்று அவர்கள் கேட்டு இருக்கிறார்கள்.

அதிலும் குறிப்பாகச் சொல்லப்போனால், கவர்னர் கலைத்துவிடுவாரே என்று சொல்லுகின்ற ஒரு சொல் வருகிறதே, எனவே கவர்னருக்கு அந்த அதிகாரம் இருக்க லாமா என்று நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்ட காரணத்தாலே சொல்கிறேன். கவர்னர் என்பது மாநில அரசைத்தான் இங்கே குறிக்கும். 1978-வது ஆண்டு, நடந்த ஒரு தீர்ப்பை வைத்து நான் சொல்வதாக இருந்தால், 'சம்சிர்சிங் கேஸ்'-லே சுப்ரீம் கோர்ட்டிலே தீர்ப்பளிக்கப் பட்டபோது, சுப்ரீம் கோர்ட்டிலே சொல்லியிருப்பது, 1978-லே கவர்னர் என்று குறிப்பிடுவது மாநில அரசாங்கத்தைத்தான் குறிக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதை ஏன் சொல் கிறேன் என்றால், கவுன்சில் ஆப் மினிஸ்டர்ஸ்-உடைய அட்வைஸ், அவர்களுடைய ஆலோசனை இல்லாமல் கவர்னர் அவர்கள் செயல்படமாட்டார்கள் என்று சொல்கின்ற தத்து வத்தின் அடிப்படையிலே—ஒரே ஒரு ஆர்ட்டிகலைத் தவிர—(குறுக்கீடு)-ஒரே ஒரு ஆர்ட்டிகலைத் தவிர என்று நான் சொல்லி விடுகிறேன்—மற்றவைகளிலே he is bound to இல்லையா? உங்களுடைய, அமைச்சரவையினுடைய ஆலோ சனையைப் பெறுவது அவரது கட்டாயக் கடமையாக இருக்கிற காரணத்தாலே இந்த இடத்திலே இங்கே சொல்லப்படுவது, கவர்னர் என்பது, மாநில அரசாங்கத்தைத்தான் குறிக்கும் என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அடுத்தாற்போல் சொல்வதாக இருந்தால், ஒரு பஞ்சாயத்து கலைக்சப்படுமானால், அந்தப் பஞ்சாயத்து கலைக்கப்பட்ட தற்குப் பிறகு, அந்தப் பஞ்சாயத்திலே தேர்தல் நடத்த வேண்டுமென்றால், 6 மாதம், அதற்குப் பிறகு 3 மாதம் என்று 9 மாதம் இருக்கிறதே என்று சொன்னார்கள். இதுகூட இப்போது அரசாங்கம் கொண்டு வருகிற பில்லிலே வரவேண்டும் என்பது இல்லை. அநேகமாக 6 மாதத்திற்கு மேலே நீட்டிக்கப் படக்கூடாது என்ற நிலைதான் ஏற்படலாம். அப்படியே வந்தாலும்கூட, எலக்ஷன் கமிஷன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. குமரி அனந்தன் அவர்கள் மிகுந்த ஆற்றல் உடையவர். எப்போதுமே குறைந்த நேரத்திலே தன்னுடைய முழுக் கருத்துக்களைச் சொல்லக்கூடிய மிகப் பெரிய வல்லமை படைத்தவர்.

(பிற்பகல் 4-10)

திரு. குமரி அனந்தன்: இந்தப் வஞ்சப் புகழ்ச்சியை நான் புகழ்ச்சியாகவே எடுத்துக்கொள்கிறேன். ஆகவே எலக்ஷன் கமிஷன் இதை நடத்துகிறது என்று சொன்னால், இங்கே பெரி சாஸ்திரி வந்து நடத்துகிறார் என்பது அல்ல பொருள். இங் கேயே ஸ்டேட்டிலே ஒரு சீப் எலக்ஷன் ஆபிசர் இருக்கத்தானே செய்கிறார். ஒரு பை-எலக்சன் வந்தால் எப்படி நடத்தப் படுகிறதோ, அதைவிட மிக எளிதாக இங்கேயிருக்கிற தேர்தல் அதிகாரிகள் இதை நடத்தி விடுவார்கள் என்ற காரணத்திற் காகத்தான் இந்தச் செய்தியினை, எலக்சன் கமிஷன் என்று அவர்கள் சொல்கிறார்களே தவிர, நேரிடையாகவே எலக்ஷன் கமிஷன் வந்து இங்கே செய்வதில்லை. ஆதலால் மத்திய அரசாங்கம் அப்படி ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து, அரசியல் அமைப்புச் சட்டத்திலே இதையும் கொண்டு வந்தாலும் கூட, மேற்கொண்டு இந்தப் பஞ்சாயத்திற்கு என்னென்ன அதிகாரங்கள் வழங்க வேண்டும் என்று சட்டம் இயற்றுகின்ற பொறுப்பு இந்த மாநில அரசாங்கத்திற்குத்தான் இருக்கிறது. வாக்காளர் பட்டியலில் சேர்ப்பது, அந்தத் தொகுதி எப்படி அடங்க வேண்டும் என்று சொல்வது, டி—லிமிட்டேஷன் என்று சொல்லி அதனுடைய வரையறைகளை, எல்லைகளை வகுப்பது, அது வரி வசூலிக்கலாமா என்று சொல்வது, அது வரி வசூலிப்பது, வகுப்பது, தொகுப்பது எல்லாவற்றையும் எந்தெந்த அளவிலே செய்யவேண்டுமென்று சொல்கிற அதிகாரத்தை வழங்குவது, அதிகாரத்தைச் சட்டத்தின் மூலம் கொடுப்பது இந்தச்

சட்டமன்றமாக இருக்கிற காரணத்தாலே மாநிலத்தினுடைய அதிகாரத்திலே அது தலையிடவில்லை. இந்தத் திட்டம் தலையிடவில்லை என்பதை சொல்லிக்கொள்கிறேன். அதனாலேதான் நமது இந்தியப் பேரரசிலே இருந்து கொண்டிருக்கிற பல்வேறு அமைச்சர்கள், முதலமைச்சர்கள், ஹரியானா முதலமைச்சர் தேவிலால் உள்பட இதனை ஏற்றுக் கொள்கிறார்கள். ஆதலாலே நமக்குத் தொன்று தொட்டு வந்து கொண்டிருக்கிற கிராமக் கூட்டாட்சி என்று சொல்லக்கூடிய அந்தக் கூட்டாட்சி தான் வருகிறது. காந்தி, நேரு பெருமகனார் கண்ட கனவுகள் போல்தான் அது வந்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் பழம் தமிழர்களுடைய மரபை மீண்டும் ராஜீவ்காந்தி புரட்சிகரமாக கொண்டு வந்திருக்கிறார் என்று பாராட்டத்தான் வேண்டுமே தவிர வேறு வகையில்லை என்று சொல்லி, இந்தப் பஞ்சாயத்துகளுக்கு அதிக அதிகாரம் கொடுப்பதற்குரிய இந்தச் சூழ்நிலையை நாம் வரவேற்க வேண்டுமென்று சொல்லி அமைகிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஊராட்சிகள் குறித்த சட்ட முன்வடிவுகளில் என்னுடைய கருத்துக்களை வெளியிடுவதற்கு வாய்ப்பு கொடுத்ததற்காக நன்றி சொல்லிக் கொள்கிறேன். இன்றைக்கு நம் முன்னால் இருக்கக்கூடிய ஊராட்சிமன்ற சட்டத் திருத்தத்தை நாம் ஆய்ந்து கொண்டிருக்கும்போது, அரசியல் சட்டப்பிரிவுத் திருத்தம் 64, பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தக்கூடிய நிலையில் இருக்கும்போது இந்த விவாதம் இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஒரு பாராளுமன்றம் தன்னுடைய ஆயுள் காலத்தை முடிக்கும் போது இதுபோன்ற ஒரு பெரிய சட்டத்தைக் கொண்டு வந்து இந்தியா முழுவதும் ஒரு காலனி அதிகாரத்தை உருவாக்குவது போல் செய்வது உண்மையிலே பாராளுமன்ற ஜனநாயகத்திற்கு எதிரானது என்பதுதான் என்னுடைய முதல் கருத்தாகும். ஒரு அமைச்சர் பதவி முடிகிற காலத்தில் ஏதாவது ஒரு கோப்பில் கையெழுத்துப் போட்டால் அதைக் குறை சொல்லுகிறோம், ஆயுசு முடியக்கூடிய ஒரு பாராளுமன்றம் இதுபோன்ற ஒரு பெரிய சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவது அரசியல் சட்டத்திற்கே முரணானது என்பதைத் நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

1973 ஆவது ஆண்டு ஜீவாதார உரிமைகள் பற்றிய வழக்கு கேசவானந்த பாரதி வழக்கில் மேத்யூ என்ற நீதிபதி—அவருடைய தீர்ப்பிலிருந்து மாறுபட்டாலும் அவர் அன்றைக்குச் சொன்ன, அந்தத் தீர்ப்பில் சொன்ன ஒரு கருத்தை மட்டும் நான் இங்கே சொல்கிறேன். நான் அரசியல் சட்டத்தை

மதிப்பவன். அரசியல் சட்டத்தைப் போற்றி பாதுகாப்பவன். இருந்தாலும் அந்த நீதிபதி சொன்ன வார்த்தையை நான் இங்கே சொல்லியாக வேண்டும். The validity of a Constitution is one thing; the source from which it proceeds is a different one. Apart from its validity derived from the Indian Independence Act. its norms have become effaced and a Court, which is a creature of a Constitution, will not entertain a plea of its invalidity. அங்கே ஒரு வாதத்தை வைத்திருக்கிறார்கள். அந்த அரசியல் சட்டம் மக்களால் உருவாக்கப்பட்ட அரசியல் சட்டமல்ல. அமெரிக்க நாட்டைப்போல பெரிய மாநாடுகளில் அந்தச் சட்டத்தை நிறைவேற்றியதாக வரலாறு கிடையாது என்று வாதிடும்போது அங்கே நீதிபதி மேத்யூ அந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். 1973 ஆவது ஆண்டு ஏ.ஐ.ஆர். 1922 சுப்ரீம் கோர்ட் என்பதிலே அவருடைய கருத்து இருக்கிறது. அதையும் கொஞ்சம் மேல் போய் பார்த்து அரசியல் சட்டம் முகப்புரையை பார்க்கும்போது "Preamble: We, the people of India. ." என்று போட்டு நாம் குடியரசை உருவாக்குவதற்கு முன்பே, நவம்பர் மாதம் 26 ஆம் தேதி 1949 ஆவது ஆண்டு பிரியேம்பிளை மட்டும் அரசியல் சட்டத்திற்கு முன்னால் நிறைவேற்றியிருக்கிறார்கள். "We the people of India" என்று சொல்லி நான் யாரையும் குறை சொல்வதாக எண்ணக் கூடாது. உங்களைக் கேட்டார்களா, என்னைக் கேட்டார்களா, யாரைக் கேட்டார்கள். எந்த பியூப்பிளைக் கேட்டார்கள் என்பது தான் இன்றைக்கு நான் வைக்கக்கூடிய ஒரு வாதமாகும். காரணம் 64 ஆவது சட்டப் பிரிவை பார்க்கும்போது, எங்கேயிருந்து அந்தச் சட்டம் உருவாகிறது. Where is the constituent power? They have amending power under Article 368. They can amend the Constitution. But where is the constituent power? It is not derived, because it is altering the basic structure of the Constitution. பிரதமர் சொல்லியிருக்கிறார். இது பேசிக் ஸ்ட்ரக்ச்சர்—அடிப்படை மாற்றம் இல்லை என்று சொல்லியிருக்கிறார். எனக்குத் தெரிந்ததைச் சொல்கின்றேன். என்னுடைய சட்ட அறிவுக்கு எட்டக்கூடியதைச் சொல்கின்றேன்.

With great respect to the Prime Minister, the ill-advised Prime Minister, it is alteration of the basic structure. நம்முடைய அரசியல் சட்டப் பிரிவு 40 "The State shall take steps to organise Village Panchayats and endow them with such powers and authority as may be necessary to enable them to function as units of self-government."

மாநிலத்திற்கு உள்ள அதிகாரம், நம்முடைய மாநிலங்களுக்கு வழி காட்டுவதற்குள்ள அரசு ஆணைகளில் அரசியல் சட்டப் பிரிவு 40 தெளிவாக இருக்கிறது. இந்தப் புதிய அரசியல் சட்டப் பிரிவைக் கொண்டு வந்தால்தான் இந்தியா முழுவதும் ஒரு நல்ல பஞ்சாயத்து ராஜ்ஜை உருவாக்க முடியும் என்றால் அதற்கு மேலே கூறப்பட்டிருக்கின்ற 39-ல் எல்லோருக்கும் சாப்பிடுவதற்கு உணவு, எல்லோருக்கும் வசிப்பதற்கு வீடு, எல்லோருக்கும் உடுப்பதற்கு உடை—என்று எழுதப்பட்டிருக்கிறது—39. "Citizens, men and women equally, have there right to an adequate means of livelihood." What is livelihood? இதற்கே அடிப்படை திருத்தத்தைக் கொண்டு வந்திருந்தால் வரவேற்றிருக்கலாம். காரணம் சாப்பாடு போடுவது அரசியலுக்கு அல்ல. ஒரு நாட்டு மக்களுடைய பசியைப் போக்குவது அரசியல் அல்ல. இது 39-க்காக. அடிப்படையையே மாற்றியிருந்தாலும் கூட ஏற்றிருக்கலாம். மாநிலங்களுக்கு நிதிப் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தினால் இங்கே நோட்டு அடிக்க முடியாத காரணத்தினால் அங்கிருந்து நேரடியாக எல்லோருக்கும் சாப்பாடு, எல்லோருக்கும் வீடு, எல்லோருக்கும் உடை என்று 39-ஐ திருத்தியிருப்பார்களானால் அதை வரவேற்றிருக்க முடியும். அதை விட்டுவிட்டு local self - Government என்ற வார்த்தையே போகப் போகிறது இனிமேல். 64-வது சட்டப் பிரிவு வந்தால் It is local Central Government. It is not local self-Government. ஆக நான் இதை சட்டத்தின் அடிப்படையிலே தான் சொல்கிறேன். நான் அரசியல் ரீதியாக சொல்லவில்லை. ஆகவே நான் இங்கே தெரிவித்துக்கொள்வதெல்லாம் பஞ்சாயத்துராஜ் என்பது இன்றைக்கு இருக்கக்கூடிய இந்த நிலையில் இதே முறையில்

1989 மே 11] [திரு. பி. எச். பாண்டியன்]

அரசாங்க பரிபாலனம் செய்வதுதான் சாலச் சிறந்ததாகும். அரசியலுக்காக பல மாநிலங்கள் இதை ஆதரிக்கலாம். பலபேர் கூட ஆதரிக்கலாம். ஆனால் அது முரண்பட்ட கருத்தாகும். ஏற்புடையதல்ல என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். பாராளுமன்றத்திற்கு அதிகாரம் உண்டு. 245, 246, 247 இன்னும் எந்தச் சட்டமும் கொண்டு வரலாம். அதற்கு வரையறையே கிடையாது. அவ்வளவு எஞ்சிய அதிகாரம். Residuary power under Article 247 பாராளுமன்றத்திற்கு உண்டு. அந்த அளவுக்குப் பாராளுமன்றத்திற்கு முழுமையான அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த அதிகாரத்தை வைத்து மாநிலங்களுடைய அதிகாரத்தை பறித்து விடக் கூடாது. எதற்கு நாம் இவ்வளவு வேகமாக அவசரப்பட வேண்டும்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே, பாராளுமன்றத்திற்கு இவ்வளவு அதிகாரம் இருக்கிறது. பாண்டியன் அவர்களுடைய ஆர்குமெண்ட்டுக்கு இது துணையாக இருக்கும். சட்டமன்றம் தவறு செய்தால் உடனே கலைக்கிறார்கள். டெல்லியிலே தவறு ஏற்படுமேயானால் அதை யார் திருத்துவது? யார் அதை கரெக்ட் செய்வது ?

திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே, அரசியல் சட்டத்தில் அதற்கு வழியே கிடையாது. மத்திய அரசாங்கத்தைக் கலைக்க முடியாது. மத்திய அமைச்சரவையையும் கலைக்க முடியாது. சட்டமன்றத்தைக் கலைத்தால் அமைச்சரவையையும் சேர்த்தே கலைத்துவிடுகிறார்கள். ஆனால் அங்கே மட்டும் Caretaker Ministry ஒரு அமைச்சரவை கண்டிப்பாக இருந்தாக வேண்டும். ஆகவே அங்கே ஒரு விதி விலக்கு. இன்றைக்கும் மேலே இருக்கக்கூடியவர்களுக்குப் பாதுகாப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விரைவில் முடிக்கலாம்.

(பிற்பகல் 4-20)

திரு. பி. எச். பாண்டியன் : டி. வி. யில் பிரதமருடைய பேச்சையும் கேட்டேன் பஞ்சாயத்து ராஜ் பற்றி இப்படி இந்தியா முழுவதும் பஞ்சாயத்து ராஜை உருவாக்குவதன் காரணமாக, Corruption can be eradicated at grass-root level, என்று பிரதமர் சொன்னார். அப்படியென்றால், 'ஏபெக்ஸ் லெவலிலே'

எங்கே பார்க்கிறது? கிராஸ் ரூட் லெவலுக்கு பஞ்சாயத்து ராஜ், மேலே 'ஏபெக்ஸ் லெவலுக்கு' எங்கே பார்க்கிறது அப்போது கீழே இருக்கிறவன்தான் எல்லாம். ஆகவே, இது போன்ற கருத்துக்கள் ஏற்புடையது அல்ல. இது போன்ற பெரிய சட்டத் திருத்தங்கள் வரும்போது, மாநிலச் சட்டமன்றங்களில் மட்டும் விவாதித்தால் போதாது. கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் எல்லாம் ஒரு புதிய சட்ட திருத்தத்தைக் கொண்டு வரவேண்டும் என்றால், இரண்டு, மூன்று சட்டம் வைத்திருக்கிறார்கள். முதலில் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும். பிறகு மக்களிடத்தில் செல்ல வேண்டும். பிறகு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும். ஆனால் இங்கே அப்படி அல்ல. சம்பிரதாயத்திற்காக இங்கே அனுப்பப் படுகிறது. There is no public debate, there is no convention.

பப்ளிக் டிபேட் என்றால் அந்தந்தக் கட்சியிலே பண்ணு வார்கள். ஆகவே நான் இங்கே தெரிவித்துக்கொள்வது எல்லாம் இந்த ஊராட்சி மன்றச் சட்ட மசோதாவின் மீது நடைபெறக் கூடிய விவாதத்தில்தான் இதைப் பேச முடிந்தது. காரணம் நாளைய தினம் நம்முடைய கூட்டத் தொடர் முடிகின்றது. ஆகவே இந்த வாய்ப்பை நான் பயன்படுத்திக் கொண்டேன். ஆகவே 64 ஆவது சட்டப் பிரிவைப் புதிதாக வரக்கூடிய அமென்ட்மென்ட்டை எந்தக் காலத்திலும் நாம் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்றுக்கொண்டால் The Central Government is having remote control over the State Governments and Panchayats. Remote Master. . There is a Remote Master.

இங்கே இருக்கக்கூடிய பஞ்சாயத்துக்களுக்கு இங்கே இருக்கக் கூடிய மாநிலச் சட்டமன்றம் தான் சட்டத்தை உருவாக்க முடியும். எலெக்ஷன் கமிஷன் அந்தத் தேர்தலையும் நடத்தக் கூடாது. இங்கே நம்முடைய தேர்தலை நடத்துகின்ற பாணியையே பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, நாமே நடத்த வேண்டும். இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் நாம் அதிக அதிகாரங்களைக் கேட்டுக் கொண்டிருக்கிற இந்தக் காலக் கட்டத்தில், இருக்கக்கூடிய அதிகாரங்களை விட்டு விடாதீர்கள். இந்த அதிகாரங்களைக் கையிலே வைத்துக் கொள்ளுங்கள். தமிழ்நாடு நீங்கலாக இந்தச் சட்டம் நிறை வேற்றப்படட்டும் என்ற வேண்டுகோளைத் தெரிவித்து அமை கிறேன். நன்றி வணக்கம். (குறுக்கீடு)

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வாதத்திற்கு வாதம் என்று தொடர்ந்து வாதம் செய்தால் போய்விடும் நேரம். ஏற்கெனவே உங்களுக்கு நிறைய நேரம் கொடுத்திருக்கிறேன். பேசியிருக்கி றீர்கள். பிறகு இதிலே என்ன பேசப் போகிறீர்கள் ?

திரு. குமரி அனந்தன் : ஐந்தாவது வருடத்திலே ஆயுசு முடியப்போகிற எதையும் செய்யக்கூடாது என்று சொன்னதை மட்டும்தான். அவருடைய வாதங்களிலே, அவரவருக்கு உரிமை இருக்கிற காரணத்தினாலே எல்லாவற்றையும் மறுப்பது என்னுடைய நோக்கமும் அல்ல. நீங்கள் அனுமதிக்கவும் மாட் டீர்கள். ஐந்தாவது வருடத்திலே ஆயுசு முடிகிறது. எனவே எதையும் கொண்டு வரக்கூடாது என்றால், நமக்கு இருப்பதே, மொத்தம் இருப்பதே ஐந்து. ஐந்து ஆண்டுகள் தான் ஒவ் வொன்றும். ஐந்தில் ஒரு பகுதி நாட்கள் எல்லாம் எதையும் செய்யக்கூடாது என்று ஆகிவிடும். அதனாலே மட்டும்தான் சொன்னேன். வேறு எதுவும் அல்ல. இன்று மட்டும் நாம் 17 பில்களை எடுத்துக்கொள்கிறோம், அதைப்போலவேதான் இதையும் எடுத்துக்கொள்கிறார்கள்.

திரு. பி. எச். பாண்டியன் : வேறு ஒன்றுக்கும் அல்ல. நாம் இங்கே மூன்று ஆண்டு முதலில் ஊராட்சிகளுக்கும் நகராட்சி களுக்கும் கொடுத்தோம். அது உத்தரவாதம் உண்டு. அவர்கள் ஐந்து ஆண்டுக் காலம் கொடுத்தால் உத்தரவாதம் கிடையாது. மாநில கவர்னர் நினைத்தால் கலைக்கலாம் என்ற நிலை இருக்கிறது. இன்னும் முழுமையாக அவர்கள் கருத்து வெளி யிடவில்லை. நம்முடைய அரசியல் சட்டத்திலே எங்கெங்கே எல்லாம் 'கவர்னர்' என்று எழுதப்பட்டிருக்கிறதோ அங்கே யெல்லாம் அமைச்சரவைதான். இந்தச் சட்டத்தில் எப்படிப் பட்ட நிலை எடுக்கப்போகிறார்கள் என்பது தெரியாது.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் அமைச்சர் அவர்களாலே இம்மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிற இந்தப் பஞ்சாயத்துத் திருத்தச் சட்ட முன்வடிவின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக இந்தத் திருத்தம் 1958 ஆவது ஆண்டு அடிப்படைச் சட்டத்திற்கு வருகிறது. அதற் கிடையில் 1985, 1986, 1987 ஆம் ஆண்டுகளிலே பல திருத்தங் கள் மூலம் இந்தப் பஞ்சாயத்து, பஞ்சாயத்து ஒன்றியங்களி லிருந்து அதிகாரத்தைப் பறித்ததைத் திரும்பவும் கொடுப் பதற்கு என்று ஏற்பாடு செய்ய இத்திருத்தம் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது.

[திரு. கோ. பூவராகன்] [1989 மே 11

அதற்கிடையில், இன்றைய தினம் இந்தப் பஞ்சாயத்துக்களுக்கு ஒரு முக்கியத்துவம் ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய பஞ்சாயத்தைப் பற்றி பாராளுமன்றத்திலே சட்டம் கொண்டு வர இருக்கிறார்கள். அதனால் தான் இதற்கு இன்றைய தினம் பெரிய முக்கியத்துவம் ஏற்பட்டிருக்கிறது என எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். அவ்வளவு பெரிய அவசியம் என்ன பாராளுமன்றத்திற்கு? பாரதப் பிரதமருக்கு இன்றைய தினம் நம்முடைய கிராமப் பஞ்சாயத்துக்களிலே இவ்வளவு அக்கறை ஏற்பட்டது ஏன் என்று பார்க்க வேண்டும். திடீரென்று இந்த அக்கறை எப்படி அவர்களுக்கு வந்தது? தேர்தல் முறையாக நடைபெறவில்லை என்றால் ஒழுங்காகத் தேர்தல் நடைபெற வேண்டும்; அப்படியென்று சொன்னால் எல்லா ஊர்களுக்கும் தேர்தல் முறையாக நடைபெற வேண்டும். பஞ்சாப் மாநிலத்தில் எத்தனை வருடம் ஆயிற்று தேர்தல் நடைபெறுவதற்கு? ஏன் தேர்தல் நடைபெறவில்லை? அதைப் பார்த்தால் அதற்கு என்று தனிச் சட்டம். ஒரு கிராமப் பஞ்சாயத்திற்கென்று ஒரு தனிச் சட்டமா என்றால் இல்லையென்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது, இன்றைய தினம்.

இங்கே கிராமங்களில் இருக்கின்றவர்களுடைய அதிகாரத்தை டெல்லியிலே இருக்கிறவர்கள் கையிலே வைத்து இஷ்டம் போல் ஆட்டிப் படைப்பதற்கு இடம் தரக் கூடாது என்பதற்காகத்தான் இந்தச் சமயத்திலே நான் இதைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக பஞ்சாயத்துக்களுடைய நிர்வாகம் மாநிலத்திற்கு ஏற்றவாறு, அந்தந்தச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு, அந்தந்த மக்களுடைய மன நிலைக்கு ஏற்றவாறு, கிராமப்புற சூழ்நிலைக்கு ஏற்றவாறு, அவர்களுடைய நிதி வசதிகளை ஒப்பிட்டுப் பார்த்து நல்ல முறையில் இது வரையில் நடந்து வருகிறது.

தென்னகத்தைப் பொறுத்த வரையில் பல மாநிலங்களை நாம் நேரடியாகப் பார்க்கக்கூடிய ஒரு சந்தர்ப்பம் இருக்கும் போது பஞ்சாயத்து நிர்வாகம், பஞ்சாயத்தில் நடைபெறுகின்ற காரியங்கள் செம்மையாகவும் நல்லமுறையிலும் நடைபெற்று வருகின்றன என்று பார்க்கின்றபோது நாம் பெருமைப்படலாம். ஆனால் இன்றைய தினம் எதை வைத்து இதை மத்திய அரசின் ஆட்சியின்கீழ் கொண்டு வர வேண்டுமென்று அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்று பார்த்தால் ஏதோ வேறு வேலை இல்லை, ஆகவே இந்த வேலையாவது செய்யலாம் என்ற ஒரு நினைப்பில் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள் என்றுகூட சொல்ல வேண்டியிருக்கிறது. நான் அந்த உள் கருத்துக்கு போக விரும்பவில்லை. ஏன் என்றால் அதற்கு முக்கியத்துவம் ஏற்படுவதிலே சொல்லவேண்டிய சந்தர்ப்பமும் நிலைமையும் ஏற்பட்டு இருக்கிறது. இப்போது சமீபத்திலே நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள்கூட சொன்னார்கள், இது ஏதோ பேச்சு

அளவிலேதான் இருக்கிறது. இன்னும் முடிவு பெறவில்லை என்று. குறிப்பாக ஆளும் கட்சியில் இருக்கின்றவர்கள், அந்த ஆளும் கட்சிக் கூட்டத்திலே அதாவது ஏ. ஐ.சி.சி.யிலே ஒரு தீர்மானம் போட்டு விட்டால் அது சட்ட முன்வடிவாக பாராளு மன்றத்திலே, சட்டமன்றத்திலே வரவேண்டும் என்பதுதான் நியதி. எந்த ஆளும் கட்சியாக இருந்தாலும் அந்தக் கட்சி, முதலாவதாக கட்சிக் கூட்டங்களில் ஜனநாயக முறைப்படி விவாதிக்கப்பட்டு அதிலே அவர்கள் எல்லோரும் ஒத்த கருத்தாக வந்து அந்தக் கருத்தின் அடிப்படையில் சட்டமன்றத்திலோ, பாராளுமன்றத்திலோ சட்டமுன்வடிவாசக் கொடுக்கின்ற பழக்கம் இருந்து வருவதை நாம் பார்க்கிறோம். ஆனால் இப்போது 10 ஆண்டுக்கு இடையில் ஒவ்வொரு கட்சியிலும் அந்த ஜனநாயக முறை கடைப்பிடிக்கப் படுகிறதா? காலாகாலத்திலே தேர்தல் முறையாக நடத்தப்படுகிறதா என்று பார்க்கின்றபோது இல்லை என்றுதான் நாம் சொல்ல வேண்டும். நான் இதை எழுப்பவில்லை, நம்முடைய முன்னாள் பாரத ஜனாதிபதி திரு. ஜெயில்சிங் அவர்கள் ஒரு முறை கேள்வி எழுப்பினார்கள். ஒரு கட்சி ஒரு நாட்டிலே ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற கட்சி எத்தனை தடவை ஜனநாயக முறைப்படி தேர்தலை நடத்தியிருக்கிறார்கள். ஏன் தேர்தல் நடத்தவில்லை? அப்படிப்பட்ட கட்சி இன்றைய தினம் அடிமட்டத்திலே இருக்கின்ற ஜனநாயகத்தைப் பற்றி பேசுவதற்கு என்ன உரிமை இருக்கிறது என்று அடிப்படை உரிமையைப் பற்றி அ ாகள் கேள்வி கேட்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு மாநிலத்திலும் பார்க்கின்றபோது அந்த மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களை வைத்து முறைப்படி முதலமைச்சரைத் தேர்ந்தெடுத்து, முதலமைச்சர் அவர்கள் பார்த்து அமைச்சரவையை அமைக்கின்ற ஒரு முறை இருப்பதை நாம் பார்க்கிறோம். நான் ஏன் இதை எல்லாம் சொல்லுகிறேன் என்றால், இப்போது பஞ்சாயத்து ராஜ்யத்தையும் அவர்கள் கையில் விட்டுவிட்டால் டில்லியிலே இருந்து பஞ்சாயத்து தலைவர்களை நியமிப்பார்கள்; பஞ்சாயத்து உறுப்பினர்களை நியமிப்பார்கள், சமிஷனர்களை நியமிப்பார்கள், அப்புறம் கணக்கு வழக்குகளைக்கூட அவர்கள் பார்க்சமாட்டார்கள், ஆடிட்டில் ஒரு முறை இருக்காது. யாராவது ஏதாவது தவறு சொல்ல வேண்டும் என்றால் பாராளுமன்ற உறுப்பினர்களை நாடி செல்ல வேண்டிய ஒரு நிர்பந்தத்திற்கு ஆளாகிவிடுவோம் என்ற நிலையில் நாம் போய்க் கொண்டிருப்போம். ஒரு தவறான முன் உதாரணத்தை அவர்கள் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். இதை முழுக்க முழுக்க நாம் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இல்லை என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. கோ. பூவராகன்] [1989 மே 11

இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் பஞ்சாயத்தில் நியமன உறுப்பினர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நியமிக்கப்படலாம் என்று கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த முறை சரியான முறை அல்ல. அந்தந்த பஞ்சாயத்து ஒன்றியங்களில் அந்தந்த நியமன உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அது தாழ்த்தப்பட்ட உறுப்பினர், பெண்கள்—இதில் ஏதாவது குறைவு ஏற்பட்டால் அதை அவர்கள் நியமனம் செய்து கொள்ள வேண்டும் என்பதற்கு இந்த திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு, பஞ்சாயத்துக்களுக்கு இருக்கின்ற அதிகாரத்தை இடையில் இருக்கின்றவர்கள் சட்டம் போட்டு அவ்வப்போது எல்லாம் மாற்றியிருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்றால் அரசியல் கட்சியால் ஒரு அரசியல் மாற்றம் ஏற்படுகின்றபோது பஞ்சாயத்தில், பஞ்சாயத்து ஒன்றியங்களில் ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் ஏராளமான பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் அதில் நல்ல நிர்வாகம் இருந்தாலும், நிர்வாகத்தைப் பற்றி கவலைப்படாமல், அந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் அந்தப் பொறுப்பில் இருக்கக் கூடாது. அவர்களை மாற்றுவதற்கு ஏதாவது முறை இருக்கிறதா என்று கண்டறிந்து ஜனநாயக முறைப்படி மாற்றுவற்கு மனம் இல்லாமல் அதிலே அதிகார வர்க்கத்தை வைத்துக்கொண்டு அவர்களுடைய தயவில் ஒரு சிலர் எண்ணிக்கையை அதிகப்படுத்தி கோ-ஆப்ட் என்ற முறையிலோ அல்லது வேறு முறையிலோ அவர்களை வரச் செய்து உதவித் தலைவர், தலைவர் அவர்களை தேர்ந்தெடுக்கக்கூடிய முறை இருப்பதை இன்றையதினம் தவிர்க்க வேண்டும் என்பதற்கு இந்தப் புதிய சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதை முழுக்க முழுக்க நாம் வரவேற்க வேண்டும். ஒரு கிராமப் பஞ்சாயத்தினுடைய நிர்வாகம் நல்ல முறையில் நடந்துகொண்டு இருந்தால்தான் மேல் மட்டத்தில் தொடர்ந்து பல நல்ல காரியங்கள் நடைபெறுவதற்குச் சந்தர்ப்பம் இருக்கும். எவ்வளவுதான் பணம் நாம் கொடுத்தாலும்கூட இன்றையதினம் அடி மட்டத்திற்குப் போய் சேரவில்லை என்று சொல்வதற்குக் காரணம் கிராமத்தில் இருக்கின்ற தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் ஒழுங்கான முறையிலே, நல்ல முறையிலே அமையவில்லை; அதிலே பணியாற்றுகின்ற பணியாளர்கள் சரியான முறையில் அதில் பங்கு கொள்கின்ற அளவுக்கு இல்லை என்பதால் நாம் எவ்வளவுதான் பணம் செலவிட்டாலும் முறையாகப் போய் அவர்களுக்கு எட்டவில்லை என்று குறைபட்டுக் கொள்கிறோம். அப்படி இருக்கின்றபோது இன்றைய தினம் அந்த அமைப்பின் அன்றாட நிர்வாகத்தில் அங்கே இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள், பஞ்சாயத்து ஒன்றிய அதிகாரிகள், பஞ்சாயத்து ஆணையர்கள் போன்றவர்கள் எல்லாம் நேரடியாக நிர்வாகத்திலே அவர்

களுக்கு ஒரு கட்டுப்பாடு நியதி இருப்பதை உணர்ந்து செயலாற்றுகின்றபோதே நிறைய குறைகள் இருப்பதை நாம் காணுகிறோம். அப்படிப்பட்ட நிர்வாக அமைப்பிலிருந்து மேற்கொண்டு பாராளுமன்றம் வரையில் இது போய் எட்டும் என்று சொன்னால் எந்த அளவிற்கு அது சரியாக இருக்கும் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

இந்தச் சமயத்திலே நம்முடைய ரெவின்யூ அமைச்சர் அவர்கள் இங்கே இல்லை. அவர்கள் சமீபத்திலே நடந்த மாநாட்டிலே கலந்துகொண்டுவிட்டு வந்தார்கள், தயவு செய்து நாளையோ அல்லது இன்று இருக்கின்ற நேரங்களிலோ நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அந்த மாநாட்டிலே என்ன விவாதிக்கப்பட்டது? என்ன ஏற்பாடு செய்தார்கள்? நம்முடைய கருத்துக்களாக என்ன எடுத்து வைத்தார்கள்? அவர்களுடைய மொத்த கருத்துக்கள் என்ன? எந்த எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் எவ்வாறெல்லாம் எடுத்துச் சொன்னார்கள் என்பதை ஒரு அறிக்கையின் மூலம் இந்த மன்றத்திற்குத் தெரிவித்தால் நலமாக இருக்கும் என்று நான் இந்தச் சமயத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-30)

பொதுவாக இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலம் பஞ்சாயத்துக்களுக்கு, பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு, அவர்களுக்கு ஏற்கெனவே இருந்த அதிகாரத்தைக் கொடுக்கின்ற அளவிலே இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதைப் பெரிதும் வரவேற்கின்றேன். மொத்தமாக நம்முடைய அதிகாரத்தை எங்கேயோ ஒருவர் எடுத்துக்கொள்கின்ற நிலை, பாராளுமன்றம் எடுத்துக்கொள்ளுகின்ற நிலை இருப்பதை முழுக்க முழுக்க நாம் ஆதரிக்கக் கூடாது. முதல் மட்டத்திலேயே அதை எதிர்க்கவேண்டுமென்று நான் கேட்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவில் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே. ஆர். சுந்தரம், திரு. இராமச்சந்திரன், காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் மாண்புமிகு திரு. குமரி அனந்தன், முன்னாள் சட்டப்பேரவையின் தலைவர் மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன், மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் ஆகியோர் இங்கு கருத்துக்களை எடுத்து வைத்துப் பேசியிருக்கின்றார்கள்.

இந்தச் சட்ட முன்வடிவில் ஊராட்சி ஒன்றியங்களுக்குப் புதிய அதிகாரங்கள் வழங்கப்படக்கூடிய வகையில் அரசின் சார்பாக திருத்தங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இதில் 1985 ஆம் ஆண்டு, கோ-ஆப்ட் செய்வது, நியமனத் தேர்வு செய்வது, நியமனம் இவையெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர் நிலையில் நியமனம் செய்வது என்று இருந்த நிலையை மாற்றி அந்த நியமனம் என்பதை நாம் இப்பொழுது நீக்கிவிட்டு கோ-ஆப்ட் செய்வது அந்த ஊராட்சி ஒன்றிய குழுவே; மூன்று பெண்கள், மூன்று தாழ்த்தப்பட்ட மலைஜாதி வகுப்பினர் போன்றவர்களைத் தேர்வு செய்துகொள்ளலாம் என்ற அடிப் படையில் அந்த மன்றத்துக்கே அதிகாரம் வழங்கப்படுகிறது. அதைப்போல பல்வேறு அதிகாரங்களை வழங்கக்கூடிய வகையில் இந்தப் புதிய சட்ட முன்வடிவிலே இங்கு நாம் சொல்லியிருக் கிறோம்.

அதைப் போல நியமிக்கப்படும் முறை நீக்கப்படுகிறது. 1-ஏ மற்றும் 1-சி, மேலும் ஒன்றியத்திலுள்ள ஊராட்சிகளின் எண் ணிக்கையைக் கருத்தில் கொள்ளாமல் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் முன்பு இருந்தது போல ஒரே சீராக 3 பெண்கள் மற்றும் 3 தாழ்த்தப்பட்ட மலைஜாதியினர் இருக்கும் வகையில் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக் கிறது. மூன்று மாத காலத்திற்குள் கோ-ஆப்ட் செய்யவில்லை என்றால் நேரடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் நியமனம் செய்யலாம் என்று இருந்ததை நாம் ரத்து செய்து ஊராட்சி ஒன்றியக் குழுவிற்கே அந்த அதிகாரம் வழங்கப்படுகிறது.

அதைப் போல பல்வேறு அதிகாரங்களைத் தந்து இந்தச் சட்டத் திருத்தத்திலே நாங்கள் விரிவாகச் சொல்லியிருக்கிறோம். நேரம் இல்லாத காரணத்தினாலே அவற்றையெல்லாம் சொல் வதற்கு வாய்ப்பில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் படித்து இருப்பார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ஆர். சுந்தரம் அவர்கள் ஊராட்சி மன்றத் தலைவர்களை எல்லாம் அழைத்து அவர்கள் கருத்துக்களைக் கேட்கவேண்டுமென்று இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு கேட்டார்கள். ஏற்கெனவே ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள், நகர்மன்றத் தலைவர்கள் ஆகியவர்கள் கருத்துக்களை எல்லாம் இந்த ஆட்சி கேட்டுத்தான் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே அவர்களுடைய கருத்தும் அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து கொண்டிருக்கிறது. விரைவில் அவர்களை எல்லாம் அழைத்துப் பேசுவோம் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, துணைத் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பது, முன்பு ஊராட்சி ஒன்றியக்

குழுக்களால் நடைபெற்றது. அவர்களுக்கு அந்த அதிகாரம் இருந்தது. இடையிலே அதை மாற்றி அந்த அதிகாரத்தை ஆர். டி. ஓ. மூலம், அவர் கூட்டத்தைக் கூட்டுவது, அதிலே போய் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் கலந்து கொண்டு, துணைத் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பது என்ற முறையை தங்கள் வசதிக்காக முன்பு ஆட்சியிலே இருந்தவர்கள் கொண்டு வந்தார்கள்.

அதை இப்போது ரத்து செய்து மீண்டும் துணைத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தை ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கே கொடுத்து அவர்களுடைய தலைமையிலேயே துணைத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று நாம் கொண்டு வந்திருக்கிற திருத்தத்தைப் பாராட்டிப் பேசினார்கள்.

மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்கள் பெண்களுக்கு 30 சதவிகித வாய்ப்பு, அரசியல் சட்டத் திருத்தம் 64-ஐத் திருத்தம் செய்து, உள்ளாட்சி அமைப்புகளில் அவர்களுக்குத் தர இருக்கிறோம்—தாழ்த்தப்பட்ட மலைஜாதியினருக்கு—என்றெல்லாம் சொன்னார்கள். இந்தியாவில் இருக்கிற ஒவ்வொரு மாநிலத்திலும் இந்த உள்ளாட்சி அமைப்பில் ஒவ்வொரு முறை கையாளப்படுகின்றது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரைக்கும் இரண்டு அடுக்கு முறையாக வைத்து மிகச் சிறப்பாக, மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக் காட்டாக இருக்கக்கூடிய வகையில், வழி காட்டக்கூடிய வகையில் ஊராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

மாவட்ட அளவில் மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டம் நடைபெறுகிறது. அங்கே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள், நகர்மன்றத் தலைவர்கள் எல்லாம் கலந்துகொண்டு அவர்களுக்கு உள்ள சங்கடங்களை அல்லது அந்தப் பகுதியில் உள்ள நிலைமைகளை அந்தக் கூட்டத்திலே எடுத்துச் சொல்லுகிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கே வருகின்ற மற்ற அதிகாரிகளை எல்லாம் கேட்டு நடவடிக்கை எடுப்பதற்கும் ஒரு வாய்ப்பு இருக்கிறது.

ஆனால் இந்தச் சட்டத்தை—அரசியல் சட்டப் பிரிவு 64-ஐத் திருத்துவதன்மூலம் நேரடியாக ஒரு ஏஜென்ஸியை அவர்களே அமைத்துக் கொள்வது போல இன்றைக்குத் தெரிவிக்கின்ற கருத்தை நாங்கள் எதிர்கிறோம். அதைத்தான் முன்னாள் பேரவைத் தலைவர் திரு. பி. எச் பாண்டியன் அவர்களும் இங்கே சுட்டிக் காட்டினார்கள்.

இதிலே தாழ்த்தப்பட்டவர்களுக்கு, பெண்களுக்கு 30 சதவீதம் தரப்பட வேண்டும். இதை அந்த மாநில அரசாங்கமே செய்யலாம். இப்படிச் செய்தால் என்னவென்று நமக்கு ஆலோசனை வழங்குவார்களேயானால் நாமே கூட அதைச் செய்யலாம். ஆனால், அரசியல் சட்டத்தைப் பயன்படுத்தி உள்ளாட்சிகளின் அதிகாரத்தை அவர்கள் எடுத்துக் கொண்டுதான் செய்ய வேண்டுமென்று இல்லை. அதைத்தான் எங்களுடைய கருத்தாக இங்கே தெரியப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

வேண்டுமானால் நம்முடைய காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்களே கூட இந்தியாவின் பிரதமருக்கு இதைத் தெரியப்படுத்தலாம். நம்முடைய மாநிலத்திலே பெண்களுக்கு 30 சதவீதம் வேலை வாய்ப்பு என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் பெண்களுக்குச் சொத்தில் பங்கு உண்டு, ஆண்களுக்கு என்ன உரிமையோ அந்த உரிமை பெண்களுக்கும் உண்டு என்று இப்போது சட்டம் இயற்றி இருக்கிறார்கள்.

(பிற்பகல் 4-40)

இதைப்போல் அகில இந்திய அளவில் நடைமுறைப்படுத்தும் அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு முயற்சி செய்யுங்கள். அது பலன் தரும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டால் அதைக்கூட நாமும் இந்த மன்றத்தின்மூலம் எல்லோரும் ஆதரிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். அதையெல்லாம் விடுத்து இன்றைக்கு மாநில அரசாங்கத்தின் அதிகாரத்திற்குள்ளே இருக்கிற ஊராட்சி மன்றங்கள்—மேற்பார்வையில் என்று கூட வைத்துக் சொள்ள லாம்—பேரூராட்சி மன்றங்கள், போன்றவற்றில் எப்படிப்பட்ட பிரச்சினைகள் எல்லாம் நாள்தோறும் எழுப்பப்படுகின்றன; உருவாக்கப்படுகின்றன என்பதை எல்லாம் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். எனவே இவற்றை மத்திய சர்க்காரின் நேரடிப் பார்வையின்கீழ் செயல்படுத்தக் கூடிய முறையில் கொண்டு வருவதைத்தான் தவிர்க்க வேண்டும். மக்களுடைய கருத்தைக் கேட்க வேண்டும். அவசரப்பட்டு இப்படிப்பட்ட முடிவுக்கு வரக்கூடாது என்று இந்த ஆட்சியின் சார்பாக தெளிவாக, திட்டவட்டமாக நான் எடுத்துச் சொல் கிறேன்.

இன்னும் சொல்லப்போனால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றக் கூட்டம் நடந்து கொண்டு இருக்கிறது; இந்த மன்றத்தினுடைய பொன் விழா நடந்து கொண்டிருக்கிறது; ஆகவே 15 ஆம் தேதியிலிருந்து 30 ஆம் தேதிக்குள் நீங்கள் முதலமைச்சர்களின் மாநாட்டைக் கூட்டினால்

நான் கலந்து சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று இந்தியாவினுடைய பிரதமருடைய அழைப்பை ஏற்று பெருந் தன்மையோடு நிலைமையை எடுத்துச் சொல்லி, ஐந்தாம் தேதி வாக்கில் கூட்டப்படுகிற மாநாட்டைச் சொஞ்சம் தள்ளி வையுங்கள் என்று கேட்டார்கள். அதற்குக் கூட வாய்ப்பு அளிக்காமல், இல்லை, இல்லை, மாநாட்டை நடத்தியேதான் தீருவேன் என்று சொல்வதிலிருந்து எந்த அளவுக்கு நாட்டு மக்களை மதிக்கவேண்டும். ஒரு மாநிலத்தை மதிக்க வேண்டும் என்ற உணர்வு மத்தியில் இருப்பவர்களுக்கு இருக்கிறது என்பது நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. எப்படி இருப்பினும் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் சொன்னது போல் இந்த மாநிலத்தினுடைய உரிமையை விட்டுக் கொடுக்க இந்த அரசு என்றைக்கும் தயாராக இருக்காது என்பதை மட்டும் நான் இங்கே தெரியப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்கள் ஏன் அவர்களுக்குத் திடீர் அக்கறை வந்துவிட்டது என்று கேட்டார்கள். எடுத்துக் கொண்டவர்களைப் பார்த்துக் கேட்டால்தான் தெரியும். நமக்குத் தெரியாது. எல்லாம் பதவி மோகம்தான். அந்த மோகத்தில் ஏற்படுகிற, அவசரத்தில் அள்ளித் தெளித்த கோலம் போல, நடைபெறுகிற காரியமாகத்தான் இது இருக்கிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை என்பதை மட்டும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

பல்வேறு அதிகாரங்களை ஊராட்சி ஒன்றியக் குழுவுக்கு வழங்க இருக்கிற இந்தச் சட்ட முன்வடிவு பற்றி பல கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கிறீர்கள். இந்த நேரத்தில் ஒன்றை மட்டும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தமிழகத்திலே ஊராட்சி ஒன்றிய அமைப்புக்களை ஊக்கப்படுத்த வேண்டும்; அதற்கு அதிகாரம் வழங்க வேண்டும்; மாநில அரசு செய்யக்கூடிய திட்டங்களை இந்த ஊரக உள்ளாட்சித் துறை மூலம் சிறப்பாகச் செயல்படுத்த வேண்டும் என்று அக்கறை கொண்டிருக்கிற நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, உடனடியாக 10 நாட்களில் ஊராட்சி ஒன்றியக் குழுவினுடைய தலைவர்கள் மாநாடு, நகராட்சி மன்றத் தலைவர்கள் மாநாடு ஆகியவற்றை எல்லாம் கூட்டி கருத்துக்களைக் கேட்டு இப்போது இவ்வளவு அதிகாரங்களை நாம் வழங்குகிறோம். என்னை ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் எல்லாம் வந்து சந்தித்து பேசுகிறபோது சொன்னார்கள். ஒரு முறை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டால் ஊராட்சி மன்றத் தலைவர்கள், பேரூராட்சி மன்றத் தலைவர்கள் போன்றவர்களை எல்லாம் வைத்து, தகுந்த அதிகாரிகளைக் கொண்டு

ஊராட்சி மன்றக் கூட்டங்களை எப்படி நடத்துவது, நிதியாதாரத்தை எந்தெந்த வகையில் ஈட்டிக் கொள்வது, அவர்களுடைய வரவு—செலவுக் கணக்கை எப்படி வைத்துக் கொள்வது, எந்தெந்த இனத்தின்கீழ் அரசாங்கத்தினுடைய மானியம் அவர்களுக்குக் கிடைக்கிறது. அதை அவர்கள் எப்படி எல்லாம் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற வகையில் எல்லாம் முன்பு அவர்களுக்கு ஒரு பயிற்சி தரப்பட்டது. ஆனால் கடந்த காலத்தில் அத்தகைய பயிற்சி இல்லை. ரொம்பப் பேருக்கு அது மறந்து விட்டது. ஆகவேதான் இந்த ஆட்சியைப் பொறுத்த வரையில் ஒரு முடிவு எடுத்து இருக்கிறோம். நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் மாதம் 3 ஆம் தேதி தமிழ்நாடெங்கும் ஊராட்சி மன்றத் தலைவர்களுடைய பயிற்சி முகாம் ஒரு நாள் நடத்தப்படும்; அதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. குமரி அனந்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலங்களுடைய முதல்வர்கள் மாநாட்டை, இங்கே பொன் விழா இருப்பதால் தள்ளி வைத்துக் கொள்ளலாம் என்று கேட்டதெல்லாம் உண்மைதான். அவர்கள் அவ்வாறு தள்ளி வைத்து நடத்துவதற்குரிய சூழ்நிலை சரியாக இல்லையோ என்னவோ தெரியவில்லை. ஆனால் நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னதைச் சொல்கிறேன். 'நீங்கள் வருவதை நாங்கள் விரும்புகிறோம்; நீங்கள் வரவில்லை என்றால் உங்கள் சார்பிலே யாரையாவது அனுப்பி வைக்க வேண்டும் என்று ஷீலா தீட்சித் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்' என்று சொன்ன அளவுக்குத்தான் இங்கே தகவல் தெரிவித்தார்கள். எனவே நமது தமிழ்நாட்டினுடைய பிரதிநிதித்துவம் அவர்களுக்கு வரவேண்டுமென்பதிலே மத்திய அரசு மிகுந்த அக்கறையோடு இருந்தது என்பதை மட்டும் நான் உங்களுக்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

1989 மே 11]

பிரிவுகள் 2 முதல் 14 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1989) நிறைவேற்றப்பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(எ) மாநகராட்சிச் சட்டங்கள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதன் மீது விவாதத்தைத் தொடங்குபவர் திரு உ. ரா. வரதராசன் அவர்கள்.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட முன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சார்பிலே வரவேற்று சில கருத்துக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

நம்முடைய மாநகராட்சிகள், அவற்றிலே வாழ்கின்ற மக்களுடைய நிலைமை எல்லாம் எப்படி இருக்கின்றன, அவை மாநகராட்சியினுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்

* 3—5—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

பிரிவுகள் 2 முதல் 14 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1989) நிறைவேற்றப்பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(எ) மாநகராட்சிச் சட்டங்கள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதன் மீது விவாதத்தைத் தொடங்குபவர் திரு உ. ரா. வரதராசன் அவர்கள்.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட முன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சார்பிலே வரவேற்று சில கருத்துக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

நம்முடைய மாநகராட்சிகள், அவற்றிலே வாழ்கின்ற மக்களுடைய நிலைமை எல்லாம் எப்படி இருக்கின்றன, அவை மாநகராட்சியினுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்

* 3—5—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

மூலமாக செம்மையுற நடத்தப்படவேண்டும். தேர்ந்தெடுக்கப் பட்டவர்களிலே ஆதி திராவிடர்கள், பெண்கள் ஆகியோருக்கு இடம் இருக்க வேண்டுமென்ற கருத்துக்கள் சாலச் சிறந்தவை. அவற்றிற்கு இந்தச் சட்ட முன்வடிவு வடிவம் கொடுக்கிறது என்ற முறையிலே இதை வரவேற்கிறேன்.

சென்னை மாநகராட்சியை எடுத்துக்கொண்டால், இது நூறு வட்டங்களைக் கொண்ட மாநகராட்சியாக இருந்து, 150 வட்டங்களாக உருவாக்கப்பட்டது. புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளிலே இருப்பவர்கள் எல்லாம், உள்ளாட்சி அமைப்பு களின் கீழே தனியாக இருந்தாலே ஒரு சமூகக் கூடமாவது கிடைத் திருக்கும். இப்போது அதுகூட இல்லை. மாநகராட்சியிலே இணைக்கப்பட்ட காரணத்தினாலே, அவர்களுடைய அடிப்படை வசதிகள் எதுவும் கவனிக்கப்படுவதில்லை என்ற குறையோடு இருக்கின்றார்கள். சென்னை மாநகராட்சி முழுவதிலேயும் பல தெருக்கள், தனியார் தெருக்கள் என்று அழைக்கப்பட்டு அங்கு எந்தவிதமான அடிப்படை வசதிகள், கழிவுநீர் சாக்கடை வசதி, தெருவிளக்கு போன்றவைகூட அனுமதிக்கப்படாமல் இருந்துகொண்டு இருக்கின்றன. அவையெல்லாம் மாநகராட்சி யாலே ஏற்கப்பட்டு அந்தந்தத் தெருவிலே குடியிருக்கக்கூடிய அடித்தலத்து மக்களுக்கும் அடிப்படை வசதிகளைச் செய்து தரவேண்டுமென்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே கழிவுநீர் அகற்றுவதற்கு இருக்கக்கூடிய ஏற்பாடு என்பது மிக மிக சொற்பமாகவே இருந்துகொண்டிருக்கின்றது. கழிவு நீர் கால்வாயினுடைய பராமரிப்பு சரியாக இருப்பதில்லை. இங்கே இருக்கக்கூடிய ஓடைகள் அல்லது கூவம், பக்கிங்காம் கால்வாய், அடையாறு போன்றவற்றிலே பார்த்தீனியம் செடிகள் வளர்ந்து அங்கே, புல், கொசுப் பண்ணைகளாகவே மாற்றப் பட்டிருக்கின்றன. அதனால் சுகாதாரம் கெடுகிறது. அதே போல் என்னுடைய தொகுதியிலே 76 ஆவது வட்டத்திலே நெசப்பாக்கத்திலே ஒரு புல் பண்ணை இருக்கிறது. அந்த புல் பண்ணை அந்த 76 ஆவது வட்டம் முழுவதற்கும் வியாதி களைப் பரப்பக்கூடிய அளவுக்கு கொசுக்களை, உற்பத்தி செய்யக் கூடிய அளவுக்கு கொசுப்பண்ணையாகவே இருந்துகொண்டு இருக்கின்றது.

வில்லிவாக்கம் பகுதியிலே பாதாளச் சாக்கடைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டும் இன்னும் நிறைவேற்றப்படாமல் நீடிக் கிறது. அதை விரைந்து நிறைவேற்ற வேண்டும். அதற்காக அங்கு வீதிகள் தோண்டப்பட்ட நிலையிலே அந்தப் பகுதியிலே வழக்கமாக இருக்கின்ற போக்குவரத்து வசதிகூட பாதிக்கப்பட் டிருக்கிறது. அதை விரைந்து நிறைவேற்ற அரசாங்கம் நட வடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கோருகிறேன்.

சென்னை மாநகராட்சியையொட்டி இருக்கக்கூடிய பாடி பகுதியிலே அமைந்திருக்கக்கூடிய டி. வி. கம்பெனிகள் போன்றவை வெளியிடுகின்ற கழிவுகள் எல்லாம் சாக்கடை வழியே, 33 ஆவது வட்டம், அகத்திய நகர் போன்ற பகுதிகளிலே, எல்லாம் வழிந்துகொண்டு வருகின்றன. அவை அந்தப் பகுதிகளில் இருக்கிற மக்களின் ஆரோக்கியத்தை பாதிக்கக்கூடியதாக இருக்கின்றன. இப்படிப்பட்ட கழிவு நீரை, திறந்தக் கால்வாய்கள் மூலமாக வெளியேற்றாமல், மூடிய கால்வாய்களை அமைக்க வேண்டியது மிக மிக அவசியம். அந்தந்த கம்பெனிகள் இவற்றை, மாசு கட்டுப்படுத்தக்கூடிய ஏற்பாட்டை செய்ய வேண்டுமென்பது மிக மிக அவசியம்.

(பிற்பகல் 4-50)

அடுத்து மாநகராட்சிப் பணிகளை நன்கு நிறைவேற்ற குடிநீர் வடிகால் வாரியம், மின் வாரியம், மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஆகியவற்றிற்கும் மாநகராட்சிக்கும் இதையே இணக்கமான செயல்பாடுகள் இருப்பதில்லை. குடிநீர் வடிகால் வாரியம் கழிவு நீரேற்று நிலையம் அமைக்க வேண்டுமென்று மாநகராட்சிக்கு எழுதுகிறார்கள். மாநகராட்சி அதற்கான இடத்தைக் கொடுத்தால்தான் அதைச் செய்ய முடியும். அதற்கு மாதக் கணக்கில், ஆண்டுக் கணக்கில் ஆகிறது. எனவே ஒரு இணக்கமான செயல்பாட்டை ஒருங்கிணைப்பை ஏற்படுத்தினால்தான் மாநகராட்சிப் பணிகள் சிறப்பாக நடக்க உதவியாக இருக்குமென்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து சென்னையில் அதிகமாக இருக்கக்கூடிய பகுதிகள் குடிசைப் பகுதிகள்தான். குடிசை மாற்று வாரியம் சிலப் பணிகளை செய்தாலும்கூட, அந்த குடிசை மாற்று வாரியம் ஏற்படுத்தும் பகுதிகளானாலும் இன்னும் குடிசைகளாகவே இருக்கும் பகுதிகளானாலும் அங்கே அடிப்படை சுகாதார வசதிகள் சொற்பமாக இருக்கின்றன. அவை கேட்பாரற்ற நிலையில் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருத்தத்தின்மீது பேசுகிறார்களா அல்லது மாநகராட்சி பற்றிய வர்ணனையா ?

திரு. உ. ரா. வரதராசன்: தலைவர் அவர்களே, திருத்தத்தினை ஒட்டி மாநகராட்சி பற்றிய குறைகளைச் சொல்லுகிறேன். இப்படிப்பட்ட திருத்தங்களோடு வரும் இந்த சட்ட முன் வடிவு நிறைவேறி மாநகராட்சித் தேர்தல்கள் நடைபெற்றாலும்கூட, இப்படிப்பட்ட குறைபாடுகளைப் போக்கும் அளவுக்கு மாநகராட்சியில் உறுப்பினர்களாக பங்கேற்பவர்கள்

பணியாற்றும் அளவுக்கு செம்மையான ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

திருமதி பி. லட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிகளில் ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்குப் பிரதிநித்துவம் கொடுக்கும் இந்தச் சட்டமுன் வடிவின்மீது என்னுடைய கருத்துக்களை வழங்க அனுமதி அளித்ததற்காக பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள் பெண்களுக்கு 30 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்திருந்தார்கள். மாநகராட்சி தேர்தலிலேயும் 30 சதவிகிதம் இட ஒதுக்கீட்டை பெண்களுக்காக ஒதுக்கி தேர்தல்களை நடத்துவார்களானால் கோ-ஆப்ட் செய்யப்படுகிற அந்த நிலைமை உண்டாகாது. எனவே பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கின்ற வகையில் 30 சதவிகிதம் ஒதுக்கும் வகையில் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ரிசர்வ் தொகுதிகளில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் வேட்பாளர்களாக நிற்க வேண்டுமென்ற நிர்ணயம் சட்டமன்றத் தேர்தலுக்கு இருப்பது போல், மாநகராட்சித் தேர்தல்களிலும் குறிப்பிட்ட ஒரு சில வார்டுகளை பெண்களுக்கு ரிசர்வ் செய்ய வேண்டுமென்று கூறி அதற்குச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமென்று பெண்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் நியமன உறுப்பினர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நியமித்தார்கள். எனவே நியமன உறுப்பினர்கள் ரத்து செய்யப்பட வேண்டுமென்றும், நியமன உறுப்பினர்கள் இருக்கக்கூடாது என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மட்டும்தான் அந்த இடத்தில் அங்கம் வகிக்க வேண்டுமென்றும், ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் இப்போது மாநகராட்சி தேர்தல்களில் மட்டும் இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஊராட்சி மன்ற தேர்தல்களுக்கு வேண்டாமென்று ஒதுக்கி வைத்து விட்டு, மாநகராட்சி தேர்தல்களுக்கு மட்டும் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து கோவாப்ட் செய்ய வேண்டுமென்று நிர்ணயித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 30 சதவிகிதம் பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்ததைப் போலவே மாநகராட்சி மன்றத் தேர்தல்களிலும் கொண்டு வந்து அதை நிறைவேற்றித் தர வேண்டும் என்றும் எங்களுடைய புரட்சித் தலைவர்

அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் பெண்களுக்கும் தாழ்த் தப்பட்ட சமுதாய மக்களுக்கும் உள்ளாட்சித் தேர்தல்களில் முக்கியத்துவம் அளித்து அந்தத் தேர்தலை நடத்தினார் என்பதைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி மன்றம் குறித்த திருத்தச் சட்ட முன்வடிவின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வரதராஜன் அவர்களும் திருமதி இலட்சுமி அவர்களும் இங்கே கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராஜன் அவர்கள் பேசும்போது மாநகராட்சித் தேர்தல்கள் நடை பெறாத காரணத்தால் மாநகரத்தில் மக்களுக்கு ஏற்பட்டி ருக்கிற சங்கடங்களை விளக்கிக் காட்டி அவையெல்லாம் போக்கப்படுவதற்கு சில நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார்கள், அந்தக் கருத்தின் அடிப்படையில்தான் இந்த ஆட்சி, தேர்தல் நடைபெறுகிறவரை அதிகாரிகளைக் கொண்டு, நகரத்தில் வாழ்கிற மக்களைப் பாது காக்க வேண்டும்—அவர்கள் சுகாதாரத்தோடு இருக்க வேண்டும் என்று நடவடிக்கை எடுத்திருக்கிறது. தொடர்ந்து அந்த நடவடிக்கைகளில் அரசு ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி லட்சுமி அவர்கள் இந்த ஆட்சியில் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியில்—பெண் களுக்கு அரசாங்க வேலை வாய்ப்புகளில் 30 சதவீதம் ஒதுக்கீடு என்று அறிவித்திருப்பதைப் போல், மாநகராட்சிகளுக்கு நடைபெறுகிற தேர்தல்களிலும் 30 சதவீத இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று பேசினார்கள். வேலை வாய்ப்பு வழங்குவது வேறு; தேர்தல்களில் அவர்களுக்கு என்று தனி ஒதுக்கீடு செய்து தருவது என்பது வேறு. ஆனால் ஏற்கெனவே இந்த அவையில் சட்ட முன்வடிவு வைக்கப்பட்ட பிறகு, அரசின் சார்பில்—அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில்—நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல திட்டத்தை அறிவித்து அதை அரசாங்கத்தின் திருத்தமாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் சுற்றுக்கு விடப்பட்டது.

1972 ஆம் ஆண்டுக்கு முன்பு சென்னையைப் பொறுத்த வரை ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்களுக்கு 12 இடங் களும், பெண்கள் 6 பேர்களும் கோ-ஆப்ட் செய்து கொள்கிற முறை இருந்தது. இது ஒன்றும் நியமனம் அல்ல. மாநகராட்சியே பார்த்து கோ-ஆப்ட் செய்து கொள்வது. 1972 ஆம் ஆண்டுக்குப் பிறகு திருத்தப்பட்ட சட்டப்படி ஆதிதிராவிடர்

மற்றும் மலைவாழ் ஜாதியினர் 15 பேர்களும், பெண்கள் 8 பேர்களும் கோ-ஆப்ட் செய்து கொள்கிற முறை இருந்தது. இப்போது புதிய சட்டத் திருத்தப்படி ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் ஜாதியினருக்கு 20 வார்டுகள் தனியாகவே ஒதுக்கப் படுகிறது. பெண்களுக்கு 15 வார்டுகள் ஒதுக்கப்படு கின்றன. ஆதிதிராவிடர் மற்றும் மலை ஜாதியி னர் 5 பேரும் பெண்கள் 10 பேரும் மாநகராட்சியே பார்த்து கோ-ஆப்ட் செய்து கொள்ளலாம். அதைப் போலவே மதுரை மாநகராட்சியில் மொத்தம் 65 வார்டுகள் இருக்கின்றன. 1971 ஆம் ஆண்டு சட்டப்படி ஆதிதிராவிடர் மற்றும் மலை வாழ் ஜாதியினர் 3 பேரும் பெண்கள் 3 பேரும்தான் கோ-ஆப்ட் செய்து கொள்ள வசதியிருந்தது.

(பிற்பகல் 5-00)

1978 ஆம் ஆண்டு சட்டத் திருத்தப்படி ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் சாதியினர் 5 பேரும், பெண்கள் 5 பேரும் கோ-ஆப்ட் செய்துகொள்கின்ற முறை இருந்தது. இப்போது அதிலேயும் மாற்றம் செய்து புதிய திருத்தச் சட்டப்படி 8 வார்டுகள் தனியாக ஆதிதிராவிடர் மற்றும் மலை சாதி யினர் போட்டியிடும் வகையிலும் பெண்களுக்கு 6 வார்டுகளும் ஒதுக்கப்படுகிறது. கோ-ஆப்ட் செய்து கொள்வது 2 பேர் ஆதிதிராவிடர் மற்றும் மலை சாதியினருக்கும் அதைப்போல பெண்கள் 4 பேர் என்று இப்போது செய்து இருக்கின்றோம்.

கோவை மாநகராட்சியைப் பொறுத்தவரை 60 வார்டுகள் இருக்கின்றன. இந்த 60 வார்டுகளில் 1981 ஆம் ஆண்டு சட்டத் திருத்தப்படி ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் சாதி யினர் 5 பேரும், பெண்கள் 5 பேரும் கோ-ஆப்ட் செய்து கொள்ளும் முறை இருந்தது. இப்போது புதிய சட்டப்படி ஆதிதிராவிடர் மற்றும் மலைசாதியினர் 8 தொகுதிகளிலும், 6 தொகுதிகள் பெண்களுக்கு என்று ஒதுக்கப்பட்டு, அதிலே அவர்கள்தான் போட்டியிட முடியும். அதிலே கூட ஆதி திராவிடர் மற்றும் மலைசாதியினர் 2 பேர், பெண்கள் 4 பேர் கோ-ஆப்ட் செய்து கொள்கின்ற முறை கொண்டு வரப்பட்டு இருக்கிறது. ஆகவே இவற்றை எல்லாம் பார்த்தால் இது வரை மாநகராட்சியினுடைய வரலாற்றிலேயே இல்லாத அளவுக்குத் தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று தனியாக— சென்னையைப் பொறுத்தவரை 20 இடங்கள் 5 ஆண்களும், 10 பெண்களும் கோ-ஆப்ட் செய்துசொள்கின்ற முறை வரலாற்றிலே இல்லாத அளவுக்கு இந்த ஆட்சி பொறுப்பேற்று நம்முடைய முதலமைச்சரவர்கள் அனுமதியோடு இங்கு இந்தச் சட்டத்தை நிறைவேற்றுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி).

அதைப்போலத்தான் மதுரை, அதைப்போலத்தான் கோயம்புத்தூர். ஆகவே திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்தவரைக்கும் நம்முடைய தமிழினத் தலைவர்

முதலமைச்சர் கலைஞர் அவர்களைப் பொறுத்தவரைக்கும் நாட்டு மக்களுக்குத் தந்த வாக்குறுதியை நிறைவேற்றக்கூடிய வகையில் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் நலனைக் கொண்டு அது உள்ளாட்சி அமைப்புத் தேர்தலாக இருந்தாலும் சரி அல்லது அரசாங்கத்தினுடைய சமுதாய நலத் திட்டப் பணிகளானாலும் சரி, அந்த அடிப்படையிலே தான் நாங்கள் அடி எடுத்து வைக்கிறோம் என்பதற்கு முதல் சாட்சியாக இந்தச் சட்டத் திருத்தம் நிறைவேற்றப்படவேண்டும் என்பதற்காகத்தான் இங்கு சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டு இருக்கிறது என்பதைக் கூறி முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி?

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 2, சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்".

மாண்புமிகு திரு வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"In Clause 2, *for* sub-clauses (1) and (2), *substitute* the following sub-classes namely:—

(1) In sub-section (1), for the words "Subject to the provisions of sub-section (4), the council shall consist of one hundred and fifty councillors elected" the words "The council shall consist of one hundred and fifty councillors elected and fifteen councillors co-opted" shall be substituted.

(2) for sub-sections (2) to (4), the following sub-sections shall be substituted, namely:—

(2) Among the elected members of the Council, twenty members shall be members of the Scheduled Castes and Scheduled Tribes and fifteen members shall be women and the State Government may, by notification, from time to time, specify in accordance with such rules as may be prescribed, the divisions in respect of which such members of the Scheduled Castes and Scheduled Tribes and women are to be elected.

(3) The elected members of the council shall, at the first meeting of the council after each ordinary election to the council, co-opt to itself as councillors, in accordance with such procedure as may be prescribed:—

(i) five persons belonging to Scheduled Castes and Scheduled Tribes, and

(ii) ten persons who are women:

Provided that no person shall be co-opted under this sub-section unless such person is eligible for being elected as a councillor from any one of the divisions.

Provided further that the councillors so co-opted shall have all the rights, powers and privileges of an elected councillor''.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 2, சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 2 நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 2, திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 3.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''பிரிவு 3 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்''.

1989 மே 11]

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

"**For Clause 3, substitute** the following, namely:—

"3. In section 5 of the Madurai City Municipal Corporation Act, 1971, for sub-sections (2) and (3), the following sub-sections shall be substituted, namely:—

"(2) The Council shall consist of such number of members as may be determined under sub-section (1) and elected in the manner laid down in this Act and six councillors co-opted in the manner laid down in sub-section (4).

(3) Among the elected members of the council, eight members shall be members of the Scheduled Castes and Scheduled Tribes and six members shall be women and the Government may, by notification, from time to time, specify in accordance with such rules as may be prescribed, the wards in respect of which such members of the Scheduled Castes and Scheduled Tribes and women are to be elected.

(4) The elected members of the council shall, at the first meeting of the Council after each ordinary election to the Council, co-opt to itself as Councillors, in accordance with such procedure as may be prescribed,—

(i) two persons belonging to the Scheduled Castes and Scheduled Tribes; and

(ii) four persons who are women;

Provided that no person shall be co-opted under this sub-section unless such person is eligible for being elected as a Councillor from any one of the wards:

Provided further that the Councillors so co-opted shall have all the rights, powers and privileges of an elected Councillor".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

பிரிவு 3, சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 3 நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 3, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 4.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி;

''பிரிவு 4, சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்''.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்;

"**For clause 4, substitute** the following, namely:—

4. In section 5 of the Coimbatore City Municipal Corporation Act, 1981. for sub-sections (2) and (3) the following sub-sections shall be substituted namely:—

"(2) The Council shall consist of such number of members as may be determined under sub-section (1) and elected in the manner laid down in this Act and six councillors co-opted in the manner laid down in sub-section (4).

(3) Among the elected members of the council, eight members shall be members of the Scheduled Castes and Scheduled Tribes and six members shall be women and the Government may, by notification, from time to time, specify in accordance with such rules as may be prescribed, the divisions in respect of which such members of the Scheduled Castes and Scheduled Tribes and women are to be elected.

(4) The elected members of the Council shall, at the first meeting of the council after each ordinary election to the Council, co-opt to itself as Councillorss in accordance with such procedure as may be prescribed:—

(i) two persons belonging to the Scheduled Castes and Scheduled Tribes; and

(ii) four persons who are women;

1989 மே 11] [திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்]

Provided that no person shall be co-opted under this sub-section unless such person is eligible for being elected as a Councillor from any one of the divisions:

Provided further that the councillors so co-opted shall have all the rights, powers and privileges of an elected Councillor.''

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி

''பிரிவு 4, சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 4 நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 4, திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1989) திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு, திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப்பெற்றது.

(ஏ) மதுவிலக்கு (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989

மாண்புமிகு திரு. எஸ். ஜே சாதிக்பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்.''

* 4—5—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

Provided that no person shall be co-opted under this sub-section unless such person is eligible for being elected as a Councillor from any one of the divisions:

Provided further that the councillors so co-opted shall have all the rights, powers and privileges of an elected Councillor.''

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி

''பிரிவு 4, சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 4 நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 4, திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1989) திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு, திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப்பெற்றது.

(ஏ) மதுவிலக்கு (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989

மாண்புமிகு திரு. எஸ், ஜே சாதிக்பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்.''

* 4—5—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

திரு. வி. தம்புசாமி : : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுவிலக்கு (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவின் மீது சில கருத்துக்களை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சொல்ல விரும்புகிறேன்.

மதுவிலக்குச் சட்டம் அமலில் இருந்தாலும், இன்றையதினம் மது விலக்குச் சட்டம் ரத்து செய்யப்பட்டுவிட்டதோ என்று சொல்லும் அளவிற்குக் காவல் துறையும், சமூக விரோதிகளும் சேர்ந்து சீரழித்து விட்டார்கள் என்று சொல்லக் கூடிய அளவிற்கு நிலைமையிருக்கிறது. இந்த மது உற்பத்தி என்பது எல்லா—அனைத்து இடங்களிலும் குடிசைத் தொழிலாக மட்டு மல்ல; அது குட்டித் தொழிற்சாலையாகவும் செயல்பட்டு வருகிறது. சாராயம் மூலை முடுக்குகளில் சர்வ சாதாரணமாக இன்றையதினம் விற்பனையாகிக் கொண்டிருக் கிறது.

தமிழக அரசின் அதிகாரபூர்வமான சாராயக் கடைகளைவிட இந்தக் கள்ளத்தனமான மதுக் கடைகள் வெகுவேகமாகச் செயல்பட்டு வருகின்றன என்பது அனைவரும் அறிந்த உண்மை யாகும்.

சாராய வியாபாரிகள் வேலையற்ற இளைஞர்களைச் சாராய விற்பனைக்கு அதிக அளவிலே பயன்படுத்துவது மட்டுமல்ல; அவர்கள் சமூக விரோதச் செயல்களிலும் ஈடுபடுகின்ற வகையிலே இன்றையதினம் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தொழிலுக்கு வேலையற்ற இளைஞர்கள் ஆளாகிக் கொண் டிருக்கக்கூடிய அபாய சூழ்நிலை வேகமாக வளர்ந்து வந்து கொண்டிருக்கிறது.

முன்பிருந்த அரசால் மது விலக்குக் குற்றத்திற்காக அபராதம் போடும் உரிமை மதுவிலக்குக் காவல் துறையிடம் ஒப்படைக்கப் பட்டு, போடப்பட்ட அந்த அபராதத் தொகையை நீதிமன்றத் திலோ அல்லது வங்கிகளிலோ கட்டமுடியாமல் காவல் துறையிடம் இருக்கிறது. அதை அரசு பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மது விலக்குச் சட்டத்தைக் கறாராக, முழுமையாக அமல் படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த மது விற்பனையில் ஈடுபடுத்தப்படக்கூடிய இளைஞர்களைத் தடுத்து நிறுத்துவதற்காக அந்த இளைஞர்களுக்கு வேலை கிடைக்கின்ற வகையிலே உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, கிராமங்கள்தோறும், இந்த மதுவை ஒழிப்பதற்காக மது விலக்குக் கண்காணிப்புக் கமிட்டிகள் அமைக்கப்பட வேண்டும். அந்த மது விலக்குச் சமிட்டிகள் நிறைவேற்றுகின்ற தீர்மானத்திற்கு அந்தந்தப் பகுதிகளிலிருக்கக்கூடிய காவல் துறை அதிக முன்னுரிமை கொடுத்து அதை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் அந்த மது விலக்குச் சமிட்டிகள் சிலயிடங்களிலே அமைக்சப்பட்டு இருந்தாலும், அது எடுக்கக்கூடிய நடவடிக்கைகளைக் காவல் துறை ஏற்றுக்கொள்வது இல்லை. அத்தகைய சூழ்நிலை இன்றையதினம் இருக்கிறது. எதிர்காலத்திலே வேகமாக ஒரு போர்க்கால அடிப்படையிலே தகுந்த நடவடிக்கைகள் எடுத்து, மதுவை தமிழகம் பூராவிலும் இருந்து தடுத்து நிறுத்துவதற்கு அரசு முயற்சிக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மது விலக்கு ஆயத்தீர்வை மானியத்தின் பொழுது இந்தக் கள்ளச் சாராயத்தை ஒழிப்பதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தங்களுடைய சீரிய கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். அரசும் அதற்கேற்ப நடவடிக்கையெடுக்கும் என்று இங்கே உறுதி அளித்து, அந்த நடவடிக்கைகள் இப்பொழுது தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால், அது முற்றாக, முழுமையாக நடந்ததாக நான் ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்குத் தீவிர நடவடிக்கை மேலும் தொடர்ந்து எடுக்கப்படும். ஆனால் இப்பொழுது இங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவு, வரவேண்டிய நிலுவைகளை எப்படி வசூலிப்பது, அதற்கு என்ன முறைகளைக் கையாள்வது என்ற கருத்தை மையமாக வைத்துக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. பொதுவான அளவிற்கு விவாதம் நடத்தினால் நம்முடைய மசோதாக்கள் நிறைவேறுவதற்கு நீண்ட நேரமாகிவிடும்.

திரு வி. தம்புசாமி : இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து அமர்கிறேன், நன்றி.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, முதல்வரவர்கள் இங்கே சொன்னதற்குப் பிறகு நான் அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. ஒரேயொரு செய்தி. குடிசைத் தொழில்களை நாம் வளர்க்க வேண்டுமென்று நினைக்கின்றோம். இப்பொழுது எல்லாயிடங்களிலும் குடி செய் தொழில் மட்டுமே (சிரிப்பு) நடந்து கொண்டிருப்பதாக நமக்குத் தகவல் வருகிற காரணத்தினால்—முதல்வரவர்களும் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறார்கள், மகிழ்ச்சி.

[திரு. குமரி அனந்தன்] [1989 மே 11

ஒன்றே ஒன்று. மது தயாரிக்கிற தொழிற்சாலையை நாம் ஆரம்பிக்க வேண்டுமென்று இங்கே ஒரு முடிவு இருக்கிறது. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இந்த அமைச்சரவையும் கூட மதுவைப் பூரணமாக ஒழிப்பது என்ற முடிவிற்கு வந்தால் அப்படி செலவழிக்கிற பணம் எல்லாம் வீணாகப் போய்விடும். அதைப்போல பூரண மதுவிலக்கு வேண்டுமென்கிற கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இப்போது போடப் படுகிற பணமெல்லாம் வீணாகிவிடும். எனவே, இவற்றை எல்லாம் நீங்கள் மறு பரிசீலனை செய்தால் நன்றாக இருக்குமோ என்று நான் எண்ணுகிறேன். மற்றவகையில் நிலுவையில் இருப்பவற்றை வசூலிப்பதற்கு நாங்கள் எந்த வகையிலும் தடையாக இருப்பதற்கு இல்லை. அரசாங்கத்திற்கு வருகிற வருவாய் வரட்டும்.

(பிற்பகல் 5–10)

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தாங்கள் அனுமதி கொடுத்ததற்கு முதற்கண் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச்சட்டத் திருத்தமானது எப்படி நிலுவையை வசூல் பண்ணுவது என்பதற்காகத்தான். பரம்பரை யாக ஏலம் எடுப்பவர்கள், என்ன திருத்தம் எப்படி போட்டாலும் ஏலம் விடுகிற தருணத்தில் சர்டிபிகேட் எப்படியோ வாங்கி வந்து விடுகிறார்கள். எனக்கு இவ்வளவு சொத்து இருக்கிறது. இவ்வளவு பணம் இருக்கிறது என்று சர்டிபிகேட் வாங்கிக் கொண்டு வந்து விடுகிறார்கள். ஏலம் விடப்பட்டு, கிட்டே போகிறபோது அந்த சொத்து யார் மீது இருக்கிறது என்று பார்த்தால் அதில் கருத்து வேறுபாடு வருகிறபோது நிலுவை நின்று விடுகிறது. இது பரம்பரையாக நடந்து கொண்டு வருகிறது. எந்தக் கட்சி எப்படியிருந்தாலும், எந்த ஏலமானாலும் சரி, ஏலம் விடுகிறபோது, சட்டத்திற்குக் கட்டுப்பட்டு வருகிறபோது, எப்படியாவது ஏலம் எடுப்பது என்று ஏலத்தில் கலந்துகொண்டு விடுகிறார்கள். பின்னால் பாக்கி நிற்கிறபோது ஒரு சங்கமே ஏற்படுத்தி விடுகிறார்கள். ஒருவர், இரண்டு பேர் பாக்கி இருந்தால் நடவடிக்கை எடுக்க லாம், வசூல் செய்யலாம். எல்லோரும் பாக்கியாக இருக்கிற போது என்ன செய்ய முடியும்? யார் யார் ஏலம் எடுக்கிறார் களோ அவர்கள் அத்தனைபேரும் பாக்கி வைத்து விடுகிறார்கள். சங்கம் வைத்து கோர்ட்டிற்குப் போய் விடுகிறார்கள். அது மாதிரியான கட்டம் வராமல் நாம் பணத்தை வசூல் செய்ய வேண்டும், காரணம் நமக்கு ரெவின்யூ அதிகமாக தேவையாக இருக்கிறது. ஏற்கெனவே கவர்னர் சர்க்காரில் ஏராளமாகக் கடனை வைத்து விட்டு போய் விட்டார்கள். அதற்காகவாவது இதை நாம் நடத்தவேண்டிய ஒரு பொறுப்பில் இருப்பதால்,

1989 மே 11] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

முதலில் ஏலம் விடும்போதே அந்தப் பணத்தை வசூலிக்க ஏதாவது முகாந்திரத்தைக் கண்டுபிடித்து அந்தமுறையில் ஏலம் விடும்படியாக கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

திரு. என். கணபதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்கிறேன். ஒரே ஒரு சிறு பிரச்சினையை இந்த அரசாங்கம் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 18 (ஐ) செக்ஷனில் இந்த மதுவிலக்கு பாக்கி அந்த சொத்தின்மீது 'ஃபர்ஸ்ட் சார்ஜ்' ஆகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது சாதாரணமாககடன்பட்டவர்கள் எப்படி யாவது கடனைக் காண்பிக்காமல் சொத்துக்களை காட்டாமல் ஏமாற்றிவிட்டு சென்று விடுவார்கள். இது சாதாரணமாக நடைமுறையில் இருக்கிற பழக்கம். எனவே, மது விலக்கு சம்பந்த மாக பாக்கி இருப்பவர்கள்சொத்துக்களை, இந்த பாக்கி என்பதே ஒரு வில்லங்கமாக சப்-ரெஜிஸ்ட்ரார் ஆபீசில் பதிவு செய்கிற அளவிற்கு சப்-ரெஜிஸ்ட்ரார்களுக்குத் தெரிவித்து, அந்த சொத்து வில்லங்கத்திற்கு உட்பட்டது என்பதை அறிவிக்கிற வகையில் ஒரு விதிமுறையை உருவாக்கினால் சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்து, இந்த மசோதாவை ஆதரித்து அமர்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு தலைவர் அவர்களே, 1937ஆம் ஆண்டு தமிழ்நாடு மது விலக்கு சட்டத்தைத் திருத்துவதற்காக தமிழ்நாடு மதுவிலக்கு (மூன்றாம் திருத்த) சட்டம் இப்பேரவையின் முன்னால் கொண்டு வரப் பட்டிருக்கிறது. இந்தச் சட்டமுன்வடிவின் முக்கிய நோக்கம் அரசாங்கத்திற்கு வரவேண்டிய ஆயத்தீர்வையை கண்டிப்பான முறையில் வசூலிப்பதற்கு கொண்டு வரப்பட்ட சட்ட முன்வடி வாகும். 1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மது விலக்கு சட்டத்தில் தற்போது ஆயத்தீர்வை நிலுவைகளை கண்டிப்பான முறையில் வசூலிப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும் மேற்படி சட்டத்தின்கீழ் கள் மற்றும் சாராயக் கடைகள் சம்பந்தமாக 1981-ஆம் ஆண்டிலும், அதற்கு பின்பும் வெளியிடப் பட்ட விதிகளில், Tamil Nadu Toddy and Arrack Shops (Disposal on Auction) Rules 1981 மற்றும் Tamil Nadu Arrack Shops (Disposal on Auction) Rules 1986. 'notional loss' என்ற கணக்கை வைத்து வருவாய் வசூல் சட்டத்தின்கீழ் 'Revenue Recovery Act'-ன்கீழ் வசூலிக்க வகை செய்யப்பட்டிருந்தது. எனவே, ஆயத்தீர்வை மற்றும் ஏனைய கட்டணங்களை கண்டிப்பான முறையில் வருவாய் வசூல் சட்டத்

தின்கீழ் வசூலிக்க வகை செய்ய தற்போது மது விலக்கு சட்டத்தில் 18 (ஐ) என்னும் புதிய பிரிவைச் சேர்ப்பதன் மூலமாக சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

ஆந்திர மாநில ஆயத்தீர்வைச் சட்டத்திலேயும் ஆயத்தீர்வை நிலுவைகளை வருவாய் வசூல் சட்டத்தின்கீழ் வசூலிக்க வகை செய்யப்பட்டு உள்ளது. கடந்த 1971 ஆம் வருடம் மதுவிலக்கு தளர்த்தப்பட்டபோது, அப்போது நடைமுறையில் இருந்த 1937ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் அமுல்படுத்தப் படுவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டு—suspension of the operation of Tamil Nadu Prohibition Act, 1937—அதற்குப் பதிலாக 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆயத் தீர்வைச் சட்டம் நடை முறைக்கு வந்தது, அச்சட்டத்தில் ஆயத் தீர்வை நிலுவைகளை வசூலிக்க வழிவகை இருந்தது. ஆனால் இப்போது வசூலிக்க வேண்டிய ஆயத் தீர்வை நடைமுறையில் பாக்கி ஏற்பட்டு, அதை வசூலிப்பதற்கு போதுமான அதிகாரம், சட்டப்பூர்வமான அதிகாரம் அரசாங்கத்திற்கு இல்லாத காரணத்தால், இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்து இருக்கிறோம். குறிப்பாக நான் சில புள்ளிவிவரங்களைச் சொல்லவேண்டும் என்று கருதுகிறேன். ஆயத் தீர்வை நிலுவைகளைப்பற்றிய சில விவரங்கள். 1971 ஆம் ஆண்டிலேயிருந்து 1974 ஆம் ஆண்டு வரை ஆயத் தீர்வை வருடங்கள் அதிலே பாக்கி 2 கோடி 87 லட்சம். 1971–1974 ஆம் ஆண்டுகளில், தி.மு.க. ஆட்சியின் காலத்திலே அன்றைக்கு பாக்கியாக இருந்த தொகை 2 கோடியே 87 லட்சம். முந்தைய ஆட்சியிலே, 1981-லேயிருந்து 1986 ஆம் ஆண்டு ஆயத் தீர்வை வருடங்களில் பாக்கியைக் கணக்குப் பார்க்கும்போது 60 கோடியே 58 லட்சமாக இருக்கிறது. 60 கோடியே 58 லட்சம் ரூபாய் பாக்கி ஆயத் தீர்வையிலே வரவேண்டியதாக இருக்கிறது. இது பல காரணங்களினாலே ஏற்பட்டு இருப்பதாக நான் கருதுகிறேன். விவரங்களுக்கு உள்ளே எல்லாம் நான் செல்ல விரும்பவில்லை.

நம்முடைய உறுப்பினர்களும் இங்கே ஆயத் தீர்வையைப் பற்றிப் பேசுவதற்குப் பதிலாக வேறு பிரச்சினைகளைப் பேசியதால், அதற்கு விடைகளை சொல்லவேண்டிய நிலையில் நான் இருக்கிறேன். ஏற்கெனவே 2 கோடியே 87 லட்சம் ரூபாய் பாக்கியை வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு ஆயத் தீர்வைச் சட்டத்திலே இடம் இருந்தது. ஆனால் 1981–1986 ஆம் ஆண்டு பாக்கி 60 கோடியே 58 லட்சம். இதை இன்றைக்கு இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலமாக, ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட் மூலமாக வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்காகத்தான் இந்தச் சட்டத் திருத்தத்தை நாம் இன்றைக்கு இங்கே கொண்டு வந்திருக்கிறோம்.

1989 மே 11]

திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லுகின்றபோது, பதில் உரையில் கூறுகின்றபோது 60 கோடிக்கு மேலே நிலுவை இருக்கிறது என்று சொன்னார்கள். ஒரு கோடிக்கு மேலே பாக்கியாக உள்ள தனிப்பட்ட நபர்கள் யாராவது இருந்தால், அவர்களுடைய பெயரை வெளியிட முடியுமா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவரம் தற்போது என்னிடத்திலே இல்லை. தாங்கள் தனியாக கேள்வி போட்டால் ஒரு கோடி என்ன, எவ்வளவு கொடுக்கவேண்டும் என்ற விவரங்களை எல்லாம் கூட அரசு வெளியிடத் தயார் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு நமது அரசாங்கத்தின் சார்பாக மது பானச் சில்லறைக் கடைகளை ஏலத்தில் விடவேண்டும் என்று முடிவு எடுத்திருக்கிறது. தமிழ்நாடு அரசின் மது பானச் சில்லறைக் கடை ஏல முறையை எதிர்த்து ஏற்கெனவே மதுபான சில்லறைக் கடைகளை வைத்திருந்தவர்களில் சிலர் சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனுக்களைப் போட்டிருந்தார்கள். அந்த ரிட் மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. அதற்குமேல் சென்னை உயர் நீதிமன்றத்தில் பெஞ்சிற்கு அப்பீலைக் கொடுத்தார்கள். அந்த அப்பீலை விசாரித்த உயர்நீதிமன்றம் ஏல முறைக்கு தடை விதிக்க முடியாது என்று கூறிவிட்டது. அதோடு அவர்கள் விடவில்லை. உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். இந்தத் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் அவர்கள் வழக்கு தொடர்ந்தார்கள். ஏல முறையில் மதுபானக் கடைகள் கொடுப்பதற்கு தடை விதிக்கவேண்டும் என்று வழக்குப் போட்டார்கள். ஏறத்தாழ 50 பேர்களுக்கு மேலே அதுபோல 5 வழக்குகளைப் போட்டிருக்கிறார்கள் அவர்களுக்காக பிரபல மான வக்கீல்கள் எல்லாம் ஆஜராகி இருக்கிறார்கள். திரு. ஏ. கே. சென், திரு. ஏ. கே. சங்குலி, திரு. யு. ஆர். லலித், திரு. கப்பீல் ஜுபர், தமிழக அரசின் முன்னாள் சட்டத்துறைச் செயலாளர் திரு. எஸ். வடிவேல் ஆகிய வழக்கறிஞர்கள் மிகத் திறமையாக வாதாடினார்கள். இன்று காலை உச்ச நீதி மன்றத்தில் வாதாடினார்கள். தமிழக அரசின் சார்பாக திரு. எப். எஸ். நாரிமன் அவர்களும் மற்றும் உதவியாக திரு. கே. ராஜேந்திர சௌத்திரி, திரு. கிருஷ்ணமூர்த்தி ஆகியவர்கள் ஆஜராகி எதிர்வாதம் நடத்தினார்கள். இவ்வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதி திரு. எஸ். ரங்கநாத மிஸ்ரா அவர்கள் அப்பீல் மனுக்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்துவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). எனவே ஏற்கெனவே தமிழக அரசு அறிவித்தபடி இந்த மதுபான சில்லறைக் கடைகளை ஏல முறையில் மே மாதம் 15 ஆம் நாளிலிருந்து ஏலம் விடுவதற்கு எந்தவிதமான தடையும் கிடையாது.

மாவட்ட ஆட்சித்தலைவர்கள் குறித்தபடி குறித்த தேதியில் ஏற்கெனவே அறிவித்தபடி ஏலத்தை முறைப்படி நடத்துவார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே சாராய சாம்ராஜ்ய அதிபர்கள் எவ்வளவு இதில் மூழ்கி இருக்கக் கூடும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்றுதான் நான் குறிப்பிட விரும்புகின்றேன். எனவே இப்படி கொண்டு வந்திருக்கக்கூடிய திருத்தம் குறிப்பாக நிலுவைகளை வசூலிப்பதற்காகத்தான் என்பதைத் தெரிவித்து இந்தச் சட்டமுன்வடிவை நீங்களெல்லாம் ஏற்றுக் கொள்ளவேண்டும். அதை ஏற்றுக்கொண்டு சட்டமாக ஆக்கித் தரும்படி கேட்டு அமைகிறேன்.

(பிற்பகல் 5-20)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 21/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1–'முகப்புரை' நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 21/1989) நிறைவேற்றப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

TRUTH ALONE TRIUMPHS

1989 மே 11]

(ஐ) பல்கலைக் கழகங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்"

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதன் மீதான விவாதத்தினைத் தொடங்கி வைப்பவர் திரு. அ. லெ. சுப்பிரமணியன்.

* திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தமிழ்நாடு யூனிவர் சிட்டீஸ் லாஸ் அமெண்ட்மெண்ட் பில்லை வரவேற்று நான் என்னுடைய கருத்தாகச் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். முன்பு இருந்த அரசு மதுரை பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் போன்ற பல்கலைக் கழகங்களில் செனேட், சிண்டிகேட், அக்காடமிக் கவுன்சில் போன்றவற்றில் ஒரு முறை மூன்றாண்டுகள் என்று இருந்தால் இரண்டு முறைதான் பதவி வகிக்கலாம், மூன்றாவது முறை பதவி வகிப்பதற்கு தடை இருக்கிறது, டிஸ்குவாலிபிகேஷன் இருக்கிறது என்று சொல்லி எல்லாப் பல்கலைக்கழகங்களுக்கும் பல சட்டங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றி இருந்தார்கள். அந்தக் தடையை, டிஸ்குவாலிபிகேஷனை நீக்குவதற்காக இன்றைக்கு இந்த மசோதாவைக் கொண்டு வந்த இந்த அரசாங்கத்தை நான் இந்த நேரத்திலே வாழ்த்தி வரவேற்கிறேன்.

ஒவ்வொரு சட்டமுன்வடிவு வருகின்ற போதும் அதிலே ஸ்டேட்மெண்ட் ஆப் ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ் என்று கொடுப்பது வழக்கம். அந்தக் கருப்புச் சட்டத்திற்கு என்ன காரணம் கொடுத்தார்களோ தெரியவில்லை. ஆனால் உண்மையிலேயே காரணம் என்னவென்றால் அன்றைக்கு மதுரை பல்கலைக் கழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சொத்து பாதுகாப்பு உறுப்பினர் நண்பர் பழனிவேல்ராஜன் அவர்கள் செனேட்டுக்காக கிராஜுவேட் கான்ஸிடிடியூயன்ஸியில் இருந்து போட்டியிட்டார்கள். அவர் வெற்றி பெறுவார்கள் என்று தெரிந்தவுடன் ஓட்டு முடிந்த அன்று, மறுநாள் ஓட்டுப் பதிவை எண்ண வேண்டும்— அன்று ஓட்டு பதிவு முடிந்ததற்குப்

* 5—5—1989 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

பிறகு ஒரு அவசரச் சட்டத்தின் மூலமாக, ஆர்டினஸ் மூலமாக அதை தடை செய்து அப்போது அவர் வெற்றிபெற முடியாமல் செய்தார்கள். நீதிமன்றத்திற்கு எல்லாம் கூட அவர் போனார், தனிநபர் மசோதா என்று இங்கே சொல்கிறோம். ஆனால் அந்தச் சட்டம் ஒரு தனிநபருக்காக கொண்டு வந்தது போல், ஒரு இயக்கம், அதாவது திராவிட முன்னேற்றக் கழகம் இப்படிப்பட்ட பல்கலைக் கழகங்களில் இடம் பெறக் கூடாது என்று ஒரு நோக்கத்தோடு முன்பு அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அது இன்று முதல் எடுப்பதற்காக இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்களாக நாம் இருக்கிறோம். எத்தனை முறை வேண்டுமானாலும் இருக்கலாம். இரண்டு முறைதான் என்று இதிலே கட்டுப்பாடு இல்லை. அப்படி இருந்தால் தலைவர் அவர்களே உங்களுடைய தலைமையில் அன்றைக்கு பொன் விழா கொண்டாடுகிறபோது மூத்த உறுப்பினர்களுக்கு, 5 முறை 6 முறை வெற்றி பெற்ற நம்முடைய முதலமைச்சர் போன்றவர்களுக்கு, நாம் பாராட்டே நடத்தியிருக்க முடியாது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்த விதி இல்லை. அதைப் போல ஒன்றியத் தலைவர்கள், நகராட்சித் தலைவர்கள் போன்ற பதவிகளுக்கு இரண்டு முறைக்கு மேல் இருக்கக்கூடாது என்ற அந்த டிஸ்குவாலிபிகேஷன் இல்லை. அப்படி இருக்கின்றபோது பல்கலைக் கழகத்திற்கு மட்டும் இருப்பது பொருத்தமற்றது என்ற முறையில் இந்த அரசு அதை எடுத்திருக்கிறது. அதோடு மட்டும் அல்லாமல் அப்படி மூன்றாவது முறை, நான்காவது முறை அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறபோது பல்கலைக் கழகங்களுக்கு அவர்களுடைய அறிவாற்றலும் அனுபவமும் மிகவும் உதவியாக இருக்கும். அந்த அளவில் கொண்டு வரப்பட்ட இந்தச் சட்டத்தை நான் வரவேற்று வாழ்த்தி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

* **பேராசிரியர் க. பொன்னுசாமி** : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பல்கலைக் கழக சட்ட திருத்தத்தில் ஒரு சிலவற்றை இங்கே எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் வரவேற்றுப் பேசினார்கள். அனைத்தையுமே வரவேற்றுப் பேசினார்கள். அதற்கு காரணங்களையும் சொன்னார்கள். அவர்கள் சொன்னதிலே இரண்டுக்கு மேற்பட்ட முறை கல்வியாளர்களை தேர்ந்தெடுக்கும்போது அவர்களுடைய அறிவாற்றலும், அனுபவமும் பல்கலைக் கழகத்திற்கு மிக அதிக அளவிலே பயன்படும் என்பதால் இது வரவேண்டும் என்று சொன்னார். இந்தக் கருத்தை நாங்கள் வரவேற்கிறோம். அதே நேரத்தில் இந்த அனுபவமும், அறிவாற்றலும் எல்லா இடங்களிலும் பயன்பட வேண்டும் என்பதால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய கருத்தை

வலியுறுத்த கடமைப்பட்டிருக்கிறது. இந்த அனுபவம், ஆற்றல் என்று பார்க்கின்ற போது அண்மையிலே இங்கே நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை நான் குறிப்பிட விரும்புகின்றேன். அண்மையில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பதிவாளர் அவர்கள் அவசர அவசரமாக மாற்றப்பட்டு அதற்குப் பதிலாக ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரி அவர்கள் அங்கே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தப்பதிவாளர் மீது குற்றங்கள் இருந்தால் அந்தக் குற்றங்களின் அடிப்படையிலே நடவடிக்கை எடுப்பதாக இருந்தால் அதிலே குறுக்கிட நான் தயாராக இல்லை. அது தனிப்பட்ட விஷயம். ஆனால்....

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, பல்கலைக் கழகத் துணை வேந்தர் அல்ல, ஆனால் பதிவாளருடைய நடவடிக்கை குறித்து பல புகார்கள் கடந்த ஓராண்டுக் காலமாக வந்துள்ளது. ஆளுநர் மூலமாகவும் அந்தப் புகார்கள் செயலாளருக்கு கிடைத்தும் உள்ளது. நான் அமைச்சராக வந்ததற்குப் பின்னர் எனக்கும் கிடைத்தது. அந்தப் புகார்கள் குறித்து ஒரு முறைக்கு இரு முறை பல்வேறு வகையில் விசாரித்துப் பார்த்து அந்தப் புகார்களுக்கு அந்தப் பொறுப்பிலே இருக்கின்றவரிடமிருந்து முழு உண்மை வெளி வராது என்று முடிவாக கருதி அதற்குப் பின்னால் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிலே தீர்மானம் கொண்டுவரப்பட்டு பெரும் பாலோர் ஏற்றுக்கொண்டு ஒரு விசாரணை நடத்த வேண்டுமானால் பல்கலைக் கழகத்திலே, நிர்வாகத்திலே தொடர்புடையவர்களே இருந்தால் அந்த விசாரணை நிறைவடையாது என்ற எண்ணத்தில் பதிவாளராக ஐ. ஏ. எஸ். அதிகாரியை நியமித்து துணை வேந்தருடைய பொறுப்பில் பதிவாளர் அந்த விசாரணையை நடத்துவதற்கு உறுதுணையாக இருக்க வேண்டிய நிலைமை இப்போது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதைக்கூட செய்யாவிட்டால் எந்தக் குறையையும் அரசாங்கம் போக்க முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் உணர்வார், உணர்ந்து கொள்வார் என்று எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேராசிரியர் அவர்களுடைய விளக்கத்தை பேராசிரியர் ஏற்று திருத்தத்திற்கு முன்வரலாம்.

பேராசிரியர் க. பொன்னுசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் இங்கே சொன்னதிலே எனக்கு உடன்பாடு உண்டு. எத்தத் தவறுக்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கருத்துக்கு மாற்று கருத்

இருக்க முடியாது. ஆனால் அந்தப் பதிவாளர் நீக்கப்படுவதிலே அல்லது நீக்கப்பட்டதற்காக யாரும் இங்கே வலிந்து அவருக்காக உதவிக்கு வரவில்லை. நான் சொல்ல வந்ததெல்லாம்....

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, பதிவாளர் கூட நீக்கப்படலாம். ஆனால் அப்படி நீக்கப்படவில்லை. அதற்கு மாறாக அவர் எந்தப் பதவியில் இருந்தாரோ அதற்கு இணையான ஊதியமும் பதவித் தகுதியும் உள்ள இன்னொரு இடத்திலே அமர்த்தப்பட்டு இருக்கிறார். விசாரணை முடிந்ததற்குப் பின்னால்தான் அதுபற்றிய— அவரை நீக்குவதா, தொடர்ந்து நீடிப்பதா என்பது விசாரணையினுடைய விளைவாக எடுக்கவேண்டிய முடிவாகும்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இங்கே நான் சொல்ல வந்ததெல்லாம் ஒருவர் மீது நடவடிக்கை எடுப்பது என்றால், அவர் அந்தப் பதவியிலிருந்து விடுவிக்கப்படும்போது அவருக்கு இணையான கல்வியாளர் ஒருவர் அங்கே நியமிக்கப் பட்டு இருக்க வேண்டும். அதுதான் மரபு என்பதைப் பற்றித்தான் நான் சொல்லவந்தேனே தவிர....

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, விசாரணை நடத்துவதற்கு கல்வியாளர்கள் தான் தகுதி என்று சொன்னால், காவல்துறை எல்லாம் பேராசிரியர்கள் தாம் இருந்து நடத்த வேண்டும். எனவே இப்போது விசாரணை தான் மிக முக்கியம். எனவே நிர்வாக முறையிலே யார் விசாரணையைத் தடம்புரளாமல் நடத்துவதற்கு உறுதுணையாக இருக்க முடியுமோ அப்படிப்பட்ட அதிகாரியைத் தான் நியமிக்க வேண்டிய ஒரு கட்டாயமான நிலைமை பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு ஏற்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 5—30)

பேராசிரியர் க. பொன்னுசாமி : தலைவர் அவர்களே, இதே நடைமுறை எல்லாத் துறைகளுக்கும் வருமா என்ற சந்தேகம் எழுந்தாலும் கூட நான் சொல்ல வந்த விஷயம் அங்கே ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரி போடப்பட்டிருக்கும்போது இந்த நிலைமை எல்லா பல்கலைக் கழகங்களுக்கும் தொடர்ந்து விடுமோ என்ற அச்சம் கல்வியாளர்கள் மத்தியிலே இப்போது இருக்கிறது. அது மட்டுமல்ல. அங்கே நான் கேள்விப்பட்டதைச் சொல்கிறேன். அங்கே நடைபெற்ற அந்தக் கூட்டத்தில்......

1989 மே 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபற்றிக் கல்வி அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள். இப்போது இது தொடர்பான திருத்தம் மட்டும்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : என்னுடைய கவலை எல்லாம் 'அகடமிஷியன்ஸ்' என்று சொல்கின்ற அந்தக் கல்வி யாளர்கள் பாதிப்பிற்குள்ளாகக்கூடாது என்ற அந்தக் கருத்தின் அடிப்படையிலேயும், அவர்கள் புறக்கணிக்கப்படக் கூடாது என்ற.....

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, 'அகடமிக்' என்று சொல்லப்படுகிற தகுதியுடன் உள்ள பேராசிரியர்களோ, நிபுணர்களோ தவறு செய்கிற நிலைமைக்கு ஆளாகக்கூடாது. அவர்கள் தவறு செய்வார்களேயானால் விசாரணையை நடத்தவேண்டிய முறைப் படிதான் நடத்தவேண்டுமே தவிர, அகடமிக் பீப்பிள் என்பதற்காக அவர்களைக் கொண்டே அவர்கள் விசாரிக்கப்பட வேண்டும் என்ற முறை அவ்வளவு சிறப்பு அல்ல. அதனால் ஏற்பட்ட குறைகள் பல என்பது கல்வித்துறையைப் பற்றி ஓரளவு அறிந்திருக்கிற எனக்கு மிக நன்றாகத் தெரியும்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : நன்றி, ஆகவே, அப்படிப் பட்ட சூழ்நிலைகள் வருகிற போது கல்வியாளர்கள் புறக் கணிக்கப்படாமல் இருக்கவேண்டும் என்ற என்னுடைய கோரிக் கையை இங்கே சொல்லிக்கொண்டு, இன்னும் ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஒரு சில வட இந்திய பல்கலைக்கழகங்களில் பதிவாளர் பதவியை 'ப்யூர்லி அட்மினிஸ்ட்ரேடிவ்' என்று நிர்வாகத்திற்காகவும், 'அகடமிக் சைட்' கல்வித் துறைக்கு தனியாக 'ப்ரோவைஸ்—சான்ஸலர்' என்ற ஒரு பதவியையும் தனியாக உருவாக்கி அவர்கள் அங்கே செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை களை வேண்டுமானாலும் இங்கே உருவாக்கிக் கொள்ளலாம். தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதிலே எங்களுக்கு கருத்துவேறுபாடு இல்லை. சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். கல்வி களத்திலே பாதிப்புக்கள் இருக்கக்கூடாது என்பதிலே உள்ளபடியே எங்களுக்கும் அதிலே நல்ல கருத்துக்கள் இருக்கின்றன என்பதைச் சொல்லி, வாய்ப்பிற்கு நன்றி சொல்லி அமைகிறேன், நன்றி.

திரு. எம். அப்துல் லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்டத்தினுடைய மையக் கருத்தை நான் ஆதரிக்கிறேன். பொதுவாக பல்கலைக்கழகங்கள்—முழுமையாக பல்கலைக்கழகத்தை நடத்துவதோடு மட்டுமல்லாமல், அதற்கு

அதனுடைய அதிகாரத்திற்குட்பட்ட கல்லூரிகளைச் செம்மையாக நடத்துவதற்கான பொறுப்பிலேயும் பல்கலைக்கழகம் இருத்தப்பட்டிருக்கிறது. எனவே, பல்கலைக்கழகத்தில் அனுபவம் உள்ளவர்கள், அதே நேரத்தில் கல்வித்துறையில் தொடர்புள்ளவர்கள், அதிகமாக பல்கலைக்கழகத்தினுடைய பேரவையிலேயும், அதனுடைய நிர்வாகக் குழுவிலேயும் இடம் பெறுவதை மையமாகக் கொண்டு இந்தத் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு இருக்கிறது. அந்த அடிப்படையில் இது எல்லோராலும் ஆதரிக்கப்படக்கூடிய ஒன்று என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். கல்வித் துறையிலே குறிப்பாக தூய்மை இருக்கவேண்டும் என்று எல்லோரும் எதிர்பார்ப்பது நியாயத்தின்பாற்பட்டதாக இருக்கும் என்றே நான் கருது கிறேன்.

எனவே, அவையிலே இன்றைக்கு பல்கலைக்கழகத்தினுடைய பதிவாளரைக் குறித்துக் கூட சில பிரச்சினைகள் எழுந்தன. குறிப்பாக, நம்முடைய சென்னைப் பல்கலைக் கழகத்தைக் குறித்து, அதனுடைய நிதி நிர்வாகம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டதாக இல்லை என்ற அளவிற்கு சில குற்றச் சாட்டுக்கள் இன்றைக்கு வெளிப்படையாகப் பேசப்படுகின்றன. குறிப்பாக, தனியார் கல்லூரிகள் பல்கலைக்கழகத்தில் தங்களுடைய நிதிநிலை செம்மையாக இருக்கிறது என்பதை அடிப்படையாக, பல்கலைக்கழகத்திற்கு உத்தரவாதமாகத் தரவேண்டும் என்ற அடிப்படையில்தான் 'ஃபிக்சட் டெபாசிட்' என்ற முறையே இன்றைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஒரு காலத்திலே இந்த எண்டோமெண்ட் என்று சொல்லக்கூடிய அறக்கட்டளைகள் எல்லாம் அசையாப் பொருட்களாக, பி டிங்குகளாக, கட்டிடங்களாகவே காட்டினால் அதை பல்கலைக்கழகம் ஏற்றுக் கொண்டு வந்தது. ஆனால் பிறகு அது மாற்றப்பட்டு, 'கேஷ் என்டோமெண்ட்' என்ற முறையிலே என்டோமெண்ட்டுகளை ஏற்படுத்த வேண்டும் என்ற முறை வந்த பிறகு, அந்த முறையைப் பயன்படுத்தி பல்கலைக்கழகத்தில் குறிப்பிட்ட தனியார் அறக்கட்டளைகளினுடைய பெயரிலேயும், பல்கலைக்கழகத்தினுடைய பதிவாளர்களுடைய பெயரிலேயும் கூட்டாக வைக்கப்படுகிற கணக்குகளிலே கூட அந்த 'ஃபிக்சட் டெபாசிட்டுகள்' 'மெச்சூர்' ஆகும்போது அதை மறுபடியும் ஏற்படுத்தாமல் அந்தப் பணத்தை வேறு கணக்குகளுக்கு மாற்றக்கூடிய, அது மட்டு மல்லாமல் எந்தக் காரணத்தை......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் உரையாற்றுவது இந்தத் திருத்தத்தோடு தொடர்புடையதுதானா? (குறுக்கீடு) தாங்கள் சிறந்த கல்விமான். (குறுக்கீடு)

திரு. எம். அப்துல் லத்தீப் : எனவே, நம்முடைய சென்னைப் பல்கலைக்கழகத்தைக் குறித்து கூட இத்தகைய புகார்கள் இப்போது நிறைய வந்திருக்கின்றன. நான் குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், ஏறக்குறைய ஒவ்வொரு பகுதியிலேயும் 20 இலட்சம், 25 இலட்சம் ரூபாய் என்ற அளவிற்கு பல்கலைக்கழக தனியார் அறக்கட்டளை கூட்டுக்கணக்கிலே இருந்து தனியார் கணக்குக்கே மாற்றப்பட்டிருக்கிறது. அதற்கு பல்கலைக்கழக நிர்வாகிகளே உறுதுணையாக இருந்து இருக்கிறார்கள் என்று சொல்லப்படுவது எல்லோருக்கும் வேதனை உண்டாக்கக்கூடிய ஒன்று என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதே நேரத்திலே பேரவைக் கூட்டங்கள் நடைபெறுவது— இன்றைக்கு பேரவைக் கூட்டங்கள் 2 தடவை இல்லை, அதற்கு ஒரு வரையறை கூடாது என்ற அளவுக்கு இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆனால் பேரவைக் கூட்டங்கள் 6 மாதத்திற்கு ஒரு தடவைகூட நடைபெறுவது இல்லை. பல்கலைக்கழகத்தினுடைய நிர்வாகத் தொடர்பான விஷயங்கள் எல்லாம் பேரவையிலே இடம் பெற்று இருக்கின்ற உறுப்பினர்களுக்கு கூட தெரியாத அளவுக்கு ஏதோ சாஸ்திர சம்பிரதாயத்திற்கு ஒரு கூட்டம் நடத்துவது என்ற முறையில் நடந்து கொண்டிருப்பது ஏற்புடையது அல்ல. எனவே அடிக்கடி பேரவைக் கூட்டங்கள் நடப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் அளவுக்கு நிர்வாக முறைகள் மாற்றி அமைக்கப்படவேண்டும். பேரவையிலே இடம் பெற்று இருக்கும் உறுப்பினர்களுக்குக்கூட கல்வியிலே என்ன கொள்கை, அடிப்படையான கொள்கை என்ன செய்யப்பட்டு இருக்கிறது? என்ன மாறுதல்களை எந்த அடிப்படையிலே பல்கலைக்கழகம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதிலே நடைமுறைப்படுத்தும் போது சில குறைபாடுகள், கல்லூரிகளுக்கு தனி அந்தஸ்து 'அட்டானமஸ் ஸ்டேடஸ்' என்று எல்லாம் கொடுக்கப்படுகிறது. இவைகள் எல்லாம் எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகின்றன? பல்கலைக்கழகத்தினுடைய வருமானம் என்ன? அதை எப்படி செலவழிக்கிறார்கள்? அது மட்டும் அல்லாமல் பேரவையிலே இடம் பெற்றிருக்கிற உறுப்பினர்களுக்கு கூட பல்கலைக்கழகத்தினுடைய நிதி நிர்வாக சம்பந்தமான உள்ளார்ந்த விஷயங்கள் தெரிவிக்கப்படுவது இல்லை. சிண்டிகேட் உறுப்பினர்களுக்குக்கூட அது முறையாகத் தெரிவிக்கப்படுவது இல்லை என்ற அடிப்படையில் நடப்பது ஏற்புடையது அல்ல. எனவே கூட்டங்களை அடிக்கடி நடத்த வேண்டும். உறுப்பினர்களுக்கு தேவைப்படும் குறிப்புகளை பல்கலைக்கழகம் அனுப்பவேண்டும். இந்தக் குறைகள் களையப்படும் வகையில் ஒரு வரைமுறை ஏற்படுத்தினால் அது ஏற்புடையதாக இருக்கும் என்ற அளவுக்கு நான் இந்த மசோதாவை ஆதரித்து அமர்கிறேன்.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்திற்கான நோக்க காரண விளக்க உரையில் ஏற்கெனவே அனுபவம் செறிந்தவர்கள் இந்த அவையிலே இருக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு கொண்டு வரப்படுவதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட ஒரு நோக்கத்தோடு கொண்டு வருகிற இந்த நேரத்தில் அந்தத் தேர்தல்கள் எல்லாம் எல்லா பல்கலைக்கழகங்களிலும் முறையாக நடத்தப்பட்டு, ஜனநாயகப் பூர்வமாக அப்படிப்பட்ட ஆட்சி மன்றக் குழுக்கள் ஆனாலும் சரி, அது போன்ற மற்ற குழுக்கள் ஆனாலும் சரி, அவை அமைக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். இதிலே நான் ஒரு கருத்தை மிகவும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். சிண்டிகேட், செனட் போன்ற அமைப்புகளில் கட்டாயமாக மாணவர்களின் பிரதிநிதித்துவம் இருக்கவேண்டும். மாணவர்கள் மத்தியில் தேர்தல்கள் நடத்தி அவர்களின் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட சிண்டிகேட், செனட் உறுப்பினர்கள் ஆகின்ற பழக்கம் கேரள பல்கலைக் கழகம் மற்றும் உள்ள வேறு பல்கலைக்கழகங்களில் இருந்து வருகிறது. இதனால் எந்தவிதமான தவறும் எந்த இடத்திலும் ஏற்பட்டுவிடவில்லை. ஆகவே, கல்வியோடு சம்பந்தப்பட்டவர்கள் அந்த நிகழ்ச்சிகளிலும், அவற்றை நடைமுறைப்படுத்துகின்ற இடத்திலும் அமருவது என்பது கட்டாய பூர்வமாக இருக்க வேண்டும் என்ற வகையில் அரசு இதைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் ஒரு முக்கியமான விஷயம். பல்கலைக்கழகங்களில் நடைபெறுகிற ஊழல்கள் பற்றிய சில விஷயங்கள் ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கின்றன. நான் அதன் விவரத்திற்குள் செல்ல விரும்பவில்லை. இருந்தாலும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் அரசு எடுத்து இருக்கின்ற நடவடிக்கை என்பது சரியான ஒரு நடவடிக்கை. எதிர்காலத்திலாவது கல்வி சம்பந்தமாக நடைபெறுகின்ற இப்படிப்பட்ட அமைப்புகள்தான் ஒழுக்கத்தை உருவாக்குகின்ற கூடங்கள். ஆகவே, ஒழுக்கத்தை உருவாக்குகின்ற கல்விக் கூடங்களில் பல்கலைக்கழகங்களில் இப்படிப்பட்ட முறைகேடுகள், ஊழல்கள் நடக்காமல் இருப்பதற்கு இப்படிப்பட்ட உறுதியான நடவடிக்கைகளை எடுத்து எத்தகைய தரப்பிலிருந்து எப்படிப்பட்ட கேள்விகள் வந்தாலும்கூட அதில் எல்லாம் தயக்கம் காட்டாமல் அரசு நடந்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல பாரதிதாசன் பல்கலைக்கழகம். அங்கே ஒரு பிரச்சினை கூறப்பட்டது (மணி யடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தொடர்பாக மட்டும் பேசுங்கள்.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தமாதிரி பல்வேறு பல்கலைக்கழகங்களில் இருக்கின்ற பிரச்சினைகள் சம்பந்தமாகவும், இந்த ஆட்சி மன்ற குழுக்கள் அல்லது செனட், சிண்டிகேட் இவைகளில் அந்த விவரங்கள் பேசப்பட்டு முறையான வகையில் அவைகளுக்கு பரிகாரம் காணப்படுகிறதா என்பதையும் அரசு சற்று கவனத்தோடு உன்னிப்பாகக் கண்காணிக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இந்த அவையிலே விவாதிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழக சட்டங்களில் கொண்டு வரப்பட்டு இருக்கின்ற இந்தத் திருத்தங்கள், ஏற்கெனவே பல்கலைக்கழக சட்டங்களில் இடையிலே புகுந்த முறை கேடான, தவறான, குறுகிய நோக்கத்தோடு கூடிய, சட்டத் திருத்தங்களை செயலற்றதாக மாற்றுவதற்குத்தான் இந்தத் திருத்தங்கள் இன்றையதினம் கொண்டுவரப்பட்டு இருக்கின்றன.

(பிற்பகல் 5-40)

ஏற்கெனவே அப்படி கொண்டுவரப்பட்டபோது, எல்லா பல்கலைக்கழகங்களும் அப்படிப்பட்ட ஒரு திருத்தத்தால் பாதிக்கப்பட்டன. சென்னைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மதுரை—காமராஜர் பல்கலைக் கழகம், அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், அண்மையில் தோன்றிய அன்னை தெரசா பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆகியவை பாதிக்கப்பட்டன. பல்கலைக்கழகங்களில் பயிற்சியுள்ளவர்கள் தொடர்ந்து அனுபவம் பெற்றவர்கள், தொடர்ந்து இடம் பெறக் கூடாது என்பது அன்றைய திருத்தத்தினுடைய நோக்கம். இரண்டு முறை, டூ பீரியட்ஸ், மூன்று, மூன்று ஆண்டுகளாக இரண்டு முறை அல்லது 3 ஆண்டுக்காலம் பதவி வகிக்கக்கூடிய அந்த காலக் கட்டத்தில் இடையிலே வருகிற ஒரு தேர்தலில் ஓராண்டு அந்த அமைப்பில் இடம் பெற்றாலும்கூட, அதுவும் மூன்று ஆண்டாகக் கருதப்பட்டு தடை விதிக்கப்பட்டது. 6 ஆண்டுக்காலம் செனட்டிலோ, சிண்டிகேட்டிலோ, அகடமிக் கவுன்சிலிலோ இந்த மூன்றிலே எந்த அவையிலே இடம் பெற்றிருந்தாலும்கூடப் பின்னர் அவற்றுள் எந்த அவைக்கும் அப்படி முன்னர் இடம் பெற்றவர்கள் வரக்கூடாது. அது பல்கலைக்கழக நிர்வாகத்தைப் பெருமளவுக்குப் பாதிக்கக்கூடிய ஒன்று. யாரோ ஒருவர் இருவர் இடத்திலே அன்றைய அரசுக்கு ஏற்பட்ட மாறுபட்ட உணர்ச்சி காரணமாகக் கொண்டு வந்த இந்தச் சட்டத்

திருத்தம், ஏற்கெனவே வந்த சட்டத் திருத்தம்—பல்கலைக் கழக நடைமுறைகளைத் தெரிந்த ஒருவர் இருவர் கூடத் தொடர்ந்து ஆறு ஆண்டுகட்கு மேல் 10 ஆண்டு, 20 ஆண்டு நீடித்திருப்பது தடுக்கப்பட்டது. படித்த பட்டதாரிகளாக உள்ள, பேராசிரியர்களாக உள்ள, அவர்களுடைய ஆதரவில், வாக்கினால், அவர்களுடைய ஓட்டுக்களைப்பெற்று வருவதுகூடத் தடுக்கப்பட்டு விட்டது. ஜனநாயகத்திலே படித்தவர்களுக் கிடையிலேகூட இருக்கவேண்டிய ஜனநாயக உரிமைக்கே ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அது பல்கலைக்கழக நிர்வாகத் திலே பல குறைபாடுகள் ஏற்படுவதற்கு இடமாயிற்று. அதைக் கண் காணிக்கக்கூடியவர்கள் அல்லது ஓரளவு தகுதி உடையவர்கள் அந்த இடங்களில் அமர முடியாத நிலைமை காரணமாக அரசாங்கமே தலையிட்டு எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்னும் நிலைமை ஏற்பட்டுள்ளது. நான் நினைத்தால், இந்தத்துறை அமைச்சராக இருக்கிற காரணத்தால் நினைத்ததைச் செய்யக் கூடிய அளவுக்கு ஒரு சூழ்நிலையைப் பல்கலைக்கழகத்திலே உருவாக்கிவிட்டார்கள். எனவேதான் அப்படி அனுபவம் பெற்ற வர்கள் வருவதைத் தடுப்பதற்குக் கொண்டு வந்த சட்டத் திருத்தம் பல்கலைக்கழகம் சீராக இயங்கத் தடையாகும் வாக்காளர்களாக இருக்கிற, ஆசிரியர்களாலேயோ அல்லது பட்டதாரித் தொகுதியிலே உள்ளவர்களாலேயோ தேர்ந் தெடுக்கப்படும் உரிமையைத் தடுப்பதற்காக வந்த சட்ட விதிகள் மட்டும்தான் இப்போது நீக்கப்படுகிறது. 'டிஸ்— குவாலிபிகேஷன், என்று சொல்லப்படுகிற முறையில் அவர்களுக்கு ஏற்படுத்தப் பட்ட தடை நீக்கப்படுகிறது. அது தவிர பல்கலைக்கழகங்களைப் பற்றிய பல்வேறு கருத்துக்கள் இங்கே பேசப்பட்டன. எதிர்க் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுசாமி அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்களும் இங்கே எடுத்துச்சொன்ன அந்தக் கருத்துக்களையொட்டி பல்கலைக்கழகச் சட்டங்களை மறுபடியும் ஒரு முறை மொத்த மாக திருத்தி அமைக்கக்கூடிய ஒரு ஆலோசனை இன்றையதினம் இருப்பதால் அப்போது கருதப்படும் பல்கலைக்கழகங்களிலே 'அக்கடமிக் பீப்பிள்' பேராசிரியர்களாக 20, 22 ஆண்டுக் காலம் பணியாற்றியவர்கள் பதிவாளர்களாக வருவது என்ற ஒரு முறை இடைக்காலத்திலே ஏற்பட்டு இருக்கிறது. பதிவாளர் பொறுப்பு என்பது பெரும்பாலும் நிர்வாகப் பொறுப்புதான். நிர்வாகப் பொறுப்புக்கு தகுதியுள்ள அக்கடமிக் பீப்பிளை கொண்டு வருவதன் மூலமாக அவர்கள் பல்கலைக்கழக நிர்வாகத்திலே தங்களுடைய நோக்கத்திற்கேற்ப முயற்சிக்கிற காரணத்தால் சில இடையூறுகள், சில குறைபாடுகள் ஏற்படு கின்றன. எனவே எதிர்காலத்திலே பல்கலைக்கழகங்களுக்கான சட்டத்தை எல்லா பல்கலைக்கழகத்திற்கும் பொதுவாக ஒரே வடிவமாகச் செய்ய முடியுமா என்ற ஒரு ஆலோசனை இருக்கிறது. அப்படிச் செய்யப்படுகிறபொழுது திரு. லத்தீப்

அவர்கள் சொன்னதைப்போல ஆளும் குழு அல்லது ஆட்சி மன்றக் குழு அதைப்போல செனட் அக்கடமிக் கவுன்சில் இந்த அமைப்புகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்கள், சிறப்பாகப் பணியாற்றுவதற்கு என்னென்ன விதி முறைகள் தேவையென்பதும் சேர்த்து ஆய்வு செய்யப்படும். மற்ற ஆலோசனைகளைப்பற்றி நான் இப்போது பதில் சொல்வது அவ்வளவு அவசியம் இல்லையென்று கருதுகிறேன். எனவே, இன்றைக்கு இந்தச் சட்டம் பல்கலைக்கழகங்களுடைய நடைமுறையில் அதை ஒரு வகையில் செயலற்றதாக ஆக்குவதற்கு காரணமாக இருந்த இடையூறாக இடைக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட திருத்தங்களை நீக்கி செம்மைப்படுத்துகிற முறையிலே கொண்டு வரப்பட்ட திருத்தங்கள் என்ற காரணத்தால் அத்தனை பல்கலைக்கழகங்களுக்கும் சேர்த்து கொண்டுவரப் பட்டிருக்கிற திருத்தத்தை இந்த அவையிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி.

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 22/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, சட்ட முன் வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 32 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முசப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 22/1989) நிறைவேற்றப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஓ) டாக்டர் எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், தமிழ்நாடு (திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு டாக்டர் எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், தமிழ்நாடு (திருத்தம் மற்றும் செல்லத் தக்கதாக்குதல்) சட்ட முன்வடிவு* (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலில் விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் திரு. கோ. பூவராகன்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிற டாக்டர் எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், தமிழ்நாடு (திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்ட முன் வடிவு மீது என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

இந்த மருத்துவப் பல்கலைக்கழகம் நம்முடைய தனியார் சுயநிதிக் கல்லூரிகளையும் இணைத்து கொண்டு வரப்பட்டிருக் கிறது. நம்முடைய அரசாங்கத்திலே இருக்கின்ற வைத்திய கல்லூரிகளும் அதன்பால் இணைக்கப்பட்டிருக்கின்றன. சட்டங்கள் வழங்குவது, பட்டங்கள் வழங்குவது இது போன்ற எல்லாக் காரியங்களுக்கும் இந்தப் பல்கலைக் கழகம் அனுமதி அளித்திருக் கின்றது. குறிப்பாக இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற இந்த விளக்கத்திலிருந்து தனியார் சுயநிதிக் கல்லூரிகள் ஆரம்பிக்கப் பட்டு அந்தக் கல்லூரிகள் பொதுவாக இடம் இல்லாமலும், போதிய வசதி இல்லாமலும், போதுமான பேராசிரியர்கள் இல்லாமலும் இயங்கி வந்திருந்தால் அதற்கு இந்தப் பல்கலைக் கழகம் முறையான ரீதியில் அதனுடைய அனுமதியை ரத்து செய்வதற்கு இடமளித்திருக்கிறது என்கிற அளவிலே இருப்பதைப் பார்க்கிறோம். குறிப்பாக, மாணவர்களைச் சேர்க்கிறபோது எல்லா வசதிகளும் இருக்கின்றன எல்லாப் பேராசிரியர்களும்,

*(5—5—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது).

அங்கே பணியாற்றுகிறார்கள், அவர்களுக்கு பிராக்டிகல் கூடச் செய்வதற்குப் போதுமான வசதிகள் இருக்கின்றன என்று எண்ணி ஆரம்பத்தில் மாணவர்களைச் சேர்த்து விடுகிறார்கள். மாணவர்களைச் சேர்த்துவிட்ட பிறகு அங்கே போய்ப் பார்த்தால் இட வசதி இல்லை; போதுமான பேராசிரியர்கள் இல்லை; அவர்கள் அங்கே அடிக்கடி வந்துபோகக்கூடிய நிலையிலே இல்லை: அவர்கள் ஓரிரு மாதம் வந்து பார்த்து ஒரு வசதியும் இல்லாத போது வேலையே வேண்டாமென்று சொல்லிவிட்டுவிட்டுச் செல்கின்ற பேராசிரியர்களும் பல இடங்களிலே இருக்கிறார்கள். ஓராண்டு முழுக்க முழுக்க ஒரு தனிப்பட்ட துறைக்குப் பேராசிரியர்களே இல்லாமல் நடத்துகின்ற மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றதைப் பார்க்கிறபோது அந்த மருத்துவப் பல்கலைக் கல்லூரிகளை மேலும் தொடர்ந்து நடத்த அனுமதி கூடாது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அவற்றை உடனடியாக அரசாங்கமே எடுத்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இன்றையதினம் தனியார் சுயநிதிக் கல்லூரிகளை ஆரம்பிக்கிறபோது, நாங்கள் எங்கள் சொந்தப் பணத்தை வைத்து மாணவர்கள் மத்தியிலே எதுவும் நன்கொடை பெறாமல் மருத்துவக் கல்லூரிகளை நடத்துவோம் என்று முடிவு எடுத்திருப்பதாகத் தெரிகிறது. ஆனால் இன்றைய தினம் பார்க்கிறபோது மாணவர்களிடம் இரண்டு, மூன்று, நான்கு லட்சம் ரூபாய் என்று உள்நாட்டு மாணவர்களுக்கு ஒரு நியதி வைத்திருக்கிறார்கள். வெளி நாடுகளிலிருந்து வருகின்ற மாணவர்களிடம் ரூ. 5 லட்சம் ரூபாயிலிருந்து ஏழு லட்சம் ரூபாய் வரையிலும் வசூலிக்கப்படுவதாகத் தெரிகிறது. இப்படி பல முறைகேடான செயல்கள் நடைபெறுவதைத் தவிர்ப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்களுக்கு ஒரு கட்டுப்பாடு விதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக வைத்தியக் கல்லூரிகளில் மாணவர்களின் எண்ணிக்கை, இந்த ஆண்டு இவ்வளவுதான் என்று இருந்தும்கூட இந்த ஆண்டிலே பார்த்தால் பல கல்லூரிகளிலே எண்ணிக்கையைவிட அதிகமான அளவில் மாணவர்களைச் சேர்த்துவிட்டு அந்த மாணவர்கள் பரீட்சை எழுத வரும்போது, பல்கலைக் கழகம் அவர்கள் பரீட்சை எழுத அனுமதிக்க முடியாது என்று சொல்லி, அவர்களுக்கு பல சங்கடங்களை விளைவித்ததாக நான் அறிகிறேன். அப்படி ஏற்பட்டதற்கு யார் பொறுப்பு? யார் காரணம்? எப்படி அவர்களை அனுமதித்தார்கள்? எண்ணிக்கைக்கு அதிகமான அளவில் மாணவர்களை எப்படி சேர்த்தார்கள்? அந்தக் கல்லூரிகளில் எண்ணிக்கைக்கு அதிகமான அளவில் சேர்த்தது ஒருவர், இருவராய் இருந்தாலும் பரவாயில்லை. இருபதுக்கும் மேற்பட்ட மாணவர்களைச் சேர்த்திருக்கிறார்கள்.

[1989 மே 11

[திரு. கோ. பூவராகன்]

(பிற்பகல் 5–50)

இன்றைய தினம் பார்த்தால், ஒரு மாணவனுக்கு ரூ. 3 இலட்சம் வைத்தால்கூட, கிட்டத்தட்ட ரூ. 60 இலட்சம் சுமார் ரூ. 1 கோடி வசூல் செய்திருக்கிறார்கள். தனியார் சுயநிதிக் கல்லூரி என்று வைத்துக் கொண்டு, இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட்டதை நம்முடைய அரசாங்கம் எப்படி அனுமதித்தது என்பதை அறிய விரும்புகிறேன். பல்கலைக் கழகம் பரீட்சை எழுதுவதற்கு அனுமதிக்கமுடியாது. ஹால் டிக்கட் வழங்க முடியாது என்று சொல்லியிருக்கும்போது, எப்படி அதிக எண்ணிக்கையில் மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அதே போல, பல இடங்களிலே போதுமான வசதிகள் இல்லை. 3, 4 ஆண்டுகள் ஆகியும் போதுமான வைத்திய வசதிகள் இல்லை, பேராசிரியர்கள் இல்லை, போதுமான கருவிகள் இல்லை. இந்த நிலைமையிலே எவ்வாறு அவர்களுக்கு இந்தக் கல்வியைப் போதிக்க முடியும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். இப்படிப்பட்ட சுயநிதிக் கல்லூரிகள் இன்றையதினம் கல்வியை வளர்ப்பதற்காகச் செயல்படவில்லை, ஏதோ சொந்த முறையிலே பெயரளவிலே நடத்தி, எவ்வளவுதூரம் பணத்தைப் பறிக்க முடியுமோ, அவ்வளவு பணம் பறிக்கும் இடமாக இருக்கிறதே தவிர, அப்படிப்பட்ட கல்லூரிகளாக இருக்கின்றனவே தவிர, வைத்தியக் கல்லூரிகளாக இருக்கின்றனவே தவிர வைத்தியம் கற்றுக் கொடுப்பதிலே சிறப்பான முறையிலே இயங்குகின்ற வகையிலே அவை அமையவில்லை என்பது இந்த 3 ஆண்டுக் காலத்திலே தெரிகிறது. வைத்திய வசதிக்குப் போதுமான இடம், பிராக்டிக்கல் செய்வதற்குப் போதுமான இடம், வசதிகள், அரசுக் கணக்கிலே பேராசிரியர்கள் எந்த அளவுக்கு இருக்க வேண்டுமென்று நிர்ணயித்திருக்கிறோமோ, அந்த அளவுக்குப்பேராசிரியர்கள்,இல்லாத நிலைமைகள் இருக்கின்றன. இது போன்ற பல வசதியற்ற நிலைமைகள் இருக்கும் என்றால், மேலும் காலங்கடத்தாமல், அவர்களுடைய உரிமத்தை ரத்துச் செய்து, அக்கல்லூரிகளை அரசாங்கமே ஏற்று நடத்த முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் அறிந்த அளவிலே, இந்தியன் மெடிக்கல் கவுன்சில் அவர்களுக்கு அனுமதி கொடுத்ததாகத் தெரியவில்லை. அப்படியிருந்தும் அவர்கள் தொடர்ந்து ஏதோ ஒரு செல்வாக்கிலே அந்த வைத்தியக் கல்லூரியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, சிதம்பரத்திலே ஒரு வைத்தியக் கல்லூரி நடந்து கொண்டிருக்கிறது. அந்த வைத்தியக் கல்லூரியிலே மாணவர்களைச் சேர்ப்பதற்கு ஏராளமான பேர்கள் ஏஜண்டுகளாக ஆங்காங்கே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த ஏஜண்டுகள் பல இடங்களிலே பல மாணவர்களிடத்திலே 'உங்களுக்கு இடம்

கிடைக்கும்' என்று சொல்லி, பணத்தைப் பெற்று, பின்னால் இடமும் கிடைக்கவில்லை, பணமும் மாணவர்களுக்குப் போய்ச் சேரவில்லை. பல பேர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள்; போலீஸ் நிலையத்திற்குச் சென்றிருக்கிறார்கள். இதற்கு முழுக்க, முழுக்க கல்லூரியை நடத்துகின்ற பொறுப்பாளர்கள்தான் பொறுப்பு என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இவ்வாறு தவறு நடப்பதை உணர்ந்து, நம்முடைய அமைச்சர் அவர்கள் அல்லது, இந்தப் பல்கலைக் கழகத்திலே அதிகாரிகளாக இருப்பவர்கள், இது போன்ற கல்லூரிகள் மீது கவனம் செலுத்தி, அக்கல்லூரிகளுக்கு அடிக்கடி சென்று பார்த்து, எவ்வாறு மாணவர்களுக்கு கல்லூரியிலே பாடம் சொல்லித் தரப்படுகிறது என்று பார்த்து, குறை ஏற்பட்டால், அதைக் கண்டித்து உடனடியாக மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும். நான் அறிந்த அளவிலே, சிதம்பரத்திலே நடக்கின்ற மருத்துவக் கல்லூரியிலே பல பேராசிரியர் இடங்கள் காலியாக இருக்கின்றன. ஒவ்வொன்றையும் பற்றி நான் சொல்ல விரும்பவில்லை. அந்த மாணவர்களுக்கு, பிராக்டிக்கல் செய்வதற்கு போதுமான வைத்திய வசதி—ஹாஸ்பிட்டல்கள் இல்லை. சிதம்பரத்திலே இருந்து கடலூருக்குப் போகவேண்டும். கடலூரிலிருந்து, நெய்வேலிக்கு வரவேண்டும், அங்கிருந்து சென்னைக்கு வர வேண்டுமென்ற நிலைமை 3 ஆண்டுகளாகத் தொடர்ந்து இருந்துவருகிறது. இவ்வாறு ஏராளமாக பணம் பெற்று, அதற்குப் போதுமான வசதி செய்ய முடியாத சூழ்நிலை இருந்தால், இது போன்ற வைத்தியக் கல்லூரியை அரசாங்கம் ஏற்று நடத்துவதற்கு ஏன் தயங்கவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஒவ்வொரு வைத்தியக் கல்லூரியையும் பற்றி நான் அதிகமாகத் தொடர்ந்து சொல்ல விரும்பவில்லை. எந்த வைத்தியக் கல்லூரியாக இருந்தாலும் அரசாங்கம் நடத்துகிற வைத்தியக் கல்லூரிக்கு இணையாக, எல்லாத் தகுதிகளையும் பெற்றிருந்தால்தான், அந்தக் கல்லூரியை அனுமதிக்கவேண்டும், இல்லாவிட்டால் அதன் உரிமத்தை ரத்துச் செய்ய வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன், வணக்கம்.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற, 1989 ஆம் ஆண்டு டாக்டர் எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், தமிழ்நாடு (திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன்.

1987 டிசம்பர் 24, என்பது நாம் எல்லோரும் கண் கலங்கிய நாள், தமிழகம் மட்டும் அல்ல, இந்தியத் துணைக் கண்டமே தமிழகத்தை நோக்கிப் படை எடுத்து வந்த நாள். பெரு மதிப்பிற்

குரிய, ஜனாதிபதியாக இருக்கிற திரு. வெங்கட்ராமன் அவர்கள், மறைந்த தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் பெயராலே மருத்துவப் பல்கலைக் கழகத்தைத் துவக்குவதற்கு ஜனாதிபதி அவர்கள் திருக்கரங்களாலே துவக்கி வைப்பதற் கென்று அறிவிக்கப்பட்டிருந்த நாள் டிசம்பர் 24. தமிழகம் முழுவதிலும் இருந்து கோடிக்கணக்கான மக்கள் திரண்டு சென்னை நோக்கி வந்து கொண்டிருந்த நாள். நமது பெருமதிப் பிற்குரிய புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் அவர்கள் மறைந்து விட்டார் என்ற துக்ககரமான செய்தி கிடைத்த நாள். அந்த நாளிலே துவக்குவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருந்த விழா நின்று போய்விட்டது. நான் அமைச்சருக்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்வது, அந்த விழாவை இன்னும் சிறப்பான முறையிலே, சீரான முறையிலே நடத்தியிருக்க வேண்டும். அதை நடத்தாமலே காலம் தள்ளிப் போட்டு இன்றைக்கு சட்ட முன்வடிவாகக் கொண்டு வந்திருக்கிறீர்கள். நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்து அந்த நிகழ்ச்சியை நல்ல முறையிலே, தமிழகம் போற்றுகின்ற முறையிலே, அனைத்து மாநிலங்களிலிருந்தும் தலைவர்களை யெல்லாம் வரவழைத்து, மாண்புமிகு ஜனாதிபதி, மாண்புமிகு பிரதம மந்திரி அவர்களையெல்லாம் வரவழைத்து அந்தப் பல்கலைக் கழக நிகழ்ச்சிகளை சிறப்பான முறையிலே நடத்த வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பதை இங்கே நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மரியாதைக்குரிய உறுப்பினர் பூவராகன் அவர்கள் பேசுகிற நேரத்தில் சுயநிதிக் கல்லூரிகளைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அவருக்கு நான் பணிவோடு தெரிவித்துக் கொள்வது சுயநிதிக் கல்லூரிகளைத் துவக்குவதிலே தவறு இல்லை. எல்லா மருத்துவக் கல்லூரிகளையும் அரசாங்கமே துவக்க முடியாது என்ற நிலையிலே தான், தானாக முன்வந்து மருத்துவக் கல்லூரிகளைத் துவக்க யாராவது முன்வருகிற நேரத்தில் அன்றைக்கு அவற்றை அனுமதித்து உத்தரவைத் தந்திருக்கிறார்கள். இப்போது நீங்கள் ஆட்சியிலே இருக் கிறீர்கள். நீங்களும் இன்றைக்கு அத்தகைய உத்தரவுகளைத் தருவதை வரவேற்கிறோம். காரணம் என்னவென்றால் மாணவர்கள் படிக்கின்ற வாய்ப்பை இழக்கின்ற நிலை ஏற்படக் கூடாது. இங்கு இடவசதி இல்லாத காரணத்தால் கர்நாடகம் போன்ற மாநிலங்களுக்கு நம் மாணவர்கள் செல்லக்கூடிய நிலை தமிழகத்திலே ஏற்பட்டது. அவைகளைத் தவிர்க்கின்ற வகை யிலேதான் அன்றைக்கு சுயநிதி மருத்துவக்கல்லூரிகளை ஆங்காங்கு துவக்குவதற்கு அனுமதி தந்தார்கள். இன்றைக்கு அதிலே தவறுகள் நடந்திருப்பதாகவும் இரண்டு, மூன்று இலட்சம் என்று அவர்கள் பணம் பெறுவதாகவும் புகார்கள் சொன்னார்கள். அது எந்தக் கல்லூரியாக இருந்தாலும்

நடவடிக்கை எடுங்கள். நாங்கள் ஆதரவு தரத் தயாராக இருக்கிறோம். அந்தக் கல்லூரிகள் சட்ட திட்டங்களுக்கு உட்படவில்லை, போதுமான வசதிகள் அங்கு இல்லை என்று இன்னும் பலவிதமான குறைகளைச் சொல்கிறார்கள். அவற்றைப் போக்கி அவர்கள் கல்லூரிகளை நல்ல முறையில் நடத்தச் செய்வதற்கு அரசாங்கம் முன்வரவேண்டுமே தவிர, அதை விட்டு ஏதோ புகார்கள் இருக்கின்றன என்று அத்தகைய கல்லூரிகளை எல்லாம் அரசாங்கமே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்வது நிச்சயமாக நியாயம் இல்லாத ஒரு செயல் என்று மட்டும் நான் இங்கே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் காலத்திலே பல கல்லூரிகளை

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுய நிதிக் கல்லூரிகளில் நன்கொடை வாங்கலாம் என்று கடந்த காலத்திலே அரசு அனுமதி அளித்தது உண்மையா? பகிரங்கமாக ரசீது போட்டே 2, 3 இலட்சம் ரூபாய் நன்கொடை வாங்கித்தான் அவர்கள் அனுமதியே தருகிறார்கள். கடந்த காலத்திலே நடந்தது, தொடர்கிறது.

திரு. வி. கே. சின்னசாமி : தலைவர் அவர்களே, இது இன்றைக்கு நேற்று என்றல்ல; என்றைக்கும் நடைபெற்றுக் கொண்டு இருக்கிற நிகழ்ச்சிதான். அது ஒரு தொடர் நிகழ்ச்சிதான். அரசியலிலேகூட பெரிய அளவிலே இது உருவாகிவிட்டது. அதற்கென பல முறைகளையெல்லாம் மாறுதல் செய்து.

திரு. பெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே, தொடர்ந்து நடைபெறுகிறது என்று சொல்கிறார்கள். தமிழகத்திலே அதற்கு முன்னாலே கிடையாது. மைசூரிலே, மற்ற மாநிலங்களிலே இருந்தது. கல்வியின் பெயரால் நடைபெறுகிறது வியாபாரம் என்று கடந்த காலத்திலே மேடைகளிலே எல்லாம் சொல்லியிருக்கிறோம். அது பொது ஜன அபிப்பிராயமும் கூட. தமிழ்நாட்டிலே முதன் முதலில் அப்படிப்பட்ட வியாபாரக் கல்லூரிகளைத் தொடங்குவதற்கு கடந்த காலத்திலே அனுமதி தரப்பட்டது உண்மையா, இல்லையா?

திரு. வி. கே. சின்னசாமி : தலைவர் அவர்களே, வியாபாரக் கல்லூரிகள் அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சட்ட முன்வடிவைப் பற்றிப் பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. வி. கே. சின்னசாமி: தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்திலே, பெருந்துறையில்கூட போக்குவரத்துக் கழகத்திலே பணியாற்றுகின்ற டிரைவர்கள், கண்டக்டர்கள் போன்ற பணியாளர்களை வைத்து அவர்களே அதற்கென்று ஒரு நிதி ஒதுக்கி அவர்களுடைய குழந்தைகள் மருத்துவர்களாக, என்ஜினியர்களாக வரவேண்டுமென்ற அடிப்படையிலே, மருத்துவக் கல்லூரியும், பொறியியல் கல்லூரியும் பணியாளர் களுக்கென்றே தனியாகத் துவக்கப்பட்டு அதிலே இவ்வளவு சதவீதம் இன்னாருக்கென்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 6–00)

இப்படி பல காரியங்களைச் செய்ய முன்வந்திருக்கிறார்கள். எனவே நான் பணிவோடு ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இங்கே பொன்விழா நிகழ்ச்சி சிறப்பாக இந்தச் சட்டமன்றத்தில் நடைபெற்றது. நாங்கள் அதில் கலந்து கொள்வதில்லை என்ற கொள்கை ரீதியின் காரண மாகத்தான் கலந்து கொள்ளவில்லை. மறுநாள் 6 ஆம் தேதி சட்டமன்றத்திற்குள் வந்து பார்த்தேன். 40 ஆண்டுக் காலம் நாங்கள் ஒன்றாக வாழ்ந்தவர்கள், நெருங்கிப் பழகியவர்கள் என்றெல்லாம் நமது முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். அது உண்மைதான். இருந்தாலும் கூட அந்தப் பொன்விழா நிகழ்ச்சியில் மரியாதைக்குரிய பொன்மனச் செம்மல் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களுடைய படத்தை இந்த மன்றத்தில் வைத்து அந்த நிகழ்ச்சியை நடத்தியிருப்பார்கள் என்று நான் கருதினேன். ஆனால் காலையில் வந்து பார்த்தால் அது இல்லாமல் இருந்தது கண்டு உண்மையிலேயே வருந்தினேன்.

அடுத்து நிறுவனங்களுக்கோ, கட்டிடங்களுக்கோ உயிரோடு இருப்பவர்களின் பெயர்கள் வைக்கப்பட்டிருந்தால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது நாம் பேசுவது எம். ஜி. ஆர். பல்கலைக் கழகம் பற்றி.

திரு. வி. கே. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, உயிரோடு இருப்பவர்களின் பெயர் பொது நிறுவனங்களுக்கோ, கட்டிடங்களுக்கோ வைக்கப்பட்டிருந்தால் அதை எடுத்து விடலாம் என்று மரியாதைக்குரிய டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு முடிவினைக் கொண்டு வந்தார்கள். அவ்வாறு கொண்டு வந்த காரணத்தால்தான் பல பகுதிகளில் ரொம்ப நாட்களுக்கு முன்பு வாழ்ந்த, இப்போது யார் என்றுகூட தெரியாத பல பெரியவர்களின் பெயர்கள் எல்லாம் வைக்கப் பட்டன. உதாரணமாக எனது தொகுதியில் மிக நல்ல

காரியங்களைச் செய்து கொண்டிருந்தவர் அமரர் கே. வி. காளியப்பன் என்பவர். அவர்கள் கோப்பம்பாளையத்தைச் சேர்ந்தவர்கள். அவர் அந்தக் காலத்திலேயே புஞ்சைப்புளியம் பட்டியில் 5 ஏக்கர் நிலத்தை அரசு உயர்நிலைப்பள்ளி துவக்குவதற்காகக் கொடுத்து அத்துடன் ஒரு இலட்சம் ரூபாய் கொடுத்து கட்டிடம் கட்டித் தந்தார்கள். அந்த அரசாங்கப் பள்ளிக்கு கே. வி. காளியப்பன் மேல்நிலைப்பள்ளி என்ற பெயர் வைக்கப்பட்டது. அவ்வாறு வைக்கப்பட்டு அங்கேயே அவருக்கு சிலையும் நிறுவப்பட்டிருக்கிறது. இப்படி தற்காலத்தில் பெயரே தெரியாமல் இருந்தவர்கள் எல்லாம் கௌரவிக்கப் பட்டிருக்கிறார்கள். இப்படிச் செய்வதன் காரணத்தால் இன்னும் நிறையப்பேர் இப்படி பொதுக் காரியங்களுக்காக கட்டிடங்கள் போன்றவற்றைக் கட்டித் தருவதற்கு முன்வருவார்கள் என்ற காரணத்தால் தான் அப்படிப்பட்ட உத்தரவுகளை புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்தார்கள். எனவே யாருடைய பெயரையும், எடுக்க வேண்டும் என்பதற்காகவோ அல்லது யாருடைய பெயரையும் சேர்க்க வேண்டும் என்பதற்காகவோ அவ்வாறு கொண்டுவரப் படவில்லை. கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. ஜீவா அவர்களின் பெயர் கூட வைக்கப்பட்டிருக்கிறது. போக்கு வரத்துக் கழகத்திற்கு அவர் பெயர் இடப் பெற்று அந்தப் போக்குவரத்துக் கழகம் இப்போது சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நல்ல பல காரியங்களைச் செய்தவர் புரட்சித் தலைவர் அவர்கள், எனவே இந்தப் பல்கலைக்கழகத்தில் அனைத்துக் கல்லூரிகளையும் இணைத்து, புதிய கல்லூரிகளையும் துவக்குவதற்கு முன்வாருங்கள் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். சுயநலம். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுயநலக் கல்லூரிகளா? (சிரிப்பு).

திரு. வி. கே. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சுயநலம் இல்லாமல் சுய நிதிக் கல்லூரிகளைத் துவக்குவதற்கு முன்வந்தால் ஆதரவு தாருங்கள்; நீங்களும் உத்தரவு போடுங்கள்; இன்னும் நிறையக் கல்லூரிகள் வரவேண்டும்; அப்போதுதான் மாணவர்கள் படிப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. கே. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் ஒரு முக்கியமான சட்டம், எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கு எல்லாவிதமான அதிகாரங்களையும் கொடுப்பதற்கும் அத்துடன் இணைக்கப்படக் கூடிய கல்லூரிகளில் கல்வியின் தரம் கீழே போகாமல், இண்டியன் மெடிக்கல் கவுன்சில் நிர்ணயித்திருக்கின்ற அந்தத் தரத்திற்குக்

கீழே போகாமல் இருக்கவேண்டும் என்பதுதான் இந்தச் சட்டம். அதற்காகத்தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது வரவேற்கத்தக்க நல்ல சட்டம்தான். இந்தச் சட்டத்திற்கான காரண நோக்க விளக்கத்தில் சுருக்கமாகக் குறிப்பிட்டு இருக்கும்படியான அம்சங்கள்தான் இன்றைக்குக் கல்லூரிகளிலேயே நாம் காணக்கூடிய நிலைமையாக இருந்து கொண்டிருக்கிறது.

உதாரணமாக நிலங்களை அவர்கள் ஏராளமாக வாங்கிப் போடுகிறார்கள். கல்லூரி கட்டுவதற்காக மட்டுமல்ல; கல்லூரிக் காம்பவுண்டில் விவசாயம் செய்து சம்பாதிப்பதற்காகவும் அவ்வாறு வாங்கிப் போடுகிறார்கள். பின்னால் விலை ஏறும் போது அதிக விலைக்கு விற்பதற்கும் வாய்ப்புண்டு. அது ஒரு பக்கம் இருக்கட்டும். அங்கே தகுதி பெற்ற ஆசிரியர்கள் போதிய அளவில் நியமிக்கப்படுவதில்லை. போதிய அளவுக்குச் சோதனைக் கூடங்கள் இல்லை. அத்துடன் இணைக்கப்பட்ட மருத்துவ மனைகள் இல்லாமல் கூட அந்தக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலை உருவாவதன் காரணத்தால் பணச் செலவு என்பது மட்டும் அல்லாமல் வேறு பிரச்சினைகளும் இருக்கின்றன. 5 வருஷ காலம் கல்விப் பயிற்சியும் ஒரு வருஷ காலம் நடைமுறைப் பயிற்சியும் பெற்று டாக்டர்களாக வரக்கூடியவர்களுக்கு நாட்டு மக்களின் உயிரைப் பாதுகாக்கக்கூடிய வகையில் என்ன தரம் இருக்கிறது, என்ன ஸ்டாண்டர்டு இருக்கிறது என்று பார்த்தால் அது இல்லாத நிலைதான் இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் பல கல்லூரிகள் இருக்கின்றன. இப்படி இருக்கும்படியான ஒரு கல்லூரியில் ஒரு மாணவரைச் சேர்ப்பதற்கு $2\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் பணம் வாங்குகிறார்கள். கல்லூரி ஆரம்பித்தவுடன் 70 பேர்களுக்கு சாங்ஷன் கொடுத்தார்கள். அதற்கு பிறகு அடுத்த ஆண்டு 30 பேருக்கு சாங்ஷன் கொடுத்தார்கள். அப்படி நூறு மாணவர்களைக் கொண்ட கல்லூரி உருவாவதற்கு, தலைவர் அவர்களே, எப்படிப்பட்ட ஒரு அந்தஸ்துள்ள ஆஸ்பத்திரி அதற்குத் தேவை, இந்தியன் மெடிகல் கவுன்சில் நார்ம்ஸ்படி, அங்கே இருக்கிற, நமது தமிழக அரசினுடைய மருத்துவ மனையிலிருந்து அதற்கான டாக்டர்களை நியமித்து. ஒரு கமிஷன் நியமித்து. விசாரணை நடத்தியபோது—அவர்கள் சொன்னார்கள்,—ஒரு மாணவன் படிக்கக்கூடிய இடத்தில், ஒரு மாணவனுக்கு 7 படுக்கை என்கின்ற முறையில் நூறு மாணவர்களுடைய அந்தக் கல்லூரிக்கு குறைந்தபட்சம் 700 படுக்கைகள் உள்ள ஆஸ்பத்திரி தேவை. அப்படிப்பட்ட ஆஸ்பத்திரி இல்லை. அவர்களுக்கு எப்படி லைசென்ஸ் கொடுக்கப்பட்டது; அனுமதி அளிக்கப்பட்டது என்று கேட்டால், பக்கத்தில் இருக்கும்படியான தங்களுக்கு செல்வாக்குள்ள தனியார் ஆஸ்பத்திரிகளை அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். அந்த கமிஷன் வருகின்ற நேரத்தில்

அல்லது இந்தியன் மெடிகல் கவுன்சில் விசாரணை வருகின்ற காலத்திலே, அதைக் காட்டினார்கள். தனியார் மருத்துவ மனைகளிலே நிறையப் பணம் கொடுத்து சிகிச்சை பெறுகின்ற நோயாளிகள் தங்களைப் பரிசோதனைக் கருவிகளாக அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயார் இல்லை என்று சொன்னால். இந்தக் கல்லூரியிலே $2\frac{1}{4}$ லட்சம் 3 லட்சம் பணம் கொடுத்து சேர்ந் திருக்கின்ற மாணவர்களுடைய கதி என்னவாகும்? எதிர்கால மருத்துவர்களாக வரவேண்டியவர்களுக்கு. அப்படிப்பட்ட நிலை இருக்கிறது. அது அப்பட்டமான சட்டமீறல். அந்த உண்மையை நான் வைத்தேன் இதே மன்றத்திலே. இதற்கு ஒரு இணைப்பு, நமது பாரதியார் யூனிவர்சிட்டி. நமது மகாகவி பாரதியார் பெயராலே உருவாக்கப்பட்ட யூனிவர்சிட்டியிலே இப்படி ஒரு கல்லூரி இணைக்கப்பட்டது, அதை இங்கே சொன்ன காலத் திலே யூனிவர்சிட்டியிலே ஒரு அற்புதமான நிகழ்ச்சியை நான் பார்த்தேன். அன்றைக்கு இருந்த மருத்துவத் துறை அமைச்சர் அவர்களும், சட்டத்துறை அமைச்சர் அவர்களும் இரண்டு பேர்களும் ஆச்சரியப்பட்டு என்னிடத்திலே சொன் னார்கள். அந்த சீட் அதிகப்படுத்தி இருப்பது எங்களுக்கே தெரியாது என்று சொன்னார்கள். நூறு சீட்டு கொடுத்த தற்கு எந்த மாதிரி நிலை இருக்கவேண்டும், ஆஸ்பத்திரி இருக்கவேண்டும் என்று சொன்னதைக் கேட்காமல் அதற்கு அடுத்த வருடம் 30 சீட்டு கொடுத்தபோதுதான் இந்த விசாரணையில் இது பூராவும் வெளியிலே வந்தது. இந்த அபாயம் இருக்கிறது. சுய நிதி கல்வி சுய நிதி கல்லூரிகள் என்று சொல்வது. வர்த்தகம் என்று சொன்னவுடனேயே மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னசாமிக்கு சங்கடம் வந்து விட்டது. வர்த்தகம், எல்லாவற்றிலும் வர்த்தகம். மருத்துவத் திலே வர்த்தகம், மனிதனுடைய உயிரை வைத்து சூதாடுகின்ற வர்த்தகம், வர்த்தகம் என்றுதான் அதற்கு அர்த்தம். அது கூடாது. அதைச் சரி செய்வதற்காக இப்படிப்பட்ட இந்த சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நோக்கம் நிறை வேறவேண்டும். அப்போதுதான் பிரச்சினைகள் தீரும். அந்த ஒரு கல்லூரி மட்டுமல்ல. என்னைக் கேட்டால் இந்த ஸ்டேன் டர்ட் ஒத்துக்கொள்ளாத, அதற்குள்ளே வராத கல்லூரிகளை அனுமதிக்கக்கூடாது. இங்கே எனக்கு அன்றைக்கு ஒரு வாக் குறுதியைக் கொடுத்தார்கள். அதன் சேன்சலராக இருக்கக்கூடிய மேன்மை தங்கிய நம்முடைய கவர்னருக்குக்கூட அந்த கமிஷனாகப் போன டாக்டர்கள் கடிதம் எழுதினார்கள். அதற்கு அவர்களுக்கு பதில் கிடைத்ததா இல்லையா என்று எனக்குத் தெரியாது. விசாரணை நடத்தியது. அதற்காக ஒரு கமிஷன் நியமித்து விசாரணை நடத்தினார்கள். விசாரணை முடிவு என்ன ஆயிற்று என்று தெரியாது. அந்தப் பாரதியார் பல்கலைக் கழகம் இந்தத் தப்பு செய்ததற்கு என்ன தண்டனை கொடுக்கப் பட்டது என்பது இன்று வரைக்கும் தெரியாது. இந்த அரசிடம் நான் கேட்டுக் கொள்வது, இந்தப் பிரச்சினை அவ்வளவு

எளிதிலே விடக்கூடிய பிரச்சினை அல்ல. அப்படிப்பட்ட ஒரு பெரும் தவறு செய்தது. அவர்கள் 30 சீட்டுகள் மறுபடியும் அதிகப்படுத்தி 130 சீட்டுகள் அளவுக்குக் கொண்டு போனார்கள். அந்த நிலைமைக்குக் கொடுத்தனர். பாதி இடங்களை... முடிக்கிறேன் நான், ஏனென்றால் சட்டம் இது, சட்டப் புத்தகத்தில் நிறைவேறினால், நமக்கு நீண்ட காலத்திற்கு இருக்க வேண்டியது, ஆகவே அதற்கு அன்றைக்கு நான் சொன்னேன். இந்த மாதிரி நிலைமை ஏற்பட்டால் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னேன். நடவடிக்கை எடுப்போம் என்ற உத்தரவாதத்தைச் சொன்னார்கள், இதே அவையிலே. என்ன நடவடிக்கை அவர்கள் பேரிலே எடுத்தார்கள் என்று எனக்குத் தெரியாது. இப்படிப்பட்ட நிலைமைகள் இனிமேல் வரக் கூடாது. அதுதான் இதனுடைய நோக்க காரண விளக்கத்திலே தெளிவாகச் சொல்கின்றார்கள். இந்த மாதிரி கல்வியினுடைய தரம் குறைந்து போகக்கூடாது.

ஒரு கல்லூரியை இணைக்கவேண்டுமென்று சொன்னால், பல்கலைக் கழகத்தோடு இணைக்கவேண்டுமென்றால், சம்பந்தப்பட்ட விண்ணப்பம் போடுகின்ற கல்லூரி அரசிடம் ஆரம்பிக்கும்போதே அரசினுடைய பூரணமான அனுமதியை, இந்த ஸ்டேண்டர்ட்டுக்கு உட்பட்டுத்தான் அந்த கல்லூரி இருக்கின்றது என்ற திருப்திகரமான நிலையை உருவாக்கிக் கொண்டுதான் அதற்கான அனுமதியை அரசிடத்திலிருந்து பெறவேண்டும். அரசு அனுமதி கொடுத்து உருவாக்கப்பட்ட கல்லூரிதான் இணைக்கப்பட வேண்டும். இதுதான் அதனுடைய சாராம்சம். கிரக்ஸ். இந்த முறையிலே காரியங்கள் நடக்கவேண்டும். நடந்தால் இந்த மருத்துவக் கல்வி எல்லாம் வியாபாரம் ஆகவேண்டிய அவசியம் இல்லை. மனிதனைக் காப்பாற்றுவதற்காக இருக்கும்படியான ஒரு கல்வி இன்றைக்கு அது ரொம்ப தேவை நம் நாட்டிற்கு. உணவுக்கு அடுத்தபடியாக மிக முக்கியமாக தேவையானது. ஆகவே இந்த தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய முறையில் இந்தச் சட்டத்தை நிறைவேற்றி இன்றைக்கு இந்த அரசு நடைமுறைக்குக் கொண்டு வரும்போது, எந்தக் கல்லூரிக்கும் இதிலிருந்து விதிவிலக்கு அளிக்கக்கூடாது. எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் மட்டுமல்ல, வேறு எந்தப் பல்கலைக் கழகத்திலும் இதைப் பண்ணக்கூடாது.

(பிற்பகல் 6-10)

மாண்புமிகு தலைவரவர்களே, திறமை வாய்ந்த டாக்டர்கள் என்னிடத்திலே ஒரு ஆலோசனை சொன்னார்கள். அதை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். அவர்கள் என்ன

சொன்னார்கள் என்றால், புதிது புதிதாக பல்கலைக் கழகங்கள் தேவையல்ல, இன்றைக்கு உருவாக்கப்பட்டுள்ள பல்கலைக் கழங்களோடு இணைக்கப்பட்ட கல்லூரிகளினுடைய ஸ்டேண்டர்டை உயர்த்த வேண்டும், அந்த மெடிகல் ப்ரொபஷனுக்கு என்ன தேவை இருக்கிறதோ, அந்த தேவைகளைப் பூரணமாக பூர்த்தி செய்ய வேண்டும். இருக்கிற பல்கலைக் கழகங்கள் முறைப்படி அபிவிருத்தியோடு முன்னுக்குச் செல்லும் முறையிலே அதனுடைய வேலை முறைகள் அமைக்கப்பட வேண்டும். இதைச் செய்தால் தமிழகத்திலே மருத்துவக் கல்வியும், மருத்துவத் தொழிலும் வெகு வேகமாக முன்னேறி, மக்களுக்கு நன்மை கிடைக்கும். இந்த முறையிலே அவையிலே நீங்கள் பேசுங்கள் என்று அந்த மருத்துவ நிபுணர்கள் என்னைக் கேட்டுக்கொண்டார்கள். இது ஒரு நல்ல யோசனை. இதை இந்த அரசுக்குச் சொல்லி ஏற்கெனவே நடந்து கொண்டிருக்கிற கல்லூரிகள் பற்றி உங்களுக்குத் தெரியும், அங்கே என்ன செய்தார்கள் என்று பார்த்து, அந்தத் தவறுகளுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும், அதற்கான பதிலும் இந்த அவையிலே கொடுத்தால் நல்லது என்று கூறி, முடித்துக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, எம். ஜி. ஆர். பல்கலைக் கழகம் என்று இங்கே பேசுகிறபோது, பொன்மனச் செம்மல் அவர்களுடைய பெயராலே ஏற்பட்டிருக்கிற இந்தப் பல்கலைக் கழகத்தை நடத்துகின்ற பொறுப்பை ஏற்று இருக்கிறவர்கள் எந்த வகையிலே செயல்பட வேண்டுமென்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அன்று தனிப்பட்டவர்களுடைய பெயரை வைக்கக்கூடாது என்று சொல்லி, ஆனால் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயராலே இந்தப் பல்கலைக் கழகம் வர வேண்டுமென்று இருந்து, அன்றுதான் தொடக்க விழா என்று இருக்கும் நேரத்திலே, அவர் அதைப் பார்க்காமலேயே மறைந்துவிட்டார் என்று சொல்கிறபோது, தன்னுடைய பெயரிலே அன்று வருவதைக்கூட அவர் பார்க்கவில்லை. அவருடைய கொள்கை நிலைநிறுத்தப்பட்டது என்று கூடச் சொல்லலாம்.

இரண்டாவது, பொன்மனச் செம்மல் அவர்களுடைய வாழ்க்கையிலே, எம். ஜி. ஆர். அவர்களுடைய வாழ்க்கையிலே அவர் இல்லை, அவர் வாழ மாட்டார், அவர் வாழ முடியாது என்று சொல்லுகின்ற சூழ்நிலை எல்லாம் வந்தபோது அவரை ஒரு ஆம்புலன்ஸ் வண்டியில் வைத்து விமானத்திலே ஏற்றுவதை நான் பக்கத்திலே இருந்து பார்த்துக் கொண்டிருந்தேன். அவர் பிழைத்து வருவார் என்று எண்ண முடியாத அளவுக்கு இருந்து, அவர் பிறகு பிழைத்து வந்தார். இவைகளை இங்கே குறிப்பிடுவதற்குக் காரணம், இந்தப் பல்கலைக் கழகம் இயக்கிக் கொண்டிருக்கும் மருத்துவக் கல்லூரியாக இருந்தாலும்,

மருத்துவமனையாக இருந்தாலும், பிழைக்க மாட்டார் என்று சொல்லுகிற ஒருவரைக்கூட பிழைக்க வைக்க முடியும் என்ற ஆற்றல் பெற்றதாக அமைய வேண்டும். அந்த அளவுக்கு அவற்றைத் திறம்பட நடத்த வேண்டுமென்பதற்காக இதைச் சொல்கிறேன். சான்றாக ஒன்றிரண்டைச் சொல்ல வேண்டும்.

அந்தா நாள் திருநெல்வேலிக்குச் சென்றிருந்தேன். திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் டீன் இல்லை. மதுரை மருத்துவக் கல்லூரிக்கு டீன் இல்லை. இராயப்பேட்டையில் உள்ள மருத்துவ மனைக்கு சூப்பரின்டென்டென்ட் இல்லை. தஞ்சையில் இருக்கின்ற அரசு மருத்துவக் கல்லூரிக்கு டீன் இல்லை. ஆக 3 அரசு மருத்துவக் கல்லூரிகளில் டீன் இல்லை. இராயப்பேட்டை போன்ற பெரிய மருத்துவ மனைக்கு சூப்பரின்டென்டென்ட் இல்லை. இவர்கள்தான் மருந்து வாங்குவதிலேயிருந்து, அவற்றை நிர்வகிப்பதிலிருந்து, நோயாளிகளைக் கவனிப்பதிலேயிருந்து அத்தனை பொறுப்புக்களையும் செய்ய வேண்டும். இவர்கள் எல்லாம் போடப்பட வேண்டும். இந்த இடங்கள் எல்லாம் காலியாக இருக்கின்றன. ஒன்றிரண்டு இடங்களில் இப்போது போடப்பட்டிருக்கிறார்களோ என்னவோ தெரியாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவைகளை எல்லாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து, இந்த மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கு பெரிய அளவுக்குக் கட்டிடம் எழுப்பப் போவதாகச் சொல்கிறார்கள். அது சென்னையிலேதான் இருக்க வேண்டுமா அல்லது தமிழகத்தினுடைய தென் பகுதியிலே, அல்லது மத்தியப் பகுதியிலே அது வந்தால், எல்லா மக்களுக்கும் எளிதாகச் சேவை செய்கின்ற ஒரு வாய்ப்பை அது பெறாதா? எல்லா மருத்துவக் கல்லூரிகளுக்கும் இணைப்பு கொடுக்கின்ற காரணத்தாலே, தமிழகத்தின் தென் பகுதியிலோ அல்லது மத்தியப் பகுதியிலோ பெரிய அளவுக்கு அதற்கு ஏற்பாடு செய்யலாமா என்பதையும் நான் அமைச்சரவர்களுடைய பார்வைக்கு வைத்து, அமைகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு, தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிற 4 உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு பூவராகன் அவர்கள் குறிப்பிட்டது போல, இந்தச் சுய நிதிக் கல்லூரிகளில் பல்வேறு சட்டத்திற்குப் புறம்பான குறிப்பிட்டும்கூடச் செய்ய முடியாத பல செயல்கள் இருப்பதைப் பற்றிய புகார்கள் சென்ற காலத்திலும்,

1989 மே 11] [டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி].

இப்போதும் அரசிடம் பல வந்துள்ளன. அவற்றைக் கருத்திற் கொண்டுதான் இந்தச் சட்டம் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. குறிப்பாக இப்போதுகூட அரசின் முன்னால் எம். பி. பி. எஸ். கோர்சுகளை ஆரம்பிக்க வேண்டுமென்று 9 நிறுவனங்களும், பி. டி. எஸ்.—பல் மருத்துவத்தைத் துவக்க வேண்டுமென்று 12 நிறுவனங்களும், பி. பார்மசி உருவாக்க வேண்டுமென்று 9 நிறுவனங்களும், பி. எஸ்சி. நர்சிங் கோர்ஸ் ஆரம்பிக்க வேண்டுமென்று 9 நிறுவனங்களும்—இப்படி பல்வேறு நிறுவனங்கள் விண்ணப்பித்தவண்ணம் உள்ளன.

இதிலே சில நிறுவனங்கள் எம். ஜி. ஆர். பல்கலைக் கழகத்தை அணுகி அப்பல்கலைக்கழகத்தின் அனுமதியை வேண்டியிருக்கின்றன. அப்பல்கலைக்கழகம் அரசாங்கத்தினுடைய அனுமதியைப் பெற்றிருக்கிறீர்களா என்று கேள்வி கேட்ட பிறகு சில நிறுவத்தினர் உயர்நீதி மன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். காரணம், எம். ஜி. ஆர். பல்கலைக் கழகத்திற்கான சட்ட வரைவில் 'அரசாங்கத்தினுடைய முன் அனுமதியை அவர்கள் பெற வேண்டும்' என்று குறிப்பிடப் படவில்லை. எனவே பல்கலைக் கழகமே எங்களுக்கு இந்தப் புதிய கோர்சுகளை ஆரம்பிப்பதற்கான அனுமதியை வழங்கலாம் என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்க வேண்டுமென்று உயர்நீதிமன்றத்திடம் சென்றிருக்கிறார்கள். இதைத் தடுத்து, இதுபோன்ற சுயநிதிக் கல்லூரிகளை சட்டுப் பாட்டின்கீழ் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணத்தோடுதான் இந்தச் சட்டத் திருத்தம் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இவ்வாறு பல்வேறு மருத்துவக் கல்லூரிகள்—அதிலும் குறிப்பாக பி. டி. எஸ். போன்றவைகள் எல்லாம் இந்தியன் டென்டல் கவுன்சிலிடம் அனுமதி வாங்கி, இங்கே உள்ள அரசாங்கத்தின் அனுமதி ஏதும் இல்லாமலேயே ஆரம்பித்து விடுகிறார்கள். அதைப் போலவே நர்சிங் கோர்ஸ்களை இந்தியன் நர்சிங் கவுன்சிலிடம் அவர்கள் அனுமதி பெற்று பல்வேறு இடங்களிலே ஆரம்பித்து விடுகிறார்கள். அவ்வாறு கூரைக் கொட்டகைகளிலோ அல்லது வேறு இடங்களிலோ ஆரம்பித்துவிட்டு பிறகு அரசாங்கத்திடம் வந்து எங்களுக்கு அந்த நிறுவனங்கள் அனுமதி அளித்துவிட்டன—ஆகவே நாங்களும் ஆரம்பித்துவிட்டோம்; எங்களுக்கு நீங்கள் அனுமதி அளிக்க வேண்டும் எனறு அரசாங்கத்திடம் விண்ணப்பிக்கிற நிலை எல்லாம் இருக்கிறது. அவைகளைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இதுபோன்ற அனுமதி அளிக்கின்ற நிறுவனங்கள்— இந்தியன் கவுன்சில் ஆப் மெடிகல் ரிசர்ச் ஆக இருந்தாலும் அதைப் போலவே பல் மருத்துவத்தைச் சார்ந்த இந்தியன் டென்டல் கவுன்சிலாக இருந்தாலும்

[டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி] [1989 மே 11

—அந்த நிறுவனங்கள் எல்லாம் தங்களிடம் இந்தக் கல்லூரிகள் அனுமதி கேட்டு மனு அளிக்கிறபோதே ஒரு முறையைக் கடைப் பிடித்து, நீங்கள் உங்களுடைய மாநில அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றிருக்கிறீர்களா என்று கேட்டு அவர்கள் அனுமதி அளிப்பார்களானால் அரசாங்கம் அவற்றையெல்லாம் சிறப்பாகக் கட்டுப்படுத்த இயலும் என்பதோடு, குறிப்பாக நல்ல நிறுவனங்களை உருவாக்குகிற வாய்ப்புகள் ஏற்படும் என்கிற காரணத்தால் இந்தச் சட்டத் திருத்தம் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே இதுபோல் செயல் படும் தனியார் சுயநிதிக் கல்லூரிகள் எந்தவிதமான ஊழல் களும் செய்யாமல் இருக்கவும், அவர்கள் தாங்களாகவே தன்னிச்சையாகவே மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்திக் கொள்ள முடியாதபடி கட்டுப்படுத்தும் நோக்கத்தோடுதான் இந்தச் சட்ட முன்வடிவு இங்கே கொண்டு வரப் பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு பூவராகன் அவர்கள் பேசுகிறபோது சில கல்லூரிகள் இந்த ஆண்டில் அனுமதிக்கப் பட்ட மாணவர்களின் எண்ணிக்கைக்கு மேல் அதிகமாகவே மாணவர்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிற நிலைமைகளை எல்லாம் சுட்டிக்காட்டினார். அவர்களுக்கு அரசாங்கம் முன்பே ஒரு அனுமதி அளித்து, பிறகு பல்கலைக் கழகத்திற்கும் பல்கலைக் கழகத்திற்கும் இடையே இருக்கிற சில முரண் பாடுகள் காரணமாகவே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடை பெற்று வருகின்றன. அரசாங்கத்தைக் காட்டி பல்கலைக் கழகத்திடமும், பல்கலைக் கழகத்தைக் காட்டி அரசாங்கத் திடமும் அவர்கள் திறமையைப் பயன்படுத்தி, இதுபோன்ற மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்திக் கொள்கிற தன்மையெல்லாம் நீண்டகாலமாக பின்பற்றப்பட்டு வந்திருக் கின்றன. இதையெல்லாம் தடை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடும் இதுபோன்ற நிறுவனங்கள் அரசாங்கத் தினுடைய அனுமதி இல்லாமல் வேறு எந்த நிறுவத்தினுடைய அபிலியேஷன் மட்டும் பெற்று, இதுபோன்ற கல்வி நிறுவங் களை ஆரம்பிக்கக்கூடாது என்ற நோக்கத்தோடுதான் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதன் நோக்கமே தனியார் நிறுவனங்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதுதான். மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட இங்கே தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதாவது எவ்வித சுய நிதி நிறுவனங்களும் இந்த ஆண்டு துவக்கப்பட மாட்டாது என்று கொள்கை அளவில் அவர்கள் தெளிவாக வலியு றுத்தியிருக்கிறார்கள், ஆகவே அந்த அடிப்படையில் இதுவரை துவக்கப்பட்டிருக்கிற நிறுவனங்களைக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கும், இனிமேல் இதுபோன்ற நிறுவனங்கள் ஏற்படாமல் இருப்பதற்கும் வழிவகை செய்யும் முறையிலே

இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''1989 ஆம் ஆண்டு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், தமிழ்நாடு (திருத்தம் மற்றும் செல்லத் தக்கதாக்குதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 23/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

(பிற்பகல் 6-20)

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், தமிழ்நாடு (திருத்தம் மற்றும் செல்லத் தக்கதாக்குதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1989) நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஓ) திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப் பெற்ற 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப் படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு

1989 மே 11] [டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''1989 ஆம் ஆண்டு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், தமிழ்நாடு (திருத்தம் மற்றும் செல்லத் தக்கதாக்குதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 23/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, பேர வையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

(பிற்பகல் 6-20)

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், தமிழ்நாடு (திருத்தம் மற்றும் செல்லத் தக்கதாக்குதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1989) நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஓ) திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப் பெற்ற 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப் படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு

*(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/1987) மற்றும் ஆளுநர் அவர்கள் அச்சட்ட முன்வடிவு குறித்து அனுப்பிய செய்தி ஆகியவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்டமுன்வடிவு மற்றும் ஆளுநர் அனுப்பிய செய்தி ஆகியவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பெற்ற 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/1987) திரும்பப் பெறவேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு திரும்பப்பெறப்பெற்றது.

(ஔ) பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு **(சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 4 அல்லது 5 சட்ட முன்வடிவுகள் பொது விற்பனை வரி துறையைப் பொறுத்து இருக்கின்றன. எனவே அவைகளை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று முன்மொழிந்த பிறகு விவாதத்தை நாளைக்கு வைத்துக்கொள்ளலாம் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

* 11—5—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

** 6—5—89 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

*(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/1987) மற்றும் ஆளுநர் அவர்கள் அச்சட்ட முன்வடிவு குறித்து அனுப்பிய செய்தி ஆகியனவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்டமுன்வடிவு மற்றும் ஆளுநர் அனுப்பிய செய்தி ஆகியவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பெற்ற 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/1987) திரும்பப் பெறவேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு திரும்பப்பெறப்பெற்றது.

(ஔ) பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு **(சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 4 அல்லது 5 சட்டமுன்வடிவுகள் பொது விற்பனை வரி துறையைப் பொறுத்து இருக்கின்றன. எனவே அவைகளை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று முன்மொழிந்த பிறகு விவாதத்தை நாளைக்கு வைத்துக்கொள்ளலாம் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

* 11—5—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

** 6—5—89 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை 12—5—1989 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை மாலை 6-23 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

158. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 4—8—1987 ஆம் நாளிட்ட 891 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப் பெற்றது].

159. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 22—7—1988 ஆம் நாளிட்ட 1050 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [0959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

160. வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 18—5—1988 ஆம் நாளிட்ட II/(1)/வ.வ.ச.அ./89/88 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து அத்துறையின் 10—11—1988 ஆம் நாளிட்ட 1412 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

161. எம். டி. எஸ். 1747 எண்ணுள்ள மோட்டார் வாகனத்திற்காக செலுத்தப்படவேண்டிய வரி மற்றும் அபராதத் தொகை பாக்கியினை ரத்து செய்வது குறித்து உள் துறையின் 12—5—1988 ஆம் நாளிட்ட 1090 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை 12—5—1989 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை மாலை 6-23 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

158. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 4—8—1987 ஆம் நாளிட்ட 891 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப் பெற்றது].

159. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 22—7—1988 ஆம் நாளிட்ட 1050 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [0959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

160. வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 18—5—1988 ஆம் நாளிட்ட II/(1)/வ.வ.ச.அ./89/88 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து அத்துறையின் 10—11—1988 ஆம் நாளிட்ட 1412 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

161. எம். டி. எஸ். 1747 எண்ணுள்ள மோட்டார் வாகனத்திற்காக செலுத்தப்படவேண்டிய வரி மற்றும் அபராதத் தொகை பாக்கியினை ரத்து செய்வது குறித்து உள் துறையின் 12—5—1988 ஆம் நாளிட்ட 1090 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

162. 1977 ஆம் ஆண்டு தமிழ்நாடு அமைச்சர்கள் மற்றும் சட்டமன்றத் தலைவர்கள் (அரசு இல்லங்கள் பராமரிப்பு மற்றும் அறைக் கலங்கள் வழங்கல் மற்றும் ஏனைய வசதி செய்து கொடுத்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பொதுத் (சட்டமன்றப் பிரிவு) துறையின் 22—9—1988 ஆம் நாளிட்ட 1601 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1951 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

163. 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் (திரைப்படங்கள்) துறையின் 12—11—1987 ஆம் நாளிட்ட 2643 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

164. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் 1987-88 ஆம் ஆண்டிற்கான பதினான்காவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

165. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் 1981-82 ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

166. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

167. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

TRUTH ALONE TRIUMPHS

1989 மே 11]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

164. பொதுக் கணக்குக் குழுவின் முதலாவது அறிக்கை; 1989-90.

165. பொதுக் கணக்குக் குழுவின் இரண்டாவது அறிக்கை, 1989-90.

166. பொதுக் கணக்குக் குழுவின் மூன்றாவது அறிக்கை, 1989-90.

167. பொதுக் கணக்குக் குழுவின் நான்காவது அறிக்கை, 1989-90.

தமிழ்நாடு சட்டப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS